இது, திருவாசகத்திலுள்ள 51 பிரபந்தங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன விஷயத்தைக் குறிப்பிக்குமென்று கூறுவது; இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது; இதற்கும் திருவாசகத்தோடு சேர்த்துப் பதிப்பித்திருக்கும் திருவாசகத்தின் திருவுளக்கிடைக்கும் மிக்க வேறுபாடுண்டு; திருவெம்பாவையைப்பற்றிக் கூறுமிடத்துத் தசசத்திகளை விகற்பித்ததென்று சொல்லி, பதின்மர் பெயரும் இதிற் கூறப்பட்டிருக்கின்றன. ஐம்பதாவது பிரபந்தப் பெயர் அட்டவணைப்பாட்டிற் குறித்தபடி "மின்னேரனையார்" என்றே இதிற் காணப்படுகிறது. அச்சுப்பதிப்பில் இவைகட்கு மாறுயிருக்கின்றமை காண்க.

No. 1164. திருவாசகத்திருவுளக்கிடைபொழிப்புரை.

TIRUVĀŚAKATTIRUVUḶAKKIḌAIPOḺIPPURAI.

Substance, palm-leaf. Size, 6¾ × 1 inches. Pages, 8. Lines, 7–8 on a page. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 32*a*. The other works herein are Tāyumānavar Anubhōgasāra Ānandakkaḷippu 1*a*, Uḍalaṟiviḷakkam 8*a*, Piḷḷaikkuttaṇṇīrōdumandiram 15*a*, Pagavaṟkītaittālāṭṭu 16*a*, Ṣaṣtikavacam 36*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; பூர்த்தியுடையது.

No. 1165. திருவாசகத்திருவுளக்கிடைபொழிப்புரை.

TIRUVĀŚAKATTIRUVUḶAKKIḌAIPOḺIPPURAI.

Pages, 3. Lines, 7 on a page.

Begins on fol. 179*a* of the MS. described under No. 1127.

Similar to the above. The names of the 51 Prabandams of the Tiruvāśakam are given here and they are explained very briefly from the point of view of the Śaiva Siddhānta.

Beginning:

சிவபுராணம் :—சிவனுடைய அநாதிமு(ை)றமையான பழமை.
கீர்த்தித்திருவகவல் :—சிவனுடைய அருளின் மு(ை)றமை.
திருவண்டப்பகுதி :—சிவனுடைய தூலசூக்குமத்தை வியந்தது.
போற்றித்திருவகவல் :—செகத்துற்பத்தி.
திருச்சதகம் :—பத்துவகையாக ரட்சித்தமு(ை)றமை.
நீத்தல்விண்ணப்பம் :—பிரபஞ்சவயிராக்கியம்.
திரு(ெ)வம்பாவை :—[ெ]தசசத்திகளையும் வியந்தது.

End:

திருவார்த்தை :—அறிவிக்க அறிதல்.
எண்ணப்பத்து :—ஒழியாவின்பத்துவகை.
யாத்திரைப்பத்து :—அனுபவாதீதமுரைத்தல்.
திருப்படை எழுச்சி :—பிரபஞ்சப்போர்.
திருவெண்பா :—அணைந்தோர்தன்மை.
பண்டாயநான்மறை :—அனுபவத்துருகைமாறலடிமை (?)
திருப்படையாட்சி :—சிவவுபாதியொழித்தல்.

மின்னேரனையபூங்கழல் :—வழக்கறிவுறுத்தல்.

அச்சோப்பத்து :—அனுபவம் வந்தவழி யறியாமை.

ஆகவகை டுக-க்குச் செய்யுள். . . . .

(கு-பு.) –

இது முன்பிரதிபோன்றது ; அதனினும் இது சுருக்கமானது. இந்தப் பிரதியில் முற்றும் உள்ளது. இதன் தலைப்பில், "திருவாசகம் பொழிப்புரை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

No. 1166. திருவாசகம், அதிகாரவடைவு.

TIRUVĀŚAKAM, ADIKĀRAVAḌAIVU.

Pages, 11. Lines, 6 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1133.

The first four pages contain the same three stanzas found at the end of the work described under No. 1152 and extracted therein. The last seven pages give the initial words of the stanzas contained in some of the Prabandams beginning with Tiruvembāvai Prabandam.

End:

ஆதியுமந்தமுமில்லாபாசமுத்தன வெண்ணகையை யொண்ணிமாலறியாமானேபர சோதியன்னே கோழிமுன்னே பாதாளமொய்யார் தடம்பொய்கையார்த்த கூத்தன் பைங்குவளை காதாரவோரொரு காலமுன்னிச் செங்கணுமலையுங்கைபோற்றி (. . . . .)
உச்சிமுக மீசானிய மொளிதெளிய பளிங்கதிறம் திச்சயித்த முகத்துக் கீழ்புறந் தென்றிசைநோக்கி யொருமுகத்தே . . . .

(கு-பு.)—

இது, திருவாசகத்தைச்சார்ந்தது. இதன் முதல் 4 பக்கங்களில் எழுதியுள்ள அட்டவணைப் பாட்டுக்கள் மூன்றும் 1152 நம்பரின் இறுதிக்குறிப்பில் எழுதியுள்ளனவே. அடுத்த எழுபக்கங்களில் 'திருவெம்பாவை' முதலாகவுள்ள சில பிரபந்தங்களின் செய்யுள் முதனினைப்பு எழுதப்பட்டிருக்கின்றன.

No. 1167. திருச்சிற்றம்பலக்கோவையார்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR.

Pages, 130. Lines, 8–9 on a page.

Begins on fol. 77*a* of the MS. described under No. 1155.

Complete.

A poem in 400 quatrains by Māṇikkavāśakar seemingly on love-topics but really in praise of God Naṭarāja, a form of Śiva worshipped in Chidambaram. It forms the latter half of the 8th Tirumuṟai, the first half being Tiruvāśakam. The subject-matter of each stanza is given immediately after it in a couplet. The work is also known as Tirucciṟṟambalakkōvai, Ciṟṟambalakkōvai, Tirukkōvaiyār, Kōvaiyār and Kōvai; and its greatness and all-comprehensiveness are brought out in a stanza in the beginning as well as in a Sūtra of the Ilakkaṇakkottu and its commentary. The MS. contains many good readings not found in the printed editions.

Beginning:

எண்ணிறைந்த தில்லை யெழிற்கோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறுஞ் செஞ்சொற் திருக்கோவை யென்சிந்தை
நானூறு[ம்] நிற்கவே நல்கு.

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிக ளாகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரி[ம்](ன்)புலவோர்
சீரணங் காய்நின்ற சிற்றம் பலக்கோவை செப்பிடிலே.

திருச்சிற்றம்பலம்.

திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி ய[ன்]ன நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடி[ப்]போன் றொளிர்கின்றதே.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது. (க)

End:

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நெதிவிதிசே
ரூரணி யுற்றவர்க் கூரன்ம[ா]ற் றியாவர்க்கு மூதியமே.

இரும்பரிசி லேற்றவர்க்கருளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது. (௪00)

திருச்சிற்றம்பலம்.

Colophon:

சித்திரபானு௵ ஆவ[னி](ணி)௴ ௨0௳ சிற்றம்பலக்கோவை எழுதி நிறைந்தது ; முற்றும்.

(கு-பு.)—

இது, திருவாசகம்பாடியருளிய மாணிக்கவாசக ஸ்வாமிகள் வாக்கு ; சைவத்திருமுறை 12-ல் எட்டாவது திருமுறையின் பிற்பகுதி ; அகப்பொருட்

டுறைக்கு இலக்கியமாக அமைந்துள்ள 400 கட்டளைக்கலித்துறைகளையுடையது; ஒவ்வொரு கலித்துறையின் பின்னும் விஷயத்தைச் சுருக்கிக்கூறும் கொளு அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்நூல், திருச்சிற்றம்பலக்கோவையார், திருச்சிற்றம்பலக்கோவை, சிற்றம்பலக்கோவை, திருக்கோவையார், கோவையார், கோவை என வழங்கும். இதன் சிறப்பை முதலிலுள்ள “ஆரணங் காணென்ப ரந்தணர்” என்னுஞ் செய்யுளாலும், “பல்காற் பழகினுந் தெரியா வுளவேற், றொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்” என்னும் இலக்கணக்கொத்துச் சூத்திரத்தாலும், “திருவைக் கோவைக்குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கையாலெழுதினார்; அப்பெருமையை நோக்காது சிந்தாமணி (. . . . . . .) முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர்.” என்னும் அதன் உரைப்பகுதியாலும் உணர்க. இந்தப் பிரதியில் மூலம் பூர்த்தியாயிருக்கிறது; இதில் அச்சுப்பிரதியில்லாத பாடபேதங்கள் சில காணப்படுகின்றன.

No. 1168. திருச்சிற்றம்பலக்கோவையார்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR.

Pages, 5. Lines, 9 on a page.

Begins on fol. 48*a* of the MS. described under No. 1135.

Contains only nine stanzas which are not consecutive in number.

Same work as the above.

(கு-பு.)—

இந்தப் பிரதியில் ஒன்றோடொன்று தொடர்ச்சியில்லாத திருச்சிற்றம்பலக்கோவையார்ப்பாடல்கள் ஒன்பதே உள்ளன.

No. 1169. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. size, $11\frac{1}{3} \times 1\frac{5}{8}$ inches. Pages, 571. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Complete.

Same poem as the above and with a commentary by Pērāśiriyar also called Tolpērāśān, who is said to have lived prior to Naccinārkkiniyar. In the printed editions, this commentary is attributed to Naccinārkkiniyar but the better opinion seems to be that it is by Pērāśiriyar who

has also written a commentary on 1 to 380 stanzas of the Kuṟuntohai, one of the class of works known as Padineṇkīḻkaṇakku.

Beginning :

எண்ணிறைந்த தில்லை (. . . . .) நல்கு.
ஆரணங் காணென்ப ரந்தணர் (. . . .) செப்பிடினே.
* * * *
திருவளர் தாமரை (. . . . . . .) ஒளிர்கின்றதே.
மதிவாணுதல் (. . . . .) கண்ணுற்றது.

என்பது :—திருவளருந் தாமரைப் பூவினையும் அழகுவளரும் நீலப்பூக்களையும் ஈசர் தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்குமிழினது நிறம்வளரும் பூவினையும் கோங்கரும்புகளையும் செவ்விக்காந்தட்பூக்களையுமுறுப்பாகக்கொண்டு மேம்பட்ட தெய்வமணம்வளரும் மாலை ஓர் வல்லிபோ[லு](ல)நுடங்கி அன்னத்தினடைபோலு நடைவாய்த்து வடிவுவளருங் காமனது வெற்றிக்கொடிபோன்று விளங்காநின்றதென்னவியப்போ! என்றவாறு.

திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கென்றவாறு;

திருமகடங்குந்தாமரை யெனினுமமையும்.

பூங்குமிழென்பது முதலாகிய தன்பொருட்கேற்ற அடையடுத்துவந்ததோராகுபெயர்.

* "நளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று, முளிமுதற் பொதுளிய முட்புற[வ]ப் பிடவம்" என்பதுபோல, 'ஈசர் தில்லை' என்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக.

பல நிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியவதனால், நிலமயக்கங்கூறியவாறாயிற்று. அது கூறவே பல நிலங்களினுஞ் சென்று துய்க்குமின்பமெல்லாம் தில்லைவாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பரென்பது போதரும்; போதர, இம்மையின்பத்திற்கும் தில்லையே காரணமென்பது கூறியவாறாயிற்று.

'ஈசர் தில்லை' எனபதனால், மறுமையின்பத்திற்குங் காரணமாதல் சொல்லாமையே விளங்கும்.

[மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர் பொருள் காரணமாகச் சொல்லாமையே விளங்கும்].

செய்யுளாதலாற் செவ்வெண்ணின்றொகை தொக்குநின்றது.

ஓங்குமாலையென இயையும்.

'தெய்வமருவளர்மாலை' என்றதனால், தாமரை முதலாயினவற்றானியன்ற பிறமாலையோடு இதற்கு வேற்றுமைகூறியவாறும்.

'வாய்ந்' என்பது நடையின் வினையாதலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்தது.

'உருவளர் காமன் வென்றிக்கொடி' என்பது, நுதல்விழிக்குத் தோற்று உருவிழப்பதன்முன் மடியா ஆணையனாய் நின்று உயர்த்தகொடியை.

அன்னநடைவாய்ந்தென்பதற்கு அவ்வவ்வியல்பு வாய்ப்புப்பெற்(ற)றன வும் அமையும்.

* கலித்தொகை, ௧0௧.

உவகை மிகுதியாற் சொன்னுகைவின் இப்பாட்டிற்கு மெய்ப்பாடு உவகை; உவகையாவது, சிருங்காரம்.

பயன், மகிழ்தல். பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானேய்துவது.

விசேடம், முரண்.

End:

காரணி கற்பகம் (. . . . . . .) ஊதியமே.
இரும்பரிசில் (. . . . . . .) உரைத்தது.

(எ-து) ஊரன் வேண்டாமை(க்) கொடுத்தலிற் காரோடொக்கும்; வேண்டக்கொடுத்தலின் அழகிய கறபகத்தோடொக்கும்; நுண்ணிய கல்வியனுகவிற் கற்றவர்க்கு நல்ல உசாத்துணை; இசையுணர்வானுங் கெழுதகைமையானும் பாணர்க்கு அவர் சுற்றத்தோடொக்கும்; நினைத்தது கொடுத்தலிற் சீரையுடைய நல்ல சிந்தாமணியோடொக்கும்; அழகிய தில்லைக்கட் சிவனது திருவடிக்குத் தாராகியவ(னு)ன[ணி](ணி)யப்படு[வ](ங்) கொன்றைப்பூவின் றன்மையையுடையன்; சான்றோர்தமக்குத் தொலையாத நிதியாயிருத்தலிற் சங்கநிதியோடொக்கும்; நட்டார்க்கும் பகைவர்க்கு[த்](ந்) தப்பாது பயன் கொடுத்தலின் விதியோடொக்கும்; சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்யஇருத்தலின் அணித்தாகிய ஊருணியோடொக்கும்; அதனுல், வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெரும் பயன் எ-று.

'தாரணிகொன்றையன்' என்பது 'குரங்கன்' என்பதுபோல உவமைப் பொருட்பட நின்றதெனினும் அமையும்

'விதி[ரெ](சேரூரணி)' என்பதற்கு முறைமையாற் சேரப்படும் ஊருணியெனினும் அமையும்.

தக்கார்க்குஞ் சுற்றத்தார்க்குங்கொடுத்தல் வண்மையன்மையின் அவரை வேறுபிரித்துக் கூறினர்.

ஊடல்தீர்ந்து கூடியவழித் தலைமகட்கு உண்ணின்ற சிவப்பு ஒரு காரணத்தா(ற்) சிறிது புலப்பட, ஊரன் யாவர்க்கும் ஊதியமாகவின் அன்பாவன்றி அருளாற் பரத்தையர்க்குத் தலையளி செய்யுமன்றே; அதனுல் நீ புலக்கற்பாலையல்லையென்று குறிப்பினுற் றேழி சிவப்பாற்றுவித்தது.

மெய்ப்பாடு, உவகை. பயன், மெய்ம்மகிழ்தல். (சOO)

The scribe adds—

திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதிநிறைந்தது.

(கு-பு.)—

இந்நூலைப்பற்றிய குறிப்பு 1167-ஆம் நம்பரில் எழுதப்பட்டிருக்கிறது; இவ்வுரை நச்சினுர்க்கினியரியற்றியதாக அச்சிடப்பட்டிருக்கின்றதாயினும் பின்பு அறிஞர்களாற் பேராசிரியருரையென்றே நிச்சயிக்கப்பெற்றிருக்கிறது. இவர் நச்சினுர்க்கினியருக்கு முற்காலத்தவர். சிறந்த உரையாசிரியர்களுள் ஒருவர்; எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகையில் 380 பாடல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் உரை இயற்றியவர்; தொல்பேராசானென்றும் கூறப்பெறுவர். இக்கோவையாருக்கு இவரெழுதியிருக்கும் உரை மூலத்திலுள்ள விஷயத்தைத் தெளிவாக முதலிற் சுருக்கிக் காட்டிப் பின்பு அடைமொழி முதலியவற்றிற்குப் பொருள்கூறுவது; அன்றியும் பதசாரமும்

சைவசாத்திரக் கருத்துக்களும் சொல்லிலக்கண முடிபுகளும் துறை மெய்ப்பாடு பயன் முதலிய அகப்பொருளிலக்கணக் குறிப்புக்களும் எழுதப்பெற்றிருத்தலால் மிகச்சிறந்தது. இந்தப் பிரதியில் சில இடத்துத் துறையும் அவதாரிகையும் இல்லை; மூலமும் உரையும் முற்றுமுள்ளன; அச்சிடப்பட்டிருக்கின்றன.

No. 1170. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $15\frac{1}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 394. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains 1 to 399 stanzas with commentary and the 400th stanza without the commentary.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதில் முதல் 399 பாட்டுக்கள் உரையுடனும் 400 வது பாட்டு உரையின்றியும் இருக்கின்றன. இறுதியில் ஐந்தேடுகளின் நுனி ஒடிந்துள்ளன.

No. 1171. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $14\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 539. Lines, 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, not old.

Contains 1 to 358 stanzas with their commentary.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்நூற் செய்யுள் 400 ல் இதில் 358 செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன.

No. 1172. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $15 \times 1\frac{1}{8}$ inches. Pages, 440. Lines, 5–8 on a page. Character, Tamil. Condition, not injured. Appearance, old.

Contains 1 to 360 stanzas with the commentary discontinuously as foll. 1 to 5, 25, 26, 46, 47 and 72 are wanting in the middle.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்நூற் செய்யுள் 400 ல் இந்தப் பிரதியில் 360 செய்யுள் வரையுள்ள பகுதிகள் இருக்கின்றன. இந்தப் பிரதியின் எட்டிலக்கம் 230 ல் (1-5, 25-6, 46-7, 72 என்னும் இலக்கமிட்ட) 10 ஏடுகள் இல்லாமையால் இடையிடையே சில பகுதிகளில்லை. இதிலுள்ள சில ஏடுகள் முறிந்திருக்கின்றன.

No. 1173. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, 15⅜ × 1⅝ inches. Pages, 195. Lines, 11 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete as foll. 110 to 121 are wanting in this MS.

Same work as the above.

The scribe adds—

சாலி(வாகன) சகாப்தம் 1676-க்கு (மேற்)சொல்லாநின்ற ஸ்ரீமுக வூல சைத்திரமாஸம் உசவ கிர்ஷ்ண பக்ஷம் வெள்ளிக்கி(ழமை) . . . . . . சோபனம் சகூ௯ பவகரணம் கக தியாஜ்யம் ச மேல் இந்தச் சுபதினத்தில் நவாசிப்பேட்டை வேலாயுத பண்டாரங் . . . . திருச்சிற்றம்பலக்கோவையார் எழுதி முடித்தான்.

மாணிக்கவாசகர் சொற்படிக்கு அழகிய திருச் . . . . மறையாகமலக்ஷணம் காமப் பொருளதிகாரம் இந்த நாலும் இதில் அறியலாம்.

ஸ்ரீதிருவாவடுதுறை அம்பலதே . . . . . கனகசபாபதி பாதாரவிந்தத்தில் சுப்பிரமணியன் சதா சேவை. ஏகாம்பரத் தொருவனே தெய்வம்.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதில் (110-121 எண்ணமைந்த) 12 ஏடுகள் இல்லை. இது மிகப் பழைய பிரதி. சிதிலமாயிருக்கிறது.

" அகத்திய மதனி லரும்பொருள் விளக்கு
மகத்தமிட் செய்யுட் கதிகார மாகத்
துறையுடன் கிளவி தொழிற்படத் திவ்லை
யிறையவன் மேல்வைத் தியம்பிய கோவைப்
படியகூ தறிந்து பண்புடை யாளர்க்
கடிவர வாகு மதன்றிறங் கூறல்

என்றெனின், திருக்கோவை நானூற்றுக்கும் அதிகாரமுங் கிளவியு முணர்த் துதல் றுதலிற்று" என்னும் பகுதி இதன் முதலில் எழுதப் பெற்றுள்ளது.

No. 1174. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $18\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 441. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, not old.

Leaves 29 (fol. 186 to 214) in the middle and consequently 50 stanzas (300–350) and their commentary are wanting. There are two leaves numbered 126. The last two leaves contain again stanzas 167–169 with their commentary.

Same poem and commentary as the above.

The scribe adds—

தில்லைவனப் பெரும்பற்றப் புலியூர்த் திருச்சிற்றம்பலவாணராகிய அழகிய திருச்சிற்றம்பலமுடையார் மாணிக்கவாசகர் சொற்படிக்(கு)த் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியருளிய திருச்சிற்றம்பலக்கோவை முற்றும்.

பி[ற](ர)சோற்ப(த்)திஸூ தைமீ உசுவ நவமியும் அனுஷமுங் கூடின சுபதினத்தில் எழுதி நிறைந்தது.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதன் இடையே (186-214 எண்ணுள்ள) 29 ஏடுகள் இல்லாமையால் 300 முதல் 350 வரையுள்ள செய்யுட்களும் அவற்றின் உரைப் பகுதிகளும் இல்லை. 32-ம் எண்ணுள்ள ஏடு முறிந்திருக்கிறது. 126-ம் எண்ணமைந்த ஏடு இரண்டு உள்ளன. இதன் பின்னுள்ள இரண்டேடுகளில் இந்நூலின் (167-169) இம்மூன்று செய்யுட்கள் உரையுடன் இருக்கின்றன.

No. 1175. திருச்சிற்றம்பலக்கோவையார், பேராசிரியருரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKOVAIYĀR WITH THE COMMENTARY OF PĒRĀŚIRIYAR.

Substance, palm-leaf. Size, $18\frac{1}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages 58. Lines, 6–8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Contains stanzas 300 to 349 with their commentary.

Same work as the above.

(கு-பு)—

இது முன்பிரதி போன்றது. இதில் 300 முதல் 349 வரையுள்ள செய்யுட்களும் அவற்றின் உரைகளும் இருக்கின்றன.

No. 1176. திருச்சிற்றம்பலக்கோவையார், பதவுரையுடன்.

TIRUCCIRRAMBALAKKOVAIYAR WITH MEANING.

Substance, palm-leaf. Size, 11½ × 1¾ inches. Pages, 627. Lines, 9–10 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete.

The text is herein accompanied with meaning word for word. The name of the author of this commentary is not known. It is based on Pērāsiriyar's commentary already noticed. In this MS., the couplets are written before the quatrains instead of after them as in the previously described MSS.

திருச்சிற்றம்பலக் கோவையார்,
(பதவுரையுடன்).

Beginning :

எண்ணிறைந்ததில்லை(. . . . . . .)மன்த்தே நல்கு.

காட்சி.

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

(எ-து) பிறைஙயயொத்[து](த) ஒளிசிறந்[து](த) நன்னெற்றியினையுடைய,

வளர்வஞ்சியை-வளர்கின்ற வஞ்சிக்கொம்பை ஒப்பாளை,
கதிர்வேலவன்-ஒளிமிகுந்த வேலையுடையவன்,
கண்ணுற்றது-கண்டது.

பாடல்.

“திருவளர் தாமரை (. . . . .) ஒளிர்கின்றதே.”

(இதன் பொருள்) திருவளர்தாமரை - அழகியதாமரைப் பூவையு(ம்), சீர்வளர்காவிகள் - சிறப்புடைய நீலப்பூக்களையும், ஈசர்தில்லை - [யீ](ஈ) சருடைய பெரும்பற்றப்புலியூரில், குருவளர் பூங்குமிழ்-நிறமும் பொலிவுமுடைய குமி[ள](ழ)ம் பூவையும், கோங்கு - கோங்கரும்புகளையும், பைங்காந்தள் - பசியகாந்தட் பூக்களையும், (கொண்டு—) நல்ல(வ)பவமாகக்கொண்டு;

அ[கு](ஃ)தெங்ஙனேயெனில், :— முகம் தாமரையாகவும், நீலம் கண்களாகவும், குமி(ழ)ம்பூ மூக்காகவும், கோங்கு முலைகளாகவும், காந்தள் கைகளாகவும் படைத்துக்கொண்டு.

ஓங்கு தெய்வ மருவளர்மாலை - உயர்ந்த தெய்வமணங்கமழுமாலை, [யோ](ஓ)ர்வல்லியினொல்கி - ஒருவல்லிசாதக்கொடிபோனுடங்கி, [ய](அ)ன நடைவாய்ந்து—, உருவளர் காமன்றன் - வடிவின்மிக்க காம[நு](னு)டைய, வெற்றிக்கொடிபோன்று—, [வொ](ஒ)ளிர்கின்றது - விளங்குவது என்னை வியப்போ! (க)

End :

“காரணி (. . . . .) ஊதியமே.”

(இ-ள்) ஊரன் - நாயகன், கார் - வரையாது கொடுத்தல[ல்](ா)ல் மேகத்தையொப்பான், அணிகற்பகம் - வேண்டினது கொடுத்தலால் அழகிய கற்பக

விருட்சத்தையொப்பான், கற்றவ[ர]ர் நற்றுணை - நூலறிவாற் கற்ற[ற்](வர்க்)கு நல்ல துணையாயிருப்பன், பாணரொக்கல்—, சீரணி சிந்தாமணி - நினைத்தது கொடுத்தலால் சிறப்புமழகு முடைத்தாகிய சிந்தாமணி யென்னும் வள்ளலையொப்பான் (?), அணிதில்லைச் சிவனடிக்குத்தாரணி கொன்றையன் - அழகிய பெரும்பற்றப் புலியூரிற் சிவனுடைய திருவடிகளுக்கு மாலையாகிய கொன்றையை யொப்பான், ...

விதி - சுற்றத்தா[ம்](ர்க்)கும் பகைவ[ற்](ர்க்)கு(ம் சுக)துக்கங்களைத் தப்பாமற் செய்கையால் விதியை யொப்பான்.

[நீர்திரை] சேரூரணி யுற்றவர்க்கு - தன்னைவந்து சே[ராதார்யெ](ர்ந்தார்க்கெ)ல்லாம் ஊர்க்கண் அணிய வூரணியோடொப்பன்.

மற்றியாவ[ற்](ர்க்)கு மூதியமே - ஆதலால் மற்றுமெல்லார்க்கும் ஊரன் பெ[று](ரு)ம்பயனாயிருப்பன்.

[யெ](எ)னவே, [யி](இ)வன் கண்மகிழவுருவினை (?) தலைவே இவனைக் கண்டு பரத்தையர் விரும்புதலால் அவர்கள் வேட்கைதணிக்கச்செல்லுமதல்லது அவர்மேலன்புடையனாயும் நின்மேலன்பில்லாமையாலும் பிரிகின்றானல்லன்; அருளாற் செய்யுமவற்கு வெறுத்தல் உனக்கும் பெண்மையல்ல வென்று உண்ணின்ற சிவப்பாற்[றி](று) வித்தாள். (௪00).

Colophon:

திருச்சிற்றம்பல (க்கோவையார்) முற்றிற்று.

(கு-பு.)—

இதில் திருச்சிற்றம்பலக்கோவையார் முற்றும் பதவுரையுடனிருக்கிறது; இவ்வுரை இன்னார் செய்ததென்று தெரியவில்லை; பேராசிரியருரையைத் தழுவியெழுதப்பட்டது; உரை நடை சிறந்ததன்று. புறப்பொருள் வெண்பாமாலையில் கொளுமுன்னும் செய்யுள் பின்னுமாயிருப்பதுபோலவே இந்தப் பிரதியில் கொளுமுன்னும் செய்யுள்பின்னுமெழுதப்பட்டிருக்கின்றன.

No. 1177. திருச்சிற்றம்பலக்கோவையார், பதவுரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH MEANING.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 28.

Contains 1 to 10 stanzas with meaning word for word.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் முதல் பத்துச் செய்யுட்கள் பதவுரையோடிருக்கின்றன.

No. 1178. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUṆMAI.

Substance, palm-leaf. Size, 13⅛ × 1⅛ inches. Pages, 38. Lines, 7 on page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 45*a*. The other works herein are Aharādinikaṇṭu 1*a*, Guruliṅgasaṅgaparamarahasyaśaḍattalam 80*a*, Vīraśaivāgamam 127*a*.

Contains 1 to 265 stanzas out of 400.

A work in the form of stanzas containing one line or a couplet expressing the spiritual and inner significance of theTiruccirrambalakkōvai which apparently seems to deal with love topics Besides a short introduction in prose in the beginning there are connecting prose passages in some places in the middle.

Beginning :

" பரமசிவன் கேவலாதீதமே உண்மையாகிய ஆத்மாக்களுக்கு அறிவுவிளங்குமிபொருட்டு, பெருங்கருணையினுலே பஞ்சசத்திகளைக்கொண்டு மூன்றுமாயைகளைப்பிரேசி(ப்பி)த்து அவைகளின்காரியமாய்த் திருவருட்சத்திகளுடைய அதிட்டிதமாய்த் தத்வ[த]ாத்துவிதமாகிய பூதபௌதிக பேதங்களாகிற கருவிகளைச் சு(த)ந்திரமாகிய தனுகரணுதிகளாகக்கொடுத்துக் கேவலசகலப்படுத்திப் பரிபாகப்படுகிறபோது பசுபுண்ணியமிகுதியாற் றன்னையறியாமல் ஒருசிவபுண்ணியம்வந்து அதன் முதிர்ச்சியாகச் சரிலை[த](ய)ச கிரிலய யோகங்களைச் செய்துவருகிறபோது குருபத்தியும் சிவபூசையும் அடியவர்கள் சற்சங்கதியும் பலிக்கும். . . . . திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமியார் திருவுளம்பற்றின திருச்சிற்றம்பலக்கோவையாரில் துறைகளுள்ள வெல்லாமடங்கும்.

* * * *

பேரின்பத்துறையாவன :— தத்துவாதீதத் தற்றெரிசனசுத்தசாக்கிரத்தாணமே குறிஞ்சிநிலம் ; ஆத்மபோதாதீத(த்) திருவருட்டெரிசனச் சொற்பனத்தானமே முல்லைநிலம் ; அருளாதிக்கந்தானே, சுத்தசுழுத்தித்தானமான மருதநிலம் ; அருளுருவ பெத்ததுரியத்தானமேபாலைநிலம் ; பரசிவ இன்பாதீதமே நெய்த[நி](ணி)லம்.

* * * *

ஒ[illegible]கைப் புணர்ச்சித் துறை யீரொன்பதுஞ்
சத்தினி பாத மொத்திடுங் காலத்
துத்தம சற்குரு தரிசன மாகும். (க)

பாங்கற் கூட்டம் பதினெட் டின்பந்
தாங்குதற் போதந் தான்கண் டகறல் (உ)

End :

வினைவித்து ; தவங்கள்செய்தும் சலிப்பிலை யென்றருளுரைத்தல் (135)
கனைசுடர் : பசுகரணங்களே பகையாமென்றல் (136)
வழுவா : அருளுயிர்க்கிரங்கியது :
பொருப்பு : சுத்தாவத்தை யிச்சியாதுமூன் றுநீங்கினதருளுரைத். . (137)
பரிவு : வழக்கந் தவிர(ப்) பழகுதலரிதென் றருளுறைத்தல் (138)
கணியார் : சுத்தாவத்தை அருள்சிவ்கரண(ம்).

* * * *

கூறுவிக்குற்றல் :—" சிவத்தி லுயிரின் பார்வ தன்றி, யாகா தென்றே " ருளியம் பியது." (263)

செலவு நினைந்துரைத்தல் :—“அருளாற் சிவமுயிர்க் கன்பறிவித்தல்” (264)

பொலிவழிவுரைத்தல் :—“இன்னுங் கருணைகண் டிலையோ வென்றது” (265)

ஆக[யே](எ)ழுங் குலைமுதல் வாரிக்களிவரை கசு-ங்கண்டுகொள்க.

(கு-பு.)—

இது திருச்சிற்றம்பலக்கோவையாரில் சிற்றின்பப்பொருள்பயப்ப அகத்தமிழிலக்கணப்படி முறையேயமைந்துள்ள துறைகளைக்கூறி அவற்றின் உண்மை இவையெனப் பேரின்பப்பொருள்தோன்ற ஒருவகைச்செய்யுள் நடையாற் கூறுவது. இச்செய்யுள் கொளுவைப்போன்றது ; சில இடத்து ஓரடியாலும் சில இடத்து ஈரடியாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் முதலிலும் இடையிற சில இடங்களிலும் வசனமுமுள்ளது. இந்தப்பிரதியில் இச்செய்யுட்கள் முதல் 265 திருக்கோவையார்ச் செய்யுட்களுக்குமட்டுமே இருக்கின்றன.

No. 1179. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUNMAI.

Pages, 15. Lines, 10 on a page.

Begins on fol. 51*a* of the MS. described under No. 354.

Contains 1 to 138 stanzas.

Similar to the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. ஆயினும் சிற்சில இடங்களில் வாக்கியபேதங்கள் காணப்படுகின்றன. இதன் தலைப்பில் “திருச்சிற்றம்பலக்கோவையார் பேரின்பவனுபூதி பெற்ற சிற்றின்பம் பேரின்பமென்றது” என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் கோவையாரின் 138 செய்யுட்களுக்கே பேரின்பவுரைக் குறிப்புக்கள் உள்ளன. இது மிகப்பழைய பிரதி. அதி சிதிலமாயிருக்கிறது.

No. 1180. திருச்சிற்றம்பலக்கோவையாருண்மை.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀRUṆMAI.

Substance, paper. Size $13\frac{5}{8} \times 8\frac{1}{2}$ inches. Page, 21. Lines, 20 on a page. Character, Tamil. Condition good. Appearance, new.

Begins on fol. 22*a*. The other works herein are Śivasiddhāntappirakāśakkaṭṭaḷai 1*a* Aṣṭādaśapurāṇādivivaraṇatātparyam 65*a*, Oṭṭiyamunivākkiyam 112*a*.

Incomplete.

Same work as the above. This has been restored from the previous manuscript.

(கு-பு.)—
இது முன் பிரதியைப்பார்த்து எழுதியது. அதில் உள்ள அளவே இதிலும் உள்ளது.

No. 1181. திருவிசைப்பா.

TIRUVIŚAIPPĀ.

Pages, 4. Lines, 7 on a page..

Begins on fol. 176*a* of the MS. described under No. 1127 and 1149.

Contains only 8 stanzas.

A collection of stanzas compiled from the Tiruviśaippā which is a collection of poems in praise of God Śiva composed by Tirumāḷihaittēvar and eight other Śaiva devotees, and which forms part of the 9th Tirumuṟai.

Beginning:

காண்பதுன் வடிவம் கேட்பதுன் னுமங்
கருத்துற நினைப்பதுன் சரிதை
பூண்பதுன்ன[டு](டி)மை தொழுதலை மிசையென (?)
புனைவதுந் திருவடிக் கமலஞ்
சேண்படு புரிசை திருவிரிஞ் சியில்வாழ்
தேவனே வழித்துணை மருந்தே
பாண்படு கிளவி பச்சைமின் பாகா
பற்றுவே றில்லைமற் றெமக்கே. (க)

End:

தனதனற் றோழா சங்கார சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரசே கரனே
உனகழ லிணை[யில்](யன் னெ)ஞ்சி[டிணிதாள்]
(னுளினிதாத்)தொண்டனே[று](னு)கருமாறுகரே. (அ)

(கு-பு.)—
இது, திருமாளிகைத்தேவர் முதலியவர்கள் செய்த திருவிசைப்பாப்பாடல்களின் தொகுப்பாகும். இதைத்தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. திருவிரிஞ்சை விஷயமாக உள்ள பாடல்கள் அச்சுப்பிரதிகளில் இல்லை. இந்தப் பிரதியில் 8 பாடல்கள் உள்ளன.

No. 1182. திருப்பல்லாண்டு.

TIRUPPALLĀṆḌU.

Pages, 7. Lines, 8 on a page.

Begins on fol. 69*b* of the MS. described under No. 1125.

A poem pronouncing benedictions upon and thus eulogizing God Śiva. It forms part of the 9th Tirumuṟai. The author is Tirumāḻihaittēvar, a Śiva devotee who is considered to have lived in Tiruviḻimiḻalai about the 11th century A.D. The author is considered to be the same as Śēndan but the identity of these two persons is a matter of controversy among Tamil scholars.

Beginning :

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே (க)

மிண்டு மனத் தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின் று மென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே (உ)

End :

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி லணியுடை யாதிரைநா
ளாரா யணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும் பல்லாண்டு கூறுதுமே (கஉ)

எந்தையெந்தாய் சுற்றமுற்று மெமக்கமுதா மெம்பிரானென் றென்றுமேற்
சிந்தைசெய்யுஞ் சிவன் சீரடி யாரடி நாயன்செ[ன்ற](ப்புரை)
யுந்தமிலா வானந்தச் செந்தேனைப் புகுந் தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென் று பல்லாண்டு கூறுதுமே. (சங)

(கு-பு.)—

இது, ஒன்பதாந்திருமுறைப் பிரபந்த வகை இரண்டனுள் ஒன்று; சிவபெருமானது தோத்திர ரூபமாகவுள்ளது. இதை இயற்றியவர், திருவீழிமிழலையில் * கி-பி. 11-ஆம் நூற்றாண்டில் இருந்த ஏறன், ஐயந்தன், சேந்தன் என்னும் மறு பெயர் பூண்ட சிவஞானியாகிய திருமாளிகைத் தேவரென்பர்.

No. 1183. திருப்பல்லாண்டு.

TIRUPPALLĀṆḌU.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 178*a* of the MS. described under No. 1127.

Contains only 6 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது; இதில் 6 செய்யுட்களே உள்ளன.

* செந்தமிழ், தொகுதி. III. பக்கம் 359—62.

No. 1184. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 10 Lines, 8 on a page.

Begins on fol. 69*a*, of the MS. described under No. 337.

Contains a small portion of the first Tandiram.

This work consisting of over 3,000 stanzas was composed by Tirumūlar, one of the 63 Tamil, Śaiva saints and forms the 10th of the 12 Tirumuṟais. It expounds the principles of the Śaiva religion as made out from the Śaiva Āgamas, and is divided into nine Tandirams which again are divided into Adhyāyams, each of which treats of a particular topic. The author lived at Tiruvāvaḍuturai and an account of his life is given in the Periyapurāṇam and the Tuṟaiśaippurāṇam.

Beginning :

விண்ணி னிழிந்து வினைக்கிடாய் மெய்கொண்டு
த[ன்றி]ண்ணி(ன்ற)[ரு](தா)ளைத் தலைக்காவல் முன்வைத்து
[அன்றி](வுண்ணி)ன் று(ரு)க்கியோ ரொப்பிலா வானந்தங்
க[ன்னென்](ண்ணின்)று காட்டிக் களிம்பறுத் தானே. (௧)

End :

போதந் தருமெங்கள் பு[ன்றி](ண்ணி)ய மூர்த்தியைப்
போதந் தனில்வைத்துப் பு[ன்றி](ண்ணி)ய ராயுள்ளோர்
நாத னடிக்கீழ் நயனங்கள் கூறவே
வேதங் களித்திட வேறினர் [வெ](வி)ண்ணே. (௰)

* * * *

மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாயுவு
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்துரை மாண்டிட முத்தியே. (௪)

Colophon :

திருமந்திரமாலை முற்றும் ஓம் நம ஓம். சரவணபவனெனைச்சார்ந்த துணையே. திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது சைவத்திருமுறைகளுள் பத்தாவது; அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய திருமூலதேவரால் இயற்றப்பட்டது; இவர் கைலையில் நந்திதேவர் அருள்பெற்றவர். பொதிகைமலையிலுள்ள அகத்தியரைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டு வழியில் உள்ள தலங்கள் பலவற்றையும் தரிசித்து நவகோடிசித்தபுரமாகிய திருவாவடுதுறையில் உள்ள போதிமரத்தடியிற் றங்கி மூவாயிரம் பாடல்களையுடைய 9-தந்திரங்களாலாகிய இத்திருமந்திரமாலையைச் சைவாகமசாரமாக இயற்றினரென்பர். அவற்றுள் இந்தப்பிரதியில் உள்ள செய்யுட்கள் முதற்றந்திரத்தைச் சேர்ந்தவை. இம்மூலருடைய சரித்திரவிரிவைப் பெரியபுராணம், துறைசைப்புராணம் முதலியவற்றிற் பரக்கக்காணலாம்.

No. 1185. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Substance, palm-leaf. Size, 10¾ × 1½ inches. Pages, 54. Lines, 7–8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 83*a*. The other works herein are Kāraikkālammaiyantādi 1*a*, Kacciyappaśvāmitōttiram 10*a*, Ciṟṟambalanāḍiyārveṇbā 12*a*, Kuyiṟpattu 22*a*, Pōri Āṟumugarpadikam 25*a*, Śivakavacavattiyāyam 29*a*, Kāyārōhaṇēśuvarartōttiram 33*a*, Uṇmaineṟiviḷakkam 36*a*, Māyāvādimatam 44*a*, Avirōdaundiyār 49*a*, Pañcādikāraviḷakkam 57*a*, Taṟceyalaḻindatahaimai 73*a*, Śivañānaśittiyārsupakkam 76*a*, Śivānandamālai 100*a*, Śivayōgasāram 107*a*, Vairākkiyadīpam 127*a*.

Contains about 100 stanzas.

Same work as the above.

Beginning:

சாத்திக ஞய்ப்பல தத்துவந் தானுன்னி
யாத்திக (பேத) நெறி(த்)தே(தா)ற்ற மாகியே
யார்த்த பிறவியிற் கஞ்சி யறநெறி
சாற்றவல் லான(வன்) ச(ற்)[ச்](சி)ட னுமே. (க)

சத்து மசத்துமெவ் வாறெ[ன்]னத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச் (சிவனரு)ள் கைகாட்டப்
பத்தியில் ஞானம் பெறப்பணிந் தான(ந்)த(ச்)
சத்தியி லிச்சை தருவோன்சற் சீடனே. (உ)

End:

பரந்துல கேழும் படைத்த பிரானை
யிரந்துண்ணி யென்பதெ ஸிகத்துக் கிரங்கி
நிரந்தர மாக நினையு மடிய[வ]ர்
இரந்துண்டு தன்னடி யெட்டவைத் தானே. (கஅ)

சிவயோகி யிருப்பிட மப்புவி காசி(?)
சிவயோகி வாக்கு நான்மறை வேதஞ்
சிவயோகியன் னம்[பொ](பு)சிக்கில தறுவே
. . . . வை சிவன் சே[ர்]வையாமே. (கஎ)

ஆக. 17. ஆ 178.
கச்சியப்ப தேவன் திருவடி வாழ்க.

(கு-பு.)—
இதில் திருமந்திரப்பாடல்கள் ஏறக்குறைய நூறுக்குமேல் உள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1186. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 24. Lines, 5 on a page.

Begins on fol. 69*a* of the MS. described under No. 1036.

Contains 70 stanzas only.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே. இதில் எழுபது பாடல்கள் உள்ளன. 76 78, 79, 80 இவ்வேடுகள் பாதி முறிந்துள்ளன.

No. 1187. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Substance, palm-leaf. Size, 8⅜ × 1 inches. Pages 18. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 16*a*. The other works herein are Jōtiḍasaṅgraham 1*a*, Śiyañānamahimai 25*a*, Cidambarakarmam 26*a*, Amirtapañcākṣaratiravai 30*a*, Uḍalariñānam 34*a*.

Contains 30 stanzas occurring in the third Tandiram.

Same work as the above.

Beginning :

நயன மிரண்டும் நாசிமேல் வைத்திடங்
கயவுளர் வாயு[வு]வை யுள்ளே(ய) டக்கித்
துயரற நாடியிற் [த்து](று)ங்க வல்லாற்கு(ப்)
பயனிது காயம் புயனிலை [ஞ](நா)ட்டே. (க)

End :

ஆங்கார மாண்[டு](ட)து புத்திமன மொன்[டா](று)ய்(ச்)
சாங்காலம் [ஞ](நா)ய்வீட்டிற் சட்டையற்றெறும் போல்
ஓங்கார மூலவீட்டுச்சி யிடங்கொண்டு
நீங்காமலங் கொண்டு திற்கும் நயனமே. (௩௦)

(கு-பு.)—

இது, திருமூலர் இயற்றியது. இதில் 30 பாடல்கள் உள்ளன. 'ஆங்கார மாண்டது' என்னும் செய்யுள் அச்சிட்டிருக்கும் திருமந்திரத்தில் இல்லை.

No. 1188. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 14. Lines, 6 on a page.

Begins on fol. 130*a* of the MS. described under No. 250.

Contains the portion called the Diyānam in the 3rd Tandiram. The 28 stanzas contained herein are not found in the printed edition in the same order.

Same work as the above.

Beginning :

திருமூலர் தியானக்குறிப்பு, திருமந்திரம்.

நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திட
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை யுணர்வில்லைத் தா[தி](னி)வ்லை
தேட்டமு மில்லை சிவ[தி](னி)வ ஞமே. (க)

End :

ஆங்கார மாண்[டு](ட)து புத்திமன மொன்றாய்(ச்)
சாங்கால நாய் வீட்டிற் சடைக்குற் றெறும்புபோல்
ஓங்கார மூலம்விட் டெச்சியினுட் கொண்டு
நீங்காம[ல்க்](ற்) கொண்டு நிற்[க]கும் நயனமே. (உஅ)

திருமூலர் தியானக்குறிப்பு திருமந்திர முற்றும்.

(கு-பு.)—
இதில் திருமந்திரத்தின் செய்யுட்கள் 28 உள்ளன.

No. 1189. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 8. Lines, 5 on a page.

Begins on fol. 37*a* of the MS. described under No. 1036.

Contains 19 stanzas. Only three of these stanzas are found in the printed edition of the Tirumandiram, wherein the rest are apparently not included.

Same work as the above.

Beginning :

திருமூலர் திருமந்திரம்.

[ஞா](நா)க்குமனமு நல்ருசி[ஞா](நா)டுது
நாக்குமனமு நல்ருசி[ஞா](நா)டினல்
[ஞா](நா)க்குமனமும் நரகத்துக்கேதுவாம்
நாக்கு மனமும் நமனது வாமே. (க)

மூக்கும்[ஞா](நா)க்கும் மூலத்தி[ல்ப்](ற்)பாயாது
மூக்கும்[ஞா](நா)க்கும் மூலத்தி[ல்ப்](ற்)பா(ய்)ச்சினல்
வாக்குமனமு மனோ[லை](ல)யமாயிடுந்
தாக்கியிருக்க(ச்) சதாசிவமாமே. (உ)

End :

ஒ[ண்ணே](ன்றே)கலப்பை[யொ](யு)ழு வெருதுவஞ்சண்டு
ஒ[ண்ணே](ன்றே)வட்டொ[ண்ணு](ன்று)வுழு துண்ட வல்லற்கு
அ[ண்ணு](ன்று)நட்ட[ண்ணு] [ரு](ன்றறு)த்தண்ணலாமே.

*   *   *   *   *

பத்தியுடன் பணியாதார் பறைய[ற](ரா)வர்
பணியுங்கால் நாணுவரே குருடராவர்
சித்தமுடன் கேளாதார் செ[வு](வி)டராவர்
தேசிகனைக் கண்டொளித்[தல்](தார்) பே(ய்)நாயாவார்
பத்தியுடன் [பொ](பு)சி(க்)கிற[ணமே](வே) தாகிலுந்தான்

*   *   *   *   *

உயர்குருவுக்கெ[ண்ண](ன்னு)தார் தாழ்மைதானே.

*   *   *   *   *

கு-பு.)—
இது முன்பிரதிபோன்றதே. இதில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன. அச்சுப்பிரதியில் இல்லாத செய்யுட்கள் 16 இதில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இறுதிச் செய்யுளில் ஒரு அடி குறைந்தே யிருக்கிறது.

No. 1190. திருமந்திரமாலை.
TIRUMANDIRAMĀLAI.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 120*a* of the MS. described under No. 251.

Contains three stanzas forming the section called Varaiyuraimāṭchi in the 9th Tandiram.

Same work as the above.

(கு.பு.)—

இது முன்பிரதிபோன்றதே. இது மூன்றுபாடல்களையுடையது. "வரையுரைமாட்சி" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த ஏட்டின் பின்புறத்தில்

"மனம் [மிரு] விரிந்து குவிந்தது மாதவம்
மனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்து குவிந்தது மாயோகம்
மனம்வி ரிந்து குவிந்தது [மாண்டடம்] மு[ற்றி](த்தி)யே."

என்னும்பாடலொன்று எழுதப்பட்டிருக்கிறது.

No. 1191. மூத்ததிருப்பதிகம்.
MŪTTATIRUPPADIKAM.

Pages, 6. Lines, 12 on a page.

Begins on fol. 9*a* of the MS. described under No. 1130.

Complete.

This poem is one of the forty Prabandams included in the eleventh Tirumuṟai. A list of the names of these Prabandams together with the names of the authors is given in the Tamil remarks below. The poem now under notice consists of two Padikams in praise of Śiva of which the first is in praise of God Śiva worshipped at Tiruvālaṅgāḍu. The author is Kāraikkālammaiyār, a female saint and one of the 63 Tamil saints.

Beginning :

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெற்பம் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்க ணீண்டு பரடுயர் நீள்கணைக் காலொர்பெண்பேய்
தங்கி யலறி யுலறு காட்டிற் றழ்சடை யெட்டுத் திசையும் வீசி
யங்கங் குளிர்ந்தன லாடுமெங்க ளப்ப னிடந்திரு[வாலங்காடே (க)

* * * *

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கவ்வப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழி(க்)கட் பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே (க)
திணந்தா ளுருகி திலந்தா னலைப்ப நெடும்பற் குழிகட்பேய்
சுணங்கை யெறிந்து சூழுமோடிச் சுடலை நடத்தெங்குங்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவா
யணங்கு காட்டி லனல்கை யேந்தி யழகனாடுமே (உ)

End:

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வர் திருநட்ட
மாடு மரவம் மரைமி லார்த்த வடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடியாடப் பாவ நாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவராலருளப்பட்ட 40 பிரபந்தங்களையுடைய பதினொராந்திருமுறையுள் ஒன்று; அவையாவன :—

1. திருமுகப்பாசுரம்.
2. திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம். II
3. திருவிரட்டைமணிமாலை.
4. அற்புதத் திருவந்தாதி.
5. க்ஷேத்திரத் திருவெண்பா.
6. பொன்வண்ணத்தந்தாதி.
7. திருவாரூர் மும்மணிக்கோவை.
8. திருக்கைலாய ஞானவுலா.
9. கைலைபாதி காளத்திபாதி யந்தாதி.
10. திருவீங்கோய்மலையெழுபது.
11. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை.
12. திருவெழுகூற்றிருக்கை.
13. பெருந்தேவபாணி.
14. கோபப்பிரசாதம்.
15. காரெட்டு.
16. போற்றித் திருக்கலிவெண்பா.
17. திருமுருகாற்றுப்படை.
18. திருக்கண்ணப்பதேவர் திருமறம் (நக்கீரதேவர்).
19. திருக்கண்ணப்பதேவர் திருமறம் (கல்லாடனார்).
20. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.
21. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.
22. சிவபெருமான்திருவந்தாதி (கபிலதேவர்)
23. சிவபெருமான்திருவந்தாதி (பரணதேவர்).
24. சிவபெருமான்திருமும்மணிக்கோவை.
25. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை.
26. கோயினான்மணிமாலை.
27. திருக்கழுமலமும்மணிக்கோவை.
28. திருவிடைமருதூர்மும்மணிக்கோவை.
29. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.
30. திருவொற்றியூரொருபாவொருபது.
31. விநாயகர்திருவிரட்டைமணிமாலை.
32. கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்.
33. திருத்தொண்டர் திருவந்தாதி.
34. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருவந்தாதி.
35. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருச்சண்பை விருத்தம்.
36. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருமும்மணிக்கோவை.
37. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருவுலாமாலை.
38. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருக்கலம்பகம்.
39. ஆளுடைய பிள்ளையார் (ஞானசம்பந்தர்) திருத்தொகை.
40. திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை.

இவற்றுள் 1 திருவாலவாயுடையாரா (சிவபெருமானா)லும், 2-4 காரைக்காலம்மையாராலும், 5 ஐயடிகள் காடவர்கோனாயனாராலும், 6-8 சேரமான்பெருமானாயனாராலும், 9-18 நக்கீர(தேவ)ராலும், 19 கல்லாடனாராலும், 20-22 கபில(தேவ)ராலும், 23 பரண(தேவ)ராலும், 24 இளம்பெருமானடிகளாலும், 25 அதிராவடிகளாலும், 26-30 பட்டினத்துப்பிள்ளையாராலும், 31-40 நம்பியாண்டார்நம்பியாராலும் திருவாய்மலர்ந்தருளப்பெற்றன. அவற்றுள் இந்தப் பிரதியில் காரைக்காலம்மையாராலருளிச் செய்யப்பட்டமூத்த திருப்பதிகமிருக்கிறது; இஃது ஒவ்வொன்றிலும் 11 பாடல்களடங்கிய இரண்டு பதிகங்களையுடையது; இதில் அவ்விருபதிகங்களுமுள்ளன. இரண்டும் சிவஸ்துதியே; இவற்றுள் முதலாவது திருவாலங்காட்டுச் சிவபெருமான் விஷயமானது. இந்நூலை யருளியவர் காரைக்காற்பேயாரென்றும் வழங்கப்பெறுவர்; இவர் அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவராகிய பெண்பாலார்.

No. 1192. மூத்ததிருப்பதிகம்.

MŪTTATIRUPPADIKAM.

Pages, 4. Lines, 9, on a page.

Begins on fol. 111*a* of the MS. described under No. 1139.

Contains the second of the two Padikams included in this work.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே. ஆயினும், அதில் உள்ள "கொங்கைதிரங்கி" என்பதை முதலாகவுடைய பதிகம் இந்தப் பிரதியில் இல்லை.

No. 1193 காரைக்காலம்மையந்தாதி.

KARAIKKĀLAMMAIYANDĀDI.

Pages, 18 Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1185.

Incomplete as foll. 4, 5 and 8 are wanting.

This forms the 4th Prabandam of the 11th Tirumurai which contains 40 Prabandams on the whole. This Prabandam consists of 101 stanzas and is also known by the name of Arpudattiruvandādi. The author is a woman of the Vaiśya caste, called Punitavati when she was in her maiden and wedded state and Karaikkāl Ammai or Karaikkālpēyār after she had renounced the world and became a recluse and devotee of Śiva. An account of her life is given in the Periyapurāṇam.

Beginning :

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்தநின் [திரு](சே)வடியே சேர்ந்தே—னிறந்திகழு
மை(ஞ்)ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்ற தீர்ப்ப திடர். (க)
இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனுஞ்—சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு (ம்)மெம்மானற்
கன்பறா தென்னெஞ் சவ[ற்](ர்க்)கு. (உ)

End :

உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பாக்
கரைவினற் காரைக்காற் பேய்சொற்—பரவுவா
ராராத வன்பினே டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. (கoக)

திருச்சிற்றம்பலம். அந்தாதிமுற்றும்.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப்பிரபந்தம் 40 இல் 4-ஆவது ; சிவஸ்துதி ; 101 வெண்பாக்களையுடையது ;காரைக்காலம்மையாரால் இயற்றப்பெற்றது. இவருக்குக்காரைக்காற்பேயாரென்றும், இந்நூலுக்கு 'அற்புதத்திருவந்தாதி' என்றும் வேறுபெயருண்டு. இந்தப்பிரதியில் இந்நூலெழுதப்பட்டிருந்த ஏடு 12–ல் 4, 5, 8 இந்த எண்களுக்குரிய மூன்றேடுகளுமில்லை. இது மிகச் சிதைந்திருக்கிறது.

No. 1194 காரைக்காலம்மையந்தாதி.

KĀRAIKKĀLAMMAIYANḌĀDI.

Substance, paper. Size, $8\frac{1}{2} \times 6\frac{7}{8}$ inches. Pages, 68. Lines, 12 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 1*a*. The other work herein is Pañcādhikāraviḷakkam 35*a*

Complete, but stanzas 17 and 18 are wanting.

Same work as the above.

(கு-பு.)

இது முன்பிரதியைப்பார்த்து எழுதப்பட்டது. இதில் 17, 18-வது பாடலிரண்டும் எழுதப்படவில்லை. மற்றப்பாடல் 99-ம் உள்ளன.

No 1195 திருமுருகாற்றுப்படை.

TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Pages, 31. Lines, 9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 525.

Complete.

This work forms the 17th Prabandam of the 11th Tirumuṟai, and is in praise of God Subrahmaṇya. It is written in a kind of big stanza

called Āśiriyappā and contains 317 lines. It is considerd to be the first work of the collection called Patturpāṭṭu, and the author is Nakkirar, one of the poets of the Kaḍaiccaṅgam.

Beginning :

வேண்டிய வடியவர்க் குதவி வெவ்வினை
மாண்டறத் துடைத்தருள் வழங்கிக் காக்குமால்
காண்டகு மறுமுகக் கடவுள் செம்மணித்
தூண்டகு பன்னிரு தோளின் றிண்மையே.
ஒருமுரு காவென்றென் னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையன் முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.
உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பில் வாணுதல் கணவன்

End :

குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப்பிரபந்தம் 40 இல் 17 வது; சங்கப்புலவர்கள் தொகுத்த பத்துப்பாட்டுக்களுள் முதலாவது; நக்கீரரென்னும் மதுரைக்கடைச் சங்கப்புலவராலியற்றப்பெற்ற ஓர் ஆசிரியப்பா; 317 அடிகளையுடையது. முருகக்கடவுள் விஷயமானது. இந்தப்பிரதியில் இது பூர்த்தியாயிருக்கிறது.

No. 1196. திருமுருகாற்றுப்படை.

TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Substance, palm-leaf. Size, 9 × 1¼ inches. Pages, 16. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 44*a*. The other work herein is Tiruvaguppu 1*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் மூலம் முற்றும் இருக்கிறது. இதன் இறுதியிலுள்ள இரண்டு ஏடுகள் முறிந்து போயிருக்கின்றன.

No. 1197. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Substance, palm-leaf. Size, $7\frac{1}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 30. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Muruhanahaval 19*a*.

Complete.

Same work as the above. At the end of the work there are four leaves containing eulogistic stanzas on Muruhakkaḍavuḷ.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் மூலம் முற்றும் உள்ளது. இந்நூல் பூர்த்தியானதன்பின் முருகக்கடவுள் சம்பந்தமான சில தனிப் பாடல்கள் நான்கு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன.

No. 1198. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI

Pages, 4. Lines, 12 on a page.

Begins on fol. 53*a* of the MS. described under No. 1143.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; 36-வது வரி முதல் திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொல்லிய பகுதிமட்டுமேயுள்ளது.

No. 1199. திருமுருகாற்றுப்படை.
TIRUMURUHĀṞṞUPPAḌAI.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 88*a* of the MS. described under No. 127.

Contains the portion eulogizing the hill Tirupparaṅkuṟnam.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் திருப்பரங்குன்றத்தைப்பற்றிச் சொல்லும் பகுதிமட்டுமே உள்ளது.

" உலக முவப்ப ம[வ](லை)கிழ வோனென் [ரு](று)ரைப்பவர்தங்
கலக வினைகள் களைபவ னேயென் கருத்தி னுள்ளே
இலகு மலர்க்கரம் பன்னி[ெ]ரண் டாறு திருமுகமுந்
திலக மயி[த்](ற)னி வேறுந் திருத்தணிச் சேவகனே "

என்ற கலித்துறையொன்று இதன் முதலில் எழுதப்பட்டுள்ளது.

No. 1200. திருமுருகாற்றுப்படை, நச்சினார்க்கினியாருரையுடன்.

TIRUMURUHĀṞṞUPPAḌAI WITH THE COMMENTARY OF NĀCCINĀRKKINIYĀR.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under No. 261.

Incomplete. Contains the lines 3 ot 32 with commentary and 33 to 35 without commentary.

A commentary on the Tirumuruhāṟṟuppaḍai described under No. 1195 By Nāccinārkkiniyar of Bhāradvājagōtra and a native of Madura.

Beginning :

* * * *

சேண்விளங்கொளி—கட்புலனுக நோக்குவார் கண்ணிடங்களெல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற ஒளி

உவப்ப வெழுந்துதிரிய ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற வொளியெனத் தொழிலுவமங்கொள்ளுங்கால் வினைமுடிக்க.

End :

வண்காது துணைத்தக நிறைந்த பிண்டி யொண்தளிர் நுண்பூணுகந்திளைப்ப—வளவிடகாதிலே (த)ம்மிலொத்தற்குப்பொருந்தவிட்டு நிறைந்த பிண்டியினது ஒள்ளியதளிர் நுண்ணிய பூணினையுடைய மார்பிடத்தே அசையாநிற்க

திண்காழ் நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலை க்கொட்டி. . . . .
. . . .

(கு-பு.)—

இந்நூலைப்பற்றிய குறிப்பு 1195 நம்பரில் எழுதப்பட்டிருக்கிறது; இவ்வுரை மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரால் இயற்றப்பட்டது ; சிறந்தது. இந்நூல் அடி 317–இல், இந்தப்பிரதியில் 3 முதல் 32 வரையிலுள்ள அடிகள் உரையுடனும், 33 முதல் 35 வரையிலுள்ள அடிகள் உரையின்றியுமிருக்கின்றன.

No. 1201. சிதம்பரநான்மணிமாலை.

CIDAMBARANĀNMAṆIMĀLAI.

Substance, palm-leaf. Size, $14\frac{7}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 17. Lines, 8–10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Begins on fol. 1*a*. The other work herein is Śivappirakāśam 12*a*

This work containing 40 stanzas forms the 26th Prabandam of the 11th Tirumuṟai and is in praise of God Śiva worshipped under the

name of Naṭarāja in Cidambaram. The author is the well-known Paṭṭinattuppiḻḻaiyār. The work is also called Kōyinānmaṇimālai.

Beginning:

(வெண்பா)

பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டு(டே)வாம் —பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. (க)

(கட்டளைக்கலித்துறை)

குடைகொண் டிவ் வையமெல் லாங்குளிர் வித்தெரி போற்றிகிரிப்
படைகொண் டிகறெறும் பார்த்திப ராவதிற் பைய்பொற் கொன்றைத்
தொடைகொண்ட வார்சடை யம்பலத் தான்றொண்ட ரேவல் செய்து
கடைகொண்ட பிச்சைகொண் டுண்டிங்கு வாழ்தல் களிப்புடைத்தே (உ)

End:

(அகவல்.)

சதுமுகன் றந்தைக்குக் கதிர்விடு சுடவு
ளாழி கொடுத்த பேரருள் போற்றி ;
முயமறியொடு பணிந்த வியக்கர்கோ னுக்கு
மாநிதி யிரண்டு மானுப் பெருவளத்
தளகை யொன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி ;
தாணிழ லடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழா வ கோண்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
வுதைத்துயி ரளித்த வுதவி போற்றி;

* * * *

தாதையை யெறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி ;
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையி லுண்டல் போற்றி ;
வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து
நந்தா விளக்கை நந்துபு பெயர்த்த
தாவுபல் வெலிக்கு மூவுல காள
நொய்தினி லளித்த கைவளம் போற்றி;

* * * *

தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
தாடு நாடகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினு மென்றனக் கிறைவ
வாற்ற வில்லை [போற்றி]யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ வடியே. (சo)

Colophon:

நான்மணிமாலை முற்றும்.

ஸ்ரீமுகஹூ ஆடி மீ துவாதசி குருவாரம் ரோகிணி நட்சத்திரம் பெற்ற சுபதினத்தில் திமிரமகலக் குமரன் வரைந்தனன்.

(கு-பு.)—

இது பதினொராந்திருமுறைப் பிரபந்தம் 40-ல் 26-வது; 40 செய்யுட்களையுடையது. பட்டினத்துப் பிள்ளையார்வாக்கு; சிதம்பரம் நடராசமூர்த்தி விஷயமான துதி. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. கோயினான்மணிமாலையென்றும் இதற்குப் பெயருண்டு.

No. 1202. சிதம்பர நான்மணிமாலை.
CIDAMBARA NĀNMAṆIMĀLAI.

Substance, palm-leaf. Size, 3¼ × 1⅞ inches. Pages, 72. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1143.

Complete.

Same work as the above.

Colophon :

நான்மணிமாலை கனகாசலம் எழுதி முடித்தது. முற்றும்.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1203. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.
TIRUVIḌAIMARUDŪR MUMMAṆIKKŌVAI.

Pages, 44. Lines, 6–8 on a page.

Begins on fol. 7*a* of the MS. described under No. 1133.

Complete.

This work forms the 28th Prabandam of the 11th Tirumuṛai, and is in praise of Śiva worshipped under the name of Mahāliṅgamūrti in Tiruviḍaimarudūr, a place in the Tanjore district. The author is Paṭṭinattuppiḷḷaiyār. He has been praised by Tāyumānavar and Kaṇṇuḍaiyavaḷḷalār, and in the 28th Agaval of this work he praises Appar, Sundarar, Sambandar, Maṇikkavāsakar and Varakuṇapāṇḍiyar, thus giving room for the inference that he lived after these last mentioned four persons and before the first mentioned two persons.

Beginning :

(ஆசிரியப்பா.)

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலு மலம்பப் புனைந்து
கூற்றி னாற்றன் மாற்றிப் போற்றுறு
வலம்புரி நெடுமா லேனமாய் நிலம்புக்
காற்றவி னகழத் தோற்றுறு திமிர்ந்து

பத்தி யடியவர் பச்சிலை யிடினு
முத்தி கொடுத்து முன்னின் றருளியுந்
திகழ்ந்துள தொருபாற்
(. . . . .)
உலக மேழும் பன்முறை யீன் று
மருதிடங் கொண்ட வொருதனிக் கடவுணின்
றிருவடி பரவுதும் யாமே நெடுநா
ளிறந்தும் பிறந்தும் மிளைத்தனம் மறந்துஞ்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே. (க)

(வெண்பா.)

பொருளுங் குலனும் புகழுந் திறனு
மருளு மறிவு மனைத்து—மொருவர்
கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை
மருதாவென் பார்க்கு வரும். (உ)

End :

(அகவல்.)

கொண்டலி னிருண்ட கண்டத் [தி](தெ)ண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ !
தேவ தேவ திருவிடை மருத !
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
யயிரா வணத்துறை யாளு மப்ப !
கயிலாய வாண ! கவுரி நாயக !
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்குங் குமர வேளுஞ்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாரகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரரு
மானப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா பதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் செந்தீக் கடவுளும்
(. . . . .)
வித்தகப் பாடான் முத்திறத் தடியரும்
பெருந்துறைத் தெய்வமுந் திருந்திய வன்பி
லத்தகு செல்வத்தை யவமதித் தருளிய

சித்த மாருச் சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல கொடுத்துங்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தாற்றிய
செழுவிரை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
யும்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் [ெ]றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசை(க்) கிடப்ப
வாய்த்துள தென்று நாய்க்க[ா]ட்[ெ]ட (மெ)டுத்துங்
காம்பூழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவொடு கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவனும்
(. . . . .)
தின்னுல கனைத்தி னன்மை தீமை
யானவை நின்செய லாத (வி)[லே]
(ஞனே) யமையு நவமில வழிக்கே. (28)
(. . . . . . .)

கரத்தினின் மாலவன் கண்கொண்டு நின்கழல் காட்டநல்ல
வரத்தினை யியு மருதவப்பா மதி யொன்றுமில் லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தைய தாகிவெண் காடனென்னுந்
தரத்தினு மாயது நின்னடி யார்தெய்வத் தாமரையே. (௩0)

(கு-பு.)—

இது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்று. திருவிடைமருதூர் மஹாலிங்கமூர்த்தி விஷயமானது. இயற்றியவர், "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ, லாருந் துறக்கை யரிதரிது", "ஓட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார்" என்று தாயுமானவராலும், "பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யையப்பரவி, விட்டு விட மாட்டார் வெறுவீடர்" எனக் கண்ணுடைய வள்ளலாராலும் பாராட்டிக் கூறப் பெறும் பட்டினத்துப் பிள்ளையாகும். இந்நூலின் 28-ஆம் அகவலால் நாயன்மார் மூவரையும், மாணிக்கவாசகரையும், வரகுண பாண்டியரையும் பாராட்டிக் கூறியிருத்தலால் அந்நால்வருக்கும் இவர் காலத்தாற் பிந்தியவராவார். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1204. திருவொற்றியூரொருபாவொருபது.
TIRUVORRIYŪRORUPĀVORUPADU.

Substance, palm-leaf. Size. 5 × 1⅝ inches. Pages, 22. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, new.

Begins on fol. 1*a*. The other work herein is Irupāirupadu with commentary, 12*a*.

Almost Complete.

This work consisting of 10 stanzas forms the 30th Prabandam of the 11th Tirumuṟai. The author is the well-known Paṭṭinattup-piḷḷaiyār. The 1st stanza, the last line of the 9th stanza and the 10th stanza are not found in the printed editions.

Beginning :

கரு[ெ]வந்து வீழக் கடைக்கணித்தென் னுள்ளத்
திருவந்து ஞானத் தெளிவின்—சொருபந்
தெரிந்தகவ லந்தாதி செய்தருளப் பட்ட
வருந்தகைக யேதுமறி யேன்.

இருநில மடந்தை யியல்பினி லுடுத்த
பொருகடன் மேகலை முகமெனப் பொலிந்த
வொற்றியூர் மாநக ருடையோ யுருவின்
பெற்றி யொன்ருய்ப் பெற்ருே ரியாரே.

(* * * *)

எவ்வகை யளவினிற் கூடிநின்
றவ்வகை பொருளுநீ யாகிய விடத்தே.

End :

உலகுமதி யுருவத் தொண்சுடர் மூன்றி
னிலகு நாட்டத் திறையே யபயஞ்
சிறுகதிர்த் திங்கள் சென்னியான் முடித்த
கறைமிடற் றமிர்தக் கடலே யபயம்

(* * * *)

ஊட்டுந் தன்மையு மொழியுந் தன்மையும்
பெண்டிரு மக்களும் பிறவு மாக
கொண்டறபவர் நாகு பூஉந் தன்மையுங் (?)
காலமு மூன்றுங் கயிற்றுக் கிளையெடு

* * * *

(கு-பு.)—

இது, பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள் 40-ல் 30-வது; பட்டினத்துப் பிள்ளையார் இயற்றியது. செய்யுள்நடையிற் சிறந்தது. 10 அகவல்களையுடையது. இதன் முதலிற் காணப்படும் வெண்பா அச்சுப்பிரதியில் இல்லை; அன்றியும் இதன் 9-ஆம் பாட்டிறுதியும் 10-ஆம் பாட்டும் அச்சுப்பிரதியிற் காணப்படாதன. 10-ஆம் பாடலின் இறுதியிற் சில அடிகள் இந்தப் பிரதியில் இல்லை.

No. 1205. நம்பியாண்டார்நம்பியந்தாதி.

NAMBIYĀṆḌĀRNAMBIYANTĀDI.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 104*a* of the MS. described under No. 83.

Complete.

This work consisting of 89 stanzas forms the 33rd Prabandam of the 11th Tirumuṟai and gives very briefly the biography of the 63 Tamil Śaiva devotees called Arupattimūvar. It is also called Tiruttoṇḍar Tiruvantādi and forms the basis of the later work Periyapurāṇam. The author is Nambiyāṇḍārnambi.

Beginning :

செப்பத் தகுபுகட் டில்லைப் பதியிற் செழுமறையோ
ரொப்பப் புவனங்கண் மூன்றினு மும்பரி [நா](னூ)ரரித்த
வப்பற் கமுதத் திருநடற் கந்திப் பிறையணிந்த
துப்ப[ர்க்](ற்) குரிமைத் தொழில்புரிந் தார்த[ம்]மைச் சொல்லுதுமே. (க)

End :

ஓடிடும் பஞ்சேந் திரிய மொடுக்கியென் னூழ்வினைகள்
வாடிடும் வண்ண நின் றெத்தவஞ் செய்த(னன்) வானிலுள்ளோர்
சூடிடுஞ் சீர்த்திருப் பாதத்தர் தொண்டத் தொகையி னுள்ள
சேடர்தஞ் செல்வப் பெரும்புக ழந்தாதி செப்பிடவே. (அக)

(கு-பு.)—

இது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்கள் 40-ல் 33-வது; பெரிய புராணத்திற்கு முந்தியது; நம்பியாண்டார்நம்பி என்பவராற் பாடப்பெற்றது; 89 கட்டளைக்கலித்துறைகளையுடையது; பெரும்பாலும் ஒவ்வொரு கலித்துறையிலும் ஒவ்வோரடியார் செய்திகள் கூறப்பட்டிருத்தலால் இதற்குத் திருத்தொண்டர் திருவந்தாதியென்றும் ஒரு பெயருண்டு; இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 1206. பெரியபுராணம்.

PERIYAPURĀṆAM.

Pages, 4. Lines, 12 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under 623.

It is written in the beginning of this MS. that the stanzas given therein form the remnants of the Apparpurāṇam which is that portion of the Periyapurāṇam dealing with the life of Appar or Tirunāvukkaraśunāyanar. But the stanzas are not found in the printed editions of the Periyapurāṇam. For other MSS. of this work see Nos. 619 to 627 *ante*.

Beginning:

அப்பர் புராணத்தில் குறைச்சல் பாட்டு.

அங்ககன்று போகியரன் மகிழ்ந்ததான
    மம்மருங்கும் பலவிறைஞ்சி யன்பர்சூழக்
கொங்கணை பூங் குடமூக்கிற் றிருக்கா ரோணங்
    கொடிமதில்சூழ் கீழ்க்கோட்டங் கும்பிட் டேத்தி
மங்கையுமை பாகர் வலஞ் சுழியில்வந்து
    வலங் கொண்டு வந்து மகிழ்ந் தேத்திப் போந்து
தெங்க[ளை](ணை) பைம் பொழி(ல்) புடைசூழ்பழையா
    றெய்தித் திருச்சத்தி முற்றத்துச் சேர்ந்தாரன்றே. (௱௯௫)

End:

தேனார்ந்த மலர்ச்சோலைக் கழுக்குன்றின் திருவடியா
ரானாத விருப்பினொடு மெதிர்கொள்ள வணைந்தருளித்
தூனாள்வெண் மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப் (?)
பானாடு மிசைத்திருந்த திருநந்த வளம்பாடி. (௯௪௨)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இப்பாடல்கள் அப்பர் புராணத்தைச்சேர்ந்தவை என்று ஊகிக்கப்படுகின்றது. இதன் தலைப்பில் "அப்பர் புராணத்தில் குறைச்சல் டாட்டு" எனக் குறிக்கப்பட்டிருப்பதால் இவை பெரிய புராணத்தின் ஒரு பிரிவாகிய திருநாவுக்கரசு நாயனார் புராணத்தைச் சேர்ந்தனவோ எனும் ஐயமுண்டாகின்றது; ஆயினும் இது ஆராயத்தக்கது.

B. ŚAIVASIDDHĀNTAŚĀSTIRAM.

No. 1207. அட்டபுட்பம்.

AṬṬAPUṬPAM.

Size, 6 × 1 inches. Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 47*a* of the MS. described under No. 185.

On the eight flower-like qualities or virtues of a person which are required to be given as offerings when he mentally worships God. The eight qualities are mentioned in the Tamil remarks below.

Beginning:

அஷ்டபுஷ்பம்.

சிவாயமநாயநமா (?)	ஈசானம்
சிவமூர்த்தியேநமா	தத்புருஷம்
சிவாயநம	அகோரம்
[குறு](கிரு)தையேநமா	வாமதேவம்
சிரசேநமா	சத்தியோசாதம்
சிகாயநமா	* * *
கவசாயநமா	திக்குப்பந்தனம்
அ[ஷ்](ஸ்)திராயபடு	அவகுண்டனம்
	தேனுமுத்திரை

End:

வித்யாதேகம்	திருவி... . . . க சுவாத ஆ க்கியம்
நேத்திரம்	காளகன்னிமுத்திரை
ஆவாகனம்	லிங்கமுத்தி... ர
தாபனம்	நமஸ்காரமுத்திரை
சன்னிதானம்	இருதையாதி அங்கத்துவம்.
சன்னிரோதனம்	
விண்ணப்பம்	

(கு-பு.)—

இது சைவமதவிஷயமானது. கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுட்பங்களைக் கொண்டு ஈசுவரனை மனத்தாருலருச்சிக்குமுறைமை முதலியவற்றை விளக்குவதென்று தோற்றுகிறது.

No. 1208. அதிகாரப்பிள்ளையட்டவணை.

ADIKĀRAPIḺḺAIYAṬṬAVAṆAI.

Pages, 10. Lines, 14 on a page.

Begins on fol. 115*a* of the MS. described under No. 344.

Complete.

A prose treatise explaining the nature and characteristics of God, Soul and Pāśam which is said to obstruct the view of the soul. It was taught by Kaṇṇuḍaiyavaḷḷalār to Adikārappiḷḷai who interrogates the former on these points. The work is one of the twenty treatises, called Śāstirams, written by Kaṇṇuḍaiyavaḷḷalār.

Beginning:

சிவஞான மோகதாகமீதூர்ந்த அதிகாரப்பிள்ளை ஈசனுர்? யானுர்? என்னை மறைத்திருக்கும் பாசம் யாது? என்னும் விசாரமீக்கொண்டு கேட்க, கா(ர)ண ஞானக்கண்ணுடையோன் சித்தாந்த மகா வாக்கியம் வியவகரிக்கும்படி :—

சிவம் நானுனேனென்ன, நானுரென்ன, நீயும் சிவம், ஞான தீக்கையால், திருநோக்கால், திவ்வியபாவனையால், சிவயோகத்தால், திருவாக்கால், திருப்பரிசத்தால் சிவம் நீயானுயென்ன, எனக்குண்டான அனுபோக சிவம் எங்குமுண்டோவென்ன வினுவும் விடைக்கு உத்தரம் :—

சிவனுனவன் பூதபௌதிகங்கடோறுமுண்டு. இந்த வாக்கியத்தால் உய்ந்துபோனேனென்று ஆனந்தமாக்கடலமுந்திய மாணுக்கனுக்கு மீட்டும் வற்புறுத்தி மேற்கூறுவான் :—முதல்வாக்கியம் சத்து. இரண்டாம் வாக்கியம் சித்து. மூன்றும் வாக்கியம் ஆனந்தம் :—

முதல் வாக்கியத்தால் மல நாசனம். இரண்டாம் வாக்கியத்தால் கன்ம நாசனம். மூன்றும் வாக்கியத்தால் மாயைநாசனும்.

End:

இந்தப் பி[ற](ர)காரத்தைச் சிவஞானப் பிரகாசத்து உண்மையிற்கண்டு தெளியக்கடவை.

பதி பசு பாச விளக்கம், ஞானவிளக்கம், உபதேசமாலை, சிவஞானப்பிரகாசம், அத்துவிதக்கலி (வெண்பா), அதிரகசியம், (சிவாகமக்) கச்சிமாலை இந்த ஏழுமொருகொத்தாயிருக்கும்.

பதி பசு பாச விசாரணையும், உண்மை நிஷ்டைடயும், [ெ]தசகாரிய விசேடமும், குருசிரத்தை(யும்) மாகாவாக்கியமும், தீட்சாக்[ற](ர)மமும், ஞானவுபதோசமும், ஆகமசித்தார்தமும் காண்க்கடவை. சத்திய நிர்வாணதீக்கையில்லாதவர்க்கு இந்தமார்க்கம் போதிக்கில், நீரருந்துமாவை உதட்டிேனேன் சாருங் கதியடைவை.

புண்ணுடலை நீப்பேனோ பொன்றுத மெ(ய்)ஞ்ஞானக்
கண்ணுடைய வள்ளல்பதங் காண்பேனோ - வெண்ணுடைய
வஞ்செழுத்தி னுண்மை யறிவேனோ வாங்கதனுட்
பிஞ்செழுத்தைப் பின்னியுவே னோ.

Colophon:

அதிகரப்பிள்ளை யடவணை முற்றும்.

இது க[ற்](ர்)ணப[ர]ம்பரை. திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல் சைவசமயத்தைச் சார்ந்தது. வள்ளலார் சாஸ்திரம் இருபதனுள் ஒன்று. வசனநடையாலாயது. அதிகாரப்பிள்ளை யென்பவர் கண்ணுடைய வள்ளலாரை உண்மைப் பொருள் எது என வினவ, அதற்கு அவர் மறுமொழி கூறுவதாக அமைந்தது இது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது.

No. 1209. அதிரகசியம்.

ATIRAHASIYAM.

Pages, 22. Lines, 9-14 on a page.

Begins on fol. 20*a* of the MS described under No. 344.

T Complete in 6 stanzas.

This work, like the preceding one, is one of the 20 Śāstirams of Kaṇṇuḍaiyavaḷḷalār It explains, how when one seeks after a spiritual teacher, God appears as a Guru, instructs him in the true faith, and leads him on to salvation.

Beginning:

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனு மலர்கொண்டு பத்தியெனும் புனலாட்டிப் புரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்து துரியமெனும் விளக்கேற்றிச் சோக நீங்கி (க)
யாகமெனுங் கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிக்கே யன்புசெய்வாம்.

* * * *

அவையடக்கம்.

அதிரகசியத்தை யானு மளவிடத் துணிதல் வானின்
மதியினை மழ[ற](த)ன் கையால் வவ்வுத லொக்கு மேனு
மெதிகடம் மருளா வி[ன்னு](ந்நூ) விசைப்பனிங் கிழிந்த நாய்த்தோல்
வதியினும் மணியை யெள்ளார் மணிநலந் தெரிந்தோ ரெல்லாம். (எ)

நூற்கருத்து.

அரிதுயிற் கடலு மிந்த வாசையங் கடற்கொவ் வாமை
பருவமிக் குயர்ந்தோ னோக்கிப் பாசமா திகளை நீத்துக்
குரவனைத் தேடிக் கண்டு கூடரும் வீடு கூடும்
ஒருமையை யி[ன்னு](ந்நூ)லின்க ணுணர்த்துவ னுணர்வி னாலே. (அ)

பாயிரம் முற்றும்.

மா[ணி](நி)ல வரைப்பி னுள்ளோர் மாணனுக் குலக மெல்லாங்
கான னீர்போலத் தோன்றிக் கரப்பது கருத்துட் டோன்றித்
தே[னி](னு)லா மொழியா [ற](ரா)சைச் சீயென வெறுத் துமிழ்ந்தான்
பானல்வாய் மகவி னாசை பாசத்தா [ள](ரா)சை நீத்தான். (கூ)

* * * *

சித்திர பானுவாலுஞ் சிதைவிலா விருளை வீட்டி
யுத்தம முத்திஞான முதவுவா னுளனோ வென்[று](றிங்)
[வ](க)த்திசூழ் ஞாலமெல்லா [ந் து](ம)ளிமதுக் கலையு மாபோற்
பொத்தகப் பொருளைக் காட்டும் போதகா சானைத் தேர்வான். (௰௨)

End:

அதிரக சியத்தான் மேலா மறிவினை விளக்[கி](கு) வித்தோய்
கதிபிறி தில்லை யென்னக் காட்டிய கருணை மேருப்
பதிகுடி கொண்ட ஞான தேசிக பரமா வுன்னை
விதிமுறை பணிவ னோக்கி விம்முவ னென்செய் கேனே. (௬௫)

பிண்டமா முடலு னல்லேன் பிராணவா யுவுநா னல்லேன்
கண்ட விந்தியநா னல்லேன் கரணமோர் நான்கு மல்லேன்
பண்டைய வறிவே நானென் றுணர்தரு பருவம் வாய்ப்பின்
வண்டறை கொன்றைத் தாரன் மலரடி காணலாமே. (௬௬)

Colophon:

அதிரகசிய முற்றும்.

(கு-பு.)—

இது வள்ளாலர் சாத்திரம் இருபதனுள் ஒன்று. சைவசமயத்தைச்சார்ந்தது. இந்நூல், மோட்சமடைய விரும்பியவன் நல்லாசானை நாடியபோது, பிரமமே அவனுக்குக் குருவாகத்தோன்றி உண்மைப்பொருள் விளங்க உபதேசித்து அவனை மோட்சமடைவிப்பதாகக்கூறுவது. உலகப்பற்றை நீங்கி உண்மைப்பொருளை அறியும் வகைகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. பாயிரம் உட்பட அறுபத்தாறு விருத்தங்களாலாகியது. முற்றும் இருக்கிறது.

PAGE NO 1061-1238 MISSING IN ORIGINAL

No. 1427. அத்துவிதவேதாந்தக்கட்டளை.

ATTUVIDAVĒDĀNTAKKAṬṬAḶAI.

Pages, 36. Lines, 8 on a page.

Begins on fol. 20*a* of the MS. described under No. 1310.

Complete.

A treatise in prose explaining the four Mahāvākkiyams taken from the four Vēdas in support of the doctrines of the Advaita Vēdāntam. Quotations from works like Tattuvāmirtam are found here.

Beginning:

தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ்சா . . .
கல்வியுந்தருமு . . . துவடி . . ஞ்
. . . . ருந்தசீலமும் வலியுந் திருவு
மின்பமுஞ் சிதைவிலா வறிவு
முந்தையா முளத் துவகையு முயிரு
முத்தியு மொழிவருஞ் சமைவு
மெந்தை யாகிவந் தேழையேனையுமா
ளிறைவ ஞர்கழ லாகுமென் றனக்கே.

ஆதலால் மகாவாக்கியஞ்சொல்லப்பட்ட ஞானமே ஞானம்; அதையல்லா மற் சொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் அறியுமிடத்தில் அஞ்ஞானமேயாம். ஆனபடியாலே சுத்த வேதாந்தஞ் சொல்லப்பட்ட பரிசை ஆசாரியர் சீட னுக்கு அனுக்கி[ற](ர)கம் பண்ணுகிறூர்.

அஃதெப்படியென்னில் :—இருக்கு, எசு[று](சு), சாமம், அத[ற்](ர்)வணம் என்கிற நாலுவேதமும் இரண்டு பி[ற](ர)காரமாயிருக்கும் (. . . . .) பி[ற](ர)பல சுருதிவாக்கியம் அத்தியா[ற்](ன்)மியத் தைச் சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிடதத்ததாயிருக்கும். இது நாலுவாக்கியங்களைப் பி[றி](ர)தி[வா](பா)திக்கும் ; அஃதேதென்னில் :— பி[ற](ர)ஞ்ஞானம்பி[ற](ர)மம், அகம் பி[ற](ர)மாஷிமி, தத்[தொ](துவ) மஸி, அயமா[ற்](ன்)மாப்பி[ற](ர)மம் என்கிற இந்த நாலுவாக்கியமும் சீவபர அயிக்கியத்தைச் சொல்லும்.

End:

அந்தச் சொரூபந்தானே எட்டியல்பாவது—அஃதேதென்னில் :—இந் தக்கே[ழ்](ள்)வி முதலாக இப்படி அனுக்கி[ற](ர)கம் பண்ணப்பட்ட குரு நாதன் . . . . . . தோவென்னில் :—

"மூலே யிருந்தாலை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்திற் றம்பலவரென் றுந்தீபற".

இத்தைத் <u>தத்துவாமுதத்திலே</u>கண்டுகொள்க.

"தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரன் சிவ மாய்திற்க

வம்பத மேலேச் சொருபமா வா[ய்]க்கியச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி[நாத](தா)னே."

Colophon:

அத்துவித சுத்தவேதாந்ததெரிசனமுற்றும்.
பரிபூர்ணம். சிவப்பிரகாசன் திருவடி வாழ்க.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச் சேர்ந்தது; நான்குவேதங்களிலுள்ள மகாவாக்கியங்கள் நான்கினுடைய பொருள்முதலியவற்றை விளக்கமாகக் கூறுவது; வசனநடையிலமைந்தது. தத்வாமிர்தம் முதலிய நூல்களிலிருந்து இடைஇடையே பல செய்யுட்கள் இதில் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. ஏடுகள் பல ஒருபு ம் செல்லரிப்புண்டும், சில சிதைந்துமுள்ளன.

No. 1428. அத்துவிதானுபவம்

ATTUVIDĀNUBAVAM.

Pages, 34. Lines, 8 on a page.

Begins on fol. 198*a* of the MS. described under No. 1423.

Complete.

This work in Advaita Vēdāntam explains the subject in 12 chapters, each consisting of ten stanzas. The topics dealt with in them are given in the Tamil remarks below. The work is said to have been rendered into Tamil from Sanskrit by its author Rāmakavi who was the son of Śivarāmakavi and disciple of Lakṣmī Narasiṅgadēśika.

Beginning:

அத்துவிதானுபவம், அதிகாரி [லெ]லக்ஷணம்.

பத்தியுட னிப்பிறப்பில் முற்பி(ற)ப்பி லாகிலுமே பலன்வேண்டாமை
நித்தியநை மித்தியமா முதலான தருமங்க ணிறையச் செய்தா
லொத்திருந்த சித்தசுத்தி யுண்டாம்பின் னுபாசனையா லொருமை யுண்டா
முத்திதரும் விசாரணையாற் பின்சீவன் பிரமமாய் முடியுந் தானே. (௧)

கருமமெனுங் [லெ]கர்ப்பமுறு மனமதயா னையைச்சுருதிக் கயிற்றெட் டீர்த்துத்
தருமனன தியானமெனு நிகளத்தாற் சிரமி[ன]தய தலத்திற் கட்டி
வருமறிவா மாவலவன் பழகியபின் பி[ற](ர)வஞ்ச வனஞ்சேர்ந் தாலு
மொருதிலேயி னின்றுலுந் தனையறிந்தபின்பு மத முண்டா காதே. (௨)

End:

சிருட்டிக்கு முன்பிரண்டி லாமலொன்று யிருந்த சத்தே தினந்தே காதி
விருத்திக்குஞ் சாட்சி யாகியநீ யென்றே சாமவேதஞ் சொல்லு [மாவென்றும்
மருப்பமிலா வபரோட்சப் பொருளிதென் றுஞ்[சி](செ)க சாட்சியான்
பொரு . . . தில்விளக்க மிதே பிரம மென்று மதருவணம் புகலுந் தானே.
(௱௨௰)

* * * *

Colophon :

நவமான லக்ஷ்மி நாரசிங்க தேசிகரான் ஞானம் பெற்றோன்
சிவராம கவியுதவு ராமகவி வடமொழியாற் செய்த நூலை
யிவனாக வேபின்னுந் தென்மொழியா னூலுரைத்தா னெவர்க்கு நன்றாய்த்
தவமேவு முத்திதரு மத்துவித நிச்சயந்தான் தருவ தன்றே. (௨)

ஆக ௱௨௰௨ முற்றும்.

நித்தி[ரே]யாதீத சுத்த புத்த மு[கு](க்)த கன நித்தியபரமானந்த விக்கிரக . . சொரூபாகார ஸ்ரீபரம வேங்[கி](க)டாசலபதிதேசிகசுவாமி பாதபற்பங்களே சரணம்.

அத்துவிதானுபவ முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச் சார்ந்தது. அதிகாரியிலக்கணம், அத்தியாரோபாபவாதம், ஆவரணநீங்குதல், இகபரபலன், முத்தருக்குப்பிறப்பிலாமை, சீவன்முத்தரிலக்கணம், பரமதிராகரிப்பு, அத்துவிதநிலைநிற்றல் சமாதியிலக்கணம், சாட்சிசொரூபம், ஆனந்தசொரூபம், விவேகசொரூபம் ஆகிய பன்னிரண்டு பிரிவினையுடையது. ஒவ்வொருபிரிவுக்கும் பப்பத்துப் பாடலாக 120 பாடல்களையுடையதாய், இறுதியில் இரண்டு பாடல்களையுடையது. லக்ஷ்மீநாரசிங்கதேசிகரின் சிஷ்யரும், சிவராமகவியின் புதல்வருமாகிய இராமகவியென்பவர் முதலில் இந்நூலை வடமொழியில் இயற்றிப் பின்பு அதன் மொழிபெயர்ப்பாகத் தமிழிலும் இயற்றினாரென இறுதிக் கவியால் தெரிகின்றது. ஏடுகள் பல சிதைந்துள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1429 அத்துவிதானுபவம்.

ATTUVIDĀNUBAVAM.

Pages, 38. Lines, 7-8 on a page.

Begins on fol. 172*a* of the MS. described under No. 1388.

Complete

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1430. அத்துவிதானுபவம்.

ATTUVIDĀNUBAVAM.

Substance, palm-leaf. Size, $10\frac{3}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 50. Lines, 7-8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Uttaragītai 26*a*.

Complete.

Same work as the above, but with the addition of three stanzas in the beginning as quoted below.

Colophon :

" அருளிய[ச்] சின்மூ[ற்](ர்த்)தியே மூத்தொழி[ல்க்](ற்)கு
மும்மூ[ற்](ர்த்)தியாய் விண்மீதிற்
கருமைதோற் றுவதென்ன[யி](வி)ச் சராசரங்க
ளதனிடத்திற்காண்ப தென்னுங்
குருவருளா வியாமறிவிலா தவ[ற்](ர்க்)கு
மெய்யறிவு கொள்ள வேதப்
பொருணிறையு மத்துவிதா னுபவ [னூ](நூ)ற்
திருபதும்பா[ற்](ர்) புகலு வாமே. (க)

பிரமசுகக் கடல்மேய்ந்து மனோமேக ஞானமழை பெய்வதாலே
கரைகடந்த வாக்கென்னுங் கங்கையினி லுபதேசக் கார்காலத்திற்
றிரமனதாய்க் குளித்தவருக் கஞ்ஞான கருமமறும் பிறவி தீர
வரமுதவு லட்சுமிநாரசிங்க தேசிகன்றாள் வழுத்து வோமே. (உ)

ஞானவடி வான துவே படிகதிற[சி] (மி)வ் வுருவாய் [ஞ](நா)ம ரூபந்
தானலர்ந்து நீலமணி ராமவுரு வாயறிவு தந்து பின்னு
மானமுட னிருவர்தா மொன்றென்றே யெமக்கறிவு வரவே சிந்தை
யானதிலே சிவராம குருவாய்வந் தருளியதே யருமை யாமே. (ங)

பாயிரமுற்றும் "

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக்கிறது.

No. 1431. அபரோக்ஷான்மானுபவதீபிகை.

APARŌKṢĀNMĀNUBAVADĪPIKAI.

Pages, 35. Lines, 7 on a page.

Begins on fol. 18*a* of the MS. described under No. 313.

Complete.

A rendering in Tamil prose of the Sanskrit work Aparōkṣānmānubhavadīpikā of Śaṅkarācārya : by Subrahmaṇyaguru.

Beginning :

(சத்தியமாய் ஞானமாய் ஆனந்தமாய் ஆனநதசொரூபமான சொப்பிரகாசப் பிரமமே சத்தியம்).

அப்பிரமம் ஆகாசமாக விளங்கும். அதில் செகச்சாலமும் அப்பிரம[ம்] சயம்பி[ற](ர)காசமாக விளங்குஞ் சுப்பி[ற](ர) மணியக்கடவுள் பாதாரவிந்தத்துக்குத் தெண்டன்பண்ணி அபரோக்ஷா[ற்](ன்)மானுபவதீபிகையென்கிற சாத்திரக் கி[ற(ர)]ந்தத்தை(த்) தமிழினாலே பனுவலாகச் சொல்லு[கு](கி)றோம்.

அஃதாவது : முதல் நாலுவேதத்திலுண்டான [ஞ](நா)லு வாக்கிய சாரமும் பி[ற](ர)ம லக்ஷணமாகவே பி[ற](ர)திபாதிக்கு மென்கிற[த்]தைச் சொல்லு[கு](கி)ரேம்.

அந்த வாக்கியமாவது :—பி[ற](ர)பஞ்சசொரூபமே பி[ற]ரமம், க.
ஏகமாயத்(துவை) [தொய்]தமாய் விளங்கும் பி[ற](ர)மம், உ.
பாவத்துக்கும் அபாவத்துக்கு(ம்) அதீதமானது பி[ற](ர)மம், ௩.
சுவானுபவத்துக்கு அதீதம் பி[ற](ர)மம், ச.

End:

மோக்ஷமாகிறது [யி](இவ்வி)டம் அ[வ](வ்வி)டம் என்றில்லை. கி[ரு](ரா)மாந்தர லோகாந்தரத்திலில்லை. அ[க்கிய](ஞ்ஞ)ானமுடிஞ்சுப் போ(கி)[ர](ற)தேமே(ா)ட்சம். [யி](இப்படியறிந்து அனுபவிச்சவனே கி[ற](ரு)த கி[ற](ருத்)தியன்.

Colophon:

அபரோ[ஷ்ஷ](க்ஷா)[ற்](ன்)மானுபவதீபிகை முற்றும். சங்கராசார்ய சுவாமிகளாற் சொல்லப்பட்ட அபரோ[ஷ்ஷ](க்ஷ)ா[ற்](ன்)மானுபவதீபிகையென்கிற சூட்சும கி[ற](ர)ந்தத்தைப் பி[ரு](ரா)கி[று](ரு)தமு முட்சுக்களின்பொருட்டு(த்) தமிழினுலே யகிசூட்சுமமாக் கி[று](ரு)பை பண்ணின சுப்பி[ற](ர)மணியகுருசரணாரவிந்தமே [ெ]கதி. ஆறுமுகந் துணை.

(கு-பு.)—

இந்நூல் அத்வைதமதத்தைச்சார்ந்தது. வசனநடையிலமைந்தது. வடமொழியில் சங்கராசார்யரியற்றிய நூலின்மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர் சுப்பிரமணியகுருவென இந்நூலின் முதலிலும் இறுதியிலுமுள்ள வாக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1432. அபரோக்ஷான்மானுபவதீபிகை.

APARŌKṢĀNMĀNUBAVADĪPIKAI.

Substance, palm-leaf. Size, $6\frac{5}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 54. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1433. அபரோக்ஷான்மானுபவதீபிகை.

APARŌKṢĀNMĀNUBAVADĪPIKAI.

Pages, 38. Lines, 7 on a page.

Begins on fol. 148a of the MS. described under No. 1423.

Complete.

Same work as the above

(கு-பு.)—

இதுமுன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல்முற்றுமிருக்கிறது.

No. 1434. அபரோக்ஷான்மானுபவதீபிகை.
APARŌKṢĀNMĀNUBAVADĪPIKAI.

Pages, 32. Lines, 8 on a page.

Begins on fol. 71*a* of the MS. described under No. 1388.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1435. அவதூதகீதை.
AVADŪTAGĪTAI.

Substance, paper. Size, 13⅝ × 8 inches. Pages, 26. Lines, 28 on a page. Character, Tamil. Condition, good. Appearance, new.

Begins on fol. 57*a*. The other works herein are Sōrūpānandasiddhi 1*a*, Ānandarahasiyam 42*b*, Malayāḷajātivivaraṇaṅgaḷ 73*a*.

Complete.

A Tamil rendering in prose of the Sanskrit work Avadhūtagītā—vide No. 4543 of the D.C.S. MSS., Vol, IX.

Beginning :

அவதூதகீதை.

வடிவைப் பொருநெடுங்கண் வல்லபையாம் பச்சைப்
பிடியைப் புணேகளிற்றைப் பேணி—யடியைத்
தினநினைந்தார்க் கெய்தாச் சிறப்புவே றுண்டோ
மனநினைந்த வெல்லாம் வரும்.

அவதூதகீதை முதலாவது ஆன்மஞானோபதேசம்.

சற்றுத்தியாகியாய்ச் சற்றுப்போகியாய்ச் சற்று நிர்வாணியாய்ப் பசாசு போலே சாட்சா அனிநீயமாயோகீசுராளுக்கெல்லாம் பதியாகிய ஆனந்த தத்தாத்திரேயசுவாமிகளுக்குங் கோரட்ச(க)ருக்குஞ் சம்வாதரூபமான அவதூதகீதை வியாக்கியானத்தினுல் ஈசுவரனனுக்கிரகத்தினுலே சற்புருஷர்(க)ளுக்கு அத்[தொய்](துவை)த வாசனையுண்டாகவேணும்; அதனுலே மகா பயத்தைப் போக்கடிக்கிற ஞானமுண்டாம். (கிரந்தம், ௧)

எதனாலே இந்தப்பிரபஞ்சம் பூரிக்கப்பட்டிருக்கிறதோ அது சகலமும் ஆத்மாவைத் தவிர அன்னியமொன்றுமில்லை; அந்த ஆன்மா அபின்னமாய்ச் சிவமாய் அவ்வியமாய் நிராகாரமானவர்; அப்படிக்கொத்தவரை நமஸ்காரம் பண்ணுகிறது ஆர். (உ)

End:

பிரமமாதித்தபரியந்தஞ் சம்பூர்ணமாகப் பரமாத்மாவே யென்று பின்னு பின்னம் பாராமல் இருக்கிறவனை(வன்) அஞ்சாமாசிரமம். (க)

நிராலம்பபதத்தை யடைந்து சித்தமவ்விடத்திலே லயமாய்ச் சரு(வ)க்கிரியைகளும் நிவிர்த்திபண்ணினான் அஞ்சாமாசிரமம். (உ)

*   *   *   *

எப்போதுமானந்தத்திலே ஆனந்தமாயிருக்கிறது. அகாரத்துக்கு லட்சணம்.

வத்திரமில்லாமல் நிராமயமே சொல்லிக்கொண்டு வர்த்தமானகாரியமே எதார்த்தமாக நடக்கிறது வகாரத்திற்கு லட்சணம். (கூ)

தியானதாரணையில்லாததே தூகாரத்துக்கு லட்சணம்.

தத்துவசிந்தை அமிர்தத்தினாலே அன்னியசிந்தையில்லாமல் அகங்காரமுந் தமசும் விட்டுவிட்டதே தகாரத்துக்கு லட்சணம். (க0)

இப்படி அவதூத லட்சணமும் அவதூதனென்கிற நாலெழுத்து லட்சணமும் சொல்லப்பட்டது.

Colophon:

தெத்தாத்தி[ரை](ரே)ய கோரட்ச(க) சம்வாதமான அவதூத கீதை விவாக்யான முகிழ்ந்தது. முற்றும்

அவதூதகீதை எட்டாவது எழுதிமுகிழ்ந்தது முற்றும்.

(கு-பு.)—

இது அத்துவித வேதாந்த விஷயமானது. தத்தாத்திரேயருக்கும் கோரட்சகருக்கும் நடந்த ஸம்வாதமாக வடமொழியில் இயற்றப்பட்ட 277-சுலோகங்களின் மொழிபெயர்ப்பாக உள்ளது. மொழிபெயர்த்தவர் பெயர் முதலிய விவரம் தெரியவில்லை. வசனநடையாலாயது. முற்றும் இருக்கிறது.

(1)	ஆத்மஞானோபதேசப் பிரகரணம்	77
(2)	.. ..	40
(3)	அட்சரசொரூபப் பிரகரணம்	44
(4)	நிர்வாண சொரூபப் பிரகரணம்	25
(5)	.. ..	33
(6)	.. ..	31
(7)	.. ..	17
(8)	.. ..	10
	ஆகச் சுலோகம் ..	277

ஸம்ஸ்க்ருத டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 9-ஆம் வால்யம் 4543-ஆம் நம்பர் பிரதியில் இந்த வடமொழிநூல் வந்துள்ளது.

No. 1436. அவதூதகீதை.

AVADŪTAGĪTAI.

Substance, palm-leaf. Size, 8 × $1\frac{1}{8}$ inches. Pages, 68. Lines, 7–11 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 153*a*. The other works herein are Sōrūpānandasiddhi 1*a*, Ānandarahasiyam 109*a*.

Complete.

Same work as the above. This MS. is the original from which the MS. described under the previous number was transcribed.

(கு-பு.)—

இது முன்பிரதிக்கு மூலப்பிரதி. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1437. அவதூதகீதை.

AVADŪTAGĪTAI.

Substance, palm-leaf. Size, 13 × $1\frac{3}{8}$ inches. Pages, 64. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 121*a*. The other works herein are Sōrūpānandasiddhi 1*a*, Ribugītai 85*a*, Avadūtagītai yōkarabāvanai 152*a*, Aṣṭāvakragītai 157*a*, Uttaragītai 184*a*, Vairākkiyaśatakam 209*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1438. அவதூதகீதை.

AVADŪTAGĪTAI.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{2}$ × $1\frac{3}{8}$ inches. Pages, 27. Lines, 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 41*b*. The other works herein are Ribugītai 1*a*, Sōrūpānandasiddhi 56*a*.

Wants the first three Prakaraṇams.

Same work as the above. The extent in stanzas of the work and the date of the MS. found herein are given below.

Colophon:

அவதூதகீதை எழுப்பிரகரணமும் தத்தாத்தி[ரை](ரே)ய சுவாமிகள் கொர[ஷ](ட்ச)கர் ச[ங்க](ம்)வாதமான கிரந்தார்த்தத்தைத் தமிழிலே உரை சொல்லப்பட்டது.

இதுக்கு விவரம்:

முதலாவது ௭௭, இரண்டாவது ௪௰, மூன்ருவது ௪௫, நாலாவது ௨௫, அஞ்சாவது ௩௪, ஆருவது ௩௧, எழாவது ௧௭, அஞ்சாமாசிரமம் ௫௰, ஆகக் கிரந்தம் ௨௱௭௰௭.

பிரமமே சத்தியம் மற்றுள்ள வெல்லாமனித்தியம்.

விகாரி௵ ஆடி௴ ௰௨௨ எழுதி முடிந்தது. முற்றும். மதுராந்தகம் கணக்கு குருசாமி எழுதினதென்றறியவும்.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. முதல் மூன்று பிரகரணங்கள் இந்தப் பிரதியில் இல்லை.

No. 1439. அவதூதகீதையேகரசபாவனை.

AVADŪTAGĪTAIYĒKARASABĀVANAI.

Pages, 10. Lines, 8 on a page.

Begins on fol. 152*a* of the MS. described under No. 1437.

Complete.

A Tamil prose rendering of the ten stanzas in Sanskrit which were said to have been taught by Avadūta to Gōrakṣa when the former's hunger was satisfied by the food given by the latter. The name of the translator is not given. It explains the oneness of the teacher and the taught and the unreality of the universe.

Beginning:

அவதூதரானவர் அகோராத்திரியிலே குட்[சு](சி)வாதை நிமித்[திய](த)மாகப் பசுக்கடை காத்துக்கொண்டிருக்கிற[யி](இ)டையனண்டையிலே அன்னங்கே[ழ்க்](ட்)க, அவன் சாதி சுபாவம் (ெ)வந்த[பெ](பி)றகு அன்னங்கொடுக்கிறது, தற்சுபாவமாகையினாலே பாவிலே குழையவெந்திருக்கிற அன்னமாக அகண்டபூர்த்தியாகக் கொடுத்தான். பொசித்து அவதூதர் அவனுக்கு ஏகரசசொரூபமாயிருக்கிற மகானுபவத்தைப் பத்துச் சுலோகத்திலே அனுக்கிரகம் பண்ணினார்.

சுலோகா[ற்](ர்த்)தம். [யி](இ)ந்தமகாஜ பாவரு(ஸை)ட(ய)[ெ]தரி[சி](ச)னத்திஞலும் (. . . . .) பாவமாயிருந்தவெல்லாம் ஒரு க்ஷணத்திலே போய்விட்[டு](ட)து. பிற்பாடு அனுக்கிரகித்தார்.

வாரும் பிள்ளாய் கோரட்சகா! எக[ெ]ரசசொரூபமாயிருக்கிற வுனக்குச் செனனமுமில்லே, (. . ; . . . . .) எக[ெ]ரசத்திலே எக[ெ]ரசமே தானென்கிறது. [யி](இ)ந்த[யீ](ஈ)சுரனைத் தன்னைத்தவிர வேறில்லாமல் நித்தியமாயிருக்கிறதை மகாயோகியானவன் சொச்சொரூபமாகவேயிருப்பான். (க)

End:

நாம் எகரசத்திலேயமிழ்ந்தி[யி]ருக்கை நீயுமில்லே நானுமில்லே, இத்தனைபோதுஞ் சொன்னீரே யென்ருயோ. ஆ[த்தி](ற்றி)லே அமிழ்ந்தினவன் அமிழ்ந்[தி](துகி)ற மட்டும் அரகரா சிவசிவா சுவாமீ யென்னவில்லேயோ, அப்படிச்சொன்ஞேம். எகரசபாவனையிலே யிந்த அவதூத[ர்] கீதையானது எப்படிச் சொல்லப்பட்[டு](ட)து. அவர் சொல்லவும் இவர் கே[ழ்க்](ட்)கவும் இல்லே. அவதூதர் என்கிற பேருமில்லே. கோ[ெ]ரட்சகரென்கிற பேருமில்லே. இந்தக்கீதையுமில்லே. எனென்ருல் ச[று](ரு)வசங்கற்பித பி[ற](ர)மம் எக[ெ]ரசம். (ம)

Colophon:

அவதூத சுவாமிகளாலே நிரூபிக்கப்பட்ட அவதூதகீதை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச்சார்ந்தது; வடமொழியிலமைந்த பத்துச் சுலோகத்தின் மொழிப்புரையாக வமைந்துள்ளது. இது இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1440. அவிரோதவுந்தியார், உரையுடன்.

AVIRŌDAVUNDIYĀR WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $3\frac{7}{8} \times 2\frac{1}{4}$ inches. Pages, 226. Lines, 14 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete in 102 stanzas.

A treatise explaining the truth and the consistency of the Advaita doctrines: by Tiruppērai Śāntaliṅgasvāmigaḷ. The text is followed by a commentary written by Tiruppōrūr Cidambarasvāmigaḻ. At the beginning of the work is written a stanza of Paṭṭinattuppiḻḻaiyār.

Beginning:

பூரண முக்த்தொளிர் புண்ணிய னுகந்தருள்
வாரண முகத்தவன் மலரடி யிறைஞ்சுவாம்.
சமரபுரி மாதிம்பத் தண்ணிழ[ப்](ற்)பா லும்ப
லமரர் தொழவிருந்த தன்றித்—திமிரமலம்
போக்கியென துள்ளின்ப பூரணமா யெவ்விடத்துந்
தேக்கறிவு மாயிருந்த தே.

* * * *

எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தானென் றுந்தீபற
வவன்ற டொழுவோமென் றுந்தீபற.

எ-து, சொல்லுவார் சொல்லும் வண்ணங்களனைத்தையுமுடைய ஒரு பூரணன் குருவடிவமாகி இவ்விடத்திற்றோற்றி யொன்றுக்கும் பற்றாத வென்னுடைய பிறவித்துன்பத்தை வேரறுத்தருளினன்; கருணைமூ[ற்](ர்த்)தியினது திருவடிகளைத் தொழாநின்றே ெ[ந](ன)ன்றவாறு.

* * * *

தவிரா விரோத சமயநூ வன்று
வவிரோத வுந்தியென் றுந்தீ பற
ஆமிந்நூ லுமமென் றுந்தீ பற

எ-து, ஒன்றுக்கொன்றுமாறாத விரோதத்தினையுடைய சமயநூல்களில் இஃதுமொன்றனறு; ஆதலால் அவிரோதவுந்தி என்று வழங்குவதற்கு உரித்தாம் இந்நூற் பெயர் எ-று.

அவிரோதம்—பட்சபாதமில்லாமை. இது நூற்பெயர் காட்டியது.

End:

ஓங்கரு ளீசனே டொன்றியே நின்றோரு
மீங்கரு ணீங்காரென் றுந்தீ பற
ெ[ய](வ)ல்லா வுயிர்க்குமென் றுந்தீ பற.

எ-து, உயர்ந்தகருணையே வடிவாகவுடைய பரம்பொருளுடனே கூடி இரண்டறக்கலந்துள்ள மு[ற்ற](த்த)ரும் இத்[தி](த)சைக்கணுண்டாகிய சராசரங்களிட[ற்ற](த்)தெல்லாம் அருளை நீங்கார்; அஃதெங்ஙனமெனின்; ஆ[ரு](ரி)ட ஞானிகள் விதிநிஷேதங்கடந்து வேண்டிய செய்வாராதலின்.

* * * *

மற்றும் வருவன வற்றூற்காண்க.

'ஆனந்த மெய்தினோ' ரென்னுஞ் செய்யுள் [து](தொ)டங்கி யிச்செய்யுள் காறும் ஞானிகளதாசாரங் கூறினரெனக்கொள்க. (௧00)

Colophon:

அவிரோதவுந்தியார் முடிந்தது முற்றும்.

ஆனந்த மோனவரு மாசையறு மெய்ப்பொருளு
மோனந்த திட்டையென முன்னம்வருந்—தேனந்து
முந்தியார் நூறு முதாரணத்தோடே படித்த
புந்தியார்க் கீதே பொருள்.

* * * *

சாந்தலிங்கசுவாமிகள் அனுக்கி[ற](ர)கம் பண்ணின (ஞா)னசாத்திரமாகிய அவிரோதவுந்தியார்—தாரணஹு வையாசிமீ ககூ எழுதி நிறைந்தது முற்றும். சிதம்பரகுருவே நம:

(கு-பு.)—

இந்நூல் அத்துவைத மதத்தைச்சேர்ந்தது. வீரசைவாசாரியராகிய திருப்பேரைச் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றியது. பட்சபாதமின்றி உண்மைப்

பொருளையுணர்த்துவது பற்றி இந்நூற்கு இப்பெயர் இடப்பட்டதுபோலும். கடவுள்வணக்கம், நூற்பயன் இவைகள் நீங்கலாக நூறு செய்யுட்களாலாகியது. திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இயற்றியவுரையுடன் இந்நூல் இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது. நூலாரம்பத்தில் 'அறந்தான்' என்பதை முதலாகவுள்ளபட்டினத்துப் பிள்ளையார் பாடல் ஒன்று எழுதப்பெற்றுள்ளது.

No. 1441. அவிரோதவுந்தியார்.

AVIRŌDAVUNDIYĀR.

Pages, 16. Lines, 6 on a page.

Begins on fol. 49*a* of the MS. described under No. 1185.

Complete.

Same text as is contained in the work described above. There is an additional stanza which is given below.

Colophon:

கந்தப்ப சம்பிரான் அவிரோதவுந்தியார். தக்கேசுரர் அத்திராபிடேகத்தினன்றைக்கு எழுதி நிறைந்தது. [யி](இ)துக்குச் சாட்சி, திருப்பருத்திக் குன்றிலே சமணரோடே வாதுபண்ணின தினம் வெதிர்வேலி போட்டதினம். ஆகையினுலே பூரண[க்கிய](ஞா)ானம் விளங்[கட](கிடு)வது 'காட்டொழியாக் கதிர்கா ணொழியாக் கண்கலந்த தன்மை, பூட்டொழியாச் சிவபோக மையோ வெறும் பொய்யில் வினே, ஈட்டொழியாமலே யானெனதென்னு மிடும்பைமல, வாட்டொழியே னம்மையே யடியேனுன் னடைக்கலமே.'

(கு-பு.)—

இதில் அவிரோதவுந்தியார் மூலம் முற்றும் உள்ளது. 'காட்டொழியா' என்பதை முதலாகக்கொண்ட செய்யுளொன்று இதில் அதிகமாகக் காணப்படுகின்றது. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1442. அறிவானந்தசித்தியார்.

AṞIVĀNANDAŚITTIYĀR.

Pages, 78. Lines, 7—8 on a page.

Begins on fol. 191*a* of the MS. described under No. 1388.

Complete.

A treatise explaining the wisdom and blissfulness of the highest truth according to the Advaita Vēdāntam: by Aṟivānandar a resident of Valaṅgaimīkāman (Valaṅgimān, near Kumbakōnam).

Beginning:

உற்ற முறைமை யொருநூலாற் செய்பவற்குக்
கற்பகத்தின் தாளிணையே காப்பென்றிங்—குற்றவர்கள்
பாதமலர் மேற்கொண்டு பாட வொருப் பாடுகுரு
நாதனிரு தாளென்று நா (க)

* * * *

திரவிய நின்மல நி[ற்](ர்க்)குண நித்தம நிட்களமெய்ப்
பரவிய நி[ற்](ர்)த் தொந்தம் பற்றிலிசுத்தம் பரமானந்தம்
விரவிய பூரணனேக நற்பேரின்ப வியாபகனென்
கரவுளங் கோயில்கொண் டோனெழில் போற்றுவன் காதலுற்றே. (க)

End:

அன்றே பொருளுட லாவியெனை யறிவிக்க லுற்றாய்
நின்றே சொரூப நிலையி னிறுத்திய நேர்மைதனக்
கின்றென்கைம் மாறு[த்த](ற்ற)டியேன் தருகைக்கிசைவதெனி
லுன்[ற]றன் னடிமைக் கடிமையல் லாதென் னுளதெனக்கே. (௱௨௰௫)

Colophon:

குறியா வடிவுடைக் கோமள வல்லி குடியிருந்தே
மறையாக மத்தை வலங்கைமீ காமனில் வாழ்ந்திருந்தே
னறிவானந்தந் தன் னுரைத் தறிவானந்தச் சித்திதனை
நெறியாகக் கற்றுணர் வா[ற்](ர்க்)குப் பரகதி நிச்சயமே. (௱௨௰௬)

அறிவானந்த சித்தியார் எழுதி நிறைந்தது முற்றும்.

(கு-பு.)—

இது அத்வைதமதத்தைச் சார்ந்தது. "காணுந்து சோலை" என்னும் இறுதிச் செய்யுள் இந்தப்பிரதியில் இல்லை. கும்பகோணத்தைச் சார்ந்த வலங்கைமீகாமன் (வலங்கிமான்) என்னும் ஊரிலிருந்த அறிவானந்தரென்பவர் இதை இயற்றினாரென்று தெரிகிறது. முற்றும் இருக்கிறது.

No. 1443. அறிவானந்தசித்தியார்.
ARIVĀNANDAŚITTIYĀR.

Pages, 142. Lines, 6 on a page.

Begins on fol. 5*a* of the MS. described under No. 252.

Complete.

Same work as the above. The date of the MS. is extracted below. There are two additional stanzas in the place of the last stanza of the MS. described above:—

சித்திரபானுஞு வையாசிமீ ௨௰௨ வியாழக்கிழமை நாள் அறிவானந்த சித்தியார் எழுதி நிறைந்தது முற்றும்.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதனிறுதியில், "அன்றேபொருள்"—என்ற பாடலின் பின்னர் "குறியா வடிவுடை" என்னும் பாடலில்லாமையோடு,

"கானுந்து சோலை வலங்கைமீ காமன்கதி பெறவே
வானுந்து தேவர்க் கெட்டாவறி வானந்தவண்மை குன்றாத்
தேனுந்து செஞ்சொற் றமிழா லுரைத்துச் சிறந்தவறி
வானந்தச் சித்தி தனைத்தேர் பவர் பிறப் பற்றவரே."

"எத்தெத்தைக் கேட்டவெல்லாந் தருமுந்து மிடரொழிக்குங்
கொத்தொக்க வீனு மிளைத்தாரைத் தன்னிழல் கூடப்பண்ணு
மொத்தத்தை யாக்கு மொழியா தொருபொரு ளொண் கதவித்
தத்துவலிங்க மென்றாயே யொருபொரு[த்] ட்டானென்றுமே."

என்னுமிரண்டு பாடல்கள் காணப்படுகின்றன.

No. 1444. அறிவானந்தசித்தியார். ARIVĀNANDAŚITTIYĀR.

Pages, 75. Lines, 8 on a page.

Begins on fol. 179*a* of the MS. described under No. 1060.

Complete.

Same work as the above, with the difference noted below in the Tamil remarks.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் "குறியாவடிவுடை" என்ற செய்யுளின்பின்னர், "கானுந்து சோலை" என்னும் செய்யுளும் இருக்கிறது. இதில் இது முற்றும் இருக்கிறது.

No. 1445. அறிவுநினைவுக்குணர்த்தல். ARIVUNINAIVUKKUṆARTTAL.

Pages, 11. Lines, 6 on a page.

Begins on fol. 206*a* of the MS. described under No. 802.

Contains 41 Kaṇṇis.

A treatise in the form of a conversation between thought and intelligence, the latter explaining all the difficulties put before it in regard to the self-realization taught in the Advaita Vēdāntam.

Beginning:

திருவார் சற்[க்]குருகி[று](ரு)பை, மருவி வள(ர்)ந் தோங்கிய பேறறிவே
சிந்[தி](த)னையெல்லாங் கடந்து, வந்தனை யெம்மோக நினைவே. (க)

[யி](இ)ருவினையாவதுகடந்து,வருவது தானெளி[த்]தல்ல[ப்]பே[ரி](றி)
[வே
எல்லாமுன்னுல் வருவ, தல்லாமல் வேறுளதோ தி[ன](னை)வே. (௨)

End :

காரோடுவில்லு[ை] தயஞ், சீரோடு காண்பதென் பேரறிவே
கதிரவனுர் செய்கைய, தெய்திடனே காண்பதுகாணி(னை)வே. (௪௧)

திருச்சிற்றம்பலம். குருவேதுணை.

(கு-பு.) —

இது வேதாந்த விஷயமானது. நினைவுகேட்கும் ஒவ்வொரு தத்துவ விஷயங்கட்கும் அறிவு விடை சொல்லி வருவதாக இயற்றப்பட்டுள்ளது. நாற்பத்தொரு கண்ணிகள் உள்ளன. நூலாசிரியர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1446. அஷ்டாவக்கிரகீதை.
AṢṬĀVAKKIRAGĪTAI.

Pages, 42. Lines, 8 on a page.

Begins on fol. 23*a* of the MS. described under No. 1388.

Complete.

A rendering in Tamil prose of the Sanskrit Aṣṭāvakragītā which is said to have been taught by Aṣṭāvakra to Bhārgava and which deals in 286 stanzas with 20 topics of the Advaita Vēdānta as mentioned in the Tamil notes below. The translator is Subrahmaṇyar.

Beginning:

உபதேச அதிகாரம்.

அஷ்டாவக்கி[ற](ர) ரிஷியானவர் பதரிகாவனத்திலே யிருக்கச்சே பா[ற்](ர்க்)கவதனென்கிற முனீந்திரன் அவருக்குத் தெண்டன்பண்ணிச், சுவாமீ! எனக்குத் தத்துவசொரூபம் அறியச் சொல்லுமையாவென்று கேட்கத் தயவுண்டானவராய்ச் சமு[சி](ச)யமில்லாதபடிக்குத் தெரியச் சொல்லுகிறார். (௧)

மு[ற்றி](த்தி)யிலே இச்சையுண்டானல் வி[ை]ஷயங்களிலே யிச்சைவிட்டுச் சமம், தமம், நன்மார்க்கம், தயை, சத்தியம் அமி[ற்](ர்)தம் போலப் பசனைபண்ணவேணும். (௨)

End :

நிருபாதிக சிவனுயிருக்கிற எனக்குக் குருவெங்கே? சிஷனெங்கே? உபதேசமெங்கே? சா[ஷ்](ஸ்)திரமெங்கே? புருஷா[ற்](ர்த்)மெங்கே? (௧௬)

அமலா[ற்](ன்)மாவாயிருக்கிற எனக்கு உண்டென்கிறதெங்கே? [யி](இ)ல்லையென்கிற தெங்கே? ஒன்றெங்கே? இரண்டெங்கே? இந்த வெகுபேச்சு என் சொல்லவேணும். (௧௭)

Colophon:

சீவன்மு[ற்றி](த்தி) சதுர்த்[ெ]தச முற்றும்.

[யி](இ)ந்தப்படி சகல உபநிடத்துக்களிலேயும் பி[று](ர)திபாதிக்கப்பட்ட ஆ[ந்](ன்)ம வித்தையை ரகசியமான அஷ்டாவக்கி[ற](ர)தோசாத்திரம் பா[ற்](ர்க்)கவரிஷி கேட்டுச்சமுசயந் தீர்ந்து ஆ[ற்](ன்)ம சுகமடைந்தார். [யி](இ)ந்தச் சாத்திரத்தை(த்) தமிழினாலே விவகரி[ச்சு] (த்து)ச்சுப்பிரமணியர் சொன்னது. ஞானகுருபாதந்துணை.

ஸ்ரீ பரமகுருவே நம[ா](ஃ).

(கு-பு.)—

இந்நூல் அத்வைதமத சாஸ்திரங்களுள் ஒன்று.

(1) அனுபவபஞ்சகம்.
(2) ஆரும் விசிராந்தியஷ்டகம்.
(3) ஆன்மானுபவாஷ்டவிம்சதி.
(4) இதரசுதசத்தகம்(?)
(5) இலயசதுட்கம்.
(6) உபசமனுஷ்டகம்.
(7) உபதேசசதுட்கம்.
(8) உபதேசசதுர்த்தசம்.
(9) உபதேசாதிகாரம்.
(10) உல்லாசசட்கம்.
(11) ஏவமேவாஷ்டகம்.
(12) சமசதகம்.
(13) சாந்திசதுட்கம்.
(14) சீவன்முத்தி சதுர்த்தசம்.
(15) ஞானுஷ்டகம்.
(16) தத்துவோபதேசசங்கதி.
(17) தத்துவோபதேசவிம்சதி.
(18) நிர்வேதனுஷ்டகம்.
(19) பந்தமோட்சசதுட்கம்.
(20) விசேஷோபதேசேகாதசம்.

என்ற இருபது பிரிவினையுடையதாய் 286 சுலோகத்தின் பொருளை விளக்குவது. அஷ்டாவக்கிரமுனிவர் பார்க்கவமுனிவருக்கு உபதேசித்த வடமொழி அஷ்டாவக்கிரகீதையின் மொழிபெயர்ப்பாகச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1447. அஷ்டாவக்கிரகீதை.
AṢṬĀVAKKIRAGĪTAI.

Pages, 53. Lines, 7 on a page.

Begins on fol. 157*a* of the MS. described under No. 1437.

Complete.

Same work as the above, with the addition of three stanzas in the beginning as quoted below.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில்,

"படைப்பானும் வியன்ஞாலங் காக்குமாழிப்
படையானும் படைத்தளிக்கப் பட்டவெல்லாந்
துடைப்பானுஞ் சுருதிகளுந் தொழுதுபோற்றுஞ்
சொரூபானந்தச் சுடரைத் தொழுதல் செய்வாம். (க)

அமிழ்ந்து பிறந்துழல்வதுவே தொழிலாயாணி
னழியாம லெழுந்தருளி யமையாவின்பம்
பொழிந்தபெருங் கருணைமுகி லொருநாளும்
பூதலத்தின் துயர்தீரப்பொழிக வென்றே. (௨)

தலைபலவாய்ப் பெயர்பலவா நதிகளெல்லாஞ்
சாகரத்தி னொருநீராந் தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டவொரு பொருளினை யாம்பணிதல் செய்வாம்.

காப்பு முற்றும்." என்னும் பாகம் அதிகமாக உள்ளது. ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1448. ஆத்மபோதம்.

ĀTMABŌDAM.

Substance, palm-leaf. Size, $13\frac{3}{4} \times 1\frac{5}{8}$ inches. Pages, 82. Lines, 7-9 on a page. Character, Tamil and Grantha. Condition, slightly injured. Appearance, new.

Complete.

A translation in Tamil of the Sanskrit work Ātmabōdha of Śaṅkarācārya. It treats of the characteristics of the soul and non-soul, of the means of attaining salvation by contemplation, and of the person who has realized the truth. The plan of the translation is to give the word-for-word meaning of the Sanskrit text as well as the idea expressed in each stanza, as was done in the Telugu translation made by Kṛṣṇaśāstriyār, son of Purāṇam Veṅkaṭanārāyaṇa Śāstriyār. The Tamil translator was Irāmānujakkavirāyar, son of Iraṅgayakkavirāyar and a disciple of Sōmasundaradēśikar of Ramnad. The Telugu and the Tamil translations of the work are said to have been printed at Madras in 1840. The MS. is dated 1858.

Beginning:

ஆத்மபோதம். பிரகாசிகை சூசிகை.

[ச்ரீ](ஸ்ரீ)மத் பரமஅம்சப ரிவ்ராஜகாசாரியரான [ச்ரீ](ஸ்ரீ)மத் சங்கர பகவத்பாத[வ]ர் இந்த ஆர்யாவர்த்த பூமியின்கண் அவதரித்து இதில்உள்ள எல்லா மதங்களையும் ஆராய்ந்(து) அவற்றிலுள்ள குணதோஷங்களை யாவர்க் குந் தெளிவாகத் தெரிவித்து அத்வைத ஸ்தாபனஞ்செய்து அதற்குச்சாத னங்களாக ஆறுமதங்களை ஸ்தாபித்து அந்த அத்வைதமானது சுருதி யுத்தி யனுபவங்களானே விசாரிக்கும்போது அதுவே பரமார்த்தமாகையால் யதார் த்தமான அர்த்தமென்று தம்முடைய அபிப்பிராயத்தை அந்தச் சண்மத ங்களையும் அனுசரித்திருந்த இத்தேசத்தாருக்குத் தெரிவிப்பதற்காக வியாச சூத்திரங்கள், சூத்திரப்ரஸ்தானம்; உபநிடதங்கள், சுருதிப்ரஸ்தானம்;

பகவத்கீதை[களா]-சுலோக ப்ரஸ்தானம் என்கிற மூவகை ப்ரஸ்தானங்களுக்கும் பாஷ்யங்களை ஏற்படுத்தினர்.

பின்பு அநத(ப்) பாஷ்யங்களை(ப்) படிக்கக்கூடாதவர்களுக்கும் சாதாரணமாய்(க்) கரதலாமலகம் போல அத்வைதவித்தையைத் தெரிவிப்பதற்காக "ஆத்மபோதம்" என்கிற இந்தக் கிரந்தத்தை வடமொழியினலே செய்தார்.

இதிலே, ஆத்மசுவரூபத்தையும், ஆத்மாவுக்கு வேருகப் பிராந்தியினலே தோன்றுகிற தேகாதியுபாதி தத்துவங்களையும், சிரவண மனன நிதித்யாசனதி மார்க்கங்களையும், சீவன்முக்தி சொரூபத்தையும், சீவன்முக்தனிருக்க வேண்டிய கிரமத்தையும், விதேக கைவல்ய லட்சணத்தையும், தத்திர, இந்த உலகத்திலே பகவான் பகவற்சொரூபராகிய [சங்கராசார்ய] சங்கராசாரியரானவர் உத்தம அதிகாரிகளாகிய நன்மாணுக்கர்களுக்கு வேதாந்த பிரஸ்தானத்திரயம் மூன்றுபிரிவாக இருக்கின்ற வேதாந்தத்தை (. . . . . .) கீர்வாண பாஷையிலே தானே இருந்ததினலே சாத்தாரணமாக எல்லாருமறிதற்கு அசக்கியமாயிருந்தது. ஆனதினலே இதைப் பிரம வித்யாபாரங்கதரான புராணம் வேங்கட நாராயணசாஸ்திரியார் புத்திரரான கிருஷ்ணசாஸ்திரியார் தெலுங்கிலே பிரதிபதத்திற்கு அர்த்தமும் பின்பு தாத்பர்யமும் எழுதினர்.

இந்தப் பிரகாரமே அருந்தமிழ்க் கு[ரு](று)முனியகத்தியர் பரம்பரைச் *சோமசுந்தரதேசிகர் மாணாக்கர் இராமானுசகவிராயராலே தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு (. . . . .) இந்த இருவருங்கூடி அதைச் சென்ன[ப்]பட்டணத்து அமரிக்கன் மிசியோன் அச்சுக்கூட்டத்தில் ௲௮௱௪௰௯-ஆம் ஆண்டில் அச்சிற் பதிப்பித்தார்கள். (. . . . . .)

தபொஹிஃ—சாந்திராயண முதலான நித்திய நைமித்திக விரதானுட்டான சொரூபங்களாகிய தவசுகளினலே,

க்ஷிணபாபாநாம்—நசிக்கப்பட்ட பாவங்களுடையவர்களாகியும்,

ஶாஂதாநாம்—பெ(ா)றுமையுடையவர்களாகியும் .

வீதராகிணாம்—இகபரலோகங்களின் சுகானுபவங்களிலே இச்சையில்லாதவர்களாகியும் இருக்கிற,

முமுக்ஷூணாம்—சம்சாரபந்த நிவிர்த்தியை விரும்பினவர்களுக்கு.

அபெக்ஷ்யஃ—விரும்பத்தக்கதாகிய,

அயம்—இந்த

ஆத்மபொயஃ—ஆத்மசொரூபத்தைத் தெரிவிக்கின்ற நூலானது,

விधீயதே—விதிமுகமாகச் சொல்லப்படுகின்றது.

தாத்பர்யம்.—பிரமவித்தையானது எல்லா வித்தைகளிலும் உத்தமமானதனலே இந்த வித்தையினிடத்திலே விச்சையா[ரநது](னந்தமாவது)

* இவர், சிவஞானமுனிவரது சிஷ்யருள் ஒருவர்.

மற்றவர்களுக்கும் பொறுமையுடையவர்களுக்கு(ம்) ஆசையற்றவர்களுக்கும் மோட்ச இச்சையுடையவர்களுக்கும் உண்டாம் என்றதனுலே, இந்த நூலுக்கு அதிகாரியாவான். இந்த நாலு விசேடணங்களாலே தெரிவிக்கப்பட்ட சாதன சதுட்டய சம்பன்னனே யென்பது அவதாரிகை.

இதன் பொருள் : பூர்வோத்தர சம்பந்தம்—முன் சொன்னதற்கும் பின்பு சொல்லப்படுவதற்கும் பொருந்தச் சொல்கின்ற அந்தாதிப் பொருத்த வுரை.

மோட்சத்துக்குத் தவசு முதலிய அநேக சாதனங்களிருக்க ஞானமே முக்கிய காரணமென்பது எப்படி என்று ஆட்சேபம் வருவதனுலே மேலே சமாதானஞ் சொல்லுகிருர். (க)

End :

விதிஷ்ரய:—எல்ல(ாக்)கருமங்களையும் விட்ட,

ய:—எந்த(ச்) சந்நியாசியானவன்,

திஜேஸகாலாதி—திஸைச யிடம் காலம் முதலியவை,

அநவெக்ஷ்ய—இச்சியாமல்,

ஸவ—்ஶம்—எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றதாயும்,

ஶீதாதிஹ்ருத்—சீத உஷ்ணுதி தொந்த துக்கங்களைப் போக்குகின்றதாயும்,

நித்யஸுகம்—நித்யானந்த ஸ்வரூபமான தாகியும்,

நிரஞ்ஜநம்—இடையருத பிரகாச ஸ்வரூபமாகியுமிருக்கிற,

ஸ்வாத்மதீர்த்தம்—தன்னுடைய ஆத்மாவான தீர்த்தத்தை,

பஜதெ—அடைகிருனே,

ஸ:—அவன்,

ஸவ—்ஜ்ஞ:—சர்வபரிபூரணனுகியும்,

அம்ருத:—சனனமரணமில்லாத நித்ய ஸ்வரூபனுகியும்,

பவெத்—ஆவான்.

தாத்பர்யம் :—புறத்திலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து அந்தப் பலனை யனுபவிக்க மறுபடியுஞ் சனனமரணுதி துக்கங்களை யனுபவிக்க வேண்டுமாதலால் அவற்றை இச்சியாமலே ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கரபகவத்பாதர் அனுக்கிரகம் பண்ணின இந்த "ஆத்ம போதம்" என்கிற வேதாந்த சாஸ்திரத்திலே சொல்லிய ஆத்மதீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணினவன் சனனமரணமில்லாத நித்தியானந்த ஸ்வரூபனுகியும் ஸர்வபரிபூரணனுகியும் இருப்பானென்பது.

Colophon :

ஆத்மபோதம் மொழிபெயர்ப்பு முற்றும்.

முத்தமிழ்க் கடற்சென் முழுவதூஉங் கடந்து
சுத்ததத் துவமெலாந் தரீஇமெய் யுணர்ந்த
சோமசுந்தரனெனுந் தொல்லா சிரிய
னமமந் திரமென நவின்மா ணுக்கன்

நரங்கநீர் *முகவையந் தண்பதி யதனு
ளிரங்கையன் மாதவத் தெய்திய தோன்ற
லியற்றமி ழாசிரிய னிராமானுச கவிராயன்
செய்த மொழிபெயர்ப் பெழுதி முடிந்தது.

இஃது தூஅாடுடுஅ ஆண்டுக்குச் சரியான தமிழ் காளயுத்திஸூ தைமீ அஉ முடிந்தது.

(கு-பு.)—

இது, வடமொழியிற் சங்கராசார்யரால் இயற்றப்பட்ட ஆத்மபோதமென்னும் அத்வைதவேதாந்தநூலின் மொழிபெயர்ப்பு; இந்நூல், ஆத்ம ஸ்வரூபத்தையும், ஆத்மாவுக்குப் பிராந்தியினலே வேறாகத் தோன்றுகிற தேகாதி யுபாதி தத்வங்களையும், சிரவண மனன நிதித்தியாசனதி மார்க்கங்களையும், சீவன்முக்தி ஸ்வரூபத்தையும், சீவன்முக்தனிருக்கவேண்டிய கிரமத்தையும் விதேககைவல்ய லட்சணத்தையும் விளக்கமாகக் கூறுகினறது. இம்மொழிபெயர்ப்பைச் செய்தவர் இராமநாதபுரம் சோமசுந்தர தேசிகரின் மாணுக்கரும், இரங்கையகவிராயரின் குமாரருமாகிய இராமானுசகவிராயர் என்னும் பெரியார். இப்புத்தகம் 1840-ம் வருஷத்தில் அச்சிற்பதிப்பிக்கப்பெற்றது. இந்தப் பிரதியில் இம்மொழிபெயர்ப்புநூல் முற்றும் உள்ளது.

No. 1449. ஆன்மானன்மவிவேகம்.
ĀNMĀNĀNMAVIVĒKAM.

Size, 13¾ × 1¼ inches. Pages, 17. Lines, 6–7 on a page.

Begins on fol. 139*a* of the MS. described under No. 1423.

Complete.

A treatise in Advaita Vedāntam explaining the nature and characteristics of the soul and the non-soul. The author's name is not given.

Beginning:

ஆ[ற்](ன்)மா [அ]ன[ற்](ன்)ம[ா] விவேகம்.

ஆ[ற்](ன்)மா [அ]ன[ற்](ன்)ம[ா]விவேகஞ் சொலலு[கு](கி)ரோம் :—ஆ[ற்](ன்)மாவா(ன)வன் அனன்மாவை யறிகிறவன்; அன[ற்](ன்)மாவாவது தூலசூட்சும காரண சரீரம். இதில் தூல சரீரம் [யி](இ)ரண்டு விதம். எதென்றால், பஞ்சீகி[ற](ரு)த டஞ்சமகாபூதங்களும், [ய](இ)திற் பிறந்த தூல சரீரங்களும் ஒருமி[ச்சுயீ](த்தூ)சுர தூல சரீரமென்றும், விராட்டென்றும் சொல்லப்படும்.

End:

இப்படி நாம் பி[ற](ர)ம மாத்திரமாக உறங்கியிருக்கவேணுமென்கிற முயற்சியுமழிந்து அப்படி யுறங்கியிருக்[கு](கி)றது தானே சுபாவமான நிலையாக மனத்துக்குத் திடப்பட்டுப்போய், இனி இறங்கவேணுமென்றாலும்

* முகவை - இராமநாதபுரம்; (Ramnad)

தேகாதி பிரபஞ்சத் தோ[த்த](ற்ற)ரவாக இறங்காத மனதுடையவன் சீவன் முத்தனென்று சொல்லப்படும். [யி](இ)ப்படி (. . . . .) சச்சிதானந்த சுபாவமாகத் தானே நிலைகண்டு அப்படியே அலைச்சலற நின்றபடியினலே விசிட்டனும் பி[று](ர)மமாகக் கரை[ஞ்சு](ந்து)போன படியினலே சீவன் முத்தனென்று சொல்லப்பட்[டு](ட)து.

Colophon:

ஆ[ற்](ன்)மா[அ]ஞ[ற்](ன்)ம[ா] விவேக முடிந்தது முற்றும்.

(ரு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச் சேர்ந்தது. ஆத்மா அநாத்மாக்களின் தன்மையை நன்ருய் விளக்குவது. வசன நடையிலமைந்தது. நூலாசிரியர் இன்னரென விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1450. இரட்டைமணிமாலை.
IRAṬṬAIMAṆIMĀLAI.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 55*b* of the MS. described under No. 1422.

Complete.

A treatise in Advaitavēdāntam explaining the characteristics of the fundamental reality and eulogizing incidentally the teacher Sorūpānandar; by Tattuvarāyar. The name of the work here given is a generic term designating a certain kind of the 96 Prabandams, the chief characteristic being that stanzas of Venbā and Kalitturai metres should be intertwained in the Andādi form. The work is also called Tattuvadīpam.

Beginning:

ஏழாவது இரட்டைமணிமாலை. தத்துவ தீபம்.

வெண்பா.

கருணை யிருந்தவா காணீர் தங்கண்ணு
ருணிணைய வஞ்சுவதா மண்டர்—வெருளாதே
யேத்துவதா நாயேனு மென்னே திருமேனிச்
சாத்துவதாந் தம்பிரான் ருன். (க)

கலித்துறை.

தானெனக்குச் செய்த நன்றிக் கென் ஞவி தந்தே னெனவே
யானினைக் கிற்றன தாகும் பண்டே யதுயா னெனவோ
ருனினைக் கற்பித் துயிர்வைத்து மீள வொளித்துக் கொண்ட
தேனினைக்குந்தொறுஞ் சொல்லுந் தொறு நின்று தித்திக்குமே.(உ)

End:

கலித்துறை.

இருத்தே சிகனடி யையப்பிரியா தெ[வ](த)ம்பிரா னிங்ஙனே
யுருத்தே வருந்திரு மேனியைக் காணுடை யான்புகழே

துருத்தே தமின்றித் துதியவை கேடொண்டர் தொண்டதுசெய்
கருத்தே கருது கழல்சூட வைத்த கருணையையே. (உ०)

இரட்டைமணிமாலை முற்றிற்று.

(கு-பு.)—

இது, தத்துவதேசிகநாயனார் தமது குருவாகிய சொரூபானந்தர் விஷயமாக இயற்றியது. தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுளொன்று. முறையே வெண்பாவும், கலித்துறையும் விரவியந்தாதித்தொடையாலமைந்த இருபது பாடல்களாலாயது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1451. இலக்கணவிருத்தி.
ILAKKAṆĀVIRUTTI.

Pages, 92. Lines, 8 on a page.

Begins on fol. 75*a* of the MS. described under No. 1231.

Complete.

An explanatory treatise in prose giving the meaning and description of 108 stages in the realization of the self as taught in the Advaitavēdāntam. These 108 stages are classified under 3 chapters, the names of these being given in the Tamil remarks below. The name of the author is not given.

Beginning:

தி[ருத்திசாத](தித்யாச)ன யுத்தி.

தி[று](ர்)விகாரியா(ன)வன் :—அன்னமயகோச நாமல்லாதபடியினாலே பிறப்பிறப்பு நரை திரை வாலிபம் எவ்வனமென்கிற விகாரம் நமக்கில்லை. பிராண மயகோசம் :—நாமல்லாதபடியினாலே பிலவானபிலகன(?)பசிதாக முள்ளவன் சொன்னவன் சொல்வாதவன் கொடுத்தவன் வாங்கினவன் போனவன் வந்தவன் என்கிற விகார நமக்கில்லை.

* * * *

ஸ்தாணும்.

மனதிந்திரியங்கள் சஞ்சலமாக அலைந்தோடுகினும் அசையாமலிருக்கிறது தூல சரீரம்; இப்படியனேகங் கோடி தூலசரீரங்களோடித்திரியினும் அசையாமல் இருக்கிறது பூதங்கள்; பூதங்கள் அசைந்துருளுகினும் அசையாமல் இருக்கினும் ஓடுகிறுப்போலக் காண்பிக்கிற நட்சத்திரஞ் சூரியாதி மண்டலங்கள்; இப்படி அசையாமல் இருக்கிற மண்டலத்தினுஞ் சஞ்சரிக்கிற வைசுவானராதிகள்; இப்படி வெகு விதமாகப் பின்னப்பட்டு வெகு சஞ்சார பேதமுடைத்தாயிருக்கிற சுத்த பரியந்தமுண்டாக்கிய அகிலப்பிரபஞ்சங்களையுமொருசரீரமாக நானென்றபிமானித்துச் சைதன்னியத்திலோடித்திரிகிற ஈசுவரன் இவரைவிட்டுப் புறம்பாகச் சைதன்னியத்திற் பிரதி சிரு

ஷ்டி பண்ணியோடி (. . . . .) இத்தனை யலைச்சலுக்குஞ் சாட்சியாகப் பார்த்திருக்கிற அகண்டாகார சைதன்னியனுடைய நாமே ஸ்தாணுவென்றறிக. (௮௫)

பரிபூரணன் :—கடத்தைத் தண்ணீராற் பூரித்தாற்போலப் பிராணமய கோசத்தாற் பூரிக்கப்பட்டிருக்கிற அன்னமயகோசம்; மனோமயகோசத்தாற் பூரிக்கப்பட்டிருக்கிற பிராணமயகோசம்; விஞ்ஞானமய கோசத்தாற் பூரிக்கப்பட்டிருக்கிற மனோமயகோசம்; ஆனந்தமயகோசத்தாற் பூரிக்கப்பட்டிருக்கிற விஞ்ஞானமயகோசம்; சிதாபாசனாற் பூரிக்கப்பட்டிருக்கிற இந்த(ப்) பஞ்ச கோசங்கள் இதனாற் பூரிக்கப்பட்டிருக்கிற பஞ்ச பூதங்கள்.

End :

[அ](சர்வ)தோ முகனானவன் :

ஒரு காலத்திலேயுண்டு ஒருகாலத்திலேயில்லை யென்கிற காலபரிச்சேதம், ஒருதேசத்திலேயுண்டு ஒருதேசத்திலேயில்லையென்கிற தேசபரிச்சேதம், ஒருவத்து[யி](இ)துவாகும் ஒருவத்து [யி](இ)தவல்ல என்கிற வத்துபரிச்சேதம், ஒருதிக்கிலேயுண்[டியி](டி)ல்லை யென்கிற திக்கு(ப்)பரிச்சேதம், ஒரு வன்னத்திலேயுண்டு ஒருவன்னத்திலேயில்லை யென்[கு]கிற வன்னபரிச்சேதம், ஒரு ஆ(ச்)சி[ற](ர)மத்திலேயுண்டு ஒரு ஆ(ச்)சிரமத்திலேயில்லை யென்கிற ஆ(ச்)சி[ற](ர)ம பரிச்சேதம் இ[து](வை)களெல்லாமில்லாததாய் எட்டுத்திக்குக் கீழ்மே லெங்குமடிமுடிவற்று(ச்)ச[று](ரு)வத்திர பரிபூரணமாயிருக்கிறபடியினாலே(சர்வ)[நாம]தோமுகனென்றறி. (௱௪)

ஆக லட்சணவிருத்தி நி[ருத்தி]தித்தியாதன சாட்சாற்கார நாமம்-108. இலட்சணவிருத்தி வியாக்கியான முற்றும்.

இலக்கணவிருத்தி ;

I. நி[ருத்திசாத](தித்தியாச)னயுத்தி :—

திருவிகாரி.
ஞானவடிவன்.
அசங்கன்.
சுயம்பிரகாசன்.
௫. சொற்பிரகாசன்.
ஆனந்தரூபன்.
சத்தியன்.
நிட்கிரியன்.
முத்தன்.
௧௦. அகருத்தா.
அபோத்தா.
நிருபத்திரவன்.
நிருவேபன்.
நிச்சம்பந்தன்.
௧௫. கூடத்தன்.
ஆத்துமன்.
நிர்த்தோஷன்.
அப்பிரமேயன்.
பிரத்தியட்சன்.
௨௦. அணு.
அசரீரி.
நிரீந்திரியன்.
அப்பிராணன்.
அமனசன்.
௨௫. நின்மலன்.
சுத்தன்.
புத்தன்.
சருவஞ்ஞன்.
பரமானந்தன்.
௩௦. சம்பு.
அசலன்.
நிர்க்குணன்.
நிருவிகற்பன்.
நிராகாரன்.
௩௫. நித்தமுத்தன்.
அனுதிமுத்தன்.
அச்சுதன்.
க்ஷேத்திரஞ்ஞன்.

வாசாமகோசரன்.
சo. அவ்வியாகிருதன்.
அட்சரன்.
திருக்கு.
பிரத்தியக்கு.
சின்மாத்திரன்.
சரு. சத்து.
நிரீசுவரன.
நிர்ச்சீவன்.
நிட்பிரகிருதி.
அசமுசாரி.
ருo. அபத்தன்.
நிரவயவன்.
அபரோட்சன்.
சுயம்பூரணன்.
அகேயன்.
ருரு. அனுபாதேயன்.
அப்பிரவிருத்தன்.
சிவன்.
அமுதன்.
[நி](அ)ரூபன்.
சுo. சாந்தன்.
அபயன்.
நித்தியானந்தன்.
நிர்விடயன்.
பழையோன்.
சுரு. புராதனன்.
சூனியன்.
மகாசூனியன்.
நிவிர்த்தன்.
அகாமன்.
எo. அலோபன்.
உன்னதன்.
அக்குரோதன்.

ஆக—எஉ

II. சமாதியுத்தி :—

நித்தியன்.
சருவ[ே]கதன்.
சருவாதாரன்.
நிராதாரன்.
ரு. ஆதி.
அநாதி.
விபு.
மகத்து.
நிரஞ்சனன்.
கo. காரணன்.
அகாரணன்.
சாட்சி.
தாணு.
பரிபூரணன்.
கரு. அனந்தன்.
சருவசமன்.
சருவதிஷ்டானன்.
அகண்டன்.
அபரிச்சின்னனன்.
உo. அணுவிருதன்.
ச[ா]ருவகாரணன்.
பிரமம்.

ஆக-உஉ.

III. சாட்சாத்காரயுத்தி :—

ஒருவனேயுள்ளபொருள்.
சருவான்மா.
சருவகாரணன்.
அனேகரூபன்.
ரு. ஏகரூபன்.
பரமார்த்தன்.
அத்வைதன்.
வஸ்து[வானவன்]
நிட்பிரபஞ்சன்.
கo. நானாரூபன்.
அபேதன்.
நிர்விசேடன்.
சருவாபாவன்.
சருவதோமுகன்.

ஆக—கச.

நி[ருத்திசாத](நித்தியாச)னம், சமாதி, சாட்சாத்காரம் இந்த மூன்றுக்கும் நாமம்-கoஅ.

(கு-பு.)—

இது வேதாந்தவிஷயமானது. நிதித்தியாசனயுத்தி, சமாதியுத்தி, சாட்சாத்காரயுத்தியாகிய மூன்று பெரும்பிரிவினையுடையது. நிருவிகாரி, ஞானவடிவன் முதலிய நூற்றெட்டுப் பெயர்களுக்கும் உரியகாரணமுதலியவற்றை

முறையே விளக்கமாக நன்கு தெரிவிப்பது. வசன நடையாலாயது. நூலாசிரியர் சிதம்பரனான தேசிகரென்பர் ஒரு சாரார். ஏடுகளின் முனைகள் முறிந்துள்ளன. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1452. இலக்கணவிருத்தி.

ILAKKAṆĀVIRUTTI.

Substance, palm-leaf. Size, 7¾ × 1 inches. Pages, 46. Lines, 6 on a page. Character, Tamil Condition, slightly injured. Appearance, old.

Contains the states 85 to 108.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. 85-ஆவதாகிய தானுமுதலாக இறுதிவரையில் முற்றும் உள்ளது. ஆகையால் இது முற்றுப் பெறவில்லை.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 300-ஆம் நம்பர் பிரதியின் மூலப்பிரதியாகும். இதில் இது முற்றும் உள்ளது.

No. 1488. சசிவன்னபோதம்.
ŚAŚIVANNABŌDAM.

Pages, 20. Lines, 8 on a page.

Begins on fol. 84*a* of the MS. described under No. 83.

Complete.

Same text as that described above. The author is Tattuvarāyar but Mr. Raghava Ayyangar, late editor of the Śendamiḻ, opines that the author is Sōtiprakāśar.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக்கின் 300-ஆம் நம்பர் பிரதிபோன்றது. ஆயினும் இதில் மூலமட்டுமே உள்ளது. நூலாசிரியர் சோதிப்பிரகாசர் என்பர் செந்தமிழ்ப் பத்திராசிரியராக இருந்த இராமநாதபுரம் ம-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்கார். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1489. சத்தப்பிரகரணம்.
SATTAPPIRAKARAṆAM.

Substance, palm-leaf. Size, 9¼ × 1¼ inches. Pages, 87. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 43. The other works herein are Śorupānandarupaniḍadam with commentary 1*a* Ahattīśar‍‍dīkṣāvidhi 80*a*.

Complete.

A treatise bearing on the Advaita Vēdānta. It is divided into 7 chapters, the topics dealt with therein being given in the Tamil remarks below. The work has been printed, but much difference is noticeable between the printed edition and the MS.

Beginning:

வேந்தாத சிரவணம். முதலாவது ராகத்துவேஷம்.

[illegible] |
[illegible] ||

என்றது, எந்த ராகத்துவேஷங்களினுலேயும் விகற்பித்து வருகிற சித்த விருத்திகளேயும் சமட்டிவியட்டி சத்ததன்மாத்திரைகளாய் வருகிற திரிகுண சொரூபங்களேயும் திரிபு(ை)டையையும் நிரூபிக்கிருேம் !—

எப்படியென்னில் அனுதிகாலத்திலே பிரமஞானம் அறியும்படியாய்(ப்) பகவான் பிரமதேவருக்கு உபதேசித்த பஞ்சீகரண சிரவணம். முதலாவது ராகத்துவேஷ நிவிர்த்திகூறியது எப்படியென்னில்,—ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், ஈரிஷை, அசூயை, டம்பம், தற்பம், ஆங்காரம், இச்சை, பத்தி, சிரத்தை ஆக-௧௬.

இதற்கு வகையான ராகமாவது :—பரஸ்திரி[ெ]க[வ](ம)னம் பண்ணவேணுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்தி[க்கு ராகமென்று பெயர்.]

துவேஷமாவது ;—தனக்கொருத்தன் அபகாரம்பண்ணினுல் அவனுக்கு அதில் அபகாரம் பண்ணவேணுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்தி[க்குத் துவேஷமென்றுபெயர்].

End:

இனி மகாகாரண பிரகரணமாவது எதென்னில்,—

[illegible] |
[illegible] ||

என்றது இதற்கு விவரம் : தன்னிடத்திலெதிராய் அத்தியாசமாய்த் தோ[ணு](ன்று)கிற மகாகாரணத்தினுடைய விவரணையைச்சொல்லுகிருேம் :—

எப்படியென்னில், தமோகுணப்பிரதானமான ஆங்காரத்துவமென்கிற காரண சரீரம்போல் பிறகு சாத்வீக குணப்பிரதானமான மகத்தென்கிற பிரத்தியாகாரத்துப் பிரத்தியகாத்துமாவுக்கே மகாகாரணசரீரமென்கிற பெயர் ; இந்தப் பிரத்தியகாத்துமாவும் மகாகாரண சரீரத்துக்கே (. . . . .) சாத்தானுவித்த சர்வவிகற்ப சமாதி[யிது] முதலான அகண்டகார விருத்திக்குமகத்தான பரியாய நாமங்கள் இதற்குச் சம்மதி என்று வாசிட்ட ராமாயணமென்கிற கிரந்தத்திலே ஸ்ரீராமரைப் பார்த்து வசிட்டர் உபதேசம் பண்ணியிருக்கிருர். அதனுலேயும் சுருதிகளிலே சொல்லியிருக்கிறபடியினுலேயும் அகண்டபரிபூரண சொரூபமிதுவே பிரமாணமென்றறிவதே சித்தம்.

Colophon:

சம்பூர்ணம்.

மகாகாரண முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத வேதாந்த விஷயமானது. (1) ராகத்துவேஷப் பிரகரணம், (2) சாதன சதுட்டயப் பிரகரணம், (3) மகாவாக்கியப் பிரகரணம், (4) தூலப்பிரகரணம், (5) சூட்சுமப் பிரகரணம், (6) காரணப் பிரகரணம், (7) மகாகாரணப் பிரகரணம் என்ற ஏழுபெரும் பிரிவுகளாலாயது அச்சிட்டிருப்பதற்கும் இதற்கும்பல வேறுபாடுகளிருக்குமென்று தோற்றுகிறது. முற்றும் இருக்கிறது.

No. 1490. சத்தப்பிரகரணம்.
SATTAPPIRAKARANAM.

Substance, palm-leaf. Size, $9\frac{3}{8} \times 1$ inches. Pages, 64. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 41a. The other works herein are Sorupānanda-vupaniḍadam with commentary 1a, Tiruppuhaḻ 77a, Śaṭṭaimuni-ñānam 7.a, Śaṅkarācāriyar Śuddhakāṇḍam 84a, Nandiśvararpāyiram 87a, Koṅgaṇavarñānam 90a, Koṅgaṇavardiyānam 93a, Ahattiyardīkṣā-vidhi 96a, Vālaidīkṣai 103a, Maccamunivarñānam 104a, Eluvahaittōṟ-ṟam 120a, Vādavūrar Ānandakkaḻippu 124a, 128a.

Complete, but full of scriptory mistakes.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. எழுத்துப்பிழைகளதிகம்.

No. 1491. சத்தப்பிரகரணம்.
SATTAPPIRAKARAṆAM.

Substance, palm-leaf. Size, $9\frac{1}{2} \times 1$ inches. Pages, 254. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as the above; some differences are noticable in the stanzas; and the arrangement of the Paṭalas is somewhat different At the end details of information regarding the edition, the place of publication, the price of the book, etc. are all given, and so it is inferred that this MS. has been copied from the printed book.

Colophon:

அச்சிற் பதிப்பித்த சத்தப்பிரகரணம். கார்த்திகைமீ ௧௨௨ புதன் விரோதகிருதுஷு.

இந்நூல் சேஷகிரிசுவாமிகள் மரபில் வந்த மன்னார்பாகவதரிவர்கள் மரபிற் செய்யப்பட்டது.

"இது சுத்த வேதாந்த பரம்பரை தி. கரபாத்திர சுவாமிகள் மரபிலுள்ள பிறையாறு அருணாசல சுவாமிகளாற் பரிசோதித்து அவர்கள் மாணாக்கரில் ஒருவராகிய சென்(னை) வேங்கடாசல முதலியாரும், வி. ரங்கசாமி முதலியாரும் கேட்டுக்கொண்டபடி சென்னைமாநகரம் "வேதாந்தவிளக்கம்' என்னும் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. விசுவாவசுஷு ஆவணிமீ இதன்விலை ரூபா க. அணா உ."

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றதே. ஆயினும் வாக்கியங்களும்,

		Foll.
(1)	இராகத்துவேஷப் பிரகரணம்	1
(2)	சாதன சதுஷ்டயப் பிரகரணம்	24
(3)	தூலப் பிரகரணம்	54
(4)	சூட்சுமப் பிரகரணம்	76
(5)	காரணப் பிரகரணம்	100
(6)	மகாகாரணப் பிரகரணம்	106
(7)	நிசாலந்தானுபூதிப் பிரகரணம்	114

எனப்பிரகரணங்களும் சிறிது வித்தியாசத்துடன் காணப்படுகின்றன. இந்தப் பிரதி அச்சுப்பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றிருக்கவேண்டுமென்று தோற்றுகிறது.

No. 1492. சத்தப்பிரகரணம்.

SATTAPPIRAKARAṆAM.

Substance, palm-leaf. Size, 13 × 1⅛ inches. Pages, 124. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other works herein is Vivēkaśaram, 63*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. அதில் உள்ள அளவே இதிலும் உள்ளது.

No. 1493. சிதானந்தகீதை.

CIDĀNANDAGĪTAI.

Pages, 27. Lines, 8 on a page.

Begins on fol. 44*a* of the MS. described under No. 1338.

Complete.

A treatise bearing on Advaita philosophy explaining the characteristics of Sat, Cit, Ānanda of the Supreme Brahman. In a passage at the beginning of the work it is stated that it is the tamil rendering of the Sanskrit work Tattvasāra made by Śaccidānandasvāmi for instructing Cidānandayōgi; and it is stated at the end of the work that Cidānandayōgi, disciple of Vimalēśānandayōgīśvara taught it to Saccidānandayōgi.

Beginning:

சகலவேதாந்த சாத்திரத்தையும் சங்கி[ற](ர)கம்பண்ணி யிந்தச் சாத்திரம் பார்த்தபேர்க்கெல்லாம் ஞானோ[ை]தயமாகும்பொருட்டாக(த்) தத்துவசாரமென்கிற கிரந்தத்தைச் சச்சிதானந்த சுவாமி[ய](க)ள் தமிழினால் (. . . . . .) பனுவலாகப் பண்ணிச் சிதானந்தயோகிக்[கி](கு) உபதேசம் பண்ணின கி[ற](ர)மம் :—

நி[ற்றி](த்தி)ய க[ற்](ன்)மங்களும், நைமித்தியக[ற்](ன்)மங்களும் வெகு செனனங்க[ள்](ளில்) ஆசரித்ததினாலே சித்தசு[ற்றி](த்தி)யுண்டாய், அனேகவிதங்களாயிருக்கிற உபாசனையினாலே மனது ஏகாக்கிரசித்தமுண்டாய் மோட்சத்திலே யிச்சையாய், சாதன சதுட்டயங்கைவந்து சற்குருவைச்சேர்ந்து செனனமரண ரூபமான சமுசாரத்தைத்தாண்டுகிற[த்]துக்கு உபாயங் கேட்கின்ற சீ:-னுக்கு சற்குருவானவர்ஞானோதயம் பண்ணின கி[ற](ர)மம் :—

அகிலாண்டகோடி (. . . . .) அவா[ன்](ங்)மனசகோசரமாயிருக்கிற பிரம சைதன்னியம் ஒன்றுண்டு. அது சச்சிதானந்த சொரூபமாகவிருக்கும்.

End:

யாரொருவர் இந்தப் பிரகரணத்தைக் குருமுகமாகச் சிரவணம்பண்ணிச் சிரவணம்பண்ணின[த்]தை நன்றாய் மனனம் பண்ணிக்கொண்டு, மனனம் பண்ணின[த்]தை யாதொருத்தர் அனுபவத்திலே நிட்டை சாதி[ச்சு](த்து) வருகிறார்களோ அவர்களே சீவன்முக்த(ர்க)ள்.

Colophon:

இந்தப் பி[ற](ர)கரணம் ஸ்ரீவாசுதேவசொரூபரான விம[ரீ](லீ)சானந்தயோகீசு(வ)ரசாமி[ய](க)ள் சரணாரவிந்தங்களிலே பி[று](ரு)ங்கம்போலச் சஞ்சரிக்கிற சிதானந்த யோகீசுரரானவர் சச்சிதானந்தயோகிக்கு உபதேசம் பண்ணின சிதானந்த கீதை முற்றும்.

அகண்ட சச்சிதானந்தப் பி[று](ரஹ்)மைமவாஹம். பூர்ணம்.

(கு-பு.)—

இந்நூல் அத்துவைதமதத்தைச் சார்ந்தது. சச்சிதானந்த சொரூபத்தைநன்கு விளக்குவது. வசனநடையிலமைந்தது. "தத்துவசாரம் என்னும் நூலே, சிதானந்த யோகிக்குச் சச்சிதானந்த சுவாமிகள் உபதேசித்ததாக" நூலாரம்பத்திலும் "விமலீசானந்த யோகீசுவர சாமிகள் சரணாரவிந்தங்களிலே பிருங்கம்போலச் சஞ்சரிக்கிற சிதானந்த யோகீசுவரர், சச்சிதானந்த சுவாமிக்கு உபதேசம் பண்ணின சிதானந்தகீதை" என நூலின் இறுதியிலும் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1494. சிலேடையுலா.

ŚILĒḌAIYULĀ.

Pages, 51. Lines, 8-9 on a page.

Begins on fol. 106*a* of the MS. described under No. 1061.

Complete.

A treatise bringing out the principles of the Advaita Vēdānta taught to the author Tattuvarāyar by his Guru Sorūpānandar and incidentally praising him. The stanzas are capable of giving two meanings, a philosophical meaning and an ordinary meaning.

Beginning:

பன்னிரண்டாவது தத்துவராயரருளிய சிலேடையுலா.

தத்துவவாக்கியம்.

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பநமக் காவானு—மென்றனுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு.

ஓங்கு முயிர்க ளொருகாலு முணரும் வண்ண முணராமல்
பாங்கி லுலக முழுதினையு மறைத்த படலப் பெருமாயை
யாங்கு வேரோ டழியும் வண்ண மகமும் புறமு மறநிறைந்து
தீங்கி லின்பத் திகழொளியாஞ் சிவப்பிரகா சத்தினைப் பணிவாம்.

(குழகன்)

ஓங்கு விசும்பு முறுகாலு[ம்] மொண்டீயும்
வாங்கு திரைக்கடலும் வையகமு[ம்]—நீங்காத
சத்தாதி யிற்பிறக்கச் சாரும் புலனைந்தும்
வித்தார மாக விளைவிளக்கச்—சித்த
விகாரத் துதிக்க வியன்புலன் வெவ் வேறும்
விகாரமுஞ் சித்தம் விளக்கத்--தகாது
தெரியாத மாயையினிற் சித்தந் திகழக்
கரியாய சீவன்கட் டோன்[றி](ற)—வரமாயை

End:

(. . . . . .) தீயபவப்

பேராழி மாற்றும் பெருமானே பேரோத
நீராழி மாற்றுதற்கு நில்வாதோ—போரேறே
நின்னணிய யானு நினையணுகா தாரைப்போற்
பொன்னணியு மொன்றாகப் பூணவோ—[யி](வி)ன்னளியைக்
கண்டா தரிக்குங் கருத்தெலா நேராகக்
கொண்டா யறவுங் கொடியைகாண்—பண்டேயு
நோலா வெமையொழிய நோற்றார்க டங்களையு

மாலாக்க வல்லையே யென்றென் று—மாலாகி
நின்று ளிவள்போலு நேரிழையார் யாவ[ற்](ர்)க்கு ந்
தன்றுள் பணியுந் தபோதனர்க்கு—மொன்றுகத்
தீராத பித்தளித்துச் செய்யாச் செயலளித்து
நீரா விழியளித்து நின்றவெலா—நேராகக்
கொண்ட பிரான் மெய்யின்பங் கூர்ந்தேன் புலனைந்து
முண்டபிரான் போந்தா னுலா.
சேரா வரிவைய[ற்](ர்க்)குஞ் சேர்ந்த வரிவை[ற்](க்)கு
நீராய் விழிதுறந்து நின்றதே—நேரா
வுருவிலா நேரா வுணர்[பு](வு டை—யா) நே[ந](ன)நே
திருவுலாப் போந்த தெரு.

Colophon:

சிலேடையுலா முற்றிற்று

மத்தூர் சரவண தேசிகர் வீரபுத்திரராகிய மணியப்ப முதலியார், தத்துவராயரருளிய சிலேடையுலா முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் சொருபானந்தர்மீது தத்துவதேசிகநாயனுராவியற்றப்பட்டது. வேதாந்த விஷயமானது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1495. சிலேடையுலா.

ŚILĒḌAIYULĀ.

Pages, 31. Lines, 8-9 on a page.

Begins on fol. 68*a* of the MS. described under No. 325.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியின்கண் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1496. சிலேடையுலா.

ŚILĒḌAIYULĀ.

Pages, 26. Lines, 8-9 on a page.

Begins on fol. 99*a* of the MS. described under No. 1422.

Wants only two stanzas; otherwise complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இதில் "தந்தைதாயாவானும்" "ஓங்குமுயிர்களெனும்" என்ற பாடல்களிரண்டுமில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக்கிறது.

No. 1497. சிவகீதை.
ŚIVAGĪTAI.

Substance, palm-leaf. Size, $8\frac{4}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 78. Lines, 8-10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

A treatise in 11 Adhyāyas bearing on Advaita Vēdānta. The names of the Adhyāyas will be found given in the Tamil remarks below. From the fourth stanza, it is inferred that the author thought that this work may appropriately be termed Śivappirakāśam. The author appears to be Tattuvadēśikanāyanār, but this matter requires further investigation.

Beginning:

பூதமைந்தோ டிரவிமதிப் புருடனுகிப் புணர்ந் தென்றும்
பேதமில்லா வறிவுருவாய்ப் பிறங்குகின்ற பேரொளியோ
னுதிமூவர்க் கறிவரியோ னரிவைபாக னுமமலன்
பாதபங்கயங்கடலை வைத்தே பணியும் பரிசினனுல். (க)

இலங்கிய மறைக ளுன்கு மியம்புதற் கியலா வென்ன
மலங்கிய சிந்தையோடு வானவர் மூவர் நிற்க
விலங்கிய லனைய வென்னை வேதகஞ் செய்தெ னுள்ளே
துலங்கிய சொருபா னந்தன் றுணையடி தொழுதல் செய்வாம். (உ)

* * * *

சிவன்றிருவுருவுகொண்டு முன்பருளிச்செய்ததோர் புராணமாதலினுற்
சிவன்றனை யளித்த பரன்றிரு நாமஞ் சிவப்பிர காசமா மதனுற் [வாற்
சிவந்தசெந்தமிழா வியார்க்குமிந் நிலத்தே சிவந்தனைத் திகழ்த்திடுந் தெளி
சிவன்றனக் குரிய தாதலா னுமஞ் சிவப்பிர காசமென் றுரைப்பாம். (ச)

பிரமாண்டங்கள் படைத்தவப்பரிசும்
 பெருமையுமனுக்க ளெல்லைகளு(ம்)
வரமுற வுரைத்தாய் வளம்பெற வதிலே
 வாய்மையால் வருண நான்கிலுந்
தருமதற் பராய் ஞானயோ கத்தே
 சாலவா தரிப்பவர் தம்மாற்
றிரமுறப் பரவுந் தேவர்தே வர்க்குந்
 தேவனுண் டென்று செப்பினையால். (ஞ)

* * * *

முதலத்தியாயமுற்றும்.

சாங்கியயோகவத்தியாயம்.

மறைபயின் முனிவர்கேட்ப மாமறை முடிவி னூலு
மறிவரு மறிவா னந்த வருளுறு வமலன் றன்பாற்
பிரிதரு பேதநீத்துப் பெயர்விலா தொன்றா யெங்குஞ்
செறிதருந் தன்னை யீசன் றெரிதர வியம்பலுற்றான். (௧)

End:

ஏதமுற நாரணனை யென்னிலயல் காணும்
பேதவிழி யானர்பிற விப்பிணியறாரே
மாதவனை யானென மனத்தி னினை கிற்கும்
போதவிழி யாளர்பரி பூரண மடைந்தார். (௭௨)

* * * *

மூவர்தேடிறைசனற்குமாரன் முதன்முனிவர்கட்குமொழிகீதையிங்
கியால ரோதின ரிதின் பொருட் டுணிவ ரியாவர்தம்
பாவம் வேரொடு பறிந்துநல்ல பரமப்பதம் பெறுவ ராதலான்
மேவு மன்பினொடு மோத மீளுதலில் வீடுவேண்டி விரும்புவான். (௭௮)

Colophon:

பதினொராவது யோகவத்தியாயமுற்றும். ஆகச் சிவப்பிரகாசம் அத்தியாயம் ௧௧, திருவிருத்தம் ௯௱௯௰௮.

(கு-பு.)—

இது அத்வைத வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று (1) சிவனைத் தேவர்கள் கண்டது, (2) சாங்கியயோகவத்தியாயம், (3) சம்பிரதாயவத்தியாயம், (4) பத்திமையத்தியாயம், (5) விசுவரூபவத்தியாயம், (6) சிவ(ச)த்தியின் செயலுரைத்தவத்தியாயம், (7) தத்வநிசமவிபூதியத்தியாயம் (?) (8) பிரபஞ்சவத்தியாயம், (9) மாயாவிகாரவத்தியாயம், (10) தத்துவதரிசனவத்தியாயம், (11) யோகவத்தியாயம் என்ற பதினொருவத்தியாயங்களாலாகியது. இந்நூலுக்குச் "சிவப்பிரகாச" மென்ற பெயர் பொருத்தமென்று நூலாசிரியர் கருதினாரென்று தெரிகிறது (பாயிரம், செய்யுள், 4). நூலாசிரியர் தத்துவதேசிகநாயனார் போலவே தோற்றுகிறது. ஆயினும் ஆராய்ந்து நிச்சயிக்க வேண்டும். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1498. சிவகீதை.

ŚIVAGĪTAI.

Substance, palm-leaf. Size, $8\frac{3}{4} \times 1\frac{5}{8}$ inches. Pages, 50. Lines, 11 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1499. சிவப்பிரகாசவெண்பா.
ŚIVAPPIRAKĀŚAVEṆBĀ.

Pages, 7. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1472.

Complete in 43 stanzas.

A treatise on Advaita Vēdānta in which a Guru is represented as instructing his disciple that soul is different from the body, senses, etc., and that he should realise its true nature. The author appears to be Tattuvadēśikanāyanār.

Beginning:

வாக்குமனங் காணுத வாசாம கோசரத்தை
யாக்கமழி வில்லா வறிவுருவைப்—பாக்கியத்தோ
ரோன்றும் பரம்பொருளை யுள்ளாமல் விள்ளாம
லென்றுந் துதிப்பே னியான். (க)

தனையாருங் காணுத தற்சொருபங் காணப்
புனையாத் திருமேனி போந்திங்—கெனையாண்ட
நாதன் சிவப்பிர காச னளினமலர்ப்
பாதந் தொழுதேன் பரிந்து. (உ)

* * * *

பிள்ளை தனக்கொருவர் பேதித்தும் பேதியாத்
வுள்ள பொருளெல்லா முணர்த்துவிக்கத்—தெள்ளும்
விழியைக் கொடுத்தருளி வேதாந்தந் தன்னை
மொழியப் புகுந்தான் முனி. (கூ)

End:

மறையவனைப் போலவே மைந்தனுள மாண்டங்
குறையுந் தனதுருவத் துள்ளே—நிறைய
வுருகிக் கலந்துசெறிந் தொன்ரு யிருந்தான்
சொருபக் கடலாஞ் சுகம். (௱க)

* * * *

ஈண்ட வெழுந்தருளி யெப்பொழுது மிப்படியே
யாண்டு கொளவருவை யாகின்—மீண்டும்
பிறக்கினுந்தாழ் வுண்டோ பிரியா விடைகொண்
டிறக்கினுந்தாழ் வுண்டோ வினி. (சங)

சிவப்பிரகாச முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச்சார்ந்தது. இதில், நல்லாசிரியன் தன்னையடைந்த சிஷ்யனுக்கு, உடம்பு, இந்திரியமுதலியவற்றினும் ஆத்மா வேறென்று கூறி உண்மைப் பொருளையுணர்ந்தனுபவிக்கும்படி காட்டப்பட்டுள்ளது. வாழ்த்து உட்பட நாற்பத்துமூன்று வெண்பாக்களாலாகியது. செய்யுள் நடை மிக இனியது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. நூலாசிரியர் தத்துவதேசிக நாயனரென்று தெரிகிறது.

No. 1500. சிவபூசையகவல்.

ŚIVAPŪŚAIYAKAVAL.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 387*a* of the MS. described under No. 85.

Complete.

A treatise of a philosophical nature in which it is stated that the true Śivapūjai or the worship of Śiva, consists in the subjugation of the senses and the realization of Śiva. This work is different from the Śivapūjaiyakaval of Ñānappirakāśar of Tiruvālūr.

Beginning:

இந்தத் தியான வெழிற்றிரு மேனியி
லேந்து சாதாக் கியமடை யும்படி
வாக்கமை கீழ்தென் வடமேற் றிசைமிசை
நோக்கிய முகங்க ளுவவருந் தொழிற்சா
தாக்கிய முதலேந் தென்றுரை தருமே
யம்முத லேந்தஞ் சகளம தாம்போழ்
தின்னண மீசா ஞதி யெனப் படுந்
தொழிற்படு சாதாக் கியத்தினைச் சொல்லி
னிழற்பொலி சகள திட்கள மாகையிற்

End:

இந்த நிலையிற் றெரிசன மென்று
நந்தா திருப்பது ஞான பூசை
யந்தரி யாகமு மாபுற யாகமு
மிந்த நெறியிற் றில்லா தாதலிற்
புந்தியில் ஞான பூசை யென்ற
தவ்விரு பூசையும் பிரித்தருச் சிப்பது
பொரியில் கிரியா பூசையென் றதுவே
யிப்படி யிடையற விருதய கமலத்
தற்புத முதல்வனை ய[ற்](ருச்)சனை புரிபவா
தப்பற வடைகுவர் சாயுச் சியமே.

சிவபூசை யகவல் முற்றும்

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கரணங்களடங்கி அறிவு பிரமத்தை அறிவதே உண்மையான சிவபூசையென்று கூறுவது. அகவற்பாவிலமைந்தது. திருவாரூர் ஞானப்பிரகாசர் இயற்றிய சிவபூசை யகவலினும் இது வேறானது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. நூலாசிரியர் இன்னாரெனத்தெரியவில்லை.

No. 1501. சிவபூசையகவல், உரையுடன்.
ŚIVAPŪŚAIYAKAVAL WITH COMMENTARY.

Pages, 20. Lines, 7 on a page.

Begins on fol. 377*a* of the MS. described under No. 83.

Complete.

Same work as the above and with a lucid commentary thereon. The name of the commentator is not given.

Beginning :

இந்தத் தியானவெழிற் றிருமேனியில் (. . . . .) ஈசானாதி யெனப்படும், எ-து.—இப்படி, தியானத்தாலறியப்பட்ட அழகிய கன்மசாதாக்கியர் திருமேனியிலே பஞ்சசாதாக்கியமும் அடைந்த முறைமையைச் சொல்லுமிடத்துக் கிழக்கே பார்த்த பூர்வமுகஞ் சொல்லுதற்கரிய கன்மசாதாக்கியமென்றும், தெற்கே பார்த்த தெட்சிணமுகங் க(ர்)த்திரு சாதாக்கியமென்றும், வடக்கே பார்த்தவுத்தரமுக மூர்த்தி சாதாக்கியமென்றும், மேற்கே பார்த்த பச்சிம முகம் அமூர்த்தி சாதாக்கியமென்றும் நாலுதிக்கிலும் வியாபித்த வூர்த்தமுகஞ் சிவசாதாக்கிய மென்றுஞ் சொல்லப்படும்.

End :

இப்படிச் சொல்லப்பட்ட தெரிசனமாகிய ஞான பூசையிலே அர்புத முதல்வனாகிய அனுபோக சிவனைப் பூசை பண்ணுமதான சீவன் முத்தர் நிலைபேறான சாயுச்சியமே பெறுகை சந்தேகமில்லையென்றவாறு.

அகவலுரை முற்றும்.

(கு-பு.)—

இது சிவபூசையகவலின் உரை. தெளிவாகப் பொருளினை விளக்குவது. உரையாசிரியர் பெயர் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1502. சூத்திரவெண்பா.
SŪTTIRAVEṆBĀ.

Pages, 4. Lines, 9 on a page.

Begins on fol. 93*a* of the MS. described under No. 1214.

A treatise bearing on Advaita-Vēdānta. Neither the name of the work nor that of the author is given or can be made out. Probably this is only a part of some work. Some stanzas are found written before as well as after this work and it is not known whether they form separate works at all, though, owing to want of better authority in the matter, they are described separately in this catalogue.

Beginning:

சாத்திரங்க ளே(ா)திச் சகலகலை யுணர்ந்துஞ்
சூத்திரமே யுள்ளக்கண் சூட்சமாய்ப்—பாத்துகந்து
கண்டான் நடுவான காரணத்தைக் கண்டுமனங்
கொண்டான் வெளியாடுங் கோன்.

வெளியோ வொளியிருளோ வெனமூன்று மொன்றும்
வளியோ மனமறியும் வண்ணந்—தெளிவோ
ரானந்த வெள்ள மகண்டபரி பூரணமே
தானந்த மாதந் தனி.

End:

தன்னையறியத் தனுமனமொன் றுயிருந்
துன்னை யறியவெளி யுள்ளிருந்து—முன்னைப்
பின்னறிவ தாக்கும் பெருங்கருணைப் போராள
னென்னறிவே தன்னறிவென் றான். (க)

நித்தியத்தைக் கண்டவுட னிருமலமென் றேயறிந்து
நித்தியத்தை யன்புமன்ன நீங்காதே—நித்தியமுங்
கள்ளத்தை நீங்கிக் கருணை யுடன்கலந்த
வுள்ளத்தி னுள்ளா முயிர். (க0)

(கு-பு.)—

இது அத்வைத வேதாந்த விஷயமானது. இந்நூலின் பெயரும் இயற்றியவர் பெயரும் ஒருவாற்றானும் விளங்கவில்லை. இதுவும் இதன் முன்னும் பின்னும் உள்ள சிலவும் தனித்தனி நூல்களல்லவென்று தோற்றுகிறது; தக்க ஆதாரம் ஒன்றும் கிடைக்காமையால் தனித்தனி நூல்களாகவே வெளிப்படுத்தும்படி நேர்ந்தது.

No. 1503. சூதசங்கிதாசாரசங்கிரகம்.
SŪTASAṄGITĀSĀRASAṄGRAHAM.

Pages, 61. Lines, 7 on a page.

Begins on fol. 167*a* of the MS. described under No. 1433.

Complete.

This is the original of the work described under R. No. 309 of the Triennial Catalogue of MSS., Vol. II, Part II.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 309-ஆம் நம்பர் பிரதிக்கு மூலப்பிரதி. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1504. சொருபசாரம்.

SORŪPASĀRAM.

Pages, 30. Lines, 7 on a page.

Begins on fol. 137*a* of the MS. described under No. 1485.

Complete.

A treatise bringing out the principles of the Advaita-Vēdānta in the form of an objection raised and an appropriate answer made for it.

Beginning:

மடல்கொண்ட தாமரை வையகமேழு மாகமெவிந்
துடல்கொண்ட போதினி லெங்கிருந்தீ ரென்றன் கண்மணியே
மடல்கொண்ட மந்திரத் தஞ்செழுத் தாற்சுரை யோடுபுக்குக்
கடல்கொண்ட பேர்து கலந்திருந்தே னென் கதிரொளியே.

சிற்சொருபந் தானேசெகச் சொருபமாவ தெல்லாந்
தற்சொருப சாரமாய்ச் சாற்றவே—பொய்ச்சொருப
மச்சுருவாம் போலே யதுவதுவாய்த் தோற்றுமொரு
சொற்சொருபந் தானே துணை.

பூதாதி யைந்தும் பொறிபுலன்க ளெல்லாஞ்சித்
தேகாதி யந்தமவை யெல்லாஞ்சித்—தோதரிய
கற்பனையுஞ் சித்தனைத்துங் காண்பானுங் காட்சியுஞ்சித்
தற்பரமும் வேறின் மையால். (க)

சங்கை :—இப்படியெல்லா விகற்பமுஞ் சித்தென்பதற்கு யு[கு]த்தியுண் டோவென்றால்,—

உத்தரம்—

"புத்திவிகற்பத்தாற் பொருந்து சகபேதமெலாஞ்
சத்தியம்போற் றோன்றுவதோர் சாட்சியன்றோ—முத்திமுதற்
சுத்த மசுத்தஞ் சுகாசுகங்க ளுள்ளவதி
லத்தனையுஞ் சத்தாத வால்" (உ)

சங்கை :—அப்படி(த்) தான் எல்லாஞ்சத்தானால் சச்சிதானந்த பரிபூரண மாகிய தன்(னுை)டய சொருபமாக வல்லோ தோற்றவேணும் என்றால்,—

உத்தரம்—

பார்த்ததிசை யெல்லாம் பரிபூ ரணசொருபந்
தீர்த்தமெல்லா மானந்த சிற்சொருபங்—கீர்த்திக்குந்
ே(தா)த்திரங்க ளெல்லாஞ் சுகசொருப நம்மையல்லால்
வேற்றுருவ மேதா குமே. (௩)

End:

சங்கை :—இப்படிப்பட்ட மகாத்துமாக்கள் எதைப்பற்றி யெதை விட்டி ருப்பார்கள் என்றால்,—

உத்தரம்:
உள்ளமற்றா ருள்ளத் துறுபொருளற் றாரைவர்
கள்ளமற் றார்ஞானங் கரையற்றார்—தெள்ளமுதச்
சிற்பரமு மற்றார் சிவானுபவந் தானு மற்றார்
கற்பனையு மற்றார்கள் காண். (க௦௦)

பருவசா ரத்தாற் பலிக்கு மனுபூதிச்
சொருபசா ரத்தின் சுவையை—யிருசெவியா
லுண்டிருக்க வல்லா ருலகமெலாந் தாமாகக்
கண்டிருக்க வல்லார்கள் காண். (க௦க)

Colophon:

சொருபசார வெண்பா முற்றும்.

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது; சங்கையும் உத்தரமுமாகச் செய்யப்பட்டுள்ளது. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. சிறந்த நடையாலாயது. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1505 சொருபசாரம்.

SORŪPASĀRAM.

Pages, 60. Lines, 5 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1465.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுள்ளது.

No. 1506. சொருபானந்தசித்தி.

SORŪPĀNANDAŚITTI.

Substance, palm-leaf. Size, 17⅝ × 1¼ inches. Pages, 114. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 260*a*. The other works herein are Vivēkasāram 1*a*, Pañcadaśaprakaraṇam 143*a*.

Complete.

A Tamil rendering in 547 stanzas of the Sanskrit Brahmagītā forming part of the Yajñavaibhavakhaṇḍa of the Sūtasaṁhitā of the Skāndapurāṇa. The work treats of the Advaita Vēdānta and is

divided into 12 Adhyāyas, the names of which are given in the Tamil remarks below. As the subject-matter of this work is said to have been narrated by Brahma to the Dēvas, the work is also known as Piramagītai in accordance with its designation in the Sanskrit; but this work is referred to under the name given in the heading above, both in the Kuṟundiraṭṭu and Perundiraṭṭu and in the fifth stanza of this work. According to the printed edition the author is Tattuvadēśikanāyanār after whose Guru, Sorūpānandar, the work is apparently called.

Beginning:

அத்தி முகவனை
மத்தன் மதலையை
நித்த நினைபவர்
முத்தி பெறுவரே.

*   *   *   *   *   *

கண்முதற் புலன்க ளந்தக் கரணங்கள் விளங்குமெ[ற்று](த்தா)ற்
றண்மதி யருக்க னங்கி தாரகை விளங்கு மெ[ற்று](த்தா)ல்
விண்முதற் பூதம் யாவும் விளங்கிடு மெ[ற்று](த்தா) லந்த
வுண்மையைச் சிவப்பிரகாச வொளியினை யுளத்துள் வைப்பாம் (௨)

*   *   *   *   *   *

வேறு

நித்த னிற்குண னின்மல னீடொளிச்
சுத்த னேகன் சுருதித் தொடர்பிலா
னத்த னென்னையு மாண்ட வருளினன்
றத்து வன்றிருத் தாளை வணங்குவாம். (௪)

மயலில் வானவர் கேட்ப மயக்கற
வயன்மு னுட்சொன்ன வாரணத் துட்பொரு
ளியலுமாசொரு பானந்தச் சி[ற்றி](த்தி)யென்
பெயரி னூற்றமி ழாலிங்கு(ப்) பேசுவாம். (௫)

*   *   *   *

வேறு

மன்னிய கமலத் தோன்றுள் வானவர்வணங்கி யெல்லாம்
பன்னரு மறையருத்தம் பகரென வினவுமாறு
முன்னதின் மொழிந்து பின்னர் முளரியந் தவிசின்மேலோ
னின்னிய விருக்கிலைத ரேயம தி[யி]யம்புமாறும் (௭)

வேறு

வான்றான் முதலாமனைத்துலகும் வானோர் முதலாம் வருபிறப்பு
மீன்றானிருக்கிற் றயித்திரிய மியம்பும் பரிசை யியம்புவார்
மூன்றுமோ[ற்றி](த்தி)லுரைத்தாதி மூலப் பிரமந் தனைத் தேடச்
சான்றோர்சொன்ன நெறியை விடாச் சதுர்த்தத்தாலே சாற்றியபின்(அ)

சந்தோகத்திற் சட்டந்தா னுரைக்கும் பரிசைச் சதுமுகத்தோ
னந்தாமோ[ற்றி](த்தி)லுரைத்தாறி லேழுமெட்டோங்கறைந்தான்
மைந்தார் முண்டகங்கைவல்லிய மறையின்பொருளை வையமெலாந்
தந்தான் சத்த மத்தாலு மட்டமத்துஞ் சாற்றியபின்.

வேறு

அன்பினுலகில லோகம் படைத்தவனமரர்தங்கட்
கின்பமாரணு பி[றவற](ரக) தாரணத்திசை மயித்தி[ரி](ரி)யத்தை
யொன்பதாலுரைத்துப் பத்தா லுதித்த முங்கார்க்கிதானும்
பின்பதா யந்தரியாமிப் பிராமண வி[ஷக](டய)ம்பேசி.

வேறு.

தாதா வேகா தசந்தன்னிற் றக்கோர் சொல்லுங் கடவல்லிச்
சுவேதா சுவேதரமெடுத்துரைத்துச் சொன்னதெல்லாந் தொகுத்
[தொன்றூற்
றூய்தாவருளிச் செய்தத்தி[ன்]னீரா றேத்தாற் சொல்லின்பப்
போதாலயத்தோன் புகன்றபொருள்யானுந் தமிழாற்[ப]புகல்கின்றேன்
(கக)

வேறு

சூதமா முனியை நோக்கித் தொல்லைமா முனிவர் சொல்வார்
மாதவா வினவிற்றெல்லாம் வகுத்துநீ தொகுத்துச் சொன்னு
யாதி[னு](நா)ன் முகத்தோன் கீதையறியவாதரித்தோ மின்றென்
றேதிமா முனிகளெல்லா மீளவு முரைக்கலுற்றார். (க)

* * * *

பண்டொரு கற்பந் தன்னிற் பழமறைப் பொருளை யெல்வா
வண்டருங் கூடி யாய்ந்தங் கறியவா காமை யாலே
யெண்டரு மாதவத்தோ ரெய்தியே யிதனைக் கேட்பப்
புண்டரீ கத்தில் வாழும் புனிதனை நோக்கிப் போனார். (ச)

* * * *

முதலாவது பிரமாவை(த்) தேவதை[ய](க)ள் தெரிசி[ற்ற](த்த) வ[ற்றி](த்தி) யாயம் முற்றும். இரண்டாவது [அ](ஐ)தரேயவுபனிடத அத்தியாயம்.

* * * *

சின்மாத் திரமா யுள்ள வெறுஞ் சிவனே திகழ்வான் யாதுக்கு
முன்மாத் திரமும் வேறில்லை முற்று மவனே மொழிவுற்ற
நன்மாத் திரமாயா[ற](ன்)மா வென் றுரைக்கு நாமத் தினையுடையான்
தன்மாத் திரமே யாகியவத் தன்மையான சங்கரன்றான் (உ)

End:

பிரமனு னீங்கள் பெற்றவிக் கீதை பேசிய கீதைகட் கெல்லாம்
பரமமாய் வேதா காரமா தலினுற் படிக்கலா மறையவர் தமக்கே
சுருதியா தலினுற் சூத்திரா திகளாற் சொல்லலா காதென வருளிப்
புரணமா யெல்லாக் கரணமுங் கடந்த பே(ாத)வின் பத்தினுட்புக்கான்.
(கச)

* * * *

வேறு.

உத்தம மான கீதை யுரைத்தன னுவகை யோடும்
பத்தியாற் கேட்பார்க் கென்றும் பகர்ந்திடப் படுமீ தென்று
சுத்தவே தியர்க்குச் சொல்லிச் சூதனு ஞானக் கண்ணு
முத்தியா முருவே நோக்கி மோனமே யடைந்தி ருந்தான்.

இனிடனு யெல்லாந் தன்பா லிறைவனின் னருளாற்பெற்ற
முனிவனை முனிவ ரெல்லா முடியுற வணங்கி யே[ற்றி](த்தி)
நனிமிக நானென் கின்ற பதப்பொரு ளுடி வேரோ
ரனியமில் பிரம மாக வறிந்தகி[ெ] (ச)யித் திருந்தார். (கஎ)

Colophon:

பன்னிரண்டாவது சுவேதாசு[ே]வதர வுபனிடத அ[ற்றி]த்தியாய முற்றும். ஆக அத்தியாயம் ௰உ-க்குத் திருவிருத்தம், ௲௱௪௰எ. பிரமகீதைமுற்றும்.

(கு-பு.)—

இது வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. ஸ்காந்த புராணத்துச் சூதசம்ஹிதையிலுள்ள எஜ்ஞைய வைபவ கண்டத்தின் ஒரு பிரிவாக உள்ளது.

	Foll.
(1) பிரமாவைத் தேவதைகள் தரிசித்த அத்தியாயம்.	1
(2) ஐதரேயவுபநிடத வத்தியாயம்.	5
(3) தைத்திரிய வுபநிடத வத்தியாயம்.	7b
(4) கேனோபநிடத வத்தியாயம்.	13
(5) சாந்தோக்கிய வுபநிடத வத்தியாயம்.	20b
(6) ஷை	34
(7) முண்டகோபநிடத வத்தியாயம்.	37
(8) கைவல்யோபநிடத வத்தியாயம்.	42
(9) கடவல்யுபநிடதத்தில் மயித்ரேயப் பிராஹ்மணத்தினருத்த முரைத்த அத்தியாயம்.	45
(10) ஷை	48
(11) கடவல்யுபநிடத வத்தியாயம்.	50
(12) சுவேதாசுவதர வுபநிடத வத்தியாயம்.	55

எனப் பன்னிரண்டு பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஐந்நூற்று நாற்பத்தேழு பாடல்களாலாகியது. பெருந்திரட்டு, குறுந்திரட்டு முதலிய பழைய நூல்களில் இந்நூலின் செய்யுட்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுமிடத்தெழுதியிருப்பதனாலும், பாயிரம் 5-ஆம் செய்யுளானும் இதற்குப் பெயர் "சொரூபானந்தசித்தி" யென்று தெரிகிறது.

பிரமன் தேவர்களுக்குச் சொன்னமையால் "பிரமகீதை" என்று முதனூல்போல் வழங்கப்படுவதுமுண்டு. நூலாசிரியர் தத்துவதேசிக நாயனாரென்று தெரிகிறது. இந்தப் பிரதியில் இந்நூல்முற்றும் இருக்கிறது.

No. 1507. சொருபானந்தசித்தி.

SORŪPĀNANDAŚITTI.

Pages, 168. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1435.

Complete.

Same work as the above.

Colophon :

ஆகக்கவி—ருாடும.

பனிரண்டாவது [ஷ்ஷெபாவ்ாய](சுவேதாசுவதர வுபநிடத வத்தியாய)

முற்றும் ஆக அத்தியாயம் பன்னிரண்டிற்செய்த சொருபானந்தசித்தி.

பிரமகீதை முற்றும்.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1508. சொருபானந்தர்கலித்துறையந்தாதி.

SORŪPĀNANDARKALITTUṞAIYANDĀDI.

Pages, 19. Lines, 8 on a page.

Begins on fol. 39*a* of the MS. described under No. 1422.

Complete in 100 stanzas written in Kaṭṭaḻaikkalitturai metre.

In this treatise the author Tattuvadēśikanāyanār expresses his respectful devotion towards his Guru Sorūpānandar and his ardent desire to get salvation, getting rid of all worldly attachments.

Beginning :

நான்காவது கலித்துறை யந்தாதி, தத்துவசாரம்.

சொல்லன சொல்லின் பொருளன சொல்லுமனமுஞ் செல்ல
[வி](வி)ல்லன வுள்ளன யாவையு மாவன வென்னுடைய
கல்லன நெஞ்சங் கரைப்பன வன்பொ டுரைப்பவர்க்கு
நல்லன நற்சொரு பானந்தர் பாத நளினங்களே. (க)

* * * *

இருக்கும் படியிது வாகினெம் மானிப் பொய் வாழ்க்கையினை
யொருக்கும் படியொன் றுரைத்தருளா யுதிக்கும் பொழுதுஞ்
சுருக்கும் பொழு திலாச் சுடரே சொருபா னந்தவென்
திருக்கு மறுக்கத் திருமேனி சாத்திய தேசிகனே. (அ)

End :

பரஞ்சுடரே சொருபா னந்த நாதவிப் பார்முதலா
மொரைஞ்சுட னேதின் றுழலாத வண்ணமென் னுள்ளுருகிக்
கரைஞ்சுட னேருறக் கண்ணொளியே யுறத் தண்ணிய வென்
சிரஞ்சுட ரேதருசேவடி சேருன் திருக்கண் வைத்தே. (கக)

வைத்தாய் மலரடிவாங்கிக் கொண்டா யெனையுன்னைத் தந்த
பித்தா பிறவிப் பிணி மருந்தே பெத்த முத்தியிலாச்
சித்தா சிவப்பிர காசா வென் சிந்தையுளே செறிந்துஞ்
சுத்தா தொழுவதல்லாலறியே னென்று சொல்லுவதே.

கலித்துறையந்தாதி முற்றிற்று.

(கு-பு.)—

இது, சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவதேசிகநாயனாரியற்றிய நூல்களுள் ஒன்று. சொரூபானந்தர்மீது இவர்க்குள்ள பக்தி மிகுதியும், உலகப் பற்றுநீங்கி மோட்சமடைய வேண்டுமென்னும் விருப்பமும் இதில் நன்கு விளங்குகின்றன. நூறு கட்டளைக்கலித்துறைகளாலாகியது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1509. சொரூபானந்தர் சின்னப்பூ.

SORŪPĀNANDAR ŚINNAPPŪ.

Pages, 14. Lines, 8 on a page.

Begins on fol. 48*a* of the MS. described under No. 1422.

Complete in 100 stanzas.

A poem by Tattvadēśikanāyanar in praise of his Guru Sorūpānandar who is here represented as a great king. In this class of Prabandams technically called Sinnappū the ten classes of people generally associated with a king as emblems of regal power, viz., his priest, the captains of the army, his ministers, etc., are described in stanzas numbering on the whole 100, 90, 70, 50 or 30.

Beginning :

ஐந்தாவது சின்னப்பூ. தத்துவசரிதை.

ஏழு பிறப்பு மகல வெணிவந்து
சூழுஞ் சொருபானந் தச்சுடரே—வாழுவெலா
மித்தை யெனக்களிப்பார் மென்கமலச் சேவடிக்கே
பித்தை யெனக்களிப்பார் பேர். (க)

* * * *

ஓதி யுணர்வார்கட் கொன்றுந் தெரியாத
சோதி சொருபானந் தச்சுடரே—வாதிகடந்
தந்தமுத்தி மாற்றவ(ல்)லார் தப்புவார் சார்ந்தவரைப்
பெந்தமுத்தி மாற்றவல்லார் பேர். (சு)

End :

பன்னுந் தொறுங் கேட்குந் தொறும்பதைத்தெனது
வன்னெஞ் சுருக்கும்பா மாலையே—முன்னைமறை
வாஞ டரியார் மலரான்மகேசன் ம(ா)[ற்]
ருஞ டரியாரதன் றூர். (கக)

ஆரு வொழு கிவரு மானந்தக் கண்ணீரான்
மாரு மணந் தரும்பா மாலையே—பாறுமுட
லத்துருவ மாயிஞ னன்றென் பவ ரறியுஞ்
சத்துருவ மாயினன் றூர். (ஈ)

Colophon :

சின்னப்பூ முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல், சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவதேசிகநாயனாரியற்றிய நூல்களுள் ஒன்று. இப்பிரபந்தத்தினிலக்கணம்:—* நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய மலை, ஆறு, நாடு, ஊர், தார், மா, களிறு, கொடி முரசம், செங்கோலாகிய பத்து அங்கங்களையுஞ் சிறப்பித்து விரித்து நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுமெண்படக் கூறுவது. இங்கு இந்நூல் சொரூபானந்தர் விஷயமாகவுள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1510. சொரூபானந்தர் தசாங்கம் (பத்து).
SORŪPĀNANDAR DAŚĀNGAM (PATTU).

Pages, 2. Lines, 8 on a page.

Complete.

Begins on fol. 55*a* of the MS. described under No. 1422.

A eulogistic Prabandam on Sorūpānandar written by his disciple Tattuvadēśikanāyanār and explaining ten things with reference to his Guru, such as his name, place of abode, country, the river and the mountain that are in his country, the means of conveyance used by him, his banner, etc.

Beginning:

ஆருவது தசாங்கம். தத்துவபோதம்.

(பேர்)

தாம மணிநிறத்துத் தத்தாய்[த்] தனைத்தருவா
ஞம மறிய நயந்துரையாய்—நாமஞ்
சொருபாவனந்தனென்று தூய்மறைகள் சொல்லும்
பெருமானுக் கிட்டதெல்லாம் பேர்.

* * * *

(யாறு)

செஞ்சொற் பசுங்கிளியே செம்மேனி கொண்டெம்மை
யஞ்சற்க வென்றாண்டா னாறுரையாய்—வஞ்சக்
கருக்கெடுக்கு ஞானக் கனம்பொழியக் கண்ணீர்
பெருக்கெடுக்கும் பேரன்பு பேசு. (௪)

End:

செங்கனிவாய்ப் பைங்கிளியே தேசிகன்ற னாதாஞ்செய்
கொங்கலர்த்தார் யானறியக் கூறிக்கா—ணிங்கெனுட
லாமா லையனுக் ககமாலை மாற்றினர்தம்
பாமாலை யென்றே பகர். (௰)

Colophon:

தசாங்க முற்றிற்று.

---

* "நேருந் தசாங்கத்தை நேரிசை வெண்பாவா, லீரைம் பதுதொண்ணூ றீண்டெழுபா—னேரைம்பான், நேர்ந்துரைக்கிற் சின்னப்பூ" [பாட்டியல் ௨௦].

(கு-பு.)—

இது சொரூபானந்தர்மீது தத்துவதேசிகநாயனரியற்றிய நூல்களுளொன்று. இதில், நாமம், ஊர், நாடு, ஆறு, மலை, வாகனம், கொடி, முரசு, படை, மாலை யாகியபத்தும் சொரூபானந்தர்க்கு இன்னின்னவெனக்கூறுவது. இது தொண்ணூற்று றுவகைப்பிரபந்தங்களில் ஒன்று. பத்து நேரிசை வெண்பாக்களாலாகியது. இந்தப் பிரதியில் இந்நூல்முற்றுமிருக்கிறது.

No. 1511. சொரூபானந்தர்நெஞ்சுவிடுதூது.
SORŪPĀNANDARNEÑJUVIḌUTŪDU.

Pages, 18. Lines, 6-8 on a page.

Begins on fol. 84*a* of the MS, described under No. 325 where it is stated as Neñjuviḍutūdu.

Complete.

A treatise bearing on Advaita Vēdānta in which the author Tattuvadēsikanāyanār is described as having sent his mind as a messenger to his Guru Sorūpānandar.

Beginning:

தந்தைதா யாவானுஞ் சார்கதியிங் காவானு
மந்தமிலா வின்பநமக் காவானு—மெந்தனுயிர்
தானகு வானுஞ் சரணகு வானுமருட்
கோனகு வானுங் குரு.

(நூல்)

படைப்போனுங் காப்போனும் பண்ணியவை முற்றுந்
துடைப்போனுந் தோத்திரஞ்செய் தேத்திக்—கிடைப்பரிய
செய்யசொரு பா னந்தன் சீரரம் போருகத்தா
ளையமறப் புணரு மன்புடையாய்—வெய்ய

End:

விண்ணப்பஞ் செய்து வினையே னடிகூடப்
பண்ணத் திருவுள்ளம் பற்றுவித்தங்—கண்ண
லருண்மாலை வாங்கிக் கொடாயெனைக்காயு
மருண்மாலை வாராமுன் வா.

(அ)ல்லா லயனு வனங்கனு லன்னையாற்
பொல்லா வினையேன் புகுந்ததுய—ரெல்லாஞ்
சொருபா னந்தற்குத் துயரறுத்தாட் கொள்ளும்
பெருமாற்கு நெஞ்சமே பேசு.

Colophon:

நெஞ்சுவிடுதூது முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சுத்தாத்வைதமதத்தைச்சார்ந்தது. தத்துவதேசிகநாயனார் தமது ஆசிரியராகிய சொரூபானந்தசுவாமிகள் விஷயமாகத் தமது மனத்தைத் தூதுபோமாறு அனுப்பியதாக இயற்றியது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. இக்காட்லாக்கின் 325-வது நம்பரில் (நெஞ்சுவிடுதூது) எனப் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது.

No. 1512. சொரூபானந்தர்நெஞ்சுவிடுதூது.
SORŪPĀNANDARNEÑJUVIḌUTŪDU.

Pages, 12. Lines, 9 on a page.

Begins on fol. 112*a* of the MS. described under No. 1422.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதன்கண் இந்நூல் முற்றுமுள்ளது.

No. 1513. சொரூபானந்தர்பிள்ளைத்தமிழ்.
SORŪPĀNANDARPIḶḶAITTAMIḺ.

Pages, 28. Lines, 8 on a page.

Begins on fol. 17*b* of the MS. described under No. 1422.

Complete.

Same work as that described under No. 325 of the D.C.S. MSS., Vol. II.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 325-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளது போன்றதே. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1514. சொரூபானந்தர்வெண்பாவந்தாதி.
SORŪPĀNANDARVEṆBĀVANDĀDI.

Pages, 15. Lines, 8 on a page.

Begins on fol. 31*a* of the MS. described under No. 1422.

Complete in 100 stanzas.

A Prabandam technically called Andādi composed by Tattuvadēśikanāyanār in praise of his Guru Sorūpānandar and bearing on Advaitavēdānta.

Beginning:

போதா லயத்தோனும் புள்ளார்கொடியோனு
மேதாதி யேதந்த மென்றறியார்—நாதா
சொருபா னந்தா கடை யேன்றொண் டெந்துசெய்ய
விருபாதந் தந்தவாறென். (௧)

தந்தா யெனவேத்தி[த்த](ற் ற)ன்னைத் தரவல்ல
சிந்தா மணியென் சிரமிசையே--தந்தபத
நண்ணுங்க ளெல்லீரு மப்பொழுதே மெய்ஞ்ஞானக்
கண்ணுங் களங்கைக் கனி. (௨)

* * * *

காணும் பொருளாகிக் கண்ணாகிக் காண்பவனா
யாணு மலியு மரிவையுமாய்;ர்--தாணுவுமா
யல்லாவா மென்பார்க் கதவதுவாய் நின்றானைச்
சொல்லாவா மவந்தாந் துணிந்து. (௫)

End:

சொல்ல முடியாவாம் வேதந் துணையடிக்கு
நல்ல மிடியாள னாரணனும்--வெல்ல
முடியாப் புலனுடையேன் மூலமா முத்திக்
கடியா னெனதிற்ப தாம். (௧௧)

ஆமே பிரமனுக்கு மாயனுக்கு நாயனார்
தாமே புகுந்தென் றலை(மிசை)யே--யேமுற
வேற்றுதற்கு நோற்றேற் கொழிய வெளிவந்து
போற்றுதற்குச் செம்பொனடிப் போது. (௱)

Colophon:

வெண்பாவந்தாதி முற்றிற்று.

(கு-பு.)—

இது தத்துவதேசிகநாயனாரியற்றிய நூல்களுள் ஒன்று. சொருபானந்தர் மீது பாடப்பெற்றது. வேதாந்த விஷயமானது. அந்தாதித் தொடையாலமைந்த நூறு வெண்பாக்களையுடையது. செய்யுள் நடை சிறந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1515. சொரூபானந்தவுபநிடதம், உரையுடன்.

SORŪPĀNANDAVUPANIḌADAM WITH COMMENTARY.

Pages, 52. Lines, 7 on a page.

Begins on fol. 280*a* of the MS. described under No. 1060.

Complete.

Same text as that described under R. No. 145 (i), Vol. II, Part II, Tamil, together with a commentary. The name of the commentator is not given. The text contains 36 stanzas of which the first three are introductory; and in the last concluding stanza, it is stated that in the intervening 32 stanzas, the substance of 32 Upaniṣads is summarized.

Beginning :

மெய்யுடைய வடியார்மேல் விருப்புடையான்
  கற்பூர விளக்குப் போலென்
பொய்யுடைய விருளக[த்து](ற்று)ம்
  பொருளுடையா னருளுடையான் பொறியைந் தாலு
மெய்யுடைய மனத்தாலு மயக்குடையார் மதங்களைத்தா
  மதங்களாக்குங்
கையுடைய முகமுடையான் கழலிணையைக்
  கருத்தினிடை யிருத்தல் செய்வாம்.

எ-து. சத்தியத்தையுடைய பத்தர்மேல் விருப்பத்தையுடையவன் கற்பூர தீபம்போல [யெ](எ)னது பொய்யாகிய விருள்போலவரும் மயக்கத்தை யக[த்தி](ற்ற)விக்கும் பொருளையுடையவன்(. . . . - . . . . . .) கையுடைத்தாகிய முகத்துடையவன் இரண்டு பாதத்தையு மென்னுடைய கருத்தினிடத்திலிருத் துவாமென்றவாறு (க)

(இ)து விநயக[த்]துதி.

*   *   *   *

ஓதுசுருதிகளுள்கனுபநிடதமெண்ணுன்கினுரைகடேர்ந்து
போதுமொருவேதாந்த சொரு ானந்தப்பெயரைப்புனைந்த[னு](நூலை)
நீதிபெரியோருரைப்பரதனை யனபொன் றில்லாத9[ன](ந)ஞ்சினுவியா
லுதரவுகொடுபிதற்றியெனதறியாமையை வெளியாயாக்கினேனே.

என்பது, சொல்லப்பட்டவேதம்(நா)ன்கிலுண்டான (. . . .) என தறியாமையை வெளிசெய்தேனென்றவாறு.

இவையவையடக்கங்கூறியது.

இவை மூன்றுகவியும் பாயிரம்.

பொன்போலு மிலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்
  புத்திவிசா ரித்தறியும் பொலிவதனு லரவாந்
தன்போ(லு மிலே)யெனவா லகங்கார மதமாத்
  தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினு லுயா
மின்போலுஞ் சலனமன மசையாத[ணி](தி)றுத்தி
  விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்தே
வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்
  லைவத்தவிடத் திருந்து சித்த மகத்துவமுந் தருமே.

எ-து. [யி](இ)ச்சையினது சொரூபமாயிருக்கப்பட்ட பொன்போலும் பிரகாசத்தினையுடைய மனம் சஞ்சல வியாபாரத்தினுல் குரங்கு(போலாம்), கண்ணே செவியாகச்சிலமந்திரங்களை[ய](யும)றியும் பாம்புபோலப்

புத்தியும் விசாரத்தினால் சகலத்தையும் அறியும். (. . . . . . .) சித்த மானது வாசனுகூஷயமாய்ப் புத்திக்குச் சாக்ஷியான சைதன்னியத்தைப் பிர காசம்பண்ணும்.

இதன் கருத்து : ஞானசாதனத்திற்குக் காரண நிலைமை கூறுகின்றது. (க)

End:

எற்றுபிரபஞ்சமதே நித்தியமென்றும் பிரமமென்பதில்லையென்றுந்
தோற்றுமுடரூனுகித் தூங்குளமேவஞ்ஞானத்துக்கமாகுஞ்
சா[த்து](ற்று)பிரபஞ்சமெல்லா மனித்தியமென்றும் பிரமமதுதானேயாகி
வேற்றுடல்வேற்றுடலாகி விரிந்துணரப்பெறு[வ](ம)து வேதாந்தஞானம்.

எ-து. பொருந்திய பிரபஞ்சம் நித்தியம். பிரமம் சத்தியம். சரீரமே தானென்றிருப்பது வஞ்ஞானியினனுபவம் (. . . . .).

ஞானி யஞ்ஞானியினது அனுபவங்கூறியது. (௩௰௨)

[யி](இ)ந்தமுப்பத்[துரெ](திர)ண்டு செய்யுளுமுபநிடதம்.

இருளக[த்துறு](ற்றுநா)ல் வேதத்துப[னி]'[நி)டத
 மெண்ணூன்கு மெங்கோன்சொன்ன
பொருளதனைநெஞ்சகத்தே சவுபாக்கிய
 குருவெனுமப் பொருளினேடு
மருளகலும் படியக[த்தி](ற்றி)த் தமிழ்போலு
 மதனையொரு வழியெண்ணுன்கா
யருளகத்தி லிருந்துரைத்த வதி[ெ]சயமெவ்
 வதி[ெ]சயமற் றறிகிலேனே.

எ-து. மயக்கத்தைநி[வற்](விர்த்)திபண்ணுஞ் சதுர்வேதத்திலுமுண் டான வுப[னி](நி)டத்து முப்பத்[துரெ](திர)ண்டினு முண்டான (. . . .) முப்பத்திரண்டு செய்யுளாக அருளாகிய அகத்திலிருந்து சொன்ன அதி[ெ]சயமமெவ்வதி[ெ]சயமோ தெரியப்படுகிலேனென்றவாறு.

ஆகச்செய்யுள் (௩௰௩).

Colophon:

சொரூபானந்தவுரை முற்றும்.

நிசானந்தானுபூதி ரசாவேசவனந்தசாந்தரசாமிருதானந்த சமுத்திர ஸ்வரூபாகார ஸ்ரீபரமமன்னு[ற்](ர்)தேசிக சு[ப](வ)ாமிகள் பாத பத்மங்களே சதாசிரசாய் வகிக்[கு](கி)றேன் [யி](இ)திற் சமுசயமில்லை.

சதாசிவபி[ற](ர)மமே சத்தியம்.

(கு பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 145 (i) நம்பர் பிரதிபோன்றது. அதில் இல் லாத உரைப் பகுதி இதில் உள்ளது; உரையாசிரியர் பெயர் முதலியன தெரி யவில்லை. முற்றும் இருக்கிறது.

No. 1516. சொரூபானந்தவுபநிடதம், உரையுடன்.
SORŪPĀNANDAVUPANIḌADAM, WITH COMMENTARY.

Pages, 85. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1490.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது; இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. எழுத்துப் பிழைகள் மிகுதியாக உள்ளன.

No. 1517. சொரூபானந்தவுபநிடதம், உரையுடன்.

SORŪPĀNANDAVUPANIḌADAM WITH COMMENTARY.

Pages, 38. Lines, 8 on a page.

Begins on fol. 85*a* of the MS. described under No. 1482.

Complete.

Same work as the above; a brief note of what the reader has gathered from a study of the work is added in the last leaf.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் "தெரியப்படுகிலேன் என்றவாறு" என்று முடிந்தபின்னர், "ரெண்டாவரி யுள்ளடி என்றது. பொருந்தின பிரபஞ்சம் நித்தியம், பிரமம்சத்தியம், சரீரமேதானென்றிருப்பது அக்கியானியினனுபவம். பிரபஞ்சம் அசத்து, சரீரமனித்தியம். சரீராதி பிரபஞ்சமெல்லாம் தடத்தமாக[யி](வி)ருக்கப்பட்ட சிவசாட்சி சைதன்னியமே தானென்றறிவது வேதாந்த ஞானம். ஞானி அக்கியானி அனுபவங்கூறியது. உ"

என்னும் பாகம் அதிகமாகக் காணப்படுகிறது. இந்நூல் இதில் முற்றுமிருக்கிறது. இதன் ஏடுகளின் ஓருபுறம் செல்லரிப்புண்டுள்ளது.

No. 1518. சொரூபானந்தவுபநிடதம், உரையுடன்.

SORŪPĀNANDAVUPANIḌADAM WITH COMMENTARY.

Pages, 81. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1489.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது; இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1519. சொரூபானந்தவுபநிடதம், உரையுடன்.

SORŪPĀNANDAVUPANIḌADAM WITH COMMENTARY.

Pages, 48. Lines, 7–8 on a page

Begins on fol. 154*a* of the MS. described under No. 1061.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதி போன்றது ; இதன்கண் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1520. சொரூபானந்தவுபநிடதம்.

SORŪPĀNANDAVUPANIḌADAM.

Pages, 18. Lines, 7 on a page.

Begins on fol. 51*a* of the MS. described under No. 1060.

Same work as that described under R. No. 145 (*i*) *ante* of Triennial Catalogue, Vol. II, Part II, Tamil.

Complete but without the last concluding stanza.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 145 (i) நம்பர் பிரதி போன்றது ; "இருளகற்று" மென்னும் இறுதிச்செய்யுள் மட்டும் இதிலில்லை.

No. 1521. சொரூபானந்த வுபநிடதம்.

SORŪPĀNANDAVUPANIḌADAM

Substance, palm-leaf. Size, $8\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 60. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது ; இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1522. ஞானக்கும்மி பாட்டு.

ÑANAKKUMMIPĀṬṬU.

Pages, 12. Lines, 6–7 on a page.

Begins on fol. 182*a* of the MS. described under No. 802.

Complete.

A treatise bearing on Advaita Vēdānta written in the form of Kummi songs. The name of the author is not stated.

Beginning:

கும்மியடிப் பெண்ணே கும்மியடி குருபாதங் காணவே கும்மியடி
நம்(மையா)ண்டுகொண்ட சற்குரு நாதனும்வாரு(ரா)ன் கும்மியடி. (க)

* * * *

ஆதியந்தமின்னதென்றுதி வேதன் காண்கிலா[ர்]
னீதியாக நின்றதொன்றை நினைத்துக் கும்மியடியுமடி. (ரு)

End:

என்னகத்து ளெண்[ணே](ணெய்) போல வெ[ய](வ)ங்குமாகி நின்றதோர்
வள்ளல் சங்கரன்றனை வாழ்த்திக்கும்மியடியுமடி. (சுமக)

ஞானக்கும்மி முற்றுமடி நாதாந்தக் கும்மி மு[த்து](ற்று)மடி
மோனக்கும்மி முற்றுமடி மோனந்தக்கும்மி மு[த்து](ற்று)மடி. (சுமஉ)

ஞானக்கும்மி பாட்டு மு[த்து](ற்று)ம்.

Colophon:

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது; கும்மிப்பாடல் என்னும் ஒருவகைப்பாடலாலாகியது. நூலாசிரியர் இன்னாரெனவிளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1523. ஞானச்சோபனம்.

ÑĀNACCŌBANAM.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{3} \times 1\frac{3}{4}$ inches. Pages, 16. Lines, 8—11 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 7*a*. The other work herein is Ahappēysiddarpāḍal 1*a*.

A treatise on Advaita Vēdanta. It criticises and condemns certain systems of thought, such as Jainism, Buddhism, etc. The author is Tiruvēṅgaḍanāthayyar, son of Mādaipperumāḷ, as can be made out from some of the stanzas towards the end. The author has written another work called Meyññānaviḷakkam, the style of which differs much from that of the work described here.

Beginning:

பூவிசைந்த குழல்மடவார் புகழ் சோபனந் தமிழ் பாட(க்)
கோவியர் மோகனரான கோபாலர் பதந்துணையே
சகமொழியைத் தாக்குமிந்தச் சோபனச்செந் தமிழ் பாட(ச்)
செகதலத்தில் மயல் விளக்குஞ் சிலைக்காமன்றுணையாமே.

ஆதிப் பெண்காள் சோபனமே
அற்புதப் பெண்காள் சோபனமே
நீதிப் பெண்காள் சோபனமே
நியமப் பெண்காள் சோபனமே.

* * * *

மாயை யிலந்தக் கரணன் பிறந்தான்
மானுபி மானங்கூடப் பிறந்தான்
நேய புதிதொரு பெண்ணும் பிறந்தா
ணிலையில்லாச் சமுசாரம் வாழவே வந்தாள்
கர்மமாஞ்சில கற்பகம் பூத்தது
காயமாம் பலகாய்களுங் காய்த்தது
தர்மம் பாவ பழங்கள் பழுத்தது
சார்சொர்க்கநரகங்களாச்சுது.

End:

குறியுங்குணமு மொழிந்தேனே
குறையாத வத்துவுமானேனே
போனத்தை மோழை நினேயேனே
பிறந்தவருக்தமும் வேண்டேனே

* * * *

காசாம்புவண்ணருக்கு மங்களமே மங்களமே
ராதைமண வாளருக்கு மங்களமே மங்களமே
யெங்கள் கோபால மாதவர்க்கு மங்களமே

வேதியன் மா(தை)தப் பெருமாள் குமாரன்
வேந்தர்தொழுந்திருவேங்கடநா(தை)தயன்

போதகச் சோபான(ப்) பாடல் படித்தோர்
பேரின்பம் பெற்று(ப்) பொருந்தி வாழ்வோர்.

மாதவர் வாழி கோபாலர் வாழி
மண்ணின்று வாழி மழைமுகில் வாழி
போதகச் சோபான(ப்) பாடல் படித்தோர்
பேரின்பம் பெற்றுப் பொருந்திவாழ்வோர்.

Colophon:

ஞானச் சோபனம் எழுதி முடிந்தது ; முற்றும்.

(கு-பு.)—
இது அத்வைதவேதாந்தவிஷயமானது. மாதைப் பெருமாளையரின் குமாரரான திருவேங்கட நாதைய ரென்பவரால் இயற்றப்பட்டதென்று இறுதியில் உள்ள சில கண்ணிகள் தெரிவிக்கின்றன ; அவர் இயற்றிய மெய்ஞ்ஞான விளக்கத்திற்கும் இதற்கும் செய்யுள் நடையில் மிக்க வேறுபாடுண்டு ; அதிற் கண்டிக்கப்பட்டிருத்தல்போல இதிலும் பலமதங்கள் கண்டிக்கப்பட்டுள்ளன.

No. 1524. ஞானப்புலம்பல்.
ÑĀNAPPULAMBAL.

Pages, 3. Lines, 8–9 on a page.
Begins on fol. 15*a*, of the MS. described under No. 1061.
Complete.

A treatise setting forth in 28 stanzas that knowledge or intelligence is Brahmam and that every thing else is unreal and only phenominal. The name of the author is not given.

Beginning :

ஆலையந்தேடி யலைந்து திரிந்ததும் போது
மாகமே கோயி லறிவே சிவலிங்க நெஞ்சே (க)

சாலோகம் வேண்டிச் சரியைகள் செய்ததும்போதுந்
தன்னையறிந்தாற் றவமேன் விரதமேனெஞ்சே (உ)

* * * *

ஆசானைத் தேடி யலைந்து திரிந்ததும் போத
மறிவே குருவென் றறிவா லறிந்துகொ ணெஞ்சே (௩)

End :

பதிபசுபாச விசாரணை பண்ணுவதும் போதும்
பதியைவிடப் பசு பாசங்க ளெங்ஙன நெஞ்சே
(. . . . .) (கக)

ஊனென் றுடலை யொடுக்கி மதிரிந்ததும் போது
முள்ளமொடுங்க வுடலுமொடுங்குமென்னெஞ்சே. (உ௰அ)

ஞானப்புலம்பல் முற்றும்.

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது; அறிவே பிரமமென்றும் மற்றவையெல்லாம் பொய்யென்றும் கூறுவது. 28 பாடல்களாலாயது. நூலாசிரியர்இன்னாரென விளங்கவில்லை.

No. 1525. ஞானவாசிட்டத்திரட்டு.
ÑĀNAVĀŚIṬṬATTIRAṬṬU.

Pages, 86. Lines, 7–9 on a page.

Begins on fol. 81*a* of the MS. described under No. 271.

Complete.

Same work as that described under No. 293(*m*) of the Triennial Catalogue of MSS., Vol. II., Part II.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 293 (*m*) நம்பர் பிரதிபோன்றது. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1526. ஞானவாசிட்டத்திரட்டு.
ÑĀNAVĀŚIṬṬATTIRAṬṬU.

Pages, 280. Lines, 6 on a page.

Begins on fol. 77*a* of the MS. described under No. 252.

Contains 647 stanzas.

This work is different from those described under R. Nos. 143 and 293 (*m*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2, Tamil though akin to them in character.

Beginning :

பொன்னுல கத்தினிற் புவியில் வானத்தி
வென்னுடை யுட்புற னிலங்கு கின்றது
மன்னுயர் சோதியே வடிவ தியாதுமாய்த்
தன்னுவ தெப்பொரு டொழு திறைஞ்சுவாம்.

திகழு [ணா](நா)ன் முகன் முதற் றேவர் முனிவருஞ்
சகலவே தங்களுஞ் சாத்தி ரங்களும்
புகலுஞா னத்தினாற் புராண மானது
திகரில்வா சிட்டமா நிபுண ஞான நூல்.

* * * *

அவிவேகிக்குப் பாரஞ்சாத்திரமெய்ய[ழி](றி)விலோர்க் கங்கம்பாரம்
நவில்சாந்தியில்லாதோர்க்குளம்பாரமவாவினர்க்குஞானம்பாரஞ்
செவிதான வுருவானாள் மனம்புத்தி யாங்காரஞ் செயல் சொல்லெல்லாங்
குவிபார மாஞ்சுமடர் சுமைபோலப் புந்திநலங் கூடாதார்க்கே (கஉ)

End :

இங்குப் பன்னும் பலவாலென் னியம்பு சுருக்க மிதுகேளாய்
சங்கற் பந்தான் பவபந்தஞ் சங்கற்பந் தீர்ந்தது முத்தி
பங்கற் றெல்லை யழிவலைவு பவமற் றாலு மறிவுருவே
துங்கச் சகங்க ளென நோக்கிச் சுகமெப்படி யப்படி நிற்பாய்.

* * * *

என்னாவசிட்ட முனிராமற் கிசைத்தா னென்று வான்மீகி
சொன்னா னூறா யிரங்கிரந்தந் தொகையைப் பரத்து வாசனுக்குப்
பின்னா ளதிலா றாயிரத்தைப் பிரித்தா னிவ்வா றுலகுய்யப்
பன்னா மறைதேர் கான்மீர பண்டி தப்பேர் பரமகுரு.

* * * *

மலரோன்வாழி நாமாது வாழி வசிட்ட முனிவாழி
யுலகா ளிராமன் மிகவாழி யுயர்வான் மீகி முனிவாழி
நலமார் பாரத் துவச முனி [ணா](நா)ளும்வாழி வாசிட்டம்
பலமா வாழி கான்மீர பண்டி தப்பேர் முனி வாழி[வாழி].

யோக கதை முற்றும்.

ஆக, கதை ௩௰௯-க்கு விருத்தம் ௬௱௪௰௭.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 143, 293 (m) நம்பர்ப் பிரதிகளினும் வேறானது. இந்தப் பிரதியில் 647 செய்யுட்களே உள்ளன.

No. 1527. ஞானவாசிட்டத்திரட்டு. ÑĀNAVĀSIṬṬATTIRAṬṬU.

Substance, palm-leaf. **Size**, 11 × $1\frac{5}{8}$ inches. **Pages**, 174. **Lines**, 9 on a page. **Character**, Tamil. **Condition**, fair. **Appearance**, old.

Contains 477 stanzas.

Similar to the work described above

The last three stanzas are wanting.

Colophon:

சாளயிள. சற்குருவே நமஃ

சித்திரபானுஸ்ரீ தை[யி]மீ கடுவ [பவற்னம்] (பௌர்ண)மாவாசை பூச நட்சத்திரம் நா[யத்து](யிற்றுக்)கிழமை ஞானவா[தி](சி)ட்ட[ரஞ்](ச்)சுருக்கம் எழுதிமுகிந்[து](த)து முற்றும். அருமை வெட்சுமண [ஞு]நாயக்க[ற்](ர்) வாசிக்கின்றது ஸதாநித்தகாலமு மறக்காமல் கூமய்யை (?) மணியக[ற](ார) ராமசுவாமி பிள்ளை பே[ற](ர)ன் அடியேன் மருத[ஞு](நா)யகம் பிள்ளை[கய்](கை)யெழுத்து.

(த-பு.)—

இது முன்பிரதியைப் போன்றது. நூற்பயன் முதலியனவுணர்த்தும் இறுதிச்செய்யுண் மூன் றும் இதிவில்லை. இதிலுள்ள செய்யுட்களின் தொகை 477 எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முன்பிரதியில் 647-எனக்காணப்படுகிறது.

No. 1528. ஞானவாசிட்டத்திரட்டு. ÑĀNAVĀSIṬṬATTIRAṬṬU.

Pages, 73. **Lines**, 7 on a page.

Begins on fol. 186*a* of the MS. described under No. 1231.

Contains 229 stanzas

Similar to the work described above: neither the name of the compiler nor the date of compilation is given. The heading Sukarvāsiṭṭam is given in the beginning of the work.

Beginning:

சுகர்வாசிட்டம்.

திகழு[ஞு](நா)ன்முகன் முதற் றேவர் மூவருஞ்
சகலவே தங்களுஞ் சாத்தி ரங்களும்
புகலுஞா னத்திறற் புரண மானது
நிகரில்வா சிட்டமா திபுண ஞான நூல்

அவிவேகிக்குப் பாரஞ்சாத்திரமெய் யறிவிலோர்க் கங்கம்பார தவில்சாந்தியில்லாதோர்க்குளம்டார மவாவினர்க்கு ஞானம்பாரஞ்

செவிதான வுருவானுண் மனம்புந்தி யகங்காரஞ் செயல்கனெல்லாங்
குவிபாரமாஞ் சுமடர்சுமைபோலப் புந்திநலங்கூடாதார்க்கே. (௨)

விடலரு ட சைவுதோன்றிவிடையத்தின் மீண்ட நெஞ்சன்
வடவரை யுறையுந்தாதை மருங்குற வெய்தியிந்த
விடருறு மால யவந் தெங்ஙன மிறப்ப தெங்ஙன்
ஞெடர்பிலா ருடையதெம்மட் டென்றிதுதோன் றிற்றென்றான் (௩)

(. . . . .)

சுத்தவாதனை[து](தொ)டரிலதனுன் மெல்லத்
தூயபரபதம் பெறுவை சுத்தமல்லாப்
பெத்தவாதனை[து](தொ)டரிற் றுன்பமாக்கும்
பெரிதுவருந்தியு மிதனைப்போக்கவேண்டும்
வைத்தசுப மசுபமெனும் வழியிரண்டால்
வாதனையா நதிபெருகும் வருத்தத்தாலே
மெத்தமுயன் றசுபவா தனையைத் தள்ளி
மிக்க சுப வாதனையின் மேவிநிற்பாய். (௪)

End:

சோகநன்மை தீமைகளைச் சூழ்வுற்றிருந்துஞ் சமமாகிப்
பாகமின்றிக் கற்[ப]போலப் படிந்துநிற்பாய் பலபிறவி
மோகமகலு மவ்வளவு முயலுந்தனது முயற்சியினு
ஞகமனையாய் சுகதுக்க நடுவுள்ளதுநீ நாடலையாய். (௨௨௫)

ஊறுவனர்த்தந் தருமிச்சையொருகால் வரினுமப்போதே
யாறுவிடயத்துணர் வின்மை யான வதனு லறுத்திடுவாய்
கூறுமிச்சை பலவடிவாய்க் கோத்ததெனினு மிவ்வுடலின்
மாறுதானவாதனையை மாற்றுதிராது வுணர்வின்மை (௨௨௪)

(. . . .)

இங்குப்பன்னும் பலவாலெனியம்பு சுருக்கமிது கேளாய்
சங்கற்பந்தான் பவபந்தஞ் சங்கற்பந் தீர்ந் ததுமுத்தி
பங்கற்றெல்லை யழியலைவு பவமற் றுறுமறிவுருவே
துங்கச்சங்க மெனநோக்கிச் சுகமெப் படியப் படி நிற்பாய் (௨௨௧)

முற்றிற்று.

(கு-பு.)—

இது முன்பிரதியினும் வேறுனது. ஞானவாசிட்டத்தில் உள்ள சில செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதைத் தொகுத்தவர் பெயர், காலம் முதலியன விளங்கவில்லை. இந்நூலின் தலைப்பில் 'சுகர் வாசிட்டம்' என்று இதற்குப் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. இதில் இருநூற்றிருபத்தொன்பது செய்யுட்களே உள்ளன.

No 1529. ஞானவாசிட்டம்.
ÑĀNAVĀSIṬṬAM.

Substance, palm-leaf. Size, $13\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 402. Lines, 10 on a page Character, Tamil Condition, good. Appearance, old.

Complete.

Same work as those described under R. Nos. 138 and 260 of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

Colophon:

யோகசத்தபூமி[வு](யு)பாக்கியான முற்றும். ஆக, கதை ௪௩-க்கு, காப்புட் படத் திருவிருத்தம் ௨௧௫௰௪. ஏவிளம்பி௵ [அற்](ஐப்)பசி௴ ௨௧௨ சனிவாரம் [ஸ](ச)ட்டி திதி, உத்திராட நட்சத்திரம், இப்போர்க்கொ[ந்](த்)த சுபதினத்தில் திருவல்லிக்கேணியிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ வெங்கிட்டி முதலியாருக்கு வாத்தியார் வெங்கடாசலம் எழுதின வாசிட்டம்.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 138, 260 ஆம் நம்பர் ப்பிரதிகளைப் போன்றதே. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1530. ஞானவாசிட்டம்.
ÑĀNAVĀSIṬṬAM.

Pages, 48. Lines, 6 on a page.

Begins on fol. 25*a* of the MS. described under No. 1212.

Incomplete.

A Tamil rendering in prose of the Sanskrit work Jñānavāsiṣṭham described under No. 1982 of the D.C.S. MSS., Vol. IV, Part I, and ascribed to Kāśmīrapaṇḍita. It deals with the Advaitavēdānta. The Tamil translator's name is not given.

Beginning:

ஞானவாசிட்டமுரை.

பிரமமே சத்தியம்; சொர்க்கத்திலேயும் பூமியிலேயும் உள்ளும்புறம்பும் பார்க்கிறதுமாய்ப் பார்க்கப்பட்டதுமாயெல்லாந்தானயிருக்கின்ற ஆன்மாவுக்கு நமஸ்காரம்.

வாசிட்டகதையாவதென்னவென்றால்: வைராக்கிய முமுட்சுதத்துவம் உற்பத்தி திதி உபசமனம் நிர்வாணமென்று ஆறுபிரகரணமாயிருக்கும். இதில்வைராக்கியப் பிரகரணம் முதல் ஆரம்பித்துச் சொல்லுகிற பிரகாரம்:—

ஒருநாள் போதாநிதியாயிருக்கிற பரத்துவாசர் ஏகாந்தமாக வால்மீகிரிஷியைக்கண்டு பிரீதியோடே நம[ஷ்](ஸ்)காரம் பூசை பண்ணிக் கைகூப்பிக்கொண்டு கேட்கிறார்:—

சுவாமீ! உம்முடைய கடாட்சத்தினலே சகலவேத சாத்திரரகசியமும் அறிந்தவனனேன். லோக சனங்கள் சன்ம சம்சாரபாவத்திலே விடு

பட்டு அவ்வியானந்த பதத்தை அடைகிற மார்க்கம் எனக்குச் சொல்லவேணு மென்று விண்ணப்பஞ்செய்த பாரத்துவாசரை(ப்) பா(ர்)த்து வால்மீகர் சொல்லுகிறார் :—

நீ[ய்] நன்றாய்க் கேட்டாய் ; நீயே கேட்க யோக்கியத்தன். ஆதியந்தமான மொக்ஷமனுராமா?பால மார்க்கத்தைச் சொல்லுகிறோம் :—

End :

சகல காரணங்களுக்குங் காரணமான ஆன்மா (. . . . .) சேஷ்டிக்கும் . அதனுடைய சொரூபம் எப்படிக்கொத்ததென்றாற்கேளும் :—

தன்னுடைய சொரூபம் ஒருக்கால் கண்டபதார்த்தமாய்(ப்) பார்க்காமலிருக்(கிற)தே ஆன்மசொரூபம் ; அந்தச் சொரூபத்திலே இருக்கிற போது வாயு முதலான வஸ்துக்கள்மேலேபட்டாலும் தெரியாமலிருக்கிறதே அதே ஆத்ம சொரூபம்.

சொப்பனமும் சாக்கிரமும் வேறே பிரமுகமில்லாமலிருக்கிறதே ஆத்ம சொரூபம் ;

அறிவுஅறிகிறது அறியப்பட்டது எங்கேபிறந்து எங்கேயிருக்கிறதோ அது ஆன்ம சொரூபம்.

பூரணமாய் செட்டு . . . .

* * * * *

(கு-பு.)—

இது அத்வைத சாஸ்திரங்களுள் ஒன்று. இதை வசன நடையில் எழுதியவர் பெயர்முதலியன தெரியவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமில்லை.

No. 1531. ஞானவிநோதன்கலம்பகம். ÑĀNAVINŌDANKALAMBAKAM.

Pages, 41. Lines, 8-9 on a page.
Begins on fol. 85a of the MS. described under No. 1061.
Complete.

A kind of Prabandam called Kalambakam composed by Tattuvarāyar in praise of his Guru Sorūpānandar and bearing on Advaita Vēdānta as taught by the latter to the former.

Beginning :

ஞானவிநோதன் கலம்பகம், தத்துவவித்தை.

காப்பு.

நேரிசை வெண்பா.

அடியேனை யாள வருண் மேனி சாத்திப்
படிமீதின் வந்த பரனே—கொடியேனென்
றெண்ணு திமைப்பளவி னிங்ஙனே வீடளித்த
கண்ணு கடைபோகக் கா.

நூல்.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

ஒன்றாயும் பலவாயு முருவாயு மருவாயு
மன்றாயு நின்றாலு மறிவேயுன் னருளுருவம் (க)
மணங்கமழுஞ் செழுங்கமல மலரடிக்கு வடிவுணர்ந்தா
ருணர்ந்ததுவே வடிவாகு முணர்வேதின் னொளியுருவம். (உ)

தன்னியல்பு வானவருந் தாமறியா ராயினுமென்
சென்னியினின் றொழியாத [த்]திருவடித்தா மரை மலரே. (௮)

End :

விருத்தம்.

வையமினி யெனைப்புகழ்ந்தென் மற்றெனையிங்
கிகழ்ந்தாலென் மாறாதென் றுஞ்
செய்யவள்வந் தென்னுடனே செறிந்திருந்தென்
பி[றி](ரி)ந்திருந்தென் சிதையாதென்று
ஐயமறவிருந்தெனும் பழிந்தாலென்
னாக்க மழிவதனாலுண்டோ
துய்யசொரு பானந்தன் றுணையடியென்
றலையாரச் சூடி னேற்கே.

வெண்பா.

சூடினேன் பாதஞ் சொருபானந்தச் சுடரைப்
பாடினேன் பண்டை யடியாரிற்—கூடினேன்
கண்டேன் களிகூரக் காயம் படைத்ததனா
லுண்டே[ா]ன் பெருதபய னென்று. (௧௧)

Colophon:

ஆக கவி ௱௰௬. ஞானவிநோதன் கலம்பகம் முற்றும்.

(கு-பு.)—

இது, சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவராய ரியற்றிய நூல்களுளொன்று; வேதாந்தவிஷயமானது. சொற்செறிவும் பொருட்பொலிவும் அமையப்பெற்றது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1532. ஞானவினோதன்கலம்பகம்.
ÑĀNAVINŌDANKALAMBAKAM.

Pages, 37. Lines, 7–8 on a page.

Begins on fol. 49*b* of the MS. described under No. 325.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1533. ஞானவினோதன்கலம்பகம்.
ÑĀNAVINŌDANKALAMBAKAM.

Pages, 36. Lines, 8 on a page.

Begins on fol. 408*a* of the MS. described under No. 1061.

Complete.

Same work as the above.

(ஐ-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1534. ஞானவினோதன்கலம்பகம்.
ÑĀNAVINŌDANKALAMBAKAM.

Pages, 24. Lines, 8 on a page.

Begins on fol. 74*a* of the MS. described under No. 1422.

Complete.

Same work as the above.

(த-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியின்கண் இந்நூல் முற்றுமுளது.

No. 1535. ஞானவுலா.
ÑĀNAVULĀ.

Pages, 16. Lines, 9 on a page.

Begins on fol. 49*a*. of the MS. described under No. 1214.

Complete.

A treatise of the Ulā class of Prabandam described under R. No. 21 of the Triennial Catalogue of MSS. and bearing on Advaita Vēdānta. From the last stanza it is inferred that this work must be the production of one Śaṅkarācārya. It is different from the Ñānavulā of Tattuvadēśikanāyanār.

Beginning:

ஞானவுலா.

சீரான காசிச் சிதம்பரத்தி லேகுடியாய்ப்
பேரான நெஞ்சமே பேசக்கே—ளாராய்ந்
துன்னை யுணர்ந்த படியுவ[கத்தி](கி)ல் ஞானவுலாத்
தன்னை விரித்தறிவாற் றூன்பாடப்—பின்னை
வஞ்சப் பிறவியிலே வாராம லெ[ன்னுழு](ந்நாளு)ந்
தஞ்சப் பரமதைநீ சார்ந்திடுவாய்—நெஞ்சேகேள்.

End:

கொண்ட

சங்கரா சாரி தமிழா லுரைத்த வுலா
விங்காருங் ௫[த்துயி](ற்றி)யம்பினோர்—கங்காளர்
பாதம் பெறுவர் படியி லுலகா[ழ்](ள்)வர்
வேதம் பெறுவர் மிகுஞான—மோது
குருவா யனைவோர்க்குங் குணமுடைய ராகித்
தருவா யிருப்பரெனச் சா[த்து](ற்று).

Colophon:

காரணுசாரியார் பாதமுன்னிற்கவேணும்.
ஞானவுலாமுற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. இந்நூலின் இறுதியில், "சங்காராசாரி தமிழாலுரைத்த வுலா" என்றிருப்பதனல், சங்கராசாரியாரென்னும் பெயரையுடைய ஒருவரால் இயற்றப்பட்டதெனத் தோற்றுகிறது. எழுத்துப் பிழைகள் மிக. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. தத்துவ தேசிக நாயனரியற்றிய ஞானவுலாவினும் இதுவேருனது.

No. 1536. ஞானவுலா.
ÑĀNAVULĀ.

Pages, 11. Lines, 5 on a page.

Begins on fol. 41*a* of the MS. described under No. 1036.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்தவுலா முற்றுப் பெறவில்லை.

No. 1537. ஞானவுலா.
ÑĀNAVULĀ.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Pages, 10. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, new.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1538. ஞானவுலா.
ÑĀNAVULĀ.

Pages, 42. Lines, 8 on a page.

Begins on fol. 103*a* of the MS. described under No. 325.

Complete.

Similar to the above. It is composed by Tattuvadēśikanāyanār in praise of Sorūpānandar.

Beginning:

பூப்போது மேனிப் புவனம் பதினலுங்
காப்போனு மெல்லாங் கரப்போனுங்—கோப்போனுந்

தன்கமல பாதங்க டேடித் தளர் [பு](வு)றவிங்
கென்கமல மார விசைந்தருளி—நன்கமல
வாக்கிறந்து துய்ய மனனிறந்து மற்றனைத்து
நோக்கிறந்து நோக்கரிய நுண்பொருடான்—போக்கிறந்தென்
கையகத்தி னுமலகம் போலெனக்குக் காட்சிதர
வையகத்தின் மானிடனுய் வந்துதித்த—துய்ய
பெருமா னுலகிற் பிறந்திறக்க கில்லா
வொருமா முதலா மொருவன்—பெருமாலால்.

End :

தேவே

சொருபானந் தச்சுடரே தூயவனே வெய்ய
வருபாசந் தீர்க்கு மருந்தே—குருபரனே
தாதாவே சங்கரனே மாலே சராசரத்திற்
காதாரமே யறிவே யற்புதனே—நாதனே
யென்று பலபலதா னேத்தினு ளிப்பரிசே
துன்றுவளை கலைநாண் சோர்[பெ](வ)ய்தி—நின்று
பலதையலார்தம் பரிசழிய விந்த
வுலகுய்ய வந்தா னுலா.

நேரிசை வெண்பா.

பழுதிலா வன்பர் பணிந்தெழுந் தார்த்தாட
வெழுதிடா மாமறை நின்றேத்தத்—தொழுதிறைஞ்சுந்
தொண்டருளன்புகுந்து சோராம வாருயிரை
யுண்டருளப் போநதா னுலா.

நாமாது பாமாலே சாத்தினு ணன்கமலே
யாமாது பூமாரி யாக்கினுண்—மாமலர்த்தாள்
பூண்டாள் குலநிலமான் போக்கு நாள் வந்தெம்மை
யாண்டா னுலாப்போந்த வன்று.

Colophon :

உலா முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சொருபானந்தர் விஷயமாகத் தத்துவதேசிக நாயனுரியற்றிய பிரபந்தங்களுள் ஒன்று; வேதாந்த விஷயமானது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1539. ஞானவுலா.
ÑĀNAVULĀ.

Pages, 26. Lines, 9 on a page.

Begins on fol. 86*a* of the MS. described under No. 1422.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

No. 1540. தசகாரியமகாவாக்கியம். DAŚAKĀRIYAMAHĀVĀKKIYAM.

Pages, 20. Lines, 8 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 1061.

Complete in 51 stanzas.

A treatise explaining the four Mahāvākyas recognized in the Advaita Vēdānta. The author is Daivanāyakasvāmigaḷ, disciple of Vināyākabhārati.

Beginning :

உலகமுதற்பொருளை யும்பர்க்குணர் வரிதாம்பொருளை
யோதிய வேதாகமத்தி னுச்சியினுட்பொருளை(ப்)
பலகலையின் பொருண்முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற்றிய பெரியோர் பரவிய வான்பொருளை
யலைதிவலை நுரைகடலி னுதித்தொடுங்குமாபோ
லகிலாண்ட முதித்தொடுங்குமதன் மூலப் பொருளை
யிலகியசற் குருவாகி யாளுகும் பொருளை
யெங்குமாம் பரம்பொருளை யானும்வணங் குவனே. (க)

*   *   *   *

முன்புசெய்த தவப்பயனுன் மூதறிவின் பயனுன்
முன்னுரைத்த பன்னூலின் முறைதெரிந்த பயனு
லன்புசெய்து சற்குருவி னருள்படைத்த பயனு
லடைந்தவர்செய் தொழில்காட்டு மறிவிவியே போலத்
தன்புதல்வர்க் கிரங்கியதா யெனவுலகோர்க் கெல்லாஞ்
சங்கரசற் குருவருள்வே தாந்தநன் னூற் பொருளை
வன்புகொடு தமிழ்போலுந் தமியேன்புன் கவியால்
வகுத்துரைப்பே னெனத்துணிந்த வாய்மத(ர்)ப்பு மிதுவே. (உ)

*   *   *   *

இப்படியே சாதனமு மன்பும் வணககமு
ஞானவியல்பும் பூண்டிங்
கெப்படியா கிலும்பிறவா திறவா முத்தி
யெய்துவதற் கிச்சித்தார்க் கியல்பதாகச்
செப்பவல்ல மாவாக்கியத் திறமிதனை
யுலகோர்க் காய்ச் செப்பினேமென்
றப்படியோர் சீடனுக்குச் சங்கரா சாரிய
ரன்றறைந்த தாமால். (ரு)

அத்தகைமை பெற்ற மகா வாக்கியந்தா
னேதெனின் வேதாந்தமாகிச்
சுத்தபரி பூரணமுந் தோற்று சராசர நிலையுந்
துணிந்தோர்க் கெல்லாம்
பெத்தமது நீங்குகையும் பெறும் பேறு
முரைக்கு மிரா சியப்பேறுகு
மூத்தாரதற் குண்மையு மீரைந்துளதென்
றுரைப்பரதை மொழியுங்காலே. (சு)

இதுபாயிரம்.

வாக்கியவுண்மைத் தொகை.

பழமறையினந்த மகாவாக்கியங்களுன்க தனுற்பத்தி பேதங்
குலைவுதருமகிலமையதன்பிரகாசமஞ்ஞானக் குடும்ப நீக்கந்
தலையுமதற்கவதியதனிண்ணயம்பெற்றோர் கதைசாதகர்தியானம்
பிழையிலதனுரையிவையீரைந்துமுண்மையிதனடைவே பேசலுற்றாம்.

End :

அப்படியா யினுமனல்போ லேதேனு மருந்துவ
  ரென் றறைதல் வேண்டாந்
தப்பறவே யஞ்ஞானி போற் பொசிப்ப
  னென வுரைப்பர் தகைமைத் தாலே
யொப்புரைத்த தல்லாதிங் குலகிகழப் பொசியான்
  மற்றுண்டா னேனு
மெய்ப்பரிசை யுணர்ந்தாரை யிகழ்ந்தார்க்கு
  நரகமென விளம்புவாரே. (௫௰)

அற்றைதொறு மாயிரமா யிரம் பிழைகள்
  செய்தாலு மடியேன் றன்பாற்
பெற்றதிரு வ(ரு)ட் கடலிற் குளிப்பாட்டித்
  தாண்மலரும் பேறுய்ச் சூட்டிச்
சொற்றவெலா ந்தோத்திரமாய்ப் புனைந்தருளி
  யெனைவளர்க்குந் தொட்டிலாகி
யுற்றகுரு ராயனெங்கள் விநாயகபா
  ரதிதமியே னுள்ளத் தானே. (௫௰௧)

Colophon :

மகாவாக்கியத் தெசகாரியமுற்றும்.

பாசபந்தத்தினாலே சீவனும் பாசம்போனா
லீசனா முயிரே யாகு மியைந்திடுங் கன்மத் தாலே
நாசமேல் வினைக ளெல்லா நாதனா மலத்தி னாலே
தேசுதீர் பசுவாம் போனாற் சிவனுமாஞ் சீவன் றானே.

பாசபேதத்தே சீவா பாசமுற்றேசதாசிவா வேதமுடிவு மீதென்றறிக.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்தவிஷயமானது; மகாவாக்கியங்கள் நான்கனுடைய காரியங்களாகிய உற்பத்தி, பேதம், மகிமை, பிரகாசம், அஞ்ஞானக்குடும்ப நீக்கம், அளவு, நிண்ணயம், பெற்றோர்கதை, சாதகர்தியானம், உரை ஆகிய பத்தையும் நன்கு விளக்குவது. பாயிர முட்படச்செய்யுட்களின் றொகை-௫௧. இந்தப் பிரதியில் இது முற்றும். இருக்கின்றது. நூலாசிரியர் விநாயகபாரதி யென்பவரது மாணாக்கராகிய தெய்வநாயக சுவாமிகள்.

No. 1541. தசகாரிய மகாவாக்கிய மூலமுமுரையும்.

DAŚAKĀRIYAMAHĀVĀKKIYAM WITH COMMENTARY.

Pages, 250. Lines, 8-11 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 1426.

Complete.

Same work as the above and with the addition of a commentary by a disciple of Aruṇāçaladēśikar of Cidambaram. Both the text and the commentary will be of use in clearing many points of doubt on Advaita Vēdānta. The commentator states that the text was a Tamil adaptation of the Sanskrit work of Śaṅkarācārya.

Beginning:

பருதிமதி வெளிவளிதீ நீர்பா ராவி
பதுமனரி யரனுமையைங் கரன் விசாகன்
பொருதுகட லுலகெலவயு மாகி யாகாப்
பூரணமே வைய முயப் பொருவில் லாத
கருணைவடிவாகி யுண்மை யெளிகிற் றோன்றக்
கருதருமா வாக்கியநூற் பயனுரைத்த
பொருவி றில்லை வளரருண சலமெய்ஞ் ஞானப்
போதகன் (செந்) தாட்கமலம் போற்றிசெய்வாம்.

அவதாரிகை :—

சீவர்கள் அநாதியஞ்ஞான வந்தகார இரவினில் நித்திரை செய்துகொண் டிருப்பதால், எப்பொதும் சம்சாரமாகிய துர்ச்சொப்பனங்கண்டு, தாபத்திரய (த்)துன்பமுற்றிருப்பதையும் அவர்களுக்கு (. . . . . . , ...) சாத்திரமாகின்ற சூரியவுதையத்தால் அவர்கள் அத்துன்பத்தை நீங்கி முத்தியின்பமடையும் பொருட்டுப் பூ[று](ரு)வத்தில் சங்கராசாரிய சுவாமிகள் ஆரிய பாஷையிற்கூறிய மகா வாக்கியத்தை (. . . . .) பேரருளால் திராவிட பாஷையில் விருத்தப்பாவாக மொழி பெயர்க்கத் தொடங்கிய இந்நூலாசிரியர் (இந்நூல்) தேகமனமத வாதிகளின் விக்கினமின்றி இனிதின் நிறைவேறவும் இந்நூல்படிப்பவர், கேட்பவர்க்குத் தேக விக்கினமின்றியேகாக்கிரசித்தமுண்டாயா[ற](ன்) மக தியானத்தால் ஆனந்த முண்டாகவும் இந்நூல் பாரம்பரையாய் விளங்கவுமிதனந்தரங்கமான சத்திய [க்கி](ஞா)ன வனந்தானந்தவஸ்துவை நித்தியமாயுஞ் சர்வவியாபகமாயும் சர்வகாரணமாயும் சர்வாத்மகமாயுமிருக்கின்ற சொரூபமாயு முபாசிக்கின் றனர்:—

உலகமுதற் பொருளையும்பர்க்குணர்வரிதாம் பொருளை
யோதிய வேதாகமத்தினுச்சியினுட் பொருளை
(. . . . .)
யிலகிய சற்குருவாகியானுகும் பொருளை
யெங்குமாம்பரம்பொருளை யானும் வணங்குவனே (க)

இதனது பதப்பொருள் :—உலகமுதற் பொருளை—சகத்தின் முதன்மையான வத்துவை, உம்பர்க்கு—தேவர்களுக்கு, உணர்வரிதாம் பொருளை—

அறிவதற்கரிதாகிய வஸ்துவை, ஓதிய—புருஷார்த்தத்தைச் சொல்லாநின்ற வேதாகமத்தின்—இருக்குமுதலிய[ன] (நா)ன்கு வேதங்கள் காமிக முதலிய விருபத்தெட்டுச் சிவாகமங்களாகிய விவைகளினுடைய (. . . . . .) யாமும் வணங்குதும்—மனவாக்குக் காயத்தாற் பணிகின்றோமென்றவாறு ஈ. ஈற்றசை.

பதசாரம் ;—பிரளயத்திற் பிரமாதி தேவதைகள் நசித்து நசியாத சத்த மாத்திரமாயுமவர்களாலுபாசிக்கப்பட்டதாயுமவர்களஞ்சி நடககுமாக்கினை யுள்ளதாயுமிருக்கின்ற சொரூபமென்பார் 'உலகமுதற்பொரு' ளெனவும் (க).

(. . . . .) அவ்[வைக்கி](வஞ்ஞா)னனுபவத்தால் தத்போத மொழிக்கின்றோமென்பார் யாமும் வணங்குதுமெனவும் கூறினர். (க௦).

இதனது தாத்பரியம் :—தத்துவமசி வாக்கியத்தினலகண்டமாயும் அத்துவிதமாயும் பரிச்சின்னமாயு(ம்) விளங்குகின்ற சொரூபத்தை இறைஞ்சியதாம்.

End:

அ-கை. இந்நூலாசிரியர் தமது குருவைத் துதி செய்தல் :—

"அற்றைதொறும் (. . . .) விநாயகபாரதி தமியேனுள்ளத்தானே."

இ-ள். அற்றைதொறும்—நாடோறும் (. . . . .) விநாயகபாரதி யென்னும் நாமதேயத்தையுடைய, எங்கள் குருராயன்—எங்கள் தேசிகராயன், தமியேனுள்ளத்தான்—நாயேனிதயத்தில் வசிக்கின்றவராம். எ-று.

(. . . . . . .) பரிபூரணப் பிரம சொரூபமாகத் தனது இதயத்தின்கண் விளங்குகின்றாரென்பார் தமியேன் உள்ளத்தானெனவும் கூறினர் (அ).

* * * * *

இ-ம். குருஸ்[த]துதி செய்து அதின் மூலமாய் இந்த நூலைச் சம்பூர்ணமாகச் சமாத்பமாகச் செய்ததாம். (ஙக)

Colophon :

மகாவாக்கியமூலமுடனுரையும் நிறைவேறியது. முற்றும். விரோதி கிருதவூ புரட்டாசிமீ கஅவ குருவார நாளில் நிறைவேறியது.

(கு-பு.)—

இது 1540-ஆம் நம்பர் பிரதியின் உரைப்பிரதி. இவ்வுரை மிக அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது. அத்வைதசாஸ்திரத்தில் நிகழும் பல ஸந்தேகங்களைப் போக்கிக்கொள்ள இந்நூலும் உரையும் மிகப் பயன்படுமென்று தோற்றுகிறது. இவ்வுரையைச் சிதம்பரத்திலிருந்த அருணசல தேசிகரென்பவரது சிஷ்யரொருவர் இயற்றினரென்று பாயிரச் செய்யுளால் தெரிகிறது. முற்றுமிருக்கிறது.

No. 1542. தத்துவக்கட்டளை.

TATTUVAKKAṬṬAḶAI.

Pages, 27. Lines, 8 on a page.

Begins on fol. 17*a* of the MS. described under No. 1060.

Complete.

A treatise in Advaita Vēdānta explaining the characteristics of the 36 Tattvams or fundamental realities which account for the existence of the manifold souls. By Śēṣādriśivanār. The work has been printed under the name of Nānājīvavādakkaṭṭaḷai.

Beginning:

சுத்தப்பிரமமாயிருக்கின்ற ச[ற்](ர்)வ சாட்சியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல அபின்னமாக ஒரு சத்தியுண்டு. அந்தச் சத்தி யதீதப் பிரமத்தினிடத்திலே அடங்கி யிருக்கும்போது சுத்தப்பிரமமென்று[ம்] பெயர். இந்தச் சத்தி விசிரும்பித்துச் சுத்தபிரமத்லைத் வியாபிக்கும்போது பரை. வியாபகத்துக்கு உள்ளிருந்தடடியினாலே பரப்பிரமமென்று பெயரா[ச்சுது](யிற்று). லக்ஷண சூனியமாயிருக்கின்ற இந்தச் சத்திக்குப் பிரமத்தினுடைய ஸந்நிதானத்திற் புருஷசமுகத்திலே (த்திறீ)(ஸ்திரீ)க்கு இன்பம் [ெ]சனித்தாப்போல விகி[று](ரு)த குணமற் ர சாந்த் ரச தமோகுணமுண்டா[ச்சுது](யிற்று).

End:

பிரமசைதன்னியமே தானென்றும் மற்ற முப்பத்தைந்துந் தானல்லவென்றும் தெளிந்த விவேகிக்கு அகங்காரகிரந்தி அற்றபடியினால் இந்த இருபத்தெட்டினுடைய தொழிலையும் [ஞ](நா)ன் செய்யவில்லை யென்று(ம்) [யி](இ)ந்த [யி](இ)ருபத்தெட்டும் [பொ](பு)சிக்கின்றதை [ஞ](நா)ன் [பொ](பு) சிக்கவில்லையென்றும் திடப்படத்தேறி மயக்கமற்றிருக்கின்றபடியினால் இந்த இருபத்தெட்டினாலும் ஆ[ற்](ர்ச்)சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களிலும் விடுபட்டு, கன்மமில்லாதபடியினால் செனனமரணாதி சம்சாரமில்லாமல் முத்தனாகிப் பிரமமாத்திரமாகவேயிருப்பன். இவனைச் சீவன்முத்தனென்றும் திட[பிறக்ஞ](ப்ரஜ்)ஞனென்றும், அதிவர்ணாசிரமியென்றும், குணாதீதனென்றும், பகவற்பக்தனென்றும், பிராமணனென்றும் ஆறு சாஸ்திரங்களும் முறையிடு[த்து](கின்றன). சகலரும் இந்தத் தத்துவத்தை விசாரம்பண்ணி மோட்சமடையக் கடவர்.

Colophon:

சேஷாத்தி[ர](ரி)சிவனாற் சொல்லப்பட்ட தத்துவக்கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. வசனநடையிலமைந்தது. முப்பத்தாறு தத்துவங்களின் தன்மைகள் இன்னின்னவெனத் தெளிவாகக் கூறுவது. நூலாசிரியர் சேஷாத்திரி சிவனார். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1543. தத்துவக்கட்டளை.

TATTUVAKKAṬṬAḶAI.

Substance, palm-leaf. Size, 9 × $1\frac{3}{8}$ inches. Pages, 49. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Śivayōgam 26*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது மூன் நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்று மிருக்கிறது. முதலொன்பது ஏடுகள் நுனி முறிந்துள்ளன.

No. 1544. தத்துவக்கட்டளை.
TATTUVAKKAṬṬAḶAI.

Substance, palm-leaf. Size, 11½ × 1 inches. Pages 44. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 164*a*. The other work herein is Vivēkaśāram 1*a*.

Complete.

Same work as the above.

Colophon:

சேஷாத்திரிசிவனூற் சொல்லப்பட்ட தத்துவக்கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இது மூன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1545. தத்துவக்கூறு.
TATTUVAKKŪṞU.

Pages, 46. Lines, 6 on a page.

Begins on fol. 95*a* of the MS. described under No. 802.

Complete.

A treatise in prose explaining the 96 Tattuvams and bearing on the Advaita Vēdānta. The work is also called Nandidēvarkaṭṭaḷai. It is said to have been revealed to Kapilar by 13 ascetics including Ahattiyar.

Beginning:

[யிநி](இனி) யிந்த(ச்) சரீரம் எண்ச(ா)ணீளம். [ஞா](நா)ற்சாண் பருமன். தன்விரலாலே - ௯௬ விரற்[ப்] பி[ற](ர)மாணம். [யி](இ)ப்படிக்கொத்த சரீரத்தில் தத்துவம் - ௯௬ உண்டு. அவையாவன : [யி](இ)னி வாசல் - ௯ பொறி - ௰. புலன் - ௰. ஆதாரம் - ௬. மண்டலம் - ௩. [ஞா](நா)டி - ௰. வா[யவு](யு) - ௰. தாது - ௭. [ரா](ரா)கம் - ௮. கோசம் - ௫.

End:

[யி](இ)னிச் சரீரமாவன : தூலதேகம். சூ(ட்)சுமதேகம், காரணதேகம் ஆக ௩. [யி](இ)தித சேதியாவன ? * * * * * *

காரணதேகமாவது—முந்தின [யி](இ)ரண்டு தேகமும் ப[த்தத்து](ற்றற்று) விழுங்கிநின்றது காரணதேகம்.

* * * *

"இத்தனையறியவல்லாரிமையவ[ரு](ரா)யிருப்பர்தாமே" இப்படித் தத்துவம்கமெசும் வி[புற](வர)மறியவும்.

[யி]இந்தவாக்கியம் ப[ரு](ரா)பரமாகிய பரமே[ஸ்ப](சுவ)ரன் அகஸ்தியர், புலகர், [ு]சனத் குமாரர், சாங்கரர், சனகர் [கெவு](கௌ)தமர், சூதர், வதிஷ்[ட்]டர், விசுவாமித்தி[ற](ர)ர், நாரதர், வள்ளுவர் [யி](இ)ந்த மெஉ (?) ரிஷிகளும் * * * நடன தெரிசனமும் சித்தாந்தமும் வேதாந்தமும் கடந்த[ு](நா)தாந்த முடிவான அ[முற்](மிர்த)பஞ்சாட்சரமும், திருனைவ நிலையும், சோ[த்த](ற்ற) மொடெக்கமும், அத்துவாவும் தத்துவமும் கபிலமகாரிஷிக்கு உபதேசம் பண்ணி அ[று](ரு)ளிச் செய்தவாறு.

தத்துவம் மு[த்து](ற்று)ம்.

(கு-பு.)—

இந்நூல் தொண்ணூற்ருறு தத்துவங்கள் இன்னின்னவென்றும், சரீரம் முதலியவற்றின் வகை இன்னின்னவென்றும் கூறுவது. அத்வைத மதத்தைச் சார்ந்ததெனத் தோற்றுகிறது. வசனநடையிலானது. இதற்கு நந்திதேவர் கட்டளையென்றும் பெயருண்டு. அகத்தியர் முதலிய இருஷிகள் பன்னிருவர் கபில முனிவருக்கு உபதேசித்ததாக இந்நூலின் இறுதிவாக்கியங் கூறுகின்றது.

No. 1546. தத்துவக்கூறு.

TATTUVAKKŪṞU.

Pages, 8. Lines, 8 on a page.

Begins on fol. 35*a* of the MS. described under No. 1060.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது 1545-ஆம் நம்பர் பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1547. தத்துவஞானபோதம்.

TATTUVAÑĀNABŌDAM.

Pages, 30. Lines, 7 on a page.

Begins on fol. 92*a* of the MS. described under No. 251.

Complete in 83 stanzas.

A treatise explaining the Tattuvams in the form of teachings by a Guru to a disciple and stating that a person can get salvation by understanding them.

Beginning :

சோதியா லெழுந்தமேனி துலங்கிய பவளவானே
நீதியான் மொழிந்தஞான தின்மல னடிகள்போற்றி
பேதியா யிருமூன் றான பெற்றதோர் சமயத்துள்ளோர்
சாதியால் குலமில் லாம லாண்டபோர் தலைமேற்[த்]றுளே. (க)

பரிந்ததோ ரின்பநேசம் ட[ள](மு)மலங் கழலவேண்டி [ன்றி
யருந்தவம் [பி](பு)ரிந் தெ[ன்ன](ந்நா)ளு[ம்] மகவிடா தணி[த்தோ](ந்ரே)
விரிந்ததோர் ஞான நூலு மேவிய கலைக டானுந்
தெரிந்துநீ ரருளவேணுந் தேசிகா [ய](வ)டியேற்[க்] கென்றே. (உ)

ஆதியாம் பரமந் தன்று லதி[ச்](ற்)சிவஞ் சத்திதோன்றி
நீதியா னாதை விந்து நெறியதாஞ் சிவமுந் றோன்றி
வீதியான் மகேசந் தானும் விரும்பிய கனலோன் றோன்றி(ப்)
பாதியா யருவாய்க் கஞ்சன் பரிசிது பகருங் கேளே. (ங)

End :

ஓதிய கல்விபோத மொளிவிந்து நாதங்கெட்டு
நீதியும் பஞ்சபூத நிலைநெறி கருவிகெட்டு(ச்)
சாதியாங் குலமுங் கெட்டு(ச்) சர்ப்பத்தின் வேருங்கெட்டு(ப்)
பேதியா[ல் வு](லு)யிருங் கெட்டாற் பெற்றதே ஞானமாமே. (அ0)

அத்தனே யடியே னிந்த வாகமப் படியே பெற்றேன்
சித்தரே யுரைத்த நூலின் திருந்திய பேரிங் கேது
முத்தரே நூலி[ல்ச்](ற்) சே(ர்)ந்த முறைமையாம் பகரக்கேளே
தத்துவ ஞானபோதமென்று சா[த்தி](ற்றி)னே மிதனையென்றே. (அக

* * * * *

பாச மா மலங்கணீந்தி(ப்) பரிவுட னடிவைத் தாண்டு
தேசிகன் மெய்யி னூதித் திருவருள் விளைந்து போற்றி
யாசையாங் காரங்கெட் [ய](ட)டிமுடி திறந்த[யி](வி)ன்ப
நேசமாம் பரத்திற் சே(ர்)ந்து திக(ழ்)த்திட ஞானநூலாம்.

The scribe as.—

காஉஞ மார்க[ளி](ழி)மீ கஉ சக்கிரவாரமுங்கூடிய சுப[த](தி)னத்திலே வயிரவ[த] சடாதார சித்தர் அருளிச்செய்த புண்ணியத்தினாலே முருகாவு . . . . யாபிள்ளை மகன் புன்னைவனம் [யெளு](எழு)தினேன். நீடு[ளி](ழி)வாழ்க. குருபாத முன்னிற்க.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. தத்துவங்கள் இன்னவென்றும் அவற்றையுணர்ந்து முத்திபெறலாமென்றும் கூறுவது. குருவையடுத்து சிஷ்யன் வினவக் குரு மொழிந்ததாக வமைக்கப்பட்டுள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெளியக்கூடவில்லை. காப்பு உட்பட எண்பத்து மூன்று பாடல்களையுடையது.

No. 1548. தத்துவநிசானுபோதம்.

TATTUVANIJĀNUBŌDAM.

Substance, palm-leaf. Size, $13\frac{3}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 514. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

From a list of the topics (extracted below from the MS.) dealt with in 373 Adhyāyas of the work it will be seen that the principles of the Advaita Vēdānta are fully worked out in detail in the Pūrvakāṇḍa and the various systems of philosophical and religious thoughts prevalent in India were criticised and refuted in the Uttarakāṇḍa. The author of the work appears to be a disciple of Tattuvaliṅgadēvar.

Beginning:

விநாயகர் துணை. தத்துவநிசானுபோதம்.

சச்சிதா னந்தமே தகுமத மூன்றதாய்(த்)
தக்கதோ ரைங்கரஞ் சத்தியைஞ்சதாய்
நிச்சிதாம் ஞாதரு ஞானஞேயமே
நீள்விழிக் கொம்பொ[ணு](ன்று) நீண்ட சத்தியாய் (க)
குச்சிதாஞ் சீவயீ சாதி நால்வாயதாய்(க்)
கூறிச்சை யாதியே கும்பத்தலமதா
யுச்சியாஞ் செவியதே யோதிடு மாயையா
யோங்கிய கணபதி யுள்ளமென் னுள்ளமே. (க)

எ-து. சச்சிதானந்தமு மீறிநின்று எல்லா[த்று](வற்று)க்கும் முதலான திருக்காகிற ஆனைக்குச் சச்சிதானந்தமே மூ[ணு](ன்று)மதமாய் (. . . . .) ச[ற்](ர்)வ சங்காரம் பண்ணி ஓடியாத ஒரு கொம்பாகிற சிற்சத்தி நோக்காலே பழையர்பபோலே சிருஷ்டித்து நிறுத்தலா லென்றறி (. . . . .) பி[றம](மர)மும் எல்லா [த்து](வற்று)க்கும் பதியாகையாலே அவருள்ளமானது என்னுள்ளத்துள் ளே இருக்க வணங்குவேனெ[ந](ன)ன்றறி.

[யி]இனி, கடவுள்வணக்கம்.

* * * *

அத்துவா முதலதான வனந்த[ன்] தத் துவங் கடன்னை
மெத்தவே திருக்கறுத் துண்மேவிய நிசானந்தத்தை(க்)
கைத்தலத் திந்தாவென்ன(க்) கா[க்ஷ](ட்சி)யாய்க் கொடுத்தலாலே
தத்துவநிசானுபோக சாரமா மி[ன்னூ](ந்நூ)ற்பேரே. (க)

தத்துவ நிசானுபோக சாரத்தைத் தமிழினலே
மெத்தவே யுசாவி(ப்) பன்னூ[லே]ல் விரிகலே யாவுஞ்சே(ர்)த்துச்
சித்துரு ஞானத்தேனைப் பானமாய்ச் செய்வோர்க்காகத்
தத்துவலிங்கதேவ ச[ற்க்]ற்குரு[ச்] சாற்றினரே. (உ)

* * * *

இதோபதேசம்.

மெய்ம்மொழியில்;

சத்திய முரைக்க[ரு] நாளுஞ் சகலபல்லு யிர்கட் கெல்லா
நித்தலு மிதமே செய்ய நினைப்பது சிவத்தை யென்று
மத்தன் வேதாகமத்தி லருளிய பொருளி[ன்](ம்) மூ[ணு]ன்று (௧)
மெத்திறச் சமையத் தோ[ற்](ர்க்)கு மெம்மதங்க[ளுக்](ட்)குமிட்டம்.

எ-து. சத்தியமே யுரைக்கவே[ணு]ண்டும்; அ(வ்)விடத்திற் பிறருக்கும் அந்நியதா சீவனுக்கும்[ஈங்கி](ஹிம்)சை வருமிடத்தில் அசத்தியமாகிலும் அந்த விட மாத்திரம் சொல்லிச் சீவனை(க்) கா[ற்]ப்பதே சத்தியம். ஒரு சீவனை வெட்டும்போது அதின் பழிக்குத்தன் தலையை முந்த நீட்டிப் பின்வெட்டவே[ணு]ண்டும். ஆகையாலே ஒரு சீவனைக் கொல்லவொண்ணாது.

End:

ஆக, பதி பசு பாச மூ[ணு](ன்)றும் கற்பனையென்றதனாலே பி[ற](ர)மம் என்றண்டு அன்று[து] (தொ)டங்கி நித்தியமாய் வேறாயிருக்குமென்றும் [யி]இட்படி வேதாந்தம் சொ[ற்](ன்ன)தை ஆகமம் விர்[ச்சு](த்தூ) மோக்ஷ மார்க்கத்துக்கு(க்) கி[ற](ர)மாகச் சொல்லுமென்றுமர்; ஆகையாலே சித்தாந்தம் வேதாந்தத்தால் வந்ததென்றறி.

சுபமஸ்து.

அத்தியாயம்.	பக்கம்.
(1) கடவுள் வணக்கம் ...	2
(2) அருளிறைவணக்கம் ...	3
(3) வேதச்சிரப்பு ...	4
(4) ஆகமச்சிரப்பு ...	5
(5) நூற்பெயர்	6
(6) நூலுரைசித்தெனது நூவன்ற[ப்]பெயர்.	7
(7) அவைடக்கம் ...	8
(8) இந்நூலுக்கு முன்னூலெடுத்தல்.	9
(9) (பிறவி)யருமையுரைத்தல்.	18
(10) இதோபதேசம் ...	19
(11) பிராமணன் சரிதை ...	20
(12) சத்திரியன் சரிதை ...	,,
(13) வயிசியன் சரிதை ...	21
(14) சூத்திரன் சரிதை ...	22
(15) பி[ரும](ரம)சாரிசரிதை.	,,
(16) கி[ற](ரு)கத்தன் சரிதை.	23
(17) வானட்பி[ற](ர)த்தன் சரிதை.	,,
(18) சந்நியாசி சரிதை ..	,,
(19) அதிவன்ருச்சிரமி சரிதை	23
(20) உடலிழிவு	24
(21) குடும்ப[யி](வி)ழிவு ...	,,
(22) போகவிழிவு ...	25
(23) மகளிரிழிவு ...	,,
(24) பொருளிழிவு ...	26
(25) அரசிழிவு ...	,,
(26) சொ[ற்யி](ர்க்கவி)ழிவு.	,,
(27) சனனசக்கரம் ...	27
(28) சனன விருட்சம் ..	28
(29) அசேஷதுக்கம் ...	29
(30) அநித்திய(த)ரிசனம் ...	30
(31) வீடுபெற்று	31
(32) பிது[ற]ர(ா)யனம் ...	32
(33) [ெ]த[க்ஷ்]க்ஷிணாயனம்.	,,
(34) தேவாயனம்	,,
(35) உத்[தி](த)ராயனம் ...	33
(36) யோகிகள் [ெ]கதி ...	34
(37) ஞானிகள் [ெ]கதி ...	35
(38) பாவிகள் [ெ]கதி ...	,,
சமயபேதங்களில் நின்ற பேர்நிலை.	,,

அத்தியாயம். பக்கம்.

(39) ஞானிம(ா)கா[ற்](த்)மியம். 36
(40) ஞானிபூசை 37
(41) ஞானிசீலம் ... ... ,,
(42) ஞானியூண்பலன் ... 38
(43) ஞானியேவல் 39
(44) ஞானியை இகழ்ந்தோர் கேடு. ,,
(45) கூடாவொழுக்கம் ... 40
(46) பி[ற](ர)பஞ்சவுற்பத்தி. ,,
(47) சிருட்டி 42
(48) திதி 45
(49) சங்காரம் ... ... ,,
(50) திரோபவம் 46
(51) அநுக்கி[ற](ர)கம் ... ,,
(52) பிண்டகி[று](ரு)தம் ... 47
(53) பிண்டோத்பத்தி ... 49
(54) [செற்](கர்ப்)பந்தரிக்கிற [ஞ](நா)ள்பேதம். 53
(55) சையோகவிதத்திலும் பத்திபேதம். 54
(56) காமத்தில்பேதம் ... 55
(57) சுரதத்திலுற்பத்திபேதம். 56
(58) காலசக்[கிற](கர)பேதம். 58
(59) சரத்தில்வருஷமயனபட்ச வாரபலன். 69
(60) சரத்தில் நவக்கி[ற]ரக ராசிநட்சத்திரம் நடப்பது. 70
(61) சன்மா[ற்](ர்க)கம் ... 71
(62) சாதிசங்கற்பம் ... 72

ஆக, பொதுவான அத்தியாயம், 62.

மதம்.

ச[ை]மயத்தொகுதி விவரம்.

(1) கிரீடாவாதம் 79
(2) லீலாவாதம் 79
(3) பிரதிபிம்பவாதம் ... 80
(4) மாயாவாதிமதம் ... 81
(5) இதில் இன்னொரு விதம் வைதீக வேதாந்தம். 83
(6) சுத்தவேதாந்தம் ... 95
(7) இதில் இன்னொரு வேதாந்தம். 104
(8) அச்சுமாரூதவாதி ... 106
(9) சாங்கியன் 109
(10) நிரீசுவரசாங்கியன் ... ...
(11) பாதஞ்சலம் 121
(12) பூர்வமீமாஞ்சை ... ...
(13) வைசேஷிகன் ... 123
(14) நையாயிகன் 127
(15) சிவாத்துவிதி 130
(16) பாஸ்கரியன் 131
(17) சத்தப்பிரமவாதி ... 132
(18) வையாகரணி 133
(19) பாட்டம் ... ... ,,
(20) பிரபாகரன் 136

ஆத்மபேதத்தில் அ-க்கு.

(1) ஆரூந்தம் 137
(2) சித்தாந்தம் ... ...
(3) வேதாந்தம் ... ...
(4) யோகாந்தம் 138
(5) காலாந்தம் ... ...
(6) வேதாந்தம் 139
(7) வேதாந்தசித்தாந்தம் ... ...
(8) சித்தாந்தவேதாந்தம் ... ...

ஆக எட்டு

(1) புராணிகன் மதம் ... 140
(2) பாஞ்சராத்திரி.. ... 144

ஆக . . . . . .

(கு-பு.)—

இந்நூல் அத்வைத வேதாந்த விஷயமானது. பலசமய சாஸ்திரங்களின் உதவியால் பற்பல மதங்களின் கொள்கைகளை எடுத்துக்கூறிப் பின்பு அவற்றைப் பூர்வபட்சஞ்செய்து வேதாந்த மதத்திற்கு அங்கமாக உள்ளன வென்று கூறுவது இந்நூல். இது, பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என்ற இரு பெரும் பிரிவினையுடையதாய் 373 - அத்தியாயங்களாலாகியது. அத்தியாயங்களின் பெயர்களும் சமயங்களின் உட்பிரிவுகளும் இப்பிரதியின் முதல் நான்கு ஏடுகளிலும், நூலின் இடையிலும் குறிக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் தத்துவலிங்க தேவரின் சீடரென்று தெரிகிறது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது. இறுதியில் 24-ஏடுகள் ஒருபுறம் முறிந்துள்ளன. "வேகமாநெறி", "கல்வினும்வலிய" என்பன முதலிய 4 செய்யுட்கள் நூலின் முதலேட்டில் எழுதப்பெற்று உள்ளன.

No. 1549. தத்துவநிசானுபோதம்.

TATTUVANIJĀNUBŌDAM.

Substance, paper. Size, $12\frac{7}{8} \times 7\frac{3}{8}$ inches. Pages, 708. Lines, 25 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, new

Complete.

Same work as the above, being a copy made therefrom.

(கு-பு.)—

இது முன் பிரதியைப்பார்த்து எழுதப்பட்ட பிரதி. இந்நூல் இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது. 'வேகமா நெறி' முதலிய நான்கு பாடல்களும் இதில் எழுதப்படவில்லை.

No. 1550. தத்துவநிசானுபோகசாரம்.

TATTUVANIJĀNUBŌGASĀRAM.

Pages, 474. Lines, 7-8 on a page.

Begins on fol. 28*a* of the MS. described under No. 1272.

Complete.

A treatise in Advaita Vēdanta in which a Guru teaches his disciple self-realization in the form of a conversation. The work is in prose though stanzas are also quoted as authority in some places.

Beginning :

உபதேசப் பி[ற](ர)கரண அநுபவ ரகசிய சித்தாந்தவுண்மை. ஊனுயிர் வேறுசெய்தல். ஸ்ரீகுருவுபதேச அனுபவரகசிய பி[ற](ர)கரண சித்தாந்தவுண்மை.

இருவினையொப்பு மலபரிபாகம்வந்த சீஷன் சஞ்சித பி[ரு](ரா)ரத்த ஆகாமிய துக்கங்களில் அடிபட்டு (. . . . .) [யி](இ)தில் பி[ரு](ரா)ரத்தம்:—பொசிப்பிலே ஒரு நாளில் வருகிற துக்கம். சாட்சி:

மனையவ ளேவாக மகச் சவலை யாக
மழைபெய்து மனையிடிய மாடுங் கெட
வினையர் கடன்றனக்கலைக்க வடிமைசாக
வரியவிருந் தினர் வரலூர்ச் சிறையும் பூண
மனையிலொரு பொருளின்றி வாங்கலாகு
மிடந்தேட வழக்கினருந் தடுக்க நின்று
தினைவரிய சலமதிபோற் குறையும் பொல்லா
நிலைமையினற் குடும்பிதுயர் நினை யினந்தோ.

[யி](இ)ப்படி, சமுசாரமாகிய செனன சமுத்திரத்தையும் (. . . . .) யித்தைத்தீ[ற்](ர்க்)கிற ஞானசாரியனுரென்று காடு நாடுபெ[று](ரு)வதங்களெல்லாந்தேடியுழன்று ஞானசாரியனைக் காணுமல் வெகு விசாரமிட்[டுயி](டி)ருக்கிற வேளையிலே தி[ற்](ர்க்)குணமாய்ப் பரிபூரணமாயிருக்கிற சச்சிதானந்தப்பி[று](ர)மந்தானே தண்ணீர் ஆலாங்கட்டியானு[ப்](ற்) போலும் (. . .) சகுணமாய மானிட(ச்) சட்டை தரி[ச்சு](த்து)வந்து (. . . . .) சீஷனைக்கண்டு பயப்படாதேயென்று (. . . .) ஞான தீட்சைசெய்து [யி](இ)வனை ஊனுயிர் வேறுசெய்யத் தொடங்கினுர் என்றறி. இனி யூனுயிர் வேறு செய்தல்: குருவானவர் சீஷனைநோக்கி நீயாகிறவன் ஆரென்ன? [ஞ](நா)னுகிறவன் இந்தத் தேகம். அஃதெப்படியென்ன?

End:

இனி, சகசாவத்தையாவது - தன்னைத் தோ[ணு](ன்று)வது நனவு. தோ[ணி](ன்றி)த் தோ[ணு](ன்றா)து சொ[ற்](ப்)பனம். தோ[ணு](ன்றா)துசுழுத்தி. அதில் எழுந்த அறிவு துரியம். [யி](இ)துவுமிழந்தவிடம் அதீதம். ஆக, ரு.

(. . . . .) [யி](இ)னி வேதாந்தாவத்தை தாதுகெதா அவத்தை -ரு ஆதாரகெதா அவத்தை -ரு; கரணகெதா அவத்தை -ரு; சங்[ஷ](க்ஷே)பாவத்தை-ரு- அனுபவா அவத்தை-ம.

திமிஷாவத்தை - கூ - ஆறுதுரியன். தெரிசிக்கும்போது அவத்தை -ம அ. ஆக, குணசம்பந்தாவத்தை - மஉ. தவிர அவத்தை - ருள ஆக அவத்தை -உருகூ. ஆக அவத்தை தெரிசனம் முடி[ஞ்சு](ந்த)தென்றறி.

திருச்சிற்றம்பலம். சிவமயம்.

Colophon:

சாதாரணஸு ஆவணிமீ மஉஉ புதவாரம் திதி பி[ற](ர)தமை நட்[ஷ]சத்திரம் ச[ௌ]தயம் [யி](இ)ந்த(த்)தினத்தில், மத்தூர் முருகப்ப முதலியார் குமாரன் சரவண முதலி. தத்துவ நிசானுபோக சாரம் எழுதி[னி](றி)றைந்தது. அமராபதி கையெழுத்து.

(கு-பு.)—

இந்நூல் அத்வைத மதத்தைச்சார்ந்ததெனத் தோற்றுகிறது. இது, ஊனுயிர் வேறுசெய்தல், பஞ்சபூதம் வேறுசெய்தல், பொறியறவுணர்த்தல்,

இந்திரியம் வேறுசெய்தல் முதலிய பல பிரிவினையுடையது. ஞானசாரியர் சிஷ்யனுக்கு ஆன்மஞானமுணர்த்தியதாக வமைந்துள்ளது. குரு சிஷ்ய ஸம்வாத ரூபமானது. வசன நடையில் இடையிடையே சிற்சில பாடல்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1551. தத்துவமசிமகாவாக்கியம்.
TATTUVAMASIMAHĀVĀKKIYAM.

Substance, palm-leaf. Size, $10\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 29. Lines, 7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Vivēkasāram 16*a*.

Complete.

This work in giving out the meaning of the Upaniṣadic passage Tat Tvam Asi explains the characteristics of Stūladēha, Sūkṣmadēha, Kāraṇadēha, Mahākāranadēha, Ātma, Anātma, etc. The name of the author is not stated.

Beginning:

தத்துவமசி மகாவாக்கியம்.

அரிய சஞ்சித மகலவும்
புரியுடம்பிட ரொழியவும்
விரியுநம்பவ மெரியவுங்
கரிமுகன்கழல் கருதுவாம்.

தொம்பதம், தற்பதம், அசிபதம் என மூன்றுபதம். இதற்கு(த்) தொம்பதமாவது : அவத்தை நாவில் ஒவ்வொன்றுக்கு மூன்றுடலுண்டு; அதிற் சாக்கிராவத்தையான :—தூலதேகத்திற் றூலதேகமாவது : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், ஆக, ரு. இதில் ஒவ்வொன்றற்கு அஞ்சுகுண மூண்டு. அஃதெப்படி யென்னில்,—தோல், எலும்பு, நரம்பு, மயிர், தசை, ரு-ம் பிருதிவியின் குணம், நீர், உதிரம், வேர்வை, மச்சை, சுக்கிலம் ரு-ம் அப்புவின் குணம். ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பு ரு-ம் தேயுவின் குணம். ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், தத்தல் ரு-ம் வாயுவின் குணம். குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ரு-ம் ஆகாயத்தின் குணம். ஆக உ௫-ம் பஞ்சீகரணமென்றும் தூலதேகத்திற் றூலதேகமென்றுஞ் சொல்லப்படும்.

End:

பஞ்சப் பிரளயம் பண்ணினபின்பு மிஞ்சினதே வஸ்து; அதுவே, வாக்கு மனத்துக்கு மெட்டாத பொருள். சத்தமாத்திரையான்றுமதுவே. நித்திய சுத்த புத்த முத்த சத்திய பரிபூரணமானது மதுவே; இதற்கு வேதார்த்தம் அந்தரங்கத்தி லொரு பானையை நிறுத்தினு லதிலே யுள்ளும் வெளியடியும்

வெளிமேலும் வெளிபாலீ சுற்றிலும் வெளியாக இருக்கும். அப்படிப் போலப் பரமானின்ற பரப்பிரமம் உள்ளும் புறம்புமாய் எங்கும் பரிபூரணமா யிருப்ப தறிது ; குரு கடாட்சத்தினாலும் அனுபவத்தினாலு மறியவேணும்.

முற்றும்.

(கு பு.)—

இது வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம், மஹாகாரண சரீரம், ஆத்மா, அநாத்மா முதலியவற்றைத் தத்துவமஸி மஹாவாக்கியத்தின் பொருள் முதலியவற்றை விளக்குவதற்கு அங்கமாகக் கூறுவது. இந்நூலை இயற்றியவர் பெயர் முதலியன விளங்க வில்லை. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1552. தத்துவாமிர்தக்கட்டளை.
TATTUVĀMIRTAKKAṬṬAḶAI.

Pages, 38. Lines, 8 on a page.

Begins on fol. 51*a* of the MS. described under No. 1061.

Complete.

A treatise bearing on the Advaita Vēdānta. Herein a Guru is represented to have taught his disciple the meaning of the Upaniṣadic passage Tat Tvam Asi, made him realize it, and enjoy the bliss arising from that realization. The name of the author of the work is not given.

Beginning :

தத்துவாமிர்தக் கட்டளை, அத்துவித சுத்த வேதாந்த தர்சனம்.

அண்ணல் கூறிடு மரிய வாரணக் கடலேழும்
வண்ண மின்றிய வாசாம கோசர [மெனும்] (வ)முதைக்
கண்ண தாயிடக் கரதல மணியெனக் காட்டும்
வண்ண முள்ளமா வாக்கிய ஷமந்தர்க்குப் புகல்வான். (க)

வன்ன நாலதாய் வண்பத மதற்குமூன்று டைத்தாய்த்
தன்ன தாம்வடி வதமிகத் தானுநுண் ணியதாய்
முன்ன மாமறை முழுதுமோதியு முடியாச்சீர்
மன்னு மாப்பொரு ளு(ை)டமை மாவாக்கியப் பெயராய்.

நித்தமொடுமுத்த நிமலத்திகழ் பரத்தை
யுய்த்தகர முத்தமணி யத்திநிக ரொப்ப
மெய்த்திட வெவர்க்குமுண ரத்திகழு விக்குந்
தத்துவமசி தத்துவமசி தத்துவமசி சத்தியம். (ரு)

[யி](இ)னிவசனம். ஆதலால் மகாவாக்கியஞ் சொல்லப்பட்ட ஞானமே ஞானம். அ[த்]வைதயல்லாமல் சொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் அறியு மிடத்து (. . . . .) பி[ற](ர) பலசுருதி

வாக்கியம். அத்தியாத்[மீ](ம)த்தைச் சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிடதத்ததாயிருக்கும். இதுநாலு வாக்கியங்களைப் பி[ற](ர)தி[வ](ப)ாதிக்கும். அஃதேதென்னில் :—

பி[ற](ர)ஞ்ஞானம் பி[ற](ர)மம், அகம்பி[று](ர)மா[ஸூ](ஸ்)மி, தத்[தோ](துவ)மசி ; அயமாத்துமா பி[ற](ரம)ம். என்கின்ற இந்த நாலுவாக்கியமும் சீவபரவயிக்கியத்தைச் சொல்லும்.

End:

ஆசாரியரும் மகாவாக்கியத்தினாலே அது நீயாகின்றாயென்றும், நீ அதுவாகின்றாயென்றும் அனுக்கி[ற](ர)கம்பண்ணினார். அந்தச் சொரூபந்தான் மூன்றுபதமாவது.

அஃதேதென்னில் ;—தொம்பதமுதலாக அந்தச் சொரூபந்தான்காண் மூன்று லக்ஷணமாவது. (. . . . .) இப்படி அனுக்கி[ற](ர)கம்பண்ணப்பட்ட குரு[ணா](நா)தன் பெருமை யாதோவென்னில் :—

மூலையி லிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந் தீபற
தவத்திற் றலைவரென் றுந் தீபற ;
இ[த்]தைத்தத்துவாமிருதத்திலே கண்டுகொள்க.

"தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரன்சிவ மா[ணி](நி)ற்[க்]க
வம்பத மேலைச் சொரூபமா வாக்கியச்
செம்பொரு ளாண்டருள் சீர்நந்தி தானே."

அத்துவிதசுத்த வேதாந்த தெரிசன முற்றும்.

பொசிப்போஞ் சிவபோகம் பூரணமா யெங்கும்
வசிப்போ முலகில் வசியோ—முசிப்பின்றி
வாழ்வோஞ் சிவனையுணர் மாதவர்தம் பொன்னடிக்கீழ்(த்)
தாழ்வோ மெமக்கார் சரி. (க)

Colophon:

தத்துவாமிர்தக்கட்டளையாகிய அத்துவிதசுத்தவேதாந்ததெரிசனக் கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இது அத்வைதமதத்தைச் சார்ந்தது. தத்துவமசி மகாவாக்கியத்தின் பொருளை மாணாக்கனுக்கு ஆசிரியர் போதித்து அவனை அவ்வழியில் நிறுத்தி யின்பமடையச்செய்ததாக இந்நூலமைந்துள்ளது. சில பாடல்களுடன் வசனநடை விரவியுள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப்பிரதியில் இந்நூல்முற்றும் இருக்கிறது.

No. 1553. தத்துவாமிர்தம்.

TATTVĀMIRTAM.

Pages, 24. Lines, 8 on a page.

Begins on fol. 4*a* of the MS. described under No. 1422.

Complete in 137 stanzas.

A treatise bearing on Advaita Vēdānta by Tattuvadēśikanāyanār who refers to his Guru's Guru Śivappirakāsar It is stated in the Pāyiram stanza that this work is based on the Upaniṣads. Herein it is represented that a person having by virtue of his merit gets rid of all worldly attachments, resorts to a proper Guru, learns the meaning of the Mahā Vākkiyams from him and enjoys the bliss arising from their realisation. The work is divided into five divisions or chapters; the headings of which are given in the Tamil remarks below.

Beginning:

தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ்
சாலுங் கல்வியுந் தகுமுயிர்த் துணையுஞ்
சிந்தை யாகுநற் சீலமும் வலியுந்
திருவு மின்பமுஞ் சிதைவிலா வறிவு
முந்தை யாமுளத் துவகை யு முயிரு
மூலமுத்தியு மொழிவருஞ் சமைவு
மெந்தை யாகிவந் தேழையேனையுமா
ளிறைவனுர் கழலாகு மென்றனக்கே. (௧)

* * * *

அருளிறை வணக்கம்.

உலக மோடுயிர் பரமென வுதித்தவப் பேதக்
கலக மாரிருள் கரிசற வுதித்தநற் பதத்தை
யிலக வேயுளத் தெழில்பெற வளித்தெனை யாண்ட
திலக பேரருட் சிவப்பிர காசனைப் பணிவாம். (௩)

நூற் பெயர்.

அழிவிலா வுப நிடதமென் னுததியி லமலன்
வழுவிலா வுப தேசமே மத்தரு ணுய்ப்
பழுதிலா வனுபவர் கடைவார் பராவமிர்த
மெழுதல் காரணத் திந்த நூற்பெயர்[த்]தத்துவா மிர்தம். (௪)

* * * *

தெளிதல்.

உற்பவப்பெரு முத்தியில் விழுந்தழுந் துயிரிற்
றப்புதற் கொரு தலைமகன் றத்துவ முணர்வான்
முற்பவத்தினின் முயல்வுறுதவமுதிர்ச்சியின
னெப்பவத்தினு மிடருடலணித்த மென் றுணர்ந்தான். (௫)

* * * *

வாக்கியபத்ததி.

இறந்த கேள்வியா யிறந்தநற் றரிசன மதுவா
யிறந்த வீரமா யெலையிலா னந்த ஞானமதாய்ச்
சிறந்த காலதே சந்திசை யிறந்திடத் திகழ்ந்து
நிறைந்த வெட்டியல் புடைத்து நீள் வாக்கிய மினங்கேள்.(௩௪)

End :

முடிந்ததின்று முழுதுந்திகழுமோனமதிலே
படிந்தரும் பொருளிருந்த தவிருந்தபடியே
விடிந்ததெங்கும் வெளியாகியதுமாய்விரவு
முடிந்த திங்கிறைவவென்பல மொழிந்திடுகுவேன். (௱௩௬)

* * * *

பணிந்தெழுந்தொழும் பரமனதடியிணைமுடிமீ
தணிந்தணிந்தழன் மெழுகெனவமைவறவுருகி
யிணைந்த வார்கழ லிரண்டையு மெழில் பெறத் தழுவி
மணந்த வார்குமி ழான்முகந் துண்டன் பிலயர்ந்தான். (௱௩௭)

Colophon :

தத்துவாமிர்த முற்றிற்று.

சாற்று முபநிடத்திற் றற்பதத்தின் மெய்ப்பொருளை
மாற்ற மன்ங்கழிந்த மாமணியைப்—போற்றிவிடக்
காணுது காட்டியநற் காரணனுர் கோலமலாற்
காணுதினியெ(ா)ன்(ெ)றன் கண்.

(கு-பு.)—

இது தத்துவதேசிகநாயனுரியற்றிய நூல்களுளொன்று. அத்வைதமதத்தைச் சார்ந்தது. உபநிடதங்களாகிற சாகாத்தைக்கடைந்து தத்துவமாகிற அமிர்தம் எடுத்துச் செய்யப்பட்டமையால் இப்பெயரமைந்ததென இந்நூற் பாயிரங்கூறுகின்றது. ஒருவன் புண்ணியவயத்தால் உலகவின்பங்களை வெறுத்து நல்லாசானையடைந்து மகாவாக்கியங்களின் பொருளை அவருபதேசிக்கவறிந்து அனுபவத்திற் பழகிப் பேரானந்தத்திலிருந்தனனென்று கூறுவது இது (1) அதிகாரபத்ததி, உ௬ (2) வாக்கியபத்ததி, ௧௧ (3) சிரவணபத்ததி, உ௧ (4) மனனபத்ததி, உ௧ (5) நிதித்தியாசனபத்ததி, ௫௫ என்ற ஐந்து பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. கடவுள்வணக்கம் உட்பட நூற்று முப்பத்தேழு விருத்தங்களாலாயது. இறுதியிலுள்ளவெண்பா ஆசிரியர் வணக்கமாக அமைந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1554. தத்துவாமிர்தம்.

TATTUVĀMIRTAM.

Pages, 38. Lines, 8 on a page.

Begins on fol. 27*a* of the MS. described under No. 1061.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இதன்கண் இந்நூல் பூர்ணமாகவுள்ளது.

No. 1555. தத்துவாமிர்தம்.

TATTVĀMIRTAM.

Page, 24. Lines, 8 on a page.

Begins on fol. 379*a* of the MS. described under No. 1061.

Wants the 29 stanzas of the Adhikārapaddhati and the first four stanzas of the Vākkiyapaddhati; otherwise complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதியைப் போன்றது. இதில் இந்நூலின் அதிகாரபத்ததியாகிய 29 பாடல்களும், வாக்கியபத்ததியின் முதல் நான்கு பாடல்களும் இல்லே. மற்றப்பாகம் முழுதும் இருக்கிறது.

No. 1556. தத்துவோபதேசாமிர்தம். TATTUVŌPADĒŚĀMIRTAM.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 289 *a*. of the MS. described under No. 1423.

Contains the last 25 stanzas.

This work is the original from which that described under R. No. 306(*a*) of the Triennial catalogue was copied for the library. By Vēṅkaḍam.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 306 (a) நம்பர் பிரதியின் மூலப்பிரதி.

No. 1557. திருச்சிற்றம்பல சுவாமிகள் வாக்கியம். TIRUCCIṞṞAMBALA SVĀMIGAḶ VĀKKIYAM.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 442*a*. of the MS. described under No. 1272.

Complete.

A treatise in 8 stanzas bearing on Advaita Vēdānta. It is stated in the beginning of the work that these stanzas proceeded from Tiruccirrambalasvāmigaḷ who is presumably the author.

Beginning:

திருச்சிற்றம்பலசுவாமிகள் வாக்கியம்.

ஆலகாலமுமானது போல்வரு
மூலகாரணமாகிய மூலத்தை(ப்)
பாலலோசனம் நீக்கியென்பால்வந்த
காலந்தன்னிலே கட்டறுத்தானரோ.

End:

செலமொரு கரமு மனமொரு கரமுஞ் சேர்ந்து சமமாயிருந்தவரானல்
பலமிலா வோட்டத் தனங்களுமொன்ருய்ப் பார்த்தவரே பரிபாகிகளானல்
நலமுள பெண்ணேச் சவமாகக்கண்டு நண்ணுமனத்தாலெண்ணுவரானல்
தலமுளசிவ முத்தர்கள் கூட்டத் தானுமொன்ருகக் கூடுவர்தாமே. அ

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, வேதாந்த விஷயமான எட்டுப்பாடல்களையுடையது. திருச்சிற்றம் பல சுவாமிகள் வாக்கியமென்று முதலில் குறிக்கப்பட்டிருப்பதால் அப்பெய ருடைய ஒருவரியற்றியதெனத்தோற்றுகிறது. 444-வது எட்டில் மெய்கண்ட தேவர் தட்சிணாமூர்த்தி தேசிகர், திருமூலர், இவர்கள் விஷயமாகவுள்ள ஒவ் வொரு பாடல்களும், "ஆணவமே யென்னைநீ யாண்டிருந்தாய் நென்னல் வரைத், தாணுதிருக்காஞ்சியில்வாழ்தக் கேசன்—பேணி யென்னை, யின்றடிமை கொண்டானினியென்னையா ளக்கருதிற், கொன்றிடுவ னன்றாய்க்குறி" என்ற பாடலும் உள்ளன.

No. 1558. திருத்தாலாட்டு.

TRIUTTĀLĀṬṬU.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 16*a*. of the MS. described under No. 1422.

Complete.

This is one of the class of 96 Prabandams. Herein the author Tattuvadēśikanāyanār eulogises his Guru Sorupānandar in different ways.

Beginning:

தத்வராய மூர்த்தியருளிச்செய்த முதலாவது திருத்தாலாட்டு.

அன்னைத்தரமாகி யாவர்க்கு மெய்தரிய
தன்னைத்தரமேனி சாத்தும் பெருமானே (க)
துஞ்சும் பிறவித் துயரை நினைந்தடியே
னஞ்சும் படிகண் டழுவித்த வாண்டகையோ (உ)

(* * * *)

End:

செல்லலறுத்த சிவப்பிரகாசனே
தொல்லைமறைதேர் சொரூபானந்தச்சுடரோ (46)
சேய்வந்த வானவருங் காணாத சேவடியான்
வாய்வந்தவர்புகழ வாழும் பெருமானே (47)

திருத்தாலாட்டு முற்றிற்று.

(கு-பு.)—

இந்நூல் சொரூபானந்தர் விஷயமாகத் தத்துவதேசிக நாயனா(தத்துவரா யர்)ரால் இயற்றப்பெற்றது. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுளொ ன்று. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1559. நவசங்கை விவேகம்.

NAVAŚAṄKAI VIVĒKAṀ.

Pages, 13. Lines, 8 on a page.

Begins on fol. 222 *a*. of the MS. described under No. 1231.

Complete.

A treatise bearing on Advaita Vēdānta. It gives the teachings of Uddālaka to his son Svētakētu as based on the nine illustrations given in the Chandōgyōpaniṣad to clear the doubts in regard to the relation of the Individual soul to the Supreme Brahman. The name of the author is not known.

Beginning:

உத்தாலகருடைய மகன் சுவேதகேது ப(ன்)னி[ெ]ரண்டு வயது மட்டாய் வித்தை ய[ற்](ப்)பி(ய)சியாமல் விளையாடித்திரி[யு](கி)ற மகனைப் பார்த்து, உத்தாலகரானவர், தம்பீ ! நீ சாத்திரம் படியாவிட்டால் மூடனாய்ப்போவாய்; சாத்திரமப்பியாசம் பண்ணென்று சொல்ல, நீர்தாமே சாத்திரஞ்சொல்லுமென்று மகன் கேட்க, சாத்திரப் பாடஞ் சிட்சையில்லாமல் வாராது ; நீ எங்கேயாகிலும் படித்துவாவென்று சொல்ல,

(* * * *)

தம்பீ ! நீ யேதேது சாத்திரம் படித்துவந்தா யென்று கேட்கச், சகல சாத்திரமும் படித்தேனென்று சொல்ல, நல்லது யாதாமொன்றையறிந்தா லறியப்படாத பொருளை அறியப்படும் ? யாதாமொன்றைக் கேட்டாற் கே[ழ்](ள்)விக்கெட்டாத பொருள் கேட்கப்படும் ? யாதாமொன்றை மனனம் பண்ணிணல் மனனம் பண்ணப்படாத பொருள் மனனம் பண்ணப்படும்? இப்படிப்பட்ட வித்தை அ[றப](ப்பிய)சி[சசு](த்து)வந்தாயோ வென்று கேட்கச், சுவாமி[ஞ]நானறியேனென்று சொல்ல இது தெரியாதபோதே நீ யொன்றுமறிந்தவனல்லவென்று சொன்னார்.

End:

கன்மந்[து](தொ)டரமாட்டாது ; அவனைச் சகலரும் பூசிப்பார்கள். அப்படிப்பட்ட ஞானியினு(டை)ட(ய)பெருமையை யின்னபடி (யென்று) திரிமூர்த்திகளாலேயும் சொல்லப்படாது; அவர் சுகம் போ[ை]த சொரூபமாகவே இருப்பாரென்று சொல்ல, அது கேடடு(ச்)சுவேதகேது(வு)ந்தி[ற்](ருப்)தியடைந்து (. . . . .) சாந்தோக்கிய சுருதியிற் சொல்லப்பட்ட நவசங்[கை](கி)யா விவேகத்தைச் சகலரும் விவேகித்தறிந்து சுகம் போ[ை]த சொரூபமேயாகக் கடவர்(க)ள்.

(கு-பு.)—

இது, சாந்தோக்கிய வுபநிடதத்திற் கூறியுள்ள நவசங்கியா விவேகமென்னும் விஷயத்தை உத்தாலகர் தன்மகனாகிய சுவேதகேதுவிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. இந்நூல் அத்துவைத வேதாந்த விஷயமானது. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1560. நாதாந்தசாரம்.

NĀDĀNTASĀRAM.

Pages, 22. Lines, 6 on a page.

Begins on fol. 19 *a* of the MS. described under No. 1158.

Contains 1—71 stanzas complete, and 72nd incomplete.

A treatise bearing on Advaita Vēdānta and explaining the significance of the Praṇava. The name of the author is not given.

Beginning:

நாதாந்த[ச்]சாரம்.

வையகம் வாழவென்று வாதகாலியமனுலே
அய்யனென்றுரைக்க் நந்தியஞ்சலி பணிந்துகே[ழ்](ட்)க
மெய்யுருகுழலாள் ஞானம் வள(ர்)ந்திடும் வா(ழ்)வுண்டாகுங
கையிலே கோட்டையேந்துங் கணபதி காப்புத்தானே.

அரியென வோதுகின்ற வாதியாமட்சரத்தை(த்)
தெரியவே யறிவிலா[ற்](ர்)க்குச் செப்பு[ஞ](நா)தாந்த[ச்]சாரம்
உரியதோர் பொருளீதென்று வு[த்து](ற்று) நான் கூறுதற்கு(க்)
கரிமுகக் கடவுளான்[ந்]தன்கழலி[ணே](ணே)க் காப்புக்கொள்வாம்.

அகாரமா முதலாவுள்ள [அன்](வைம்)பத் தோரக்ஷரத்தால்
சிகாரமா மெழுத்தஞ்சாலுஞ் செப்பியவேதநான்கால்
பகாரமாஞ் சமயத்தாலும் படிந்திடும் பயன்களாலும்
திகரில்லா[த]வுண்மைய்யன்றே நிகழ்த்துவோம் நினைந்துபாரீர் (உ)

(* * * * *)

ஊமையெனு மெழுத்ததுவே யுலகீரேழு
　　மோங்கியபே ரொளியாகி யுதித்து நின்று
ஆமையெனு மெழுத்தாகி யகாரமாகி
　　யதினுள் ளே[றீ](ரீ)ங்காரமடங்கித் தோன்றி
ஓமெனவே பிரணவமா யுலகமெல்லா
　　முகந்தளிக்கு முறைமையவளாய்த் தோன்றி நின்று
ஆமெனவே யகார வுகாரமகார
　　மானதொரு சோதியை நீ யறிந்துபாரே (ச)

End:

வித்து மரத்து . . . . வோக விளங்கு மிகப்பூப் பிஞ்சுடனே
அத்தே காயுங் கனியாகி யகண்டமேமு மதுவாகிச்
செத்தே பிறக்குஞ் சத்திதனைத் தெளிய வுணர்ந்து கொண்ட பி(ன்)பு
வித்திலடக்க மரமென்று விளங்க வெணக்கு உரைத்தாரே. (எக)

வித்துமரமு மொன்றல்லால் வேருய் நின்றவிடமில்லை
வித்திலடங்கி . . . .

(கு-பு.)—

இந்நூல் அத்வைத வேதாந்த விஷயமானது. பிரணவத்தின் ஸாரமான பொருள் இன்னதெனத் தெரிவிப்பது. இது எத்தனை பாக்களாலாகிய தோ தெரியவில்லை. இந்தப் பிரதியில் எழுபத்தொரு பாடல்களும் எழுபத்தி ரண்டாவது பாடல் முற்றுப் பெறாமலும் உள்ளன. செய்யுள் நடை சாதா ரணமானது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை,

---

No. 1561. நாதாந்தத்திறவுகோல்.

NĀDĀNTATTIṞAVUKŌL.

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 212 *a.* of the MS. described under No. 802.

Incomplete.

A treatise describing the transcendental nature of Iśvara and the yogic mode of realising Him as the supreme essence of Praṇava. The name of the author is not given.

Beginning

[யி](இ)ரு[லொ](ளொ)ளி வெளிமூ[ண்](ன்)ருகி யியங்குமுப்
பாழுக்கப்பா[ல் ப்](ற்)
பெருவெளி கயிலைமீதே பே[ரு](ரா)ளியாகி யெங்குங்
குருவழிக் குலத்துக்கெல்லாங் கோதிலா ஞானமான
திருவருளுருவ மென்னுந் திருவடி நெஞ்சுள் வைப்பாம். (க)

முப்ப(ா)மு மூன்று மாய்கை முப்பதின் மூன்றுவட்ட
மப்பாலு மிப்புறத்து மாநந்த மயமாய் நின்று
தப்பாமலுலகுக் கெல்லாந் தானவனை சோதி
வை[ய]ப்பாக[யெ](வெ)ந்தனுச்சிவட்டத்தே வைத்த[ன]
(நா)தன் (உ)

End:

அடிமூல நடுமூல[அனு](மநா)தி மூலம்
அகாரவுகா(ரம்)மிரண்டு மானமூலம்
முடிமூலம் நடுமூலம் முற்[றி](று)மூல
மலமூன்று வட்டமுப் பாழாம் மூல(ப்)
படிமூலமாகியதோ(ரா)ருதாரப்
படி கடந்தபேரொளியாம் பரமமூலம்
அடிமூலமாகியதோரகாரந் தன்னால்
அத்தனார் வடிவதென் றறிவார் நல்லோர் (சக)

(கு-பு)—

இதில், நாததத்வாதீதமான ஈசுவர சொரூபமும் அதைத் தியானித்து நோக்கி அனுபவிக்கும்வித முதலியனவும் விளங்கக் கூறப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரதியில் இது முற்றுப் பெறவில்லை. இதை இயற்றியவர் பெயர் புலப்படவில்லை.

No. 1562. நாதாந்தநோக்கம்.

NADĀNTANŌKKAM.

Pages, 18. Lines, 9 on a page.

Begins on fol. 12*a* of the MS. described under No. 1214.

Complete.

A treatise consisting of 35 stanzas and similar to the work dercribed under the previous number in regard to subject matter.

Before the beginning of the work, a stanza in praise of Goddess Sarasvati taken from some other work is found written.

Beginning :

> [பொ](பு)த்தகம் படிகமாலை குண்டிகை[ப]பொருள் சேர்ஞான
> வித்தகந்தரித்த செங்கை விமலையயமலை தன்னை
> மொய்த்த கொ[னா](ந்)தளகபாரக்கிணைமுலைத் தவளமேனி
> மைத்தகு கருங்கட் செவ்வாயணங்கினை வணங்கல் செய்வாம்.

வாக்குமனமுந் தான்கடந்து வானாய்நின்று வான்புறத்தே
தாக்கும் வெளியிலொளியாகித் தானாய்நின்ற தற்பரத்தை
நோக்கும் பெரியோர் புவிமீதில் நோக்கார் மா(ை)ய[கை]தனைநுகரார்
போக்கும்வரவுமற்றிடத்தே பொருந்தியிருப்பர் பொன்னம்பலமாய் (உ)

End :

நாலுமறையுந் தேடரிய ஞானச்சோதி திருவடியைக்
காலுங்கன(லு)ங்கதிர் மதியுங்கடந்த வானவெளியினிலே
மேலுங்கீழுந் தானாகி விளங்குஞ்சோதி மெய்ப்பதத்தைச்
சீலமுடனே சென்னியின்மே[ல்த்தெ](ற்றெ)ளிய நோக்கும் பெரியோரே.
(௩௫).

Colophon :

நாதாந்த நோக்கம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. யோகத்திலமர்ந்து ஈசுவரனை நோக்கும் விதமும், அவ்வாறு நோக்கினோரடையும் பயனும், ஈசுவரனுடைய நிலையும் இதில் விளங்கக்கூறப்பெற்றுள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 1563. நாற்கரணவுபதேசம்.

NĀṞKARAṆAVUPADĒŚAM.

Pages, 27. Lines, 6 on a page.

Begins on fol. 137*a* of the MS. described under No. 250.

Complete in 27 stanzas.

A treatise explaining the nature and characteristics of the four instruments of knowledge among the 96 Tattvas, viz., Cittam, Manas, Buddhi, and Ahamkāram and the manner of getting rid of these for the realization of Śivā. By Ulāhappa Tambirān.

Beginning :

குருபரனேங்கரன்றேவி வல்லபையைப் போற்றிக்
குரவனயன் சர[சோ](சுவ)தியம்[மனே](மைமை)யும் போற்றி
யிருவர்பதிமேல்மாலு மிலக்குமியைப் போற்றி
யெரிமுகருத்திரன்றேவிய[ரி](ரு)த்திரியைப் போற்றி
யருவமயேசுரன்றேவி மயேசுவரியைப் போற்றி
யந்த சதாசிவன்றேவி மனேன்மணியைப் போற்றி
யொருவரையுமறவாத வுலகப்ப தம்பிரா
னுதவிய நாற்கரணவுபதேசமிதுவாமே. (க)
(* * * *)
தத்துவமென் பதுகருவி தொண்ணு[த்தா](ற்று)திற்
சாற்றுவது நாற்கரண மேதோவேன்னிற்
சித்தமனம் புத்தியாங் காரமென்று
செப்பிடுவா ரதன்பெருமை செப்பமாட்டார்
கற்றவனே யறிசிவமே சித்தமாகுங்
கருதுமன நதனிலுதித்த புத்திபாங்கார
மித்தையறிந்தவர்களு மெ(ய்)ஞ்ஞானியாவ
ரீதறியாதார்தாமுமனந் தன்னேயறியாரே. (ரு)

End :

ஊணுறக்க மற்றபரங் கண்டிதமாமென
றுரைக்குமறை தனிலுதித்தவோவியந்தான்
காணுறநின் றரன்சிவனே நல்வான்மாவைக்
கண்களிக்கக் கண்டுகலேமுப்பத்திரண்டுந்
தோணுறக்கண்டுரைத்தநாற் கரணவுபதேசஞ்
சொல்லெனக்கேட் டோர்படித்தோரிந்தநூலே
வேணுமென்றே யெழுதினவரிவர்தாமெல்லா
மிகவறிவுபெற்ற மெ(ய்)ஞ்ஞான குருவாமே. (உஎ)

சற்குருவே துணே.

(கு-பு.)—

இதில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களின் தன்மைகளும், அவற்றை யொழிக்குமுபாயங்களும் விரிவாகக்கூறப்பட்டுள்ளன. 27 விருத்தங்களேயுடையது. உலகப்ப தம்பிரான் என்பவரியற்றியதெனப் பாயிரத்தால் தெரிகின்றது. இந்தப் பிரதியில் இது முற்றுமுளது.

No. 1564. நாற்கரணவுபதேசம்.

NAṞKARAṆAVUPADEŚAM.

Substance, palam-leaf. Size, $11\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages. 9. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good. Appearace, new.

Begins on fol. 8*a*. The other works herein are Bhōgar Vaḻalai Śūttiram 1*a*. Śuriyānandar Śūttiram 3*a*.

Wants the last seven stanzas.

Same work as the above.

Colophon:

நாற்கரணவுபதேசம் எழுதிமுடிந்தது.

The scribe adds.

துளாகும்கூவுஸ் டிசம்பர்மீ சவு வேங்கடாலேக்குச் சொந்தம்.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. ஆயினும் இதில் இருபது செய்யுட்களே யுள்ளன. இறுதிப் பாடல்கள் எழும் இல்லே.

No. 1565. பஞ்சதசப்பிரகரணம்.

PAÑCADAŚAPPIRAKARAṆAM.

Pages, 276. Lines, 7 on a page.

Begins on fol. 1a. of the MS. decribed under No. 1423.

Complete.

A treatise on Advaita Vēdānta based on and closely following the sanskrit work Pañcadaśī of Vidyāraṇya—Vide No. 4613 of vol. IX of D.C.S. MSS. It is in the form of a doubt raised and answered. The Dīpa portion is first dealt with here, and then the Vivēka portion, and in the end the Ānanda portion. The sub-divisions are the same as those found in the Sanskrit work.

Beginning:

பஞ்ச[ெ]தசப்பிரகரணம்.

(1) சித்திர தீபம்.
(2) தி[ற்](ருத்)தி தீபம்.
(3) கூடத்த தீபம்.
(4) தியான தீபம்.
(5) நாடக தீபம்.
ஆக, தீபம்-ரு.
(6) தத்துவ விவேகம்.
(7) பஞ்சபூத விவேகம்.
(8) பஞ்சகோச விவேகம்.
(9) தெர்ய்த விவேகம்.
(10) மகாவாக்கிய விவேகம்.
ஆக விவேகம்-ரு.
(11) யோகானந்தம்.
(12) ஆ[ற்](ன்)மானந்தம்.
(13) அத்துவிதானந்தம்.
(14) வித்தியானந்தம்.
(15) வி[ை]ஷயானந்தம்.
ஆக ஆனந்தம்-ரு.

ஆக அத்தியாயம்-யரு.

பஞ்சதப்பி[ற](ர)கரணம்

முந்தின பி[ற](ர)கரணம் சித்திரதீ[வி](பி)கை.

வித்தியாரண்ணிய சுவாமிகள் லோகானுக்கி[ற](ர)க நிமித்[திய](த)மா, ய்(ச்) சகல வேதாந்தத்தினுடைய பொருளெல்லாம் மனதிலே சேகரிச்சுக் கொண்டு சகல வேதவேதாந்த மெல்லாம் அதிகரிக்கமாட்டாத பேருக்கும்; சகல வேதாந்தமெல்லாம் படிச்சாலும் அதி[னிட](னுடைய) அ[ற்](ர்த்)தந் தெளிந்து அறியமாட்டாத பே[ற்](ர்க்)கும் சகல[ற்](ர்க்)கு மெளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப் பொருளேக்கண்டு அனுபவித்து மோட்ச மடையத் தக்க[ஜயா](தா)க சகல வோதந்த சம்மதிப்படிக்கு தம்[மிட]

(முடைய) மனதிலேயிருக்கிற பி[று](ர)மானு[போக](பவ)த்தைப் பஞ்ச[தி](த)சப்பி[ற](ர)கரணத்தினாலே வெளிபண்ண வேணுமென்று பதினைந்து பி[ற்](ர)கரணத்துக்குள்ளே முந்தின பி[ற](ர)கரணத்தினாலே அத்தியாரோபம், அபவாத மென்கிற (இ)ரண்டு நியாயத்தையுந் தழுவிக்கொண்டு பரமா[ற்](ன்)மாவினிடத்திலே ஆரோ[வி](பி)க்கப்பட்டிருக்கிற செகத்தினுடைய ல[ஷ்ஷ](ட்ச)ணம் சித்திரமேயல்லாமல் உண்மையல்ல வென்கிற[த்]தைச் சித்திரபட திட்டாந்த முக[னையா](மா)க வெளிபண்ணினபடி ;—[பி](பு)டைவயிலே சித்திரம் ஆரோபிக்கப்பட்ட[ப்](ற்)போல பரமான்மாவாயிருக்கிற தன்[னிட](னுடைய) [சு](சொ)ரூபத்திலே சீவன், செகத்து[யீ](ஈ)சுவரன் என்னப்பட்ட சித்திரமும் ஆரோபிக்கப்பட்டதென்றறிய. சித்திரப்படந்தானே தானாயிருந்தால் வெளுத்தபடமென்றும் கஞ்சிபூசினால் பசைப்படமென்றும் (. . . . .) கண்டா[ப்](ற்)போல பரமான்மாவுக்கும் நாலவத்தையேது; அதுக்கு உபாதியேது என்கிற சங்கைக்கு பரமான்மாவும் ஒரு உபாதியுமற்றுத்தாமாயிருக்கும்போது சித்தென்றும், மாயையோடே கூடினால் அந்தர் யாமியென்றும், சமட்டி சூக்ஷமபூத சரீரத்தோடே கூடினால் சூத்திரான்மாவென்றும், சமட்டி தூலபூத சரீரத்தோடே கூடினால் விராட்புருடனென்றுஞ் சொல்லப்படுவானென்று உத்[தி](த)ரம்.

End:

பெந்தத்துக்கு உபாதி[ய](க)ளெ[து](வை)? அந்த உபாதி[ய](க)ள் எ[தி](த)னாலே துடைபட்டது ? பி[று](ர)மம், நிரு [உ]பாதியாய்த் தோற்றுகிறது எதனாலே ? என்கிற சங்கைக்கு :—சாந்த விருத்தி கோரமூடவிருத்தி சிலைமுதலான செடங்கள்[யி] (இ)துகளெல்லாம் பெந்தத்துக்கு உபாதியோகத்தினாலும் (. . . . . .) சுயம் பிரகாசமாயிருக்[கு](கி)றபி[று](ர)ம தத்துவம் அகண்டானந்த•வடிவாய்த் தானாகவே விளங்குமென்றுத்தரம்.

இப்படி(ப்)பி[று](ர)மானந்தத்துக்கு வழி பாடாகத்தானே வி[ஸை]ஷயானந்தத்தை நிரூபிச்சோம். இது வழியே எல்லாரும் மோட்சத்தையடையக் கடவா(ர்க)ள்.

Colophon:

௰௫-வது விஷயானந்த முற்றும்.

ஆகப்பஞ்சதசப்பி[ற](ர)கரண முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வடமொழியில் வித்தியாரணியரியற்றிய பஞ்சதசி யென்னும் நூலைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளது. அத்வைதமதத்தைச் சார்ந்தது. தடைவிடை ரூபமாகவுள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. சித்திரதீபம் முதலாக விஷயாநந்த மீறாகவுள்ள பதினைந்து பிரிவினையுடையது. அத்வைதமதத்தின் கோட்பாடுகள் பல இந்நூலினால் எளிதில் புலனாம். இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன.

No. **1566**. பஞ்சதசப்பிரகரணம்.

PAÑCADAŚAPPIRAKARAṆAM.

Pages, 231. Lines, 7—8 on a page.

Begins on fol. 143 *a* of the MS. described under No. 1506.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1567. பஞ்சதசப்பிரகரணம்.

PAÑCADAŚAPPIRAKARAṆAM.

Substance, palm-leaf. size, 7 × 1⅛ inches. Pages, 329. Lines, 7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது.

இதில்,

" சித்திரதீபிகைபபடத்திற் சேர்ந்திடு சூத்திரந்தா
னித்திய . . . . . த்தனுகி தி[ற்](க)ழ்வதிலான்ம நாடால்
தத்துவ விவேகமான சாதனையறியும் பஞ்ச
பெ[த்தி](ற்றி)யார் பஞ்சகோசந் துவிதமாம் பிரம வாக்கியம் "

என்னுஞ் செய்யுளை முதலாகக் கொண்ட ஐந்து பாடல்கள் 'பாயிரம்' என்னும் பெயருடன் காணப்படுகின்றன. இந்தப் பிரதியில் நூல் முற்றுமுள்ளது.

No. 1568. பஞ்சதசப்பிரகரணம்.

PAÑCADAŚAPPIRAKARAṆAM.

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 14 *a* of the MS. described under No. 1061.

Contains the Mahāvakyārtha which is the last section in the Vivēka portion of the Pañcadaśprakaraṇa described above.

Beginning :

வித்தியாரண்ணிய சுவாமிகள் மகா வாக்கிய விவேகஞ் சொல்லும்படி:—மகா வாக்கியமென்பதெத்தனை? அந்த வாக்கியங்கட்கு அ[ற்](ர்த்)தமேதென்கின்ற சங்கைக்கு, நாலு வேதங்களினும்

End :

இப்படிச் சுயம்பி[ற](ர)காசமாகவிருக்கின்ற வா[ற்](ன்)மாத்தானே பி[று](ர)ம மல்லாமல் வேறென்று மல்லவென்று அதர்வணவேதஞ் சொல்லு[கு](கிற)தென்று முத்தரம்.

Colophon :

மகாவாக்கியமுற்றும். தெட்சணாமூர்த்தி குருவே நமஃ

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூலின் பத்தாவது பிரிவாகிய மகா வாக்கியப்பிரகரணம் மாத்திரமுள்ளது.

No. 1569. பஞ்சாதிகாரவிளக்கம்.

PAÑCĀDIKĀRAVIḶAKKAM.

Pages, 32. Lines, 7 on a page.

Begins on fol. 57*a* of the MS. described under No. 1185.

Incomplete.

A treatise dealing with the five different functions of God, *viz.*, creation, sustenance, destruction, etc. By Cidambarasvāmigaḷ of Tiruppōrūr.

Beginning:

(முகமதியுங்)கட் கடவுங் களவளேயு முத்தரிக முகபடாத்துப்
புகர்மதமா மழகளிறு(ங் கரமலர்க்)கற்பகத்தருவும்பொருவில் பாதத்
திகழுறுபங் கயநிதியுந்தோன்று பரை(ப்பாற்கட)விற் சிறந்துதோன்று
(பு)கலருமைங் கரவமுதை யுளங்குளிரப் பூரி(த்தேயுவ)கை பூப்பாம்.

* * * *

கருவிகளோடிற்று . . . . சடமருவுஞ் சீவன்
கருதறுவதற்செயலா யொன்றறியா திங்கிவையை,
மருவியந்த . . . சித்தோரிரண்டிற்குந் தொழிலு
மன்னறிவுந் தன்னருளால் வருவிப்பனிறைவன்
புரைவ(று)வாகையினு லவ்விறையருள் கொண்டடியேன்
புகல்குவன் பஞ்சாதிகாரவிளக்க மென்றி[ன் னூ](ந்நூலே)ப்,
பரவுரவோர் கொள்ளுவரெள்ளா ரெதுவுமிறைவன்
பணியெனவே யெச்செயலும் பரன்செயலென் றுனலால். (சு)

* * * *

ஆருயிர்கட்கிறை தொழிலாலென் பனிங்கென்னி
லவ்வுயிர்கட் கீரறிவுண்டதி விடையவறிவுஞ்,
சோர்வறுநற் சொருபவறிவெனவுமவை தம்மைத்
துகளிருகூறுய்மூடுஞ் சொல்லரிதாய் நின்றே,
எர்விடையா வராக நற்சொரூபவ ராகமென்
றவ்விருளா லவ்வுயிர்களெண்ண வருந்தமையுந்
. . . மவ்விறைவனேயுஞ் சிறிதேனு மறியாச்
செய்திதனக் குறைதருமோர் திட்டாந்தங்கேளே. (௯)

End:

அளவறுநாட் பிறவியிட[ற்](ர்க்) கடலலேயி . . . . ந்த
வடியேனைத் தூக்கி நுமதருணடனங்காட்டி,
யுளமகிழ்வுற்ற . . . .

* * * *

(கு-பு.)—

இது இறைவனுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலிய ஐந்தொழில்களைப் பற்றிக்கூறுவது. ஏடுகளிற் பல ஒடிந்தும் சிதைந்தும் ஈற்றிற் சில ஏடுகளில்லாமலும் இருத்தலின் விஷயங்கள் செவ்வனே புலப்படவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் அபூர்த்தியாய் உளது. இது திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளால் இயற்றப்பட்டது.

No. 1570. பஞ்சாதிகாரவிளக்கம்.

PAÑCĀDIKĀRAVIḶAKKAM.

Pages, 18. Lines, 12 on a page.

Begins on fol. 35*a* of the MS. described under No 1194.

Contains 1 to 26 stanzas.

Same work as the above; being a copy made from it.

(கு-பு.)—

இது முன் பிரதியைப்பார்த்து எழுத்தப்பட்ட பிரதி. எழுத்துப் பிழைகள் மிகுந்துள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் இருபத்தாறு பாடல் வரை எழுதப்பட்டுள்ளது. பின்னர்ப் பதினேழு பக்கங்களில் திருமங்கை மன்னனியற்றிய பெரிய திருமொழியின் பாடல்கள் சிலவும் வேதாந்த விஷயமான பாடல்கள் சிலவும் எழுதப்பட்டுள்ளன.

No. 1571. பஞ்சீகரணக்கட்டளை.

PAÑCĪKARAṆAKKAṬṬAḶAI.

Pages, 18. Lines, 7 on a page.

Begins on fol. 152*a* of the MS. described under No. 1482.

Complete.

This work is in prose and deals with the quintuplicatory manifestation of the phenomenal universe in the noumenal Brahman. For a similar Sanskrit work see under No. 4635 of the Descriptive Catalogue of Sanskrit MSS. The name of the author is not given.

Beginning:

பஞ்சீகரணக் கட்டளை.

வேதாந்த சாத்திர வ[ற](ர்)த்தசாம் பி[ற](ர)தாய ஞானேக சித்தாந்தம் கானலி(லே சலப்பிராந்)தி எப்படியோ, சுத்தியிலேர[சி](ச)தப்பிராந்தி யெப்படியோ, ரச்சுவிலே ச[ற்](ர்)ப்பிராந்தி எப்படியோ, ஒரு சந்திர(னிரண்)டாக் காண்கிறதெப்படியோ அப்படியே பொய்யாய்த் தோன்றுசிற தேகாதிப் பிர[வ](ப)ஞ்சமில்லாமலிருக்கிற தன்னிடத்திலே, மூலப் பி[றகுற](ரகிரு)தி, மகத்(தத்)துவம், ஆங்காரதத்துவம், பஞ்சதன்மாத்திரை, தூலசூட்சுமாதி செகப்பிராந்தி தோ[ணுகு](ன்றுகி)றது.

End:

இது முதலான சகல ஆரோ[ப்]பிதங்களுஞ்சசவிஷாணாதிகள்போலே காலத்[திறையத்]தி[றை](ர)யத்திலேயுந் தனக்கில்லை. ஆனால், தன்னுடைய சொரூபமெப்படி யென்றால், சாட்சி சாட்சியாதீதமாய் நினைப்பு மறப்பில்லாமல் ஞானாஞ் ஞானமில்லாமல் தூஷிணீம் பூதனாயிருக்கிற சுகசொரூபம் குருவாக்கியத்தினாலே தானென்றறிஞ்சு நின்றதே மூலப்[பிறகுறு](ரகிரு)தி

ரகிதமாயிருக்கிற தன்னுடைய சுகசொரூபம். இதுக்குத் தி(ரு)ஷ்[ட்]டாந்[திர](த)ம் பத்துப்புருஷ[ர](ர்க)ள் ஆற்றிலேயிறங்கிப் போ(கி)ற தி(ரு)ஷ்[ட்]டாந்[திர](த)ம். தெத்தாத்தி[ரை](ரேய) தேசிகாய நம[ர]ஃ

Colophon:

பஞ்சீகரணக் கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. வேதாந்திகளாற் கூறப்படும் பஞ்ச பூதகாரியமாகிய பஞ்சீகரணமும், தூலசூக்குமாதி சரீரவிலக்கண முதலியனவும் இற்நூலிற் கூறப்பட்டுள. நூல் வசனநடையாலாயது. ஆசிரியர் இன்னரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுப்பெற்றிருக்கிறது.

No. 1572. பராபரநிலை (சூத்திரவெண்பா).

PARĀPARANILAI (SŪTTIRAVEṆBĀ).

Pages, 5. Lines, 8-9 on a page.

Begins on fol. 92*a* of the MS. described under No. 1214.

Complete in eleven stanzas.

A treatise in Advaita Vēdānta explaining the supreme and all pervading nature of Brahman in every respect.

Beginning:

ஆதிமுத லந்த மருரூப மாகாச
மாதிமுத லண்டவெளி யானதே—யாதிமுதல்.
மாநடன மாடமன மாமோக மாகிவிடை
மாநடன மாடுமய லான். (க)

End:

நந்தைதாய் பிள்ளை தலைமுறையொன் றுயிருக்கும்
விந்தைதாய் பிள்ளை விளையாட்டுச்—சிந்தையாய்
வெளியில் வெளிபோய் விரவிய தெங்கும்
அளியி லொளியா மருள். (கங)

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது. ஈசுவரனுடைய பராபர நிலை (எல்லாவற்றிற்கும் அதீதனாய் ஸர்வவியாபியாயும் இருக்குந் தன்மை)யைக் கூறுவது. பதினொரு பாடலாலாயது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1573. பராபரநிலை.

PARĀPARANILAI.

Page, 10. Lines, 9 on a page.

Begins on fol. 70*a* of the MS. described under No 1214.

Complete.

Contains all the eleven stanzas of the work described under the previous number together with 10 stanzas of Sūttiravenbā vide No. 1502 *ante.* At the end there are 3 stanzas unconnected with the work and written in Kaṭṭ̤laikkalitturai metre.

(கு-பு.)—

இதில் முன் பிரதியிலுள்ள 11 பாடல்களும், 'சூத்திரவெண்பா' (1502) என்னுந் தலைப்பின்கீழ் வந்துள்ள பிரதியிலிருக்கும் 10 பாடல்களும் ஆகிய 21 பாடல்களும் முறை பிறழ்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றுட் சிலவற்றிற் சில பாடபேதங்களுங் காணப்படுகின்றன. இதன்பின் மூன்று கட்டளைக் கலித்துறைகள் உள.

No. 1574. பரிபூரணசித்தி.

PARIPŪRAṆASITTI

Pages, 47. Lines, 6 on a page.

Begins on fol. 222 *a* of the MS. described under No. 1060.

Complete in 154 stanzas.

A treatise explaining the fourfold equipments necessary for attaining salvation as well as the different states of consciousness, etc.

By Paripūrṇar of Kānūr a place situated to the north of the river Maṇimuttānadi near Viruttācalam. The author praises his Guru Ñānappirakāśar and also Śivaprakāśar of Tiruvalansuḻi.

Beginning :

ஆதியா யந்தமாகி யறிவதாய்ப் பிறிதொன் றில்லாச்
சோதியா யனந்தமாகி(ச்) சுத்தமாய் நித்தமாகிக்
கோதிலா னந்தமாகிக் குருவுமா யுருவுகொள்ளு
நீதியா னிமலபாத[னி](நி)லைபெற ெ[ன](ந)ஞ்சுள் வைப்பாம். (க)

வேறு.

குருபாரம்பரியம்.

மருக்கமழ் பொழில்சூழ் மன்னுகோவத்த
மா[ன](ந)கர்மேவு மாதவனை
யிருக்கு[ன](ந)ன்முடி மேலிருக்குமின்னமுதை
யிரும்பிறப்[பிணையு](பு)ணர்ந்து வந்தடைந்தோர்
கருக்குழியணுகாவணமவர் பொருளுங்
காயமு மாவியுங் கவர்ந்து
திருக்கினை யொழித்தாள் திருவலஞ்சுழியிற்
சிவப்பிரகாசனைப் பணிவாம். (உ)

*   *   *   *

[னூ](நூ)ற்பெயர்.

ஆதலா விந்த[னூ](நூ)லை யசைவற வென்னையாண்ட
பாதனார் [ரு](நா)மத்தாலே பரிபூ[ற்](ர்)ணசித்தியென்ன
வோதுவாம் வேதாந்தத்தி னுட்பொருள் விளங்கவிஞஞன்
கோதிலா ஞானத்தன்பு செய்பவர் குறிக்குமாறே. (ங)

சாதன் சதுட்[டை]டயம்.

நித்தியா நித்தியவத்துவினை நிரூபித்திக பரலோகத்திற்
சுத்தா சுத்தபரபோகந் துறந்துசமதெம தொந்தத்தின
கொத்தா (ப)வையுமறவடக்கிக் குடும்பச்சுமைவிட்டடங்க வெறுஞ்
சித்தாய்நின்ற சிவனடியைச் சேரநினைவர் சிட்டர்களே. (மக)

End :

இறையை வியத்தல்.

தகாதனாளி தன்னையோர் தவிசின்மீதில் வைத்தயா
வகாதெலாம் வகுத்து வாழவைத்தவாறி தென்னனோ [நெக்
நகாவழா விழுந்தெழுந்து [னை](நை)ந்த[னை](நைந்து)நெக்[க](கு)
சுகோவகோ வசோவெ னவதிசயத் திறைஞ்சினன். (ாசடு)

* * * *

தென்பெரும் புலியூர்மேவித் தேசிகவேடஞ் சாற்றி
யென்பெருந் துயரந்திர வென்னையாட் கொண்டவெந்தை
நன்பெருங் கருணைவாரி ஞானப்பிரகாச [ஞ](நா)தன்
பொன்பெருங் கமலபாதம் புன்றலைமீது வைப்பாம். (ாருசு)

Colophon:

நாதமறைதேடரிய ஞானப்பிரகாசன்
பாதமலர்சூடு பரிபூரணனுரைத்த
போதவமுதூறு பரிபூ[ற](ர)ண சித்தி
[வோ](யோ)தியுணர்வார்கள் பிறவார்களிறவாரே. (ாருச)

பரிபூ[ற்](ர்)ண சித்தி எழுதி [னி](நி)றைவேறி[த்து](ற்று.)

பனித்தண் மாமலர் கொண்டு பதங்களில்
மனத்தின் மாசற வ[ற்](ாச்)னை யாற்றியே
யனைக்கொப்பா மெனை யாள்குரு பாதனை
நினைத்த போதுமென் னெஞ்சங் குளிருமே.

முத்து முதுகுன்ற முத்தனதி வடபால்
வைத்த புகழ்க் கானூர்வாழ வவதரித்த
பத்தன் (பரி) பூரணனுரைத்த பாமாலை
யித்தனையு மோதுவா[ற்](ர்க்) கெட்டுஞ் சிவ[ப்]பதமே.

திருச்சி[த்த](ற்ற)ம்பலம்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. விருத்தாசலத்தைச் சார்ந்த மணிமுத்தாநதிக்கு வடக்கேயுள்ள கானூரி லிருந்த பரிபூரணரென்பவரா லியற்றப்பட்டதென்று இந்நூற் பாடல்களால் தெரிகின்றது.

சாதன சதுட்டயம், சாக்ராதி அவஸ்தைகளின் தன்மை முதலியவற்றை விளக்குவதுடன், குருவை யடைந்த சிஷ்யன் உண்மைப்பொருளுணர்தற்குரிய மார்க்கங்களையுங் காட்டுவது. பாயிரமுள்படச் செய்யுளின் தொகை

நூற்றைம்பத்துநான்கு. நூன்முடிவின் பின்னர் 'பனித்தண்மாமலர்' 'முத்து முதுகுன்றம்' என்பவற்றை முதலாகவுடைய இரண்டு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக்கிறது.

No. 1575. பரிபூரணசித்தி.

PARIPŪRAṆAŚITTI.

Pages, 39. Lines, 9 on a page.

Begins on fol. 124 *a* of the MS. described under No. 325.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது, இந்தப்பிரதியில் இந்நூல் முற்று பெருக்கிறது.

No 1576. பரிபூரணசித்தி.

PARIPŪRAṆAŚITTI.

Pages, 5. Lines, 7 on a page.

Begins on fol. 144*a* of the MS. descrided under No. 325

Contains 1 to 10 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் முதற் பத்துபபாடல்கள் மட்டுமே உள்ளன.

No. 1577. பரிபூரணம்.

PARIPŪRAṆAM.

Substance, palm-leaf. Size, $7\frac{1}{8} \times 1\frac{3}{8}$ inches. Pages, 24. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 10 *a*. The other works herein are Kapilarahaval 1*a* Auvaipāḍal 5*a*.

Complete.

A treatise in prose in which a Guru inculcates on the mind of a disciple the self-sufficient nature of Brahman and the appearance of the phenomenal universe therein and explains to him the meaning of the Mahāvākya Tat Tvam Asi.

Beginning :

பரிபூ[ர]ரணம்.

அனாதி நி[று](ர்) விகற்பமாயிருக்கப்பட்ட சொரூபமெப்படி யிருக்கு மென்றால், அலையில்லாத சமுத்திரம் போலவும், காற்றில்லாத விடத்தில் விளக்கு அசைவில்லாமற் போலவும், [யெ]எங்கும் பரிபூரணமாயிருக்கும். அப்படிப்பட்ட சொரூபத்திலே யொரு இச்சை பிறந்தது. அந்த [யி](இ)ச் சைதானே மாயை யாச்சுது.

End :

பி[ற]ரம நீ யென்று அ[சு](சி)பதஞ் சொல்லும். அதுவே தத்துவ மசியாதி மகாவாக்கிய லட்சணம். தற்பத தொம்பத வாக்கியா[ற்]ர்த்தத் தில் அசிபதகண்டமாய் போதிக்கும்படி யென்றறிந்து, தத்துவம் பதவாக்கி யா[ற்]ரத்தம் என்றறிந்து, சி[வி](வே)சுவரர் அஷ்ட சரீரங்கள் திரிசிய மென் றறிந்து, ப[ற]ரப்பிரம[மா]சொரூபமாய், சுகமாயிருக்கச் சொல்லி, குரு சுவாமியார் அனுக்கி[ற]ரகம் பண்ணினார். சிவமயம்.

Colophon :

பரிபூரணம் முற்றும்.

(கு-பு.)—

இதில் பரிபூரணமான (எங்கும் நிறைந்த) பிரம்மஸ்வரூபமும் அதினின் றும் மாயை, பஞ்சபூதம் முதலியன தோன்றும் விதமும், பஞ்சபூதக் கலப் பும், பிரம்மாண்ட லட்சணமும் இவைபோல்வன பிறவும் விளங்கக் கூறப் பெற்றிருக்கின்றன. இந்நூல் இந்தப்பிரதியில் முற்றுப்பெற்றிருக்கிறது. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1578. பாடுதுறை.

PĀḌUTUṞAI.

Substance, palm-leaf. Size, $13\frac{3}{8} \times 1\frac{5}{8}$ inches. Pages, 220. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance old.

Complete.

A eulogy by Tattuvarāyar on his Guru Sorupānandar and on Śivappirakāśar the Guru of Sorupānandar. The principles of the Advaita Vēdānta are brought out in this work which consists of 138 small prabandas.

Beginning:

தத்துவராயர் அருளிச்செய்த பாடுதுறையிற்றிருவடிமாலை.

செழுந்தரணி தன்னிற் றிருவுருக்கொண் டென்னை
யுழுந்தருளும் போழ்தி னுணர்த்த—வெழுந்தருளி
வந்தவடி நாயேன் மனத்தால் வணங்கமதி
தந்தவடி யாளச் சமைந்தவடி—யந்தாத்து

வில்லும் வியன்கனவும் வெண்டேரு நீர்க்குமிழும்
புல்லு மதிலெழுத்தும் போலவே—சொல்லளவாய்ப்
பொனறு முடற்குள்ள பொல்லாங்கெ லாநினைந்து
நின்று நடுங்கிமிக நெஞ்சழிந்தே—னென்றுணையே
கோற்றேனே மாயைக் குரம்பைக்கூத் தாட்டவினி
யாற்றேனே யென்ன வளித்தவடி—யாற்றகிலாத்
தொண்டனேயா ளென்று தொழுது பழவடியார்
தெண்டனொடு விண்ணப்பஞ செய்யுமடி—கண்டருளித்
தஞ்சமொன்று மில்லாத் தமியேனைத் தன்னருளா
லஞ்சலஞ்ச வென்ற வமலனடி—மஞ்சனஞ்செய்
நீத்தங்கொண் டென்னை யடியவர்த நேயத்தாற்
றீர்த்தமாட் டிக்கொண்ட செம்பொனடி

(* * * *)

—ஈண்டுலகிற்

கையின் மணியென்ன யாவர்க்குங் கண்ணளிக்குஞ்
செய்யசொரு பானந்தன் செம்பொனடி—மையலாய்க்
கன்று மறுசமயக் கத்திற் கலையாம
லொன்று மொழிவற் றுளவெல்லா—நின்ற
படியே சிவமாக்கிப் பார்த்ததென்னை யாண்ட
வடியேனை யாண்ட வடி.

வடிவிலா மாயையால் வந்த பவத்திற்கு
முடிவிலா முத்திப் பொருட்கு—மடியோரி
னீண்ட பெருமா னிகளமறப் போதமளித்
தாண்ட பெருமா னடி.

திருவடிமாலை முற்றும்.

திருவருட்கழன் மாலை.

திருவார் செழுங்கமலச் சீராரும் பொற்று
ளருமா முனிவ ரமரர்—பெருமால்கொண்
டின்னஞ் சுவடொற்றிக் காணுதங் கேதமுற
முன்னை யொருமூவர் தாமுயல

(* * * *)

சிவப்பிரகாசா போற்றி சீமானே போற்றி
யவக்கடலு ளாழ்வேனை யாண்ட—தவக்கடலே
போற்றி சயசய பல்லாண்டு பல்லாண்டு
போற்றி சயசய போற்றீ.

(* * * *)

சிவசங்கீர்த்தனம்.

அளவி றந்தது வருள்சிவ சிவசிவ
அகநி றைந்தது வடியிணை சிவசிவ
வுளமி றந்துயி ருணர்வொடு பரமற
வொளிரு கின்றது சிவசிவ சிவசிவ

களவு துன்றிய கனகவென் னுளநிறை
கழல்க ளன்பது கரையிலே சிவசிவ
தெளிவி னன்குறு தெளிதரு மனுபவ
துதிதி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (௧)

(* * * *)

கருணை யம்புய முகமவர் சிவசிவ
கருணை யங்கட விருவிழி சிவசிவ
வருண யந்திடு மடியிணை சிவசிவ
வழகு துன்றிய வடிவது சிவசிவ
விருண யந்திடு மிடருறு பிறவியை
யெறியு மெந்தைதன் மறமது சிவசிவ
திருவுன்றன தருள்சிவ சிவசிவ
சிவதி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (௩0)

(* * * *)

சிர்ப்பாதவல்லபம்.

ஆபத் தனமாகு மாபத் துணையாகு
மாபத் தினைவேரோ டரியும் மயிலாகு
மாபத் ததுமேவா வரணம் மதுவாகு
மாபத் தறுசம்பத் தமலன் கழறுனே. (௧)

(* * * *)

நினைவற்றன வெல்லா நிகழ்வித்திடு மினபத்
தனமிக்கிடு ஞானத் தொடுநற்குண சீல
மினமுற்றிட நல்கு மெழினற் [சு](சொ)ரு பனதன
புனைபொற்கழ லன்புற் றவருட்பொலி வுற்றே. (௧௨)

(* * * *)

குயில்.

மேலே யமரர்க்கு மேலாம் விண்ணவன் மண்ணி லிழிந்து
மாலையுங் காலையு மில்லா வகையென் றலைமிசை வைத்த
காலே யருணற் கடந்த காலுடை யானையென் கண்ணைச்
சோலையில் வாழுங் குயிலே சொருபனை நீவரக் கூவாய் (௧)

(* * * *)

தன்னுடைச் சோதியிற் றுஞ்சல் பிறப்பற விந்தச் சகத்தே
மின்னிடை யாளொடுங் கூடி வேதிய வேடத்தின் வந்து
பொன்னடி கூட்டியென் னுள்ளே பூரண வானந்த மாக்கி
யென்னிடர் தீர்த்த பிரானை யிளங்குயிலே வரக் கூவாய். (௧௩)

End:

132-வாரணம்.

வினைவி லங்கு கழற்றிய வாரணம்
விரத கம்ப முறித்திடும் வாரண
மெனதி யானென் கணையை முறித்தெறிந்
தெங்கு மாமமிழ் தாகிய வாரணம். (௧)

(* * * *)

133-மெய்ஞ்ஞான விளக்கம்.

ஆடு பார்க்குதடா வாரக் கோனே
யடையப் படர்ந்துதடா வாரக் கோனே
யோடி மறியேடா வாரக் கோனே
யுள்ளே மறியேடா வாரக் கோனே. (க)

(* * * *)

ஆசர மிக்குநின் ருடாய் கோனே
யதிசய மிக்குநின் ருடாய் கோனே
சாதியை விட்டெறிந் தாடாய் கோனே
சதுரிணே விட்டெறிந் தாடாய் கோனே. (௫)

(* * * *)

ஒன்றேகாண் பெண்ணே யுலகம் பதினாலு
முள்ளது போதமென் ருடாய்கழ
லொழிவற நின்றேமென் ருடாய்கழல் (க)

இரண்டுகாண் பெண்ணே (யிடை)பிங்கலை
யிரண்டுமொன் ருனதென் ருடாய்கழ
லேகாந்த மானேமென் ருடாய்[தோழி] (கழல்). (உ)

(* * * *)

ஒன்பதாம் பெண்ணே யுள்(ளே)ள தெளிந்தபின்
மின்போலும் போதமென் ருடாய் கழல்
வேத முடிவதென் ருடாய்கழல்.

பத்துக்காண் பெண்ணே பரமே பரமாகப்
பற்றற் றிருந்தோமென் ருடாய்கழல்
பத்தி முடிவதென் ருடாய்கழல். (க0)

ஆடுங் கழலா மடியி லொளித்தக்காற்
றேடுவதில்லை யென் ருடாய்கழல்
திருவடி ய(ல்ல)தென் ருடாய்கழல். (கக)

Colophon :

முற்றும் பாடுதுறை முடிந்தது.

துர்முகிவரு பங்குனிமீ உஉ சுக்கிரவாரம் பூசநட்சத்திரத்தில் புதுவை அரியரபுத்திர உபாத்தியாயரெழுதி முடிந்தது.

(கு-பு.)—

இது அத்வைத சாஸ்திரக் கருத்துக்களமைந்த தநிநூல்; தத்துவ தேசிக நாயனர் (தத்துவராயர்) தமது ஆசிரியராகிய சொரூபானந்தர் மீதும், அவரது ஆசிரியராகிய சிவப்பிரகாசர் மீதும் இயற்றிய 138 சிறு பிரபந்தங்கள் இதிலடங்கியுள்ளன. இவை சிறந்த நடையாலாயவை. இப்பிரபந்தங்கள் அடங்கிய இந்நூல் முற்றும் அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

No. 1579. பிரமகீதை.

PIRAMAGĪTAI.

Substance, palm-leaf. Size, 10⅓ × 1⅜ inches. Pages, 188. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 56*a*. The other work herein is Ribhugītai 1*a*.

Wants some portion towards the end of the 8th Adhyāya and the 9th Adhyāya.

This work though in prose is similar to the one described under No. 1506 ante and explains the significance of the Vēdas and the Upaniṣads. It is divided into 12 Adhyāyas, the names of which are given in the Tamil remarks below. The name of the author is not given.

Beginning :

பிரமகீதை முதலத்தியாயம்.

தேவதைகள் பிரமாவைத் தரிசித்தது.

நைமிசாரணிய வாசிகளாயிருக்கிற சகலமான ரிஷிகளுஞ் சூதரைக் கேட்கும்படி :

வாரீர் சூதரே ! சங்கிரகமாகவும் விஸ்தாரமாகவும் சகல புராணமுஞ் சொன்னீர். இப்போது ஒப்பில்லாத பிரமகீதை கேட்கவேணுமென்று இச்சித்திருக்கிறோம். சகல தத்வஞான நிதியாயிருக்கிற வேத வியாசருக்கு சிஷ்ய[னா](ரா)னபடியினாலே உமக்குச் சகலமும் தெரியுமே! எங்களிடத்திலே கிருபை உண்டானால் பிரஹ்மகீதை ஒருக்காற் சொல்லவேணுமென்று கேட்கச் சூதரனுக்கிரகிக்கும்படி :—

வாருங்கோள் ரிஷிகளே ! அப்படியே நாம் உங்களுக்குப் பிரமகீதையை ஆதரவாலே சொல்லுகிறோம். நீங்களுமதைச் சிரத்தையுடனே ஆதரவாய்க் கேளுங்கோள்.

பூருவத்தில் ஒரு கற்பாந்தத்திற் சகல தேவதைகளு மகாமேருவிலே கூடி வேதங்கட்கு அர்த்தம் ஏதோவென்று நெடுங்காலம் விசாரித்தார்கள். அப்படி யிருக்கவும் வேதார்த்தம் நிண்ணயப்படாமற் போச்சுது; இந்த வேதார்த்தம் வெளியாகிறதற்கு உபாயம் ஏதென்று விசாரம் பண்ணியதற்குமேற் ‘பிரமாவைக் கேட்கக் கடவோம்’ என்று நிண்ணயம் பண்ணிக்கொண்டுபிரமாவினண்டைக்குப் போனார்கள். (. . . . . . .) பிரமாவானவர் மகாமேருவின் கொடுமுடியிலே சகல யோகிகளாலும் (. . . . .) சரஸ்வதியுடன்கூட பிரமா யெழுந்தருளியிருந்தார்; அந்தச் சபையிலே சகல தேவதைகளும் போய்(ச்) சகல லோகநாயகராய் (. . . . . . .) சதுர்முகனைக்கண்டு மகா சந்தோஷத்தையடைந்து அலர்ந்த செந்தாமரைப் பூப்போல முகமலர்ந்தானந்த பாவசராயிருக்கிற தேவதைகள் உடம்பு மயிர்க்குச்செறிய வாக்குத் தழுதழுக்க அமிர்தத்திலே அழுந்தினபேர்

போல்சகல அஞ்ஞானங்களினும் விடுபட்டுப் பூதலத்திலே விழுந்து தெண்டன்பண்ணி(த்) தலைமேலே கைகூப்பிக்கொண்டு (. . . . .) தோத்திரம் பண்ணி(ச்) சகல வேதங்கட்கும் அர்த்தம் இன்னபடியென்று அனுக்கிரகம்பண்ணி யெங்களை ரட்சிக்க வேணுமென்று வேண்டிக்கொள்ள (. . . .) தேவதைகளுக்கு வேதார்த்தமெல்லாம் அனுக்கிரகித்தார்.

End :

இப்படி யவித்தை வந்து நசித்ததென்று விவகாரமாத்திரமே யொழிய சுபாவமாக இல்லை. பிரம சொரூபந்தானே பிரமசொரூபமாகத் தோற்று(கிற)து; வித்தை யவித்தையென்று முள்ளதில்லாதென்றுங் குரு சீஷனென்றும் தோற்றுகிறதெல்லாம்பிரமந்தானே யல்லாமல் மற்றொன்றல்ல. இப்படி(ச்) சகலத்தையும் பிரமமாகக் காண்கிறதுதானே பிரமத்தை யடைகிறதற்குச் சாதனமான பிரமவித்தை. செகத்தில் மாயையென்று காண்கிறது அஞ்ஞானம் (. . . . .). வாருங்கோள் இருடிகளே! இப்படி யதிசுத்தமாயிருக்கிற பிரமகீதையை யாதரவுடனே கேட்டவுங்களுக்குச் சொன்னோம். நீங்களும் சிரத்தாபத்தியுடன் கேட்டபேர்க்கு இதை அனுக்கிரகம் பண்ணுங்கோள் என்று சூதரும் இதமாகவே யனுக்கிரகம் பண்ணினர்; அந்த முனிவரும் பரதத்துவத்தை யறிந்தவர்களாய்(க்) குருவாயிருக்கிற சூதரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து (. . . . .) இருதயத்திலேயிருக்கிற பரமசிவனை யனுசந்தானம் பண்ணிக்கொண்டே யிருந்தார்கள்.

Colophon :

பிரமானுபவ வத்தியாயம் முற்றும்.

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது. ஆதியில் பிரமன் தேவர்களுக்கு உபதேசித்ததைச் சூதமுனிவர் நைமிசாரண்ய ரிஷிகளுக்குச் சொன்னதாக வகைந்துள்ளது.

(1)	தேவர்கள் பிரமனைத் தரிசித்த	...	அத்தியாயம்.
(2)	இருக்கு வேதார்த்த ...	...	,,
(3)	யஜுர் வேதார்த்த ...	...	,,
(4)	சுக்கில (யஜுர்) வேதார்த்த	...	,,
(5)	சாமவேதார்த்த ...	...	,,
(6)	சாந்தோக்கிய உபநிடத ...	...	,,
(7)	கடவல்ய வுபநிடத ...	...	,,
(8)	கைவல்யோபநிடத ...	...	,,
(9)	பிரகதாரணிய உபநிடத ...	...	,,
(10)	அந்தரியாமி ப்ராம்மண ...	...	,,
(11)	நாசிகேதோபநிடத ...	...	,,
(12)	பிரம்மானுபவ	...	,,

எனப் பன்னிரண்டு அத்தியாயங்களுடையது, இந்தப் பிரதியில் 8-வது அத்தியாய இறுதியிற் சிறு பாகமும் 9-வது அத்தியாயமுந் தவிர மற்றைப் பாகங்கள் பூர்த்தியாக உள்ளன. இதைத் தமிழில் இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1580. பிரமகீதை.

PIRAMAGĪTAI.

Pages, 216. Lines, 6 to 11 on a page.

Begins on fol. 2a of the MS. described under No. 1217.

Breaks off in the course of the 12th Adhyāya.

Same work as the above.

Before the commencement of this work, there is a stanza in the 1st leaf which begins with the expression Tiruvākkum.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப்பிரதியில் இந்நூலின் முதற் பதினோரத்தியாயங்களும் 12-வது அத்தியாய ஆரம்பத்திற் சிறிது பாகமும் உள. நூல் ஆரம்பிக்குமுன் முதல் ஏட்டில் 'திருவாக்கும்' என்னும் முதற் குறிப்பையுடைய வெண்பா ஒன்று எழுதப்பெற்றுளது.

No. 1581. பிரமகீதை.

PIRAMAGĪTAI.

Pages, 84. Lines, 28 on a page.

Begins on fol. 1a of the MS. described under No. 1435.

Same work as the above, being a copy made from it.

(கு-பு.)—

இது முன்பிரதியிலிருந்து காபி செய்யப்பட்டது. அதிலுள்ள அளவே இதிலும் உளது.

No. 1582. பிரமகீதை.

PIRMAGĪTAI.

Substance, palm-leaf. Size, 14⅜ × 1 inches. Pages, 208. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains the Adhyāyas 3 to 12.

Same work as the above.

In the first two leaves, some points are noted down under the title Sāttīkanāmapañcakam.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் மூன்றாமத்தியாயந் தொடங்கி முற்றும் உள்ளது. முதல் இரண்டேடுகளில் 'சாத்தீக நாம பஞ்சகம்' என்னுந் தலைப்பின்கீழ்ச் சில விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. முதல் மூன்று ஏடுகள் பாதி முறிந்துள்ளன. இந்தப் பிரதியில் முன்னையவற்றினும் பிழை நிரம்பவுளது.

No. 1583. பிரமவப்பியாசவட்டாங்கம்.

PIRAMAVAPPIYASAVAṬṬĀṄGAM.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 163*a* of the MS. described under No. 1482.

Complete.

A treatise in prose explaining the so called eight limbs of Yōga, viz. Yama, Niyama, Āsana, Prāṇāyāma, Pratyāhāra, Dhyāna, Dhārana, and Samādhi and stating that by the due practice thereof one can attain the Brahman

Beginning:

பிரமவப்பியாசவட்டாங்கம்.

பிரமவப்பியாச அட்டாங்க யோகவிதப் பிரமாணமாகச் சொ(ன்ன)து இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், காரணை, சமாதி என் றெட்டுவிதமாகச் சொல்லப்படும்.

இயம மென்றுற் றேகத்தோடே கூடின வி(ய)வகார மெல்லாம் ஒன்றைப் பார்க்கிறபோதும் ஒன்றைக் கேட்கிறபோதும் ஒன்றை நினைக்கிறபோதும் ஆகாசமாகப் பார்க்க ஆகாசமாகக் கேட்க ஆகாசமாக நினைக்க இந்த மூன் றிலேயுஞ் சகல ஜெகத்தும் நாசமாய் வேறென்றுந் தோன்றுமற் சொப்பிர காசமாய்க் காண்பிக்கும். (க)

நியமமென்றால்:—முன் சொன்ன ஆகாசமே விருத்திபோலே தோன்றி ணுலும் வெளிதானல்லோ? வெளியே சாட்சிச் சொரூபமென்று சாட்சியே பாதத்துவ மென்று குறையில்லாத சந்தோஷத்தை யடைந்து அந்த ஆத்மா வினிடத்திலே சிரத்தை யுண்டாயிருக்கிறது. (உ)

End:

சமுசாரத்தோடே கூடிக்கொண்டு இதிலே ஆசை விடமாட்டாமல் பிர மாப்பியாசம் பண்ணிக்கொண்டு முன்னுக்குச் சனங்களில்லாத படிக்கு இந்த அட்டாங்க யோகத்தைத் திடமாக அப்பியாசம் பண்ணின கிரகத்தரானவர் கள் தைரியத்தை யுடையவர்கள் (. . . . .) இந்தப்படி அனுபவம் யாதாமொருவர்க் குண்டோ அவர்களே சீவன் முத்தராய்ச் சொரூபத்தை யடைந்து அவர்களே பிரமசொரூப மாவார்கள்.

பிரமமே சத்தியம்.

Colophon:

பிரமவப்பியாசவட்டாங்க முற்றும்.

(கு-பு.)—

இது, இயமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாகாரம், த்யானம், தாரணம், சமாதி என்னும் அங்கங்களோடு கூடிய யோகாப்பியாசத்தால் ஆத்மாவுக்குண்டாகும் நன்மையையும், அதனால் பிரம்மஸ்வரூபத்தை யடை யக்கூடுமென்பதையும் விளங்கக் கூறுவது. வசன நடையாலாயது. இயற் றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்று மிருக்கிறது.

No. 1584. பிரமானந்தானுபவம்.

PIRAMĀNANDĀNUBHAVAM.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 165*a* of the MS. described under No. 1482.

Complete.

A treatise bearing on the Advaita Vēdānts. It deals with such subjects such as 'the nature and characteristics of the Jīvanmuktas, the unreality of the phenomenal world, etc.

Beginning :

பிரம்மானந்தானுபவப் பிரக்ரணம்.

சாதன சதுட்டைய முடைய அதிகாரிக்கு(ச்) சருவானந்த . . . . . த்தியும் பிரமானந்தத்தை அடை[யு](கி)றது மி[ெ]ரண்டு விதமுஞ் சித்திக்கிறப்போலே பிரமானந்தப் பிரகாரஞ் சொல்லுகிறோம். அஃதெங்ஙனென்னில் :—நாலுவேதமும் பிரமம் ஒன்றேயல்லாமல் மற்றொருவத்து வந்ததுமில்லை, போனதுமில்லை என்று சொன்னபடியினாலே காலத்திரயத்திலும் ஒருவத்து வந்ததுமில்லை போனதுமில்லை; ஆனால் விவகரிக்கிற பிரபஞ்சமென்னவென்றால் :—

ஏகமாயிருக்கிற பிரமமே ஆரோபித விவகாரத்திலே ஏழுவிதமாகத் தோன்றும்.

அஃதெப்படி யென்றால் சுத்த சைதன்னிய மென்றும், ஈசுவர சைதன்னிய மென்றும் ஏழுவிதமா யுபாதி பேதத்தினாலே விவகரிக்கப்படும்; இதிலே உபாதி கல்பிதத்தை விட்டுச் சுபாவந் தானாக இருந்தால் சுத்தசைதன்னிய மென்றும் அந்தச் சைதன்னியமே கற்பித மாயையோடு கூடினால் ஈசுவர சைதன்னியமென்றும் அவித்[தி](தை)யோடே கூடினால் சீவ சைதன்னிய மென்றும் அந்தக்கரணத்தோடே கூடினால் பிரமாதருவென்றும் இந்திரியங்களோடே கூடினாற் பல சைதன்னிய மென்றும் (. . . . .) ஒன்றைக் கொன்று வெகுவிதமாய்க் கல்பிக்கப்படும்.

End :

தானொருத்தனே நிசவத்து வென்கின்ற திடத்தினால் சர்வதுக்க நிவிர்த்தி வந்த படியினால் இனியொரு துக்கம் வந்து தன் சுகத்தைக் கவப்பதில்லை யென்றிருக்கின்ற படியினால் சொர்க்கலோகம் கைவசமானபின் கன்மிக்கு வந்த சந்தோஷம் போலவும் உபாசித்த தேவதை பிரத்தியட்சமானபின் உபாசகனுக்கு வந்த சந்தோஷம் போலவும் வெகுகாலந் தாகமெடுத்துத் தேடின பிரமம் நாலுபேருக்குஞ் சம்மதியாகும்படி தானென்கின்ற திடானுபவம் வந்து நான் முத்தனாய்(த்) தானென்கின்ற சந்தோஷமே ஏழாவத்தையான அத்தியந்தானந்த மென்பது; அதுவே சீவஜ முத்தியென்று சொல்லப்படும்; மேலாலவத்தை நான்குஞ் சொல்லப்பட்டது.

Colophon :

பிரம்மானந்த அனுபவ முற்றும்.

(கு-பு.)—

இது வேதாந்த விஷயமானது. ஜீவன் முத்தர்களின் சொரூபமும், எல்லாம் ஈசுவரனே என்பதும் ஆகிய இவைபோன்ற பல விஷயங்களை விளங்கக் கூறுவது. எளிய வசன நடையி லமைந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1585. பிரமானுபவ விவேக சமுத்திரம்.

PIRAMĀNUBHAVAVIVĒKASAMUTTIRAM.

Pages, 73. Lines, 7 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1231.

Complete.

Same work as that described under R. No. 306 (*b*), which was copied from this one.

Complete.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 306 (b) நம்பர் பிரதியின் மூலப் பிரதி. இதில் இது முற்றும் உள்ளது.

No. 1586. மகாவாக்கிய தசகாரியக் கட்டளை.

MAHĀVĀKKIYADAŚAKĀRIYAKKAṬṬAḶAI.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1061.

Complete.

Explains 10 points in relation to the 4 Māhāvākyās taken from the four Vēdas. These 10 points are mentioned in the extract from the beginning given below. This work is in prose.

Beginning:

(1) வாக்கியோற்பத்தி, (2) வாக்கியபேதம், (3) வாக்கிய முக்கியம், (4) வாக்கியப்பிரகாசம், (5) வாக்கிய வஞ்ஞான நிவி[ற்](ர்த்)தி, (6) வாக்கிய நிர்ணயம், (7) வாக்கியத்தியானம், (8) வாக்கிய வவதி, (9) வாக்கியக்கதை, (10) வாக்கியா[ற்](ர்த்)தம்.

இந்தப் பத்துக்கு ம[ற்](ர்த்)த மெப்படி யென்னில் :—வாக்கியோற்பத்தி யாவது :—வாக்கிய நாலும் நாலுவேதத்திலு முற்பத்தி. (க)

வாக்கிய பேதமாவது :—பி[ற](ர)க்ஞையே பி[று](ர)மமென்று முந்தின வாக்கியத்தை உபதேசித்தார்.

பி[ற](ர)க்ஞையாவது எது என்று கேட்ட சீடனுக்கு அகமென்றிருக்குதே யதுவென் றிரண்டாம் வாக்கியத்தை யுபதேசித்தார்.

End :

இந்த வாச்சியமான வுபாதியையே பி[ற](ர)ம மென்றது. இது எப்படி பி[ற](ர)ம மென்ருல், யானை தானே மரமானுற்போலவும், பாம்பு தானே பழுதையானுற்போலவும், வெள்ளி தானே கிளிஞ்சிலானுற்போலவும், கள்ளனே கட்டையானுற்போலவும், கானலின்[ெ]சலமே அனற்பூமியானுற் போலவும், பூத பௌதிகமே பி[று](ர)ம மென்றது. ஆக வாக்கியம் நாலுக்கும் [அற்](ரத்)தஞ் சொல்லப்பட்[ெ](ட)து. (ய)

Colophon :

மகாவாக்கிய [ெ]தசகாரியக்கட்டளை முற்றும்.

கண்ணுக்குக் கண்ணுகிக் காண்டற் கரியபொருள்
விண்ணுக்கு விண்ணுய் விளங்குவதே னம்மானை
விண்ணுக்கு விண்ணுய் விளங்குவதே யாமாகில்
தன்னையறியாது துக்கந் தனக்குண்டோ வம்மானை
தானுகிநின்றதிலே துக்கந் தானுண்டோ வம்மானை.

கச்சியப்ப தேவனடி யுச்சியுளம் வைப்பாம்.

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. நான்கு வேதங்களின் சாரமான நான்கு மகா வாக்கியங்கட்கும், உற்பத்தி, பேதம், முக்கியம் முதலிய பத்தும் இன்னின்னவென விளக்கிக் காட்டுவது. வசன நடையி லமைந்தது. இந்தப் பிரதியில் முற்று மிருக்கிறது.

No. 1587. மனனவகை.

MANANAVAHAI.

Pages, 4 Lines, 7 on a page.

Begins on fol. 161*a*. of the MS. described under No. 1482.

Some portion seems to be wanting in the middle; otherwise complete.

Deals with the nature of the Stūlaśarira, Sūkṣmaśarīra and Kāraṇaśarīra. The name of the author is not given.

Bginning:

சாதிவர்ணகுல கோத்திர நாமரூபத் துவேஷ வேஷக்கா . . , ருதாதிகளாய்த் தோ[ணு](ன்று)கிற சகல விகாராதிகளெல்வாந் தூலசரீரத்தைத் தவிர இல்லையே? மறுபடித் தூல சரீரமல்லவோ தோ[ணி](ன்றி)க்கொண்டிருக்கிறது. மறுபடித் தோ[ணு](ன்று)கிற தூலசரீரம் உரு-தத்துவங்களைத்தவிர இல்லையேயென்றறிகிறது.

மறுபடி உரு-தத்துவங்களல்லவோ தோ[ணு](ன்றுகிற)து; அந்தத் தோ[ணு](ன்று)கிற உரு-தத்துவங்களையும் அதினுடைய விகாரங்களும் பர்வத விருட்ச மண்டப கோபுர பிராகார நதி நத சமுத்திரங்கள் முதலான சகல அசரங்களும் பஞ்சீகிருத மகாபூதங்களைத் தவிர இல்லையே யென்றறிகிறது.

End:

இந்த அஞ்சுந் தானானால், இந்த அஞ்சும் போனால் தான்போகவேணுமே. இந்த அஞ்சும் போனாலுந் தான அப்படிப் போகவில்லையே. ஆகையாலே இந்த அஞ்சுக்குஞ் சாட்சியாயறிகிற ஞானமே தான். இப்படிக்குத் தூல சூட்சும காரண மூன்றுக்கும் இப்படி மனனம் பண்ணுகிறது.

Colophon:

மனனம் பண்ணுகிற வகை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீராதிகளின் தன்மையை யாராய்ந்தறியும்வகையைக் கூறுவது. இதில் இடையிற் சிலவிஷயங்கள் விடுபட்டிருப்பதாகத் தோற்றுகிறது. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை.

No. 1588. மனோபோதை மூலமு முரையும்.

MANŌBŌDAI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $13\frac{1}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 230. Lines, 6 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Almost complete.

A treatise reconciling the differences in the tenets between the Śaiva Siddhānta and Vēdānta and explaining the nature and characteristics of the 96 Tattvas and Puriyaṭṭaham.

Beginning:

மனோபோதை.

ஒன்றென் றிருதெய்வ முன்னுமன் மற்றொன்றை யொன்றுதலா
வொன்றி விரு[க்]கா லொழிந்தனமே விச்சை யொழிதினமு
மொன்றி லொருகா லொ[ரு](ழி)காலும் பூசித்தன்னரனையன்பா
லொன்றின் முக்காற்று ளொழிவைப் பணிமுத்தி யுண்டுநெஞ்சே.

எ-து, ஒன்றென் றிருதெய்வ முன்னுமல் மற்றொன்றை - தெய்வமொருவனே யென்றிரு; பின்னையு மொருதெய்வ முண்டென்று நினையாதே.

ஒன்றுதலா வொன்றிருகா லொழிந்தனமே விச்சை யொழிதினமும் எ-து, ஒன்றிலே இருகால்போனால் நின்றது அரையாம்; (ஸ்திரீ)களுடைய அரையென்னும் யோனி இன்பத்திலே யிருக்கின்ற இச்சையை யொழித்துவிடு தினமும்,

ஒன்றி லொருகா லொழிகாலும் பூசித்துன்னரனை (அன்பால்) எ-து, ஒன்றிலே கால்போனால் முக்கால்; திரிகாலமும் பூசைசெய்து தியானம் பண்ணு பரமேசுவரனை யன்பாய்,

ஒன்றின் முக்காற்று ளொழிவைப்பணிமுத்தி யுண்டுநெஞ்சே எ-து, ஒன்றிலே முக்கால்தான் ஒழிந்துபோனால் கால்; சிவ பத்தர்களுடைய காலென்னும், (பா)தங்களைப் பணிந்தால் மோட்சமுண்டாகு மனமே யென்றவாறு.

(* * * *)

எழினிலே யொன்றதெடுக்க வேகுமெய் யிளமை செல்வ
மேழிலொன் றேகிட வினிதென்ப ரேழைய ரினிமுத்திதான
எழினிலொன் றின்னடியா ரிறை மருகன் றாதையை
யேழினி லொன்றினைச் சூடியை யே[ற்றி](த்தி)டு மென்றநெஞ்சே.

எ-து. எழினிலே யொன்றதெடுக்க வேகு மெய்யிளமை செல்வம் எ-து, எழுவாரத்தில் ஒருவாரம் நாயறு; நாயறென்னும்பொழுது போகப்போகப் போய்விடும் தன்னுடைய [திரே](தே)கமும் வாலிபமும் [அயிஷ்](ஐசு)வரியமும், அதன்போலவென்னில் (?) நாழிகை ௬0 - சென்றது ஒருநாள்; அந்த நாள் ௩0- சென்றது ஒரு மாதம், மாதம் ௰௨-சென்றது ஒரு வருஷம், இப்படியாக வருஷம் நாளாலே வருவதாகையினாலே அந்த நாள் செல்லச்செல்ல ஆயசு சென்றுபோய் இந்தத் தேகம் ஆற்றங்கரையண்டையின் மரத்திலே விழுந்துபோய்விடும்; அந்த ஆற்றங்கரை நீராலே யிடிகரையாக(க்) கரைந்து[க்] கரைந்து போவதுபோலே நாட்செல்லச்செல்ல வார்த்திகம் வருகையினாலே வாலிபம் போய்விடும். மத்தியான காலத்திலே வெய்[யறக்](யிற்)காயிற் றீ[ஷ்ஷி](ட்ச)ண்ந்தானே கானலென்றுபோய், அது தண்ணீர்போல வேகாண்[ம்]பித்து(ப்) பொழுது சாய்ந்துவெய்யில் தீட்சணம்போனவுடனே கானல் காணாமற்போவதுபோலே ஒருவன் பண்ணின புண்ணியம் வந்து நேர்ப்பட்டகாலத்திலே லோகத்துக்கெல்லாம் எண்ணிக்கை பெறுவதாகச் செல்வம் பொருந்தியிருந்து புண்ணியம் பண்ணாதநாள் வந்தவுடனே தானே கானல்காணாமற் போனதுபோலே செல்வமும் போய்விடும்; அப்படி யிந்த மூன்றும் பொழுது போகப்போக அசத்தாகப் போகையினாலே வீணே பொழுதுபோவது பொல்லாங்கென்றறியாமல்,

எழிலொன்றேகிட யினிதென்ப ரேழையர் எ-து, எழுவாரத்தில் ஒருவாரமாகிய பொழுதுபோவதை யின்றையிற் பொழுது போவதே நல்லது; நாளை யத்தனையில்லை யென்பார்கள்; அறிவிலே ஏழைமைப்பட்ட மனிதர்கள்,

இனி, முத்திதான் - மோட்சவழிதான்; எப்படி யென்னில்,

எழினி லொன்றி னடியா ரிறைமருகன் றாதையை எ - து, எழுவாரத்தில் ஒருவாரம் வியாழம், வியாழமென்னும் பிரகஸ்பதிக்குச் சீடர்கள் தேவர்கள்; அந்த(த்) தேவர்களுக்குத் துரையானவன் தேவேந்திரன்; அவனுக்கு மருமகன் கந்தசுவாமி; கந்தசுவாமிக்குத் தகப்பனான பரமேசுவரனை,

எழினிலொன்றினைச் சூடியை யே[ற்றி](த்தி)டுமென்ற னெஞ்சே - எழுவாரத்தில் ஒருவாரம் திங்கள்; திங்களென்ற சந்திரனை சடாமுடியிலே ஒரு மலராகத் தரிக்கப்பட்டவனை அனவரதமும் புகழ்ந்து கொண்டாடும் என்னுடைய மனமே என்றவாறு.

End:

தொண்ணூற்றொன்பது மொன்றுங் கலித்துறை சொன்னபிழை
தொண்ணூற் றொன்பதொன் றேறும் பெருக்கத்து யோர்கடனாந்
தொண்ணூற்றொன்பதிற் றொண்ணூறி லவ்வயான் சொன்னதுதான்
தொண்ணூற்றொன்பதிற் றொண்ணூற்றஞ் சில்லாச் சுருதிசொல்லே.

எ-து, நூறு கலித்துறை முகமாக மனோபோதை யொன்று யான்சொன்ன பிழையை,

தொண்ணூற்றொன்ப தொன்றேறும் பெருக்கத் தூயோர் கடனும் எ-து, ௯௯-ம் ௧-ம் ஆ ா ; நூற்றுக்கு நூறு பதினாயிரம், பதினாயிரம் பிழையானாலும் நல்லோர்களுக்குப் பொறுப்பதே கடன் ; ஆதலால் முன் சொல்லும் நூலுக் . . . . வமேதுணை.

(கு-பு.)—

இது வேதாந்த சித்தாந்த சமரசமான நூல்களுள் ஒன்று. புரியட்டகம், தொண்ணூற்றாறு தத்துவம், முதலியவற்றிற்குரிய இலக்கண முதலியன இன்னவென விளக்குவது. ஒன்று முதல் நூறு எண்கள் இறுதியாக ஒவ்வொரு எண்ணையும் தனித்தனியே யமைத்த நூறு பாடல்களாலாகியது. இவ்வரிய நூலுக்குச் செய்திருக்கும் இவ்வழகிய உரை மிக்க உபயோகமானது. இந்நூலாசிரியர் உரையாசிரியர்களின் பெயர், காலம், இடம் முதலியன ஒருவாற்றானும் விளங்கவில்லை. பிரதியில் இடையிடையே பல ஏடுகள் சிதைந்தும் முறிந்து முள்ளன. இறுதிப்பாட்டினுரை முற்றுப்பெறவில்லை.

No. 1589. முத்திமுடிவு.
MUTTIMUḌIVU.

Pages, 14. Lines, 11, 12 on a page.

Begins on fol. 43*a* of the MS. described under No. 1229.

Complete in 25 stanzas.

A treatise purporting to express the bliss enjoyed by a person who has realized salvation, having received spiritual enlightenment from Brahman himself who appeared in the form of a Guru.

By Śaravaṇadēśikar disciple of Cidambarasvāmigaḷ ōf Tiruppōrur.

Beginning :

சித்தமய னீங்கிச் சிவத்தோ டிரண்டறவே
வொத்துடனாய் நிற்கு முபாயமருள்—வித்தகமா
முத்திமுடி வோத முருகற்கு மூத்தவரு
ளத்திமுகன் றாளகம்வைப்பாம்.

பரனொடு பரையைப் பணிகுவாங் கெசத்தின்
பதாம்புயம் பற்றுவா மெழிலார்
தருதிரு முருக வேள்பதம் வழுத்தித்
தாழ்குவாங் கயிலைகாத் தருளுந்
திருவுறு நந்தி முதற்குரவர்கடாள்
சிரமிசை யணிகுவாம் போரி
வருமருட் குருவாம் சிதம்பரதேவன்
மலரடி நினைந்திட ரொழிப்பாம்.

நின்னினை வொழிவின் மன்னிடுஞ்சொரூப
நிலையதே முத்தியின் முடிவென்
றென்னருட் குரவ னென்னினை வகற்றி
யெனக்கருள் முத்தியின் முடிவைப்

பின்னுமந்நினைவு கொண்டியோன் புகறல்
பெருவயித் தியனொரு குருடன்
றன்னிரு ளகற்றிக் கோலொழிப் பவும்பின்
ரூனக்கோல் கைக்கொளல் போலும்.

End:

முத்தியின் முடிவ தன்றி மொழியின்மே வில்லையாகுஞ்
சித்தமந் நிலையேயன்றித் தெளியின்வே றில்லையாகும்
வைத்திடு பவங்கள் போக்கும் வகையும தன்றி யின்ருஞ்
சத்தியஞ் சொன்னே மங்கண் டளர்வற வுறைதி யென்றும்.

இன்னணம் பலவாற்ரு னு மெங்குரு நாதன் றேற்றித்
தன் னுமந் நடுநிலைக்குட் டியரற வெனையிருத்தி
மன்னிடுஞ் சொரூப மாக்கி மவிபவ மொழித்தா னன்னேன்
பொன்னருள் வாழி யாண்ட பூங்கம லத்தாள் வாழி.

Colophon:

முத்தி முடிவு முற்றும்.

* * * *

முத்திமுடிவுக் கடிவரவு.

"சித்தமென்பதுவே யத்திமுகன்றுதி (. . .)
யோதுமின் முத்திக் குபாய முரைத்தல்
. . . இன்னணமென்ப தெழிற்குரு நாதன
றன்னரு டிருவடி தமைப்புகழ்ந் துரைத்தலே."

முத்திமுடிவுக் கடிவரவு முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் மோட்சத்துக்குப் பக்குவமான நிலையுடைய ஒருவன், தனக்குப் பிரமமே குருமூர்த்தமாய்த் தோன்றி ஞானோபதேசஞ் செய்யப்பெற்றுச் சிந்தித்துத் தெளிந்து பிரம நிஷ்டையைப் பொருந்தி மோக்ஷாநந்தத்தை யடைந்து தான்பெற்ற வானந்தம் இத்தகையதெனக் கூறியதாக வமைந்துள்ளது. இருபத்தைந்து பாடல்களை யுடையது. திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளின் சிஷ்யராகிய சரவணதேசிகரா லியற்றப்பட்டது. இந்தப் பிரதியில் பூர்ணமாக இருக்கிறது.

No. 1590. முத்திமுடிவு.

MUTTIMUḌIVU.

Pages, 18. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்ணமாக இருக்கிறது. ஏடுகள் மிக வுஞ் சிதைந்துள்ளன.

No. 1591. முத்திமுடிவு.
MUTTIMUḌIVU.

Pages, 7. Lines, 7 on a page.

Begins on fol. 31*a* of the MS. described under No. 1060.

Wants the last stanza only.

Same work as the above.

(கு-பு.)—

இந்நூல் முன்பிரதிபோன்றது. இதில் இறுதியதாகிய இன்னணமென்னும் பாடல்தவிர மற்றவையுள்ளன.

No. 1592. முத்திமுடிவு, உரையுடன்
MUTTIMUḌIVU WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 12¾ × 1¼ inches. Pages, 206. Lines, 6-7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete but 10 leaves are found broken in the beginning.

Same work as the above and with the addition of a commentary. At the end, there are 3 leaves containing the names of works quoted as authorities in this commentary and a list of those is given in the Tamil remarks below.

Beginning:

(மோட்சத்துக்குப்) பக்குவனாய் மோக்ஷதாக முண்டாகிய (. . . .) , ... மேற்றிருவிருத்தம் இந்நூலினது அனுபவ மனோலயத்துண்டா மனுபவமே யாகையால் (இதனைக்கூ)றும்பொழுது மனோவிருத்தியாய் அவ் வனுபவமும் ஒழியாதோ வென்பாரைப்பற்ற வஃதொ(ழியாதென்று) ஓர் திட்டாந்த முகத்தாற் கூறுவானெடுத்துக்கொண்டது.

தின்னினைவொழிவின் மன்னிடுஞ்சொரூப
நிலையதே முத்தியின் முடிவென்
றென்னருட் குரவ னென்னினை வகற்றி
யெனக்கருள் முத்தியின் முடிவைப்
பின்னுமந்நினைவு கொண்டியான் புகறல்
பெருவயித்தியனொரு குருடன்,
றன்னிருளகற்றிக்கோலொழிப்பவும் பின்
றுனக்கோல் கைக்கொளல் போலும்.

எ-து. உன்னுடைய மனமொழிந்தவிடத்து நிலைபெற்று திற்குஞ் சொரூப மாகிய பரமசிவம் அந்த விடமே மோட்சமுடிவான விடமென்று என்னு டைய ஞானாசாரியரானவர் என்னுடைய மனதை நீக்குமுபாயத்தினால் நீக்கி எனக்கு அனுக்கிரகம் பண்ணிய மோக்ஷமுடிவாகிய சுவானுபவ நிலையை (. . . . . .) தான் அந்தக் கோலைக்கையிலே யெடுத்துக்கொண்டு அவ்வழி நடத்தல் போலுமாம்.

End :

எத்திறத்தோர் முத்திகளு மித்திறத்தி லுளதிந்னே
யிலகக் காணென்
றத்திறத்தின் முத்திமுடி வெனுமொரு நூ லாகவெனக்
காக்கித் தந்தான்
பத்தர்பணிந் திடவருளும் பரம்பரனென் மீதில்வைத்த
பரிவினுலே
யுத்தமர்க ளுறைகாஞ்சிச் சரவணையென் றெனைப்போல்வந்
துவந்தானே.(?)
வாக்குமனக் கெட்டாத வான்பரமே யென்மலத்தை
நீக்கி யருள்கொழிக்க வேநினைந்து—பார்க்குட்
சரவணையென் றோர்நாமஞ் சாற்றிவந்து வீட்டை
விரவுமரு ளால்விளக்கிற் றால்.

The scribe adds.

சாலீவாகன சகா[ற்](ப்)தம் ௲௭௱௨௰௯க்கு மேல் செல்லாநின்ற ரத்தாக்ஷி௵ கார்த்திகை௴ ௰௮௨ சனிவாரம் அமாவாசை திதி அனுஷ நக்ஷத்திரம் சித்த[ு](நா)மயோகமுங்கூடின சுபதினத்தில் சிதம்பரதலத்தி(ல்) அகிலகாரணராகிய சபாநாதர் திருவிழாக்கொண்டருளி, சபைக்கெழுந்தருளுகிற புண்ணிய காலத்திலே அடியேங்களுடைய செனனதுக்கங்கள் நீங்கும்பொருட்டாக வுயிர்க்குயிராய் நின்ற பரமசிவன் தானே சரவண தேவனென்னும் ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி அனுக்கிரகம் பண்ணுநின்ற முத்திமுடிவுரை எழுதிநிறை வேறிற்று, முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், இந்தப் பிரதியில் உரையுடனிருக்கிறது. இவ்வுரை நல்ல நடையிலமைந்துளது. பிரதியில் இடையிடையே ஏடுகள் பல சிதைந்துள்ளன. முதலில் 10 ஏடுகள் முறிந்துபோயின. நூல் முடிந்தபின் இவ்வுரையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ள புத்தகங்களின் அட்டவணை 3 ஏடுகளில் எழுதப்பெற்றுளது.

அது வருமாறு :—

(நூல்.)	(செய்யுட்டொகை.)
(1) (தேவா)ரம்	௰௨
(2) (திருவா)சகம்	௨௰௧
(3) (திருவி)சைப்பா	௨
(4) (திருப்ப)ல்லா(ண்)டு...	௧
(5) திருப்புகழ்	௩
(6) (கா)ஞ்சிப் புராணம்...	௧
(7) கோயி[ல்ப்](ற்)புராணம்	௧
(8) வி[று](ரு)த்தகிரிப்புராணம்	௧
(9) தணிகைப் புராணம்	௪
(10) கூவ(ப்) புராணம்	௨
(11) உய்யவந்த நாயனூர் புராணம்...	௧
(12) திருவுந்தியார்	௨
(13) திருக்களிற்றுப்படியார்	௨
(14) சிவஞான போதம்	௪

(நூல்.)				(செய்யுட் டொகை).
(15) சிவஞான சித்தியார்	...	...	...	௰௯
(16) உண்மை விளக்கம்	...	...	...	௨
(17) சிவப்பிரகாசம்	...	..	...	...
(18) திருவருட்பயன்	...	...	...	௮
(19) வினாவெண்பா	...	...	...	௧
(20) போற்றிப்பஃறொடை	...	...	...	௧
(21) உண்மைநெறி விளக்கம்	..	...	...	௧
(22) திட்டை விளக்கம்	...	...	...	௧
(23) (அ)ம்பலவாணையா தெசகாரியம்		...	...	௨
(24) (தி)ருவண்ணாமலையையா தெசகாரியம்			...	௧
(25) (நெஞ்)சுவிடுதூது	...	...	...	௧
(26) (துகள)று போதம்	...	...	...	௪
(27) (சிற்றம்)பல நாடியார்	...	...	...	௭
(28) (சிவாந) ந்தமாலை	...	...	...	௰௨
(28) ஒழிவிலொடுக்கம்	...	...	...	௰௪
(29) தேவிகாலோத்தரம்	...	...	...	௪
(30) அவிரோதவுந்தியார்	...	...	...	௯
(31) பகவற்கீதை	...	...	...	௨
(32) பிரமகீதை	...	...	...	௩
(33) ஞானவாசிட்டம்	...	...	...	௰
(34) தத்துவராயர்	...	...	...	௨
(35) தத்துவரத்தினகரம்	...	...	...	௧
(36) தத்துவாமிர்தம்	..	...	..	௨
(37) குறுந்திரட்டு	...	...	...	௧
(38) பாடுதுறை	...	...	...	௨
(39) ஞானவிளக்கம்	...	...	...	௩
(40) மெய்மொழிச்சரிதை	...	...	...	௨
(41) சிவபோகசாரம்	...	...	...	௭
(42) அமுத(பஞ்)சா(க்கர)ம்	...	...	...	௨
(43) பதிபசுபாச விளக்கம்	...	...	...	௬
(44) . . ானுபூதி விளக்கம்	...	...	...	௫
(45) சிவநெறிப் பிரகாசம்	...	...	...	௨
(46) மெ(ய்)ஞ்ஞான தீபம்	...	...	...	௧
(47) மெ(ய்)ஞ்ஞான வெண்பா	..	...	...	௧
(48) அஞ்ஞவதைப்பரணி	...	...	...	௭
(49) மோகவதைப்பரணி	..	...	...	௩
(50) (வை)ராகதீபம்	...	...	...	௩
(51) வயிராகசதகம்	...	...	...	௧
(52) ச[று](ரு)வ[க்கி](ஞ்)ஞானோத்தரம்		...	...	௧
(53) சிவஞானதீபம்	...	...	...	௫
(54) ஞானசாகர வெண்பா	...	...	...	௬
(55) உபதேசமாலை	...	...	...	௨
(56) போதரத்தினகரம்	...	...	...	௯

(நூல்.)	(செய்யுட்டொகை).
(57) ஞானசூரியள்	௧
(58) திருமந்திரம்	௩௰௧
(59) அஞ்ஞான நிவி[ற்](ர்த்)தி	௧
(60) நிட்டானுபூதிசாரம்	௧
(61) சசிவன்னபோதை	௧
(62) மெய்க்குருவினை	௧
(63) ஞானமணமாலை	௰
(64) எதிர்காலத்திரங்கல்	௩
(65) (அத்து)விதவுண்மை	௧
(66) திருவம்மானை	௬
(67) சித்தாந்த சிகாமணி	௨
(68) . . . வீராகமம்	௩
(69) (பட்)டினத்துப்பிள்ளை நாயனார்	௮
(70) சிவாகமா[ற](ர்த்)ததெரிசனம்	௯
(71) . . . . ஞவ நாயனார்	௩
(72) தாயுமானார்	௩
(73) திருவாய் மொழி	௮
(74) நாலடியார்	௧
(75) பிரபுலிங்க லீலை	௮
(76) சிவஞானக் கலம்பகம்	௧
(77) நெஞ்சொடுமகிழ்தல்	௨
(78) பஞ்சாக்கரப்பஃறொடை	௧
(79) பொன்வண்ணத்தந்தாதி	௨
(80) அம்மை திருவந்தாதி	௧
(81) சித்தரந்தாதி	௧
(82) தணிகையந்தாதி	௨
(83) ஆனந்தருத்திரேசரந்தாதி	௫
(84) பஞ்சாக்க(ரவ)ந்தாதி	௨
(85) கலசையந்தாதி	௧
(86) இளசையந்தாதி	...
(87) உபதேச காண்டம்	...
(88) காசிகாண்டம்	...
(89) சிந்தாமணி	...
(90) கந்தனலங்காரம்	...
(91) கந்தனனுபூதி	...
(92) போரூர் முறை	...
(93) . . . . ள்ளைத் தமிழ்	௧
(94) தணிகையாற்றுப்படை	௧
(95) . . . . சிரோ[ம]தயம்	௧
(96) . . . . . . னுபவத்துதி	௧
(97)	௧
(98) . . . . க்கியம்	௧
(99) . . . . கத்துதி	௧

(நூல்.)				(செய்யுட் டொகை).
(100) ஏகம்பவாணரானந்தக்களிப்பு		...	...	க
(101) ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது		...	...	க
(102) (கு)கைநமச்சிவாயர்	...	...	...	உ
(103) . . ரமாசாரியார்	...	...	...	க
(104) சிவக்கியான சுவாமிகள்	...	...	...	உ
(105) கச்சியப்ப சுவாமிகள்	...	...	...	உ
(106) பழுதைகட்டியம்பலவாணர்	...	...	...	க
(107) வாரணாசியையா	...	...	...	க
(108) சந்திர சேகரவாக்கியம்	...	...	..	க
(109) சைவசமய நெறி	...	...	...	க
ஆக மெய்நூல் ௱௰—க்கு கூடினவுதாரணம்			...	௫௯௰

No. 1593. மெய்ஞ்ஞான விளக்கம்.
MEYÑÑĀNAVIḶAKKAM.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{8} \times 1\frac{5}{8}$ inches. Pages, 453. Lines, 10 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old. Complete.

A poem bearing on Advaita Vēdānta and written after the model of the Sanskrit drama Prabōdhacandrōdaya of Krṣṇamiśra with abstract qualities such as Prābōdha, Mōha, Vivēka, Ḍambha personified as characters. It thus incidentally explains the nature of the Brahman, Māyā, Manas, etc., as also the leading principles, of the Bauddha, the jaina, the Pāñcarātra and other religious systems and criticises them and gives the settled conclusions of the Vēdānta. It is stated herein that it is a rendering, by the author Tiruvēṅkaṭanāthar, son of Perumāḷ Ayyar, of the Sanskrit work written by himself at the instance of his Guru Rāghavānandar. The author is said to have been a devotee of Lord Kriṣṇa and to have ruled over the Tinnevelly District as the representative of Muttuvīrappa Nāyakkar king of the Pandiya country and to have prompted Vaithinātha Nāvalar of Tiruvārūre to write the Ilakkanaviḷakkam also called the Kuṭṭitolkāppiyam. The work contains on the whole 2013 stanzas and is divided into 49, śarukkas including the Pāyiram the names of which are given in the Tamil remarks below.

Beginning :

மெய்ஞ்ஞான விளக்கம்.

பாயிரம்.

திருமடந் தைதன் காதலன் சிவந்ததாண் மலருங்
கருணை யந்தடங் கண்களு நாபியங் கமலத்
தொருகு ழந்தையு முடுத்தபொன் னுடையுந் தொடுத்த
மரும லிந்தபைந் துளவுமென் மனத்துள்வா ழியவே. (௧)

பொன்னி மாநதி புடைபரந் தோங்கவிற் புதுப்பூங்
கன்னி வாழையுந் தாழையுங் காய்க்குலைக் கமுகும்
பின்னி நீள்கதிர்ச் செந்நெலுங் கன்னலும் பிறவு
மன்னி நீடிய வளவர்சோ ணுட்டொரு வள்ளல். (௨)

குழைக்கு மம்பொனிற் குயிற்றிய பன்மணிக் குன்றுந்
தழைக்கு மெண்ணிலா வரமியத் தலங்களுந் தரளத்
திழைக்கு மேழ்நிலை மாடமுங் கூடமு மெங்கு
மழைக்கு லந்தவழ் நெடுமதிண் மாதைச்கு மன்னன் (௩)

(* * * *)

சீதைகாதலனெனத் திசைக ளெட்டையு
நீதியாற் புரந்துநன் னெறிநடாத்திய
வேதபா ரகன்திரு வேங்கடேந்திரன்
மாதயா நிதிபுவி மன்னர் மன்னனே. (கஎ)

(* * * *)

ஓதலும் ராகவா னந்த யோகியும்
போதமுள் ளோர்மனை வாழ்க்கை பூணிலென்
னேதமில் லுணர்விலா ரிடைந்து காணினும்
பேதுறு முழையினு மிருந்தென் பேறெனு (௨௨)

(* * * *)

சகத்தொரு பிரபோதசந்திரோ தயமெனு நாடகந்தான்
மிகுத்துரை செய்த கிருஷ்ண மிச்சிரன் மூனு நாண(ப்)
புகழ்த் திருவேங்கடேந்திரன் பூசுரர்குலத்துக் கெல்லாம்
வகுத்தகாப்பியமதாக வடமொழியதனிற் செய்தும் (௨௪)

கற்பதற் கெளிதாய் நாவிற் கனிந்துதே னூற மேலாந்
தற்பரஞ்சோதி தானுய்த் தம்முளேயுதயமாகிச்
சொற்பசுந்தமிழினுலுந் தொகுத்ததை மாதைவேந்தன்
பற்பலவருணத்தோர்க்கும் பாங்குறப்பகரலுற்முன். (௨௬)

பாயிரச்சருக்க முற்றும்.

(* * * *)

அத்துவிதம் வாசாம கோசரமனோதீதமசல மூலந்
தத்துவமப்பிரமேயஞ்சருவசமஞ்சச் சிதானந்தஞ் சாந்தஞ்
சுத்தமவியத்தமவிகாரமனு பவந்துரியஞ் சுயம்பிரகாச
நித்திய நிர்க்குண மனந்தநிர[த]திசயம் பிரமமென நின்ற தொ
[ன்றே. (௩)

போந்துவிகா ரஞ்சிறிதும் பொருந்தாது தன்னியல்பிற்
பொருந்தி நிற்பக்
காந்தமசை யாதிருந்து மக்காந்தத் தெதிருசி
கம்பித்தாற்போல்
வாய்ந்தவதன் சந்நிதியின் மாயை விகாரம்புரிந்து
மணிச்சூன்முற்றி
யேய்ந்த பெயர் மானதனென்றெடுத்தோத வொருமகவை
யீன்றுண் டன்னே. (௭)

End:

அறிவுமறியுப் படும்பொருளு மறிவான்றானுமவ்விகற்பம்
பிறியமோக னுதியர்செய் பிழைகண் முழுது பிழையாக
நெறிமையகலாத்தன்றாதை நினைத்தபடியே நிறைவேற்ற
மறிவிலகண்ட பூரணசின்மயத்தைத்தழுவி வயங்கினனால். (௨௨)

மடிவிலாமானதன்ல[ா]யிப்ப மாயையசரோபிதம் மறைய
முடிவிலாத சின்மயமா மூர்த்தி யுபாதி முட்டகன்று
விடிவிலாத விருட்பிழம்பை விழுங்கி நிமிர்ந்த வியன்சுடர்போ
னெடிய சோதிபரப்பியெங்கு நிறைந்தொன்றாகி நின்றானே. (௨௩)

(* * * *)

விரிகாசினியின் மெய்ஞ்ஞான
விளக்கமெனுமில் வியன்கதையை
யொருகா லுவந்துபடிப்போரு
முணர்வுள்ளுறக் கேட்போரும்
பெருகாதரவா லிகத்தின்பப்
பெரும்போகங்கள் பெறுவர்பின்னும்
பரிபூரணசச்சிதானந்த
பாராவரம் படிவரன்றே

(* * * *)

போதத்தமிழ்க்கும் வடகலைக்கும்
புலவோர்தமக்கும் பொருள்விரித்துச்
சீதைக்கிறைவ னெனநீதிச்
செங்கோல் செலுத்தித்திசைபுரந்து
வேதப்பனுவன் மெய்ஞ்ஞான
விளக்காலுலகை விளக்குமெங்கண்
மாதைத்திருவேங்கடநாத
மறையோன்வாழி வாழியவே. (௨௪)

பிரபோதன்முடிசூடு சருக்க முற்றும்.

ஆக சருக்கம் ௪௰௯-க்குச் செய்யுள் ௨௲௰௩.

(கு-பு.)—

இது அத்வைத வேதாந்த விஷயமானது. வடமொழியிலுள்ள பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூலே போல, பிரபோதம் (மெய்ஞ்ஞானம்), மோகம், விவேகம், இடம்பம், மித்தை, முதலியவற்றைப் பாத்திரங்களாக உருவகப்படுத்தி அமைத்துக் காப்பிய ரூபமாகச் செய்யப்பட்டுள்ளது. சிறந்த நடையுடையது.

(1) உற்பத்திச் சருக்கம்.
(2) மோகன் அரசாட்சிச் சருக்கம்.
(3) அவித்தியாபுரச் சருக்கம்.
(4) விவேகன் வனம்புகு சருக்கம்.
(5) விவேகன் மந்திரச் சருக்கம்.
(6) விவேகன் ஒற்றுக்கேள்விச் சருக்கம்.
(7) விவேகன்சேனைகரந்துறை சருக்கம்.
(8) சத்துவச்சிரத்தை தூதுச் சருக்கம்.

(9) மோகனெற்றுக்கேள்விச் சருக்கம்.
(10) இடம்பனுக்கு ஓலைவிடு சருக்கம்.
(11) இடம்பாங்காரச் சருக்கம்.
(12) மோகன் காசிபுகு சருக்கம்.
(13) சாருவாகச் சருக்கம்.
(14) கலிச் சருக்கம்.
(15) மித்தியாதிட்டிச் சருக்கம்.
(16) சிரத்தை போக்கிடையூற்றுச் சருக்கம்.
(17) சாந்திச் சருக்கம்.
(18) சமணனுதியர் சருக்கம்.
(19) வயிரவிவதைச் சருக்கம்.
(20) சிரத்தை மீட்சிச் சருக்கம்.
(21) விவேகன் போதகரை வரவழைத்த சருக்கம்.
(22) உபநிடதை வேள்விச் சருக்கம்.
(23) சக்கரதீர்த்தச் சருக்கம்.
(24) காமனுதியர் காசிபுகு சருக்கம்.
(25) நியாயன்றூதுச் சருக்கம்.
(26) காமனுதியர் வீரலாபச் சருக்கம்.
(27) நிருபகாதியர் வீரலாபச் சருக்கம்.
(28) விவேகன் காசிபுகு சருக்கம்.
(29) படையெழுச்சிச் சருக்கம்.
(30) காமனுதியர் வதைச் சருக்கம்.
(31) உலகாயதன் வதைச் சருக்கம்.
(32) புத்தர் வதைச் சருக்கம்.
(33) சமணர் வதைச் சருக்கம்.
(34) மோகன் வதைச் சருக்கம்.
(35) மானதன் புலம்புறு சருக்கம்.
(36) கலைமகள் தேற்றச் சருக்கம்.
(37) விவேகன் முடிசூடு சருக்கம்.
(38) மாயைச் சருக்கம்.
(39) மீமாஞ்சச் சருக்கம்.
(40) சமுச்சயன் சருக்கம்.
(41) சாங்கியமதச் சருக்கம்.
(42) தார்க்கிகன் மதச் சருக்கம்.
(43) வேதாந்தி மறுத்தற் சருக்கம்.
(44) யோகமதச் சருக்கம்.
(45) பாஞ்சராத்திரச் சருக்கம்.
(46) சைவசித்தாந்திச் சருக்கம்.
(47) வேதாந்தச் சருக்கம்.
(48) பிரபோதன் முடிசூடு சருக்கம்.

என 48ம், பாயிரச்சருக்கம் ஒன்றும் ஆக 49 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுளது. மொத்தம் 2,013 விருத்தங்கள் கொண்டது.

பிரமம், மாயை, மனம், மோகம், அகங்காரம் முதலியவற்றினிலக்கணங்களும், காமக்குரோதாதிகளுண்டாயபோது உண்டாகும் மெய்ப்பாடுகளின்

தன்மைகளும், உலோகாயதம், பௌத்தம், ஜைனம், பாஞ்சராத்திரம் முதலிய மதங்களின் தன்மைகளும் அவற்றின் கண்டனமும், தர்க்கத்தின் சிறப்பும், வேதாந்தத்தின் நிச்சயம் இன்னதென்பதும் ஆகிய இவைபோன்ற பல விஷயங்கள் இந்நூலில் நன்குபெறப்படும். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

இந்நூலாசிரியர் திருவேங்கட நாதர் என்னும் ஓர் அந்தணர். இவர் இராகவானந்தர் என்னும் தமது குருவின் கட்டளைப்படி இந்நூலை முதலில் வடமொழியிற் செய்து, பின்பு அனைவர்க்கும் பயன்படும் வண்ணம் தமிழிலும் இயற்றினர்.

இவர் சோழநாட்டிலே * மாதை என்னும் ஊரிலிருந்த ஸ்மார்த்தப் பிராமண வகுப்பினராகிய பெருமாளையர் என்பவரது புத்திரர். கி. பி. 1682 ல் பாண்டிநாட்டைப் பரிபாலித்துவந்த முத்துவீரப்ப நாயகரின் பிரதிநிதியாகத் திருநெல்வேலியைப் பரிபாலித்து வந்தவர். திருவாரூர் வைத்தியநாத நாவலரைக்கொண்டு 'இலக்கணவிளக்கஞ் செய்வித்தவர். கண்ணபிரானிடத்துமிகுந்த பக்தியுடையவர்.

No. 1594. மெய்ஞ்ஞானவிளக்கம்.

MEYÑÑĀNAVIḶAKKAM.

Substance, palm-leaf. Size, 15⅓ × 1½ inches. Pages, 392. Lines, 8 on a page. Character, Tamil. Condition, Good. Appearance, New.

Complete.

Same work as the above

Colophon :

மெய்ஞ்ஞான விளக்கம் எழுதி நிறைவேறியது. சாதாரண ஞூ சித்திரைமீ உகூஉ பச்சையப்ப வாத்தியாரால் எழுதி நிறைவேறியது.

English 1851. [29-12-94].

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது.

No. 1595. மோகவதைப்பரணி.

MŌHAVADAIPPARAṆI.

Pages, 79. Lines, 9 on a page.

Begins on fol. 149*a* of the MS. described under No. 1422.

Complete.

An allegorical work on Advaita Vēdānta by Jōtiprakaśar disciple of Tattvadēśikanāyanār. Herein, spiritual knowledge is represented as a valorous knight conquering Moham or nescience who is represented as a king. The work belongs to a class of Prabandam called Paraṇi.

---

* மாதை, திருவாமாத்தூருக்கொரு பெயர்; இவ்வூர் தென்னாற்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகாவில் உள்ளதென்பர்.

Beginning :

மதிபரிதி நீர்தீகால் வானவனியியமான(ன்) வடிவாயெல்லா
வதிபதியுமாயனைத்துமாகியல்லாவறிவுருவை மறைமுடிவையகத்துள்வைப்
[பாம்.

(* * * *)

ஐந்துபுலனுக்குமிசை வாகவிறைபொற்ரு
ளறுசமய நூலின்முடி வற்றபொருள் காண
வுய்ந்துபுகு முத்தி[யுமு](யை)யுடம்புட னுளத்தே
விளங்கிட வுளங்கையின் விளங்கனியை யொத்தே. (உ௰)

(* * * *)

கடைதிறப்பு.

பண்ணார்மொழி யமிர்தந்தரு பவளந்திற வாதே
கண்ணூலுயி ருண்பீர்கடை திறமின்கடை திறமின். (க)

உருவாய்வரு பெருமானை யுளங்கொண்டெவ ருடனுந்
திருவாய்மலர் திறவீர்கடை திறமின்கடை திறமின். (உ)

End :

துஞ்சவின்றி யுணர்வின்றி மயலின்றி யயலுந்
தொடர்புமின்றி யிடரின்ப முதலின்றி யெவையு
மெஞ்சலின்றி யிதுவென்னு மியல்பின்றி யுளதா
மியாவையும் பிரமமாகிய திருந்தபடியெ. (உ௰)

(* * * *)

உன்னவரிதென் றுபநிடதங்க ளோதும்பொருளை யொருமொழியிற்
சொன்ன விரகினைப் பாடீரே சொரூபானந்தனைப் பாடீரே. (ரு)

பவமாயம்வேரறப் பார்த்திறைவன்
பதத்திலும் பண்டை நாமொழிந்து
சிவமாயிருந்தமை பாடீரே
சிவப்பிரகாசனைப் பாடீரே,

* * * *

மூவர்தேவர் வாழியென் று முடிவணங்கு மிருகழற்
றேவதேவன் வாழியே சிவப்பிரகாசன் வாழியே. (௰உ)

அலவா மென்றங் கலையுறு தர்க்கப் [பி](ப)சாச மோசகன்வாழியே
யதுநீயென்றங் கருமறை சுச்சத்தினோதுமோர் பொருள்வாழியே
சொலவரலென் றுந் தொடர்வறுசற்சிற் சுகாதிகாரணன் வாழியே
சொரூபானந்தன் கழல்புனை தத்துவப் பிரகாசமாமுனி வாழியே.

௰௩ தாழிசை.

Colophon :

மோகவதைப் பரணிமுற்றிற்று, முற்றும்.

கருத்திற்சஞ்சலந்திருத்திக் கண்டுகொண்டிருச் சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது, * தத்துவதேசிக நாயனாரது சிஷ்யராகிய சோதிப்பிரகாசர் இயற்றிய நூல்களுள் ஒன்று. அத்வைத மத விஷயமானது. மோகமென்பதை ஓர் அரசனாகவும், ஞானமென்பதை அவனைச்சயிக்கும் ஒரு சிறந்த வீரனாகவும் உருவகப்படுத்தி ஞானத்தைத் தலைமகனாகவைத்துப் பாடப்பட்டுள்ளது.

---

* இந்நூலையும் அஞ்ஞவதைப் பரணியையும் தத்துவதேசிக நாயனார் இயற்றவில்லையென்பதைச் செந்தமிழ் முதல்தொகுதி. 288—9 ஆம் பக்கங்களிற் காண்க.

இதில், அறிவின்மை யென்னு மாதினிடத்து மனமென்னும் மைந்தன் தோன்ற அவனுக்கு அபேக்ஷை, உபேக்ஷையென்னு மிருமனைவியரிடத்து முறையே மோகன், விவேகனென மைந்தரிருவர் தோன்ற மனமென்பவன் அபேக்ஷை யென்னும் மனைவியிடத்து அன்பு வைத்ததனால் அவள் மைந்தனாகிய மோகனுக்கே அரசுத் தன்மை முற்றுமளிக்க அதனால் அவன் விவேகனுக்குச் சிறிதும் இடந்தராது அரசுசெலுத்தும்போது அவனை விவேகன் உபாயத்தினாற் செயித்தனனென விஷயம் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. செய்யுள் நடை சிறந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது

No. 1596. ரிபுகீதை.

RIPUGĪTAI.

Pages, 82. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1579
Complete.

A treatise on Advaita Vēdānta. It is a prose rendering in Tamil of the Sanskrit Ṛbhugītā, vide No. 4567 of the D.C.S. MSS. Vol. IX. The headings of the various Prakaraṇas are given in the Tamil remarks below.

Beginning :

ரிபு கீதை, ஆத்ம நிர்ணயப் பிரகரணம்.

சின்மாத்திர சொரூபமாயிருக்கிற பிரமமே கேவலனாய், தத்துவனாய், பரமானந்த சொரூபனாய் அகண்[டையி](டா)காசனாய்ச் சருவோத்தமனாயிருக்கிற ஆத்மா. முன்னே பிரம வித்துக்களாயிருக்கிற ரிஷிகளெல்லாருமொருகாற்கூடி, சனற்குமாரரை யுக்தமாயிருக்கிற ஞானசொரூபத்தைக் கேட்டார்கள்.

வாருமையா பகவானே ! தேவரீர் சகல பாவமுமற்றவர் சகல சொரூப தத்துவமுமறிந்தவர். ஆத்மஞான சொரூபர். உம்மாலே யற்புதமாயிருக்கிற ஆத்மாவை யிதமெல்லாம் சொல்லப்பட்டது. எங்களாலேயும் வெகுகோடி காலம் கே[ழ்](ட்)கப்பட்[டு](ட)த. அப்படியிருந்தும் எங்களுக்குத் திருப்தியில்லை. இப்போ(து) ரிபுவானவர் நிதாகரென்கிற ரிஷிக்கு யாதொரு தத்தவஞ்சொன்னாரதை எங்களுக்குச் சொல்லும் என்று கேட்ட ரிஷிகளைப் பார்த்து அவர்கள் சொன்ன வார்த்தைகேட்டு மிகவும் செவிகுளிர்ந்து சந்தோஷித்து யோகியாயிருக்கிற சனற்குமாரரானவர் ஆத்மாவை நித்தமுத்தனாயும் சின்மாத்திர சொரூபமாயுஞ் சொல்லத்தொடங்கினார்.

சனற்குமாரர் சொர்லும்படி :—வாருங்கோள் ரிஷிகளே (. . . . . :) சொல்லுகிறோம் கேளுங்கோள் ; ரிபுவென்கிற ரிஷியானவர் அன்புடனே மிகவும் பிரமலோகத்திலும் விசாசமாசப் பதரிகாசிரமத்தை யடைந்து நிதாகரென்கிற ரிஷியுடைய கிருகத்திலே போய் அவராலே பூசை பண்ணப்பட்டு அவராலே கொடுக்கப்பட்ட அன்னபானாதிகளையும் [பொ]

(பு)சித்து வெகுவாயுபசாரத்தை யல்டைந்தபிறகு நிதாகரைப்பார்த்து(ச்) சொல்லும்படி :—

வாருமையா நிதாகரே! நீர் பண்ணின உபசாரம் தமக்கொன்றும் மெள்ளவானாலும் நாம் பொசித்ததுமில்லை; நீர் சொன்னத்திலே ஒரு வார்த்தையுஞ் சத்தியமில்லை; நீர் தாம்நாம்தாம் பின்னையொருத்தன்றான் ஒரு காலத்திலும் ஒருக்காலும் இல்லையென்று சொல்லி அவர் நிதாகர் மடத்தைவிட்டுப்போன பிறகு நிதாகரானவர் செய் நன்றியறியாதவரென்றுநிச்சயித்து ஆதரியாமற் சும்மாயிருந்தார். அதின் பிறகும் வந்தவுடனே திரும்பவுமுபசாரத்தையடைந்து நன்றாய்ப் பொசித்த பிறகு முன்போலே தானே சொல்லித்திரும்பிப்போனார் (. . . . .)

End:

நித்தியமும் [பிரமம்] பிரமானந்த சொரூபமே. அநித்தியமும் பிரமானந்த சொரூபமே. நித்தியாநித்ய மற்ற[ம]தும் பிரமானந்த சொரூபமே. வேதமும் பிரமானந்த சொரூபமே. சாத்திரமும் பிரமானந்த சொரூபமும் வேதசாத்திரங்களிலே சொல்லலப்பட்ட வனுவய வியதிரேகையும் பிரமானந்த சொரூபமே. இதுக்கெட்டாததும் பிரமானந்த சொரூபமே. சொல்லப்பட்டதும் பிரமானந்த சொரூபமே. பிரமானந்த சொரூபத்தை யன்னியிலே வேறே யொருவஸ்துக் காலத்திரயத்திலேயுமில்லவேயில்லை.

பிரமமே சத்தியம்.

(கு-பு.)—

இது வேதாந்த நூல்களுள் ஒன்று. வடமொழியினின்று மொழி பெயர்த்துத் தமிழாற் செய்யப்பட்டது. ரிபு என்னும் பெரியார் நிதாகரென்னும் ரிஷிக்குச் சொல்லுவதாக அமைந்துளது.

(1) ஆத்ம நிர்ணயப் பிரகரணம், (2) அநாத்ம நிர்ணயப் பிரகரணம், (3) அஹம்பிரஹ்மப் பிரகரணம், (4) த்வம்ப்ரஹ்மப் பிரகரணம், (5) சர்வமுமனுதிப் பிரகரணம், (6) சர்வமுமித்தியாப் பிரகரணம், (7) சின்மாத்திரப் பிரகரணம், (8) அகண்டாகாசப் பிரகரணம், (9) நித்யானுபவப் பிரகரணம், (10) சச்சிருங்கப் பிரகரணம், (11) சர்வம்பிரஹ்மப் பிரகரணம், (12) பிரமாஸ்தப் பிரகரணம், (13) பிரமதர்ப்பணப் பிரகரணம், (14) ஆத்மநித்யஹோமப் பிரகரணம், (15) சீவன்முத்திப் பிரகரணம், (16) பிரமானந்த சொரூபப் பிரகரணம் முதலிய பல பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுளது. இதைச் செய்தவர் பெயர் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுளது.

No. 1597. ரிபுகீதை.

RIPUGĪTAI.

Pages, 72. Lines, 7 on a page.

Begins on fol. 85*a* of the MS. described under No. 1437.

Contains from the 1st to the 15th Prakaraṇa.

Same work as that described above.

கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. ஆயினும் இதில் முதலிலிருந்து 15-வதாகிய சீவன் முத்திப்பிரகரணம் இறுதியாகவுள்ளது. ஆகையால் இந்தப்பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

No. 1598. * விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 64. Lines 8 on a page.

Begins on fol. 255*a* of the MS. described under No. 1423.

Incomplete.

Same work as that described under R. No. 338 of the Triennial Catalogue of MSS. The MS. described therein is a copy made from this one.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 338-ஆம் நம்பர் பிரதியின் மூலப்பிரதி. அதிலுள்ள அளவே இதிலும் உளது.

No. 1599. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 50. Lines 7 on a page.

Begins on fol. 16*a* of the MS. described under No. 1551.

Incomplete.

Same work as the above.

Beginning.

இது முன் பிரதிபோன்றது. முதலிலிருந்து அஞ்ஞான ஸ்வரூப நிரூபணம் வரையில் உள்ளது. ஆதலால் இது முற்றுப்பெறவில்லை.

No. 1600. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 284. Lines 8, 9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1506.

Contains the Adhyāyas 1 to 14 and 22 to 45.

Similar to the work described above. The headings of the Adhyāyas as found in this MS. is given below at the end.

The last portion of the 14th Adhyāya and the Adhyāyas 15 to 21 are not found in this MS. The work is also called Vāsudēvamanana

---

* இது முதல் 6 நம்பர்களிலுள்ள புத்தகங்களிற் கூறப்படும் விஷயங்களும் புத்தகப் பெயரும் ஒன்றாயிருப்பினும் நடையிலும், அதிகாரப் பாகுபாடு முத லியவற்றிலும் அவற்றுள் ஒன்றற்கொன்று மிக்க வேறுபாடுண்மையின் தனித்தனியே முதலும் இறுதியும் காட்டி அதிகாரப் பாகுபாடும் காட்டப்பட் டிருக்கிறது.

probably after the name of the author Vāsudēva as it is so given in the colophon at the end of some of the Adhyāyas.

Beginning:

விவேகசாரம். அத்தியாரோபாபவாதம்.

அத்தியாரோபா(ப)வாதங்களினாலே பி[று](ர)மசொரூபத்தையறியவே[ணு](ண்டு)ம் என்று சாஸ்திரத்திலே சொல்லப்பட்டிருக்[குது](கிறது). ஆகையாலே அந்த அத்தியாரோபாபவாதத்தை நிரூபிக்கிறோம். அத்தியா(ரோ)பமாவதேதென்றால் வஸ்துவினிடத்திலே அவஸ்துவினுடைய ஆரோபம் அத்தியாரோபமென்று சொல்லப்படும்.

(* * * *)

Colophon of 13th Adhyāya :—

இதி ஸ்ரீ வாசுதேவயெதீசுரராலே சொல்லப்பட்ட விவேகசாரத்தில் அஞ்ஞானப் பிரகரணம்.

End:

இதெல்லாங்கூடி சாக்கிர[த](த்து) ஸூப்ன [ஸு-](சுஷு-)ப்[பி]தியவத்தைகளாச்சுதாகையாலே யிந்த அவஸ்தாத்தி[றை](ர)யத்துக்கும் சாட்சியாய் நித்தியனாய் நிர்விகாரனாய் ஆனந்த [சு](சொ)ரூபனாய் ஆ[ற்](ன்)மாவே நானென்று எவனறி[கு]கிறானோ அவனே முத்தனென்று சாத்திர சித்தாந்தம்.

Colophon:

சஉ௬—அத்தியாயம் மு[த்து](ற்றும்.)

பிரகரணங்கள்.

(1) அத்யாரோபாபவாதம்.
(2) சாதன சதுட்டயம்.
(3) பிரபஞ்சம்.
(4) துக்கவிசாரம்.
(5) கர்மவிசாரம்.
(6) ராகத்துவேஷாதி.
(7) ஆன்மானான்மவிவேகம்.
(8) ஸ்தூலசூட்சுமகாரணம்.
(9) அவஸ்தை.
(10) பஞ்சகோசம்.
(11) சச்சிதாநந்தம்.
(12) ஆத்மஸ்வருபம் அகண்டத்வம்.
(13) அஞ்ஞானம்.
(14) ஞானஞ்ஞானம்.
(22) பிரியதமத்துவம்.
(23) சர்வசாரசங்கிரகமனனம்.
(24) ஆன்மானான்மவைலக்ஷண்யம்.
(25) தாபத்திரயம்.
(26) பிரதிபந்தத்திரையமனனம்.

(27) நீவவிதவிசாரம்.
(28) வய்ராக்கியபோதோபாதி.
(29) வாசனாத்திரையமனனம்.
(30) ஸ்வவாஸனாப்ரதிபந்தமனனம்
(31) சிரவணமனன நிதித்தியாசனம்
(32) ஷட்லிங்கம் (?)
(33) தத்துவம்.
(34) பிரம்மசரியம்.
(35) அசிஹூவாதி.
(36) சைதன்யபேதம்.
(37) பஞ்சப்பிரமை.
(38) பிராரத்[துவ](த)த்தி[னை]ரயம்.
(39) சஞ்சிதப்பிராரத்தாகாமியம்.
(40) பிரளேயம்.
(41) தார்க்கிகாதிகள்.
(42) பிரம்மவித்துவாவரீயபரிஷ்டம்.
(43) ஸ்த்தாவஸ்தை.
(44) தாதாத்மியம்.
(45) அத்தியாரம்பம்.

(கு-பு.)—

இவ்வத்தியாய அட்டவணை ஏட்டிலுள்ளபடியே எழுதப்பட்டது. 14-வது அத்தியாயத்தினிறுதியிற் சிறுபாகமும் 15—21 அத்தியாயங்களும் இதில இல்லை. மற்றைப்பகுதி முற்றுப்பெற்றிருப்பதாகவே தோற்றுகிறது. இதிற் சில அத்தியாயங்களினிறுதியில் "இதி ஸ்ரீ வாசுதேவயதீசுவராலே சொல்லப் பட்ட விவேகசாரம்" என்றுள்ளமையின் இஃதன்னோராற் செய்யப்பட்ட தெனத் தெரிகின்றது. இந்நூற்கு வாசுதேவமனனம் என்ற பெயர் வந்ததும் இதுற்போலும்.

No. 1601. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Substance, Palm-leaf. Size $11\frac{1}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 275. Lines, 8 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Complete in Ādhyāyas 1 to 26.

Similar to the work described above. The headings of the Adhyāyas as found in the MS. is given below in Tamil at the end of the extract.

Beginning:

விவேகசாரம்.

முதலாவது அத்யாரோப அபவாதவர்ணகம்.

அத்யாரோப அபவாதங்களினாலே பிரமசொரூபத்தையறியவேணும்.

அத்யாரோபமாவதேதென்றால் வஸ்துவினிடத்திலே அவஸ்துவினு டைய வாரோபம் அத்யாரோபம்; அஃதெப்படியென்றால் திட்டாந்த பூரு வகமாக நிரூபிக்கிறோம்.

அந்த திட்டாந்தம் ஏதென்றால் சொல்லுகிறோம் :—

சுத்தியிலே ரசத(ா)த்தியாரோப மெப்படியோ ரச்சுவிலே சர்ப்ப அத்தியாரோபமெப்படியோ தாணுவிலே புருஷா [அ]த்தியாரோபமெப்படியோ கானலிலே செலா [அ]த்தியாரோபமெப்படியோ ஆகாசத்திலே நீலபீதாத்தியாரோபமெப்படியோ அப்படியே நிஷ்பிரபஞ்ச ரூபராயிருக்கிற ஆ[ற்](ன்)மாவினிடத்திலே பிரபஞ்சத்தினுடைய ஆரோபமத்தியாரோபம் ; இந்த அத்யாரோபம் எதனாலே வந்ததென்றால் அதிட்டான அ[க்கி](ஞ்ஞா)னத்தினாலே வந்தது ; அஞ்ஞானத்தினுடைய சொரூபத்தை இனிமேல் விவரமாக நிரூபிக்கிறோம்.

End:

குருசொன்ன வர்த்தத்துக்கு விபரீதாஸ்பதந்தோணுகிறது. இதுக்கு நிவிர்த்தி, திரும்பத் திரும்ப மனனம் பண்ணுகிறது. விபரீதபாவனை துராக்கிரவக்ததையாவனானன் சோத்திரிய[ன]ானன் பண்டித[ன்]ானன் விரத்தனென்று இந்தத் தேகேந்திரியாதி சங்காதத்திலே ஆத்மபுத்திவருகிறது. இதுக்கு நிவிர்த்தி நிருத்தியாசனம்பண்ணுகிறது. வாவிப்பிரதிபெந்தமாவன :—ஒரு பாவகர்மம் முமுட்சுவுக்கு ஒரு விஷயத்திலே ரூடமாய்த் தயாரூபமான ஆசுத்தியைப் பிறப்பிக்கும் ; அந்த ஆசத்தி சிறிது சென்மங்களைக் கொடுக்குமாகையால் இதுக்கு நிவிர்த்தி இந்த ஆசத்திபிரவாமலிருக்கிறது.

Colophon:

இருபத்தாறுவது ஞானப்பிரதிபெந்தாகிதமு மதுநிவிர்த்தியும் நிரூபணவர்ணக முற்றும். (ஏட்டின் எண்)

(1) அத்தியாரோப அபவாதவர்ணகம் 1
(2) சாதன சதுட்டையவர்ணகம் 8
(3) ஆத்மானாத்மக லட்சணவர்ணகம் 12
(4) துக்க நிரூபணவர்ணகம் 16
(5) திரிவிதகர்மத்திரய நிரூபணவர்ணகம் 27
(6) இராகத்துவேஷ நிரூபணவர்ணகம் 39
(7) ஆத்மானாத்ம நிரூபணவர்ணகம் 48
(8) சரீரத்திரய நிரூபணவர்ணகம் 55
(9) அவத்தாத்திரயசாட்சி நிரூபணவர்ணகம் 70
(10) பஞ்சகோச விதிரிக்தமவர்ணகம் 78
(11) சச்சிதானந்த நிரூபணவர்ணகம் 87
(12) அகண்டத்துவ நிரூபணவர்ணகம் 97
(13) சத்தவித நிரூபணவர்ணகம் 107
(14) பஞ்சப்பிராண[ம்] நிவர்த்தி நிரூபணவர்ணகம் ... 108
(15) தாதான்மிய நிரூபணவர்ணகம் 109
(16) தாபத்திரய நிரூபணவர்ணகம் 111
(17) வாசனாத்திரய நிரூபணவர்ணகம் 112
(18) அஞ்ஞானதிதி நிரூபணவர்ணகம் 116
(19) ஆத்மாவுக்கு அசங்கத்துவநிரூபணம் 122
(20) அகாத்துவ நிரூபணவர்ணகம் 124
(21) அபோகத்துவ நிரூபணவர்ணகம் 126
(22) சிரவணாதி நிரூபணவர்ணகம் 127
(23) தத்வவிசார நிரூபணவர்ணகம் 130

(24) வைராக்கியபோத நிரூபண வர்ணகம் 131
(25) சிவேசுவரசொரூப நிரூபணவர்ணகம் 133
(26) ஞானப்பிரதிபெந்தமு மதுநிவிர்த்தியும் 138

(கு-பு.)—

இது முன்பிரதிகளினின்றும் நடையில் மிக்க மாறுபாடுடையது. இந்தப் பிரதியில் இந்நூல் பூர்த்தியாயிருக்கிறது.

No. 1602. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Pages, 326. Lines 8 on a page.

Begins on fol 1*a* of the MS. described under No. 1544

Complete.

Same work as the above. The colophon at the end of the MS. attributes the authorship to Vāsudēva.

Colophon:

இருபத்தாருவது ஞானப்பிரதிபெந்தமுமதுக்கு நிவிர்த்தியும், நிரூபண வர்னக முற்றும்.

குருவாசுதேவேந்திரசுவாமியாற் சொல்லப்பட்ட விவேகசாரமுற்றும்.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது, ஏடுகள் சிதிலமாயிருக்கின்றன. இதிலும் இறுதியில் "குருவாசுதேவேந்திர சுவாமியாற் சொல்லப்பட்ட விவேகசாரம்" எனக் குறிக்கப்பட்டுளது.

No. 1603. விவேகசாரம்.

VIVĒKASĀRAM.

Page, 590. Lines, 7 on a page.

Beings on fol. 65*a* of the MS. described under No. 1492.

Incomplete. Contains the Adhyāyas 1 to 39.

Similar to the work described above. The work appears to have been based on the Sanskrit Vivēkasāra described under No. 1399 of Notices of Sanskrit MSS., by Rajēndralāl Mitra. Vol. IV.

Beginning:

அத்தியாரோபமபவாதத்தினலே பிரமத்தை யறியவேணுமென்று சாஸ்திரங்களிலே சொல்லுகிறபடியினலே அந்த அத்தியாரோபத்தை முன்னே சொல்லுகிறோம்.

அந்த அத்தியாரோபமாவது ஏதென்றால், ஒரு வஸ்துவினிடத்தில் அன்னிய வஸ்துவாய்த்தோ[ணு](ன்று)கிறது அத்யாரோபம்

அதெப்படியென்றால் திருட்டாந்த பூர்வகமாய்ச் சொல்லுகிறோம். கிளிஞ்சலிடத்திலே வெள்ளியும், பழுதையினிடத்திலே பாம்பும், கட்டையிட்த்

திலே கள்ளனும் கானலிலே தண்ணீரும் ஆகாசத்தினிடத்திலே கறுப்பும் எப்படியாரோபிச்சுதோ அப்படிப்போல இந்த நிட்பிரீபஞ்ச சொரூபனு கிய ஆன்மாவிடத்திலே பிரபஞ்சாரோபமே யத்தியாரோபம்.

அந்த அத்தியாரோபம் எதினாலே வந்ததென்றால் அ[க்கியா](ஞ்ஞா)னத் தாலே வந்தது; அந்த அஞ்ஞானத்தி[னி](னுடை)ட(ய) சொரூபத்தைப் பின் னாலே விகசிதமாய்த் தெரியச்சொல்லுகிறோம். இப்போ(து) சங்க்ஷேப மாய்ச் சொல்லுகிறோம்.

அதெப்படியென்றால் லோகஞானமே பிரகிருதியென்றும், மாயையென் றும், வித்தையென்றும், தமசென்றும் இந்தப் பிரகாரமனேக விதமாய்ச் சொல்லப்படும்; இ[து](வை)களில் பிரகிருதியாவதேதென்றால் குணத்துகளு டைய சாமானிய அவஸ்தைகளுக்குப்பிரகிருதியென்றும், பிரளயாவஸ்தை யென்றும் மகாசுழுத்தியவஸ்தையென்றும் சொல்லப்படும்; இந்தக் குணத் துகளுடைய சாமானியா வஸ்தைகளுக்குத் திருஷ்டாந்தஞ் சொல்லுகிறோம்.

End :

அதிஷ்டான சைதன்னியமும் பிரதி விம்பசைதன்னிய முக்கூடி ஈசுவா னென்று சொல்லுவோமென்றால். . . . திவிம்பமும் கேவலாதிஷ்டான சைதன்னியமும் நிருவிகார சைதன்னியம். . . . விகாரமான ஈசு(வ)ர த்துவஞ் சொல்லக்கூடாது; ஆகையினாலே மாயையும் மாயையதிஷ்டான சை(தன்னிய)மாயையிலே பிரதி விம்பிச்ச சைதன்னியமும் இந்த மூ[னு] (ன்று)ங்கூடி ஈசுவரனென்று சொல்லப்படும். இந்தப் (பிரகரண)த்தில் சீவேசுவரர்களையெங்கே நிருபிக்கப்பட்டதென்றால் வித்தியாரண்ணிய சுவா மிகள் சப்தப் பிரகரணத்தில் நிரூபிச்சிருக்கிறார். இந்தப் பிரகர(ண)த்தில் சீவேசுவரருடைய (. . . . .) முத்தனென்றும் உபாதிரகிதனென்றும் நிருவிகாரனென்றும் நிச்சங்கனெ ன்றும் நிரவியனென்றும் சுருதி மிருதி புராணங்கள் கோஷிக்[கு](கின்றது) சமுசயமில்லை. சித்தம்.

Colophon :

சீவேசுவர நிரூபணம் சமாப்தம். முப்பத்தெட்டாம் சுலோகம் முற்றும்.

அதிகாரங்கள்.

(1) அத்தியாரோபமாவது ௧
(2) அபவாதமாவது ௧௦
(3) சாதன சதுஷ்டயமாவது ௧௨
(4) பிரபஞ்சமிரண்டு பதார்த்தமாவது ௧௬
(5) துக்கம் ஆகந்துகமோ சுபாவீகமோ ௨௧
(6) கர்மத்திரயமாவது ௩௧
(7) ராகத்துவேஷ விலட்சண மாவது ௪௩
(8) ஆன்மானன்மமாவது ௫௪
(9) சரீரத்திரயத்திற்கு விலட்சணமாவது ... ௬௨
(10) அவஸ்தாத்திரய ஸாக்ஷியாவது ௮௨
(11) பஞ்சகோச விலட்சணமாவது ௯௨
(12) சச்சிதானந்த லட்சணமாவது ௱௪

(13) அகண்டத்துவ லட்சணமாவது ... ... ா௰ரு
(14) அஞ்ஞானசொரூப லட்சணமாவது ... ... ாஉசு
(15) ஞாஞஞ்ஞான லட்சணமாவது ... ... ாசக
(16) சரீரத்திரய லட்சணமாவது ... ... ாசுக
(17) தாபத்திரய லட்சணமாவது ... ... ாகூச
(18) பிரதிபந்தத்திரயமாவது ... ... ாகூரு
(19) ஆதியாத்மீக வாதிதெய்வீக ஆதிபௌதீகமாவது. ாகூகூ
(20) நவவிதசம்சாரமாவது ... ... உா
(21) ஞானவைராக்கியவுபரதியாவது ... ... உாக
(22) வாசனாத்திரயமாவது ... ... உாச
(23) அசுரவாசனாக்குருலட்சணமாவது ... ... உாகூ
(24) சிரவணமனனநிதித்யாசனமாவது ... ... உா௰ச
(25) சம்சய அகம்பாவனை விபரீதபாவனையாவது ... உா௰சு
(26) சட்விதலிங்கநிர்ணயமாவது ... ... உா௰கூ
(27) தத்துவநிரூபணமாவது ... ... உாஉஉ
(28) பிரமசரியமாவது ... ... உாஉங
(29) முமுட்சுக்களுடைய இந்திரிய அந்தக்கரணவோய்
வுதலாவது ... ... உாஉச
(30) சப்தவிதசைதன்யமாவது ... ... உாஉசு
(31) பஞ்சப்பிரமையாவது ... ... உாஉஎ
(32) பிராரப்தத்திரயமாவது ... ... உாஉஅ
(33) சஞ்சிதாகாமியப்பிராந்தியமாவது ... ... உாஙஉ
(34) வேதாந்த வியதிரிக்தமானவர்கள் வேதாந்த சிரவ
ணத்துக்கு வந்தவரை மிரட்டுகிற விதமாவது. உஙகூ
(35) பஞ்சவிதமுத்தியாவது ... ... உசஅ
(36) சீவன்முத்தரை ஞானியல்லவென்று சொல்வதா
வது ... ... உசச
(37) ஆன்மாவுக்குச்சப்தாவத்தையாவது ... ... உசஎ
(38) தாதான்மியத்திரயமாவது ... ... உருக
(39) சீவேசுவரஸ்வரூபமாவது ... ... உருச

(கு-பு.)—

இது முன் பிரதிகளினும் வேறானது ; இராஜேந்திரலால்மித்ரா காட்லாக் தொகுதி (Vol.) IV,1399-ஆம் நம்பர் பிரதியின் மொழி பெயர்ப்பாக இருக்குமென்று தோற்றுகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை. பிரதிமிகச்சிதிலம். பிழைகள் மிகுதியாகவுள.

No. 1604. வேதாந்தசூளாமணி மூலமுமுரையும்.

VĒDĀNTACŪḶĀMAṆI WITH COMMENTARY.

Page, 169 Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1482.

Complete with commentary.

A Tamil rendering by Śivaprakāśasvāmigaḷ of Tuṟaimaṅgalam of the Vēdāntaparicchēda forming part of the Vivēkacintāmaṇi a work in Kanarese by Nijaguṇayōgi. It explains the differentiations between the perceiver and the thing perceived, the nature of the bliss arising from understanding the Mahāvākyas and the nature of the identity of the individual soul with Paramātman as stated in the Uttaramimāṁsā.

Beginning:

தருணமா துளைமுகத் தாம ரைக்கெழு
மருணனா மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.

எ-து, அம்மையுடைய இளமையாகிய வதனாம்புய முகைக் கு[ை]தயமாகிய வாலசூரிய னென்னும்படிக்கு உதித்து அடியரிடத்திற் செய்கின்ற கருணையாகிய . . . . . மதங்களையுடைய கசமுகக் கடவுளினது பாதாரவிந்தங்களைச் சிரத்தின்மேல் வைத்துக்கொள்ளா நின்றோ மென்றவாறு.

அருமறையின் பொருடெரித்த விவேகசிந்தா மணியதனு
ளுறைவேதாந்தப்
பொருளினைமுந் நீர்வரைப்பி னுலகறியச் செந்தமிழாற்
புனைதல் செய்தான்
பெருகுசுவை நறவொழுகு செஞ்சொன்மல ராற்புனைபாப்
பெருந்தண் மாலை
கருமிடற்று வானவர்க்கே சாத்துசிவப்பிரகாசன்
கவிஞர் வேந்தே.

(* * * *)

சீர்கொண்ட வருமறையின் முடியணியைத் தெய்வ
சிகாமணியை யடியவர்தங் கண்மணியைமாயைப்
பேர்கொண்ட விருளிரிக்குந் தினமணியை முக்கட்
பெருமணியை யகத்தினுக்கோர் விளக்காக விருத்தி
யேர்கொண்ட விவேகசிந்தா மணியெனு நூலதனு
ளெடுத்தியம்பும் வேதாந்த பரிச்சேதப் பொருளை
நேர்கொண்ட தமிழ்விருத்த யாப்பதனாற் றெரிய
நிகழ்த்துவன்வேதாந்தசூளாமணியென்றன்றே.

எ-து, சிறப்பையுடைத்தாகிய வேதங்களின் முடிவிலே விளகாங்கா நின்ற வழகிய பொருளை (. . . . .) தமிழ் விருத்தப் பாட்டதனாற் பக்குவர் தெளியச் சொல்லா நின்றோம்; வேதாந்த சூளாமணி என்னு நாமந்தரித் தென்றவாறு.

சிறப்புப்பாயிர முற்றும்.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாய
　　மீமாஞ்சை யொடுமிருதி புராணமுமீ ரேழா
வோதலுறும் வித்தைகளா மிவற்றுண்மீ மாஞ்சை
　　யுயர்ந்ததா யைந்நான்கத் தியாயமா யருத்த
பேதமுற விருகூறு மவற்றுண்முதற் கூறே
　　பிறங்குமருட் சைமினிசூத் திரரூப மாகிப்
போதுமீ ராறத்தி யாயங்களாக் கருமப்
　　பொருளுணர்த்திப் பூருவமீ மாஞ்சையெனப் படுமால்.

எ-து, இருக்காதி நான்கு வேதமும் சந்தசு, கற்பம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருத்தம் என்னுநின்ற ஆறங்கமும் நியாயமும் மீமாஞ்சையுமென்னுமவை பன்னிரண்டும் மனு மிருதி, அத்திரி மிருதி, ஆரித மிருதி, விட்டுணு மிருதி, ஆஞ்ஞவற்க மிருதி, யுசன மிருதி, ஆங்கீர(ச) மிருதி, இயம மிருதி, ஆபஸ்தம்ப மிருதி, சம்வ(ர்)த்த மிருதி, காத்தியாயன மிருதி, பிரகஸ்பதி மிருதி, பராசர மிருதி, வியாச[ர்] மிருதி, சங்கலிகித மிருதி, தட்ச மிருதி, கௌதம மிருதி, சாதாதப மிருதி, வசிட்ட மிருதி, என்னுநின்ற பத்தொன்பது மேகமாகவும், பிரமபுராணம் (. . . . . .) மச்சபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம், ஆக இவை பதினெட்டு மேகமாகவும ஆக இங்ஙனஞ் சொல்லாநின்ற வித்தைகள் பதினான்கவற்றுள், மீமாஞ்சையென்பதுவே மிகுதி விசேடமாயிருபதத்தியாயமா யருத்தபேதத்திரண்டுவிதமாகும். அதனுள் முதற்பேதமே விளங்காநின்றகிருபையையுடைய சைமினி சூத்திரரூபமாகப் பன்னிரண்டத்தியாயமாய்க் கன்மார்த்தத்தைப் பிரதிபாதிக்கையிற் பூருவமீமாஞ்சையென்று சொல்லப்படு மென்றவாறு. (௪)

சாற்றியவச் சயிமினிசூத் திரத்திற்கு மிக்க
　　சாபரமென் றொருபாடி யம்புரியப் பட்ட
தேற்றமிகுமம் மீமாஞ்சைக்குமதம்பாட்ட
　　மென வொன்றுபட்டாசாரியனால் வந்தன்று
போற்றுமவன் சீடனு கியபிரபா கரனாற்
　　புகழ்பிரபா கரமெனவோர் மதாந்தரநன் கமைய
வாற்றியவச் சாபரபா டியமதற்கு விளங்க
　　வாக்கப்பட் டுலகமெலா மறிந்திடநின் றதுவே.

End :

வினையிரண்டு மகறலத னாற்றேக பாவ
　　விச்சிந்தி யதனாலே பாசமெலா மொழிதல்
பினையறைந்த வதனானே பராபரமாய் முடிவாய்ப்
　　பெயர்சாதி குறிபெறு தொன்றாகி வாக்கு
மனமிறந்து நித்தியா னந்தமய மாகி
　　மறுவிலா விதேககை வல்லியம்வந் தெய்து
மெனவறிந்து துணிந்திடுக சுருதிகுரு பரனு
　　வின்பவீ டடையுநெறி விரும்புறுமுத் தமரே.

எ-து, மூற்கூறிய விதிநிஷேத நிரஞ்சனத்தாற் புண்ணிய பாவம் நீக்கம்; அதனாலே தேகபாவ விச்சிந்தி; அதனாற் சருவபாவ விமோசனம்; அதனாற் சர்வோத்கர்ஷமான சமததானமாகிய புனரா விருத்திரகிதமான சகலசாத்

திர பரியாவசானமாய் நாமசாதி குணக்கிரியா வாசனை புகாத மனவாக்குக் கோசரமான நித்தியானந்த சொரூபமான விதேக கைவல்லியமாகுமென்று நிச்சயிப்பர் இன்பவீடடையும் வழியையுடைய உத்தம ரென்றவாறு. (௩)

இந்தச் சுருதிமுடிவார்த்தபோதனை யாருக்குப் பாலிப்பதென்றூலருளிச் செய்கிறார்:—

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொற் பொருளை
விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப்
போதமய மாகியபே ரானந்தத் தழுத்தும்
பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய
சாதனநான் கினையு மடைந் தெவரானு மென்றுந்
தடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி
யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு
மன்புடையோர் தமைக்காணி னளித்திடுக வுவந்தே.

எ-து, வேதாகம சாத்திரங்களினுற் சொல்லாநின்ற பொருளைக் கற்றறியக் கரதலத்து நெல்லிக்கனிபோலத் தோற்றி ஞானமயமாகிய பேரானந்தத்தில் அமிழ்த்தப்பட்ட குற . . . . வேதாந்த சூளாமணியை மோட்சத்துக்குரித்தாகிய சாதன சதுட்டயம் வந்தவர்கள் எவர்களாயினும் எப்போதும் தடையில்லாத பிறவிப் பிணியைக் கெடுக்க வேண்டி(ப்) பத்தி வயிராக்கிய ஞானத்துடனே அருளையுடைய ஆசாரியனைத் தேடித் திகைத்துருகாநின்ற அன்பரைக் கண்டாற் கண்டவுடனே யவருக்குக் கொடுத்திடுக எ-று. (ச)

Colophon:

ஆகத் திருவிருத்தம் ௱௮௰௫
வேதாந்த சூளாமணி முற்றும்.
"சிவப்பிரகாசனறிருவடி நினைக்கத்
தவப்பிரகாசந் தானேவரும்.

(கு-பு.)—

இது வேதாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. உத்தர மீமாஞ்சை யென்னும் பிரம கண்டத்திற் கூறியுள்ள, சீவ பரமாத்மைக்கிய ஸ்வரூபம் இன்னதென்பதையும், மஹாவாக்கியார்த்தங்களை விசாரித்தலினல் சீவர்களுக்கு ஆனந்தபோதம் வெளிப்படுமாற்றையும் திருக்திருசிய மென்னும் இரண்டையும் பகுத்துக் கூறுவது. கன்னடபாஷையில் 'நிஜகுணயோகி' என்னும் பெரியாரியற்றிய விவேகசிந்தாமணியிலுள்ள வேதாந்த பரிச்சேதத்தின் மொழிபெயர்ப்பாகத் தமிழில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்டது. இந்தப்பிரதியில் உரையுடன் முற்றும் உள்ளது. உரை நன்றாக இருக்கிறது. உரையாசிரியர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1605. வேதாந்தவம்மானை.
VĒDĀNTAVĀMMĀNAI.

Pages, 19. Lines, 6 on a page.

Begins on fol. 196*a* of the MS. described under No. 802.

Contains 1 to 41 stanzas and the first half portion of the 42nd stanza.

A treatise of a philosophical nature written in the form of Prabandam designated Ammānai. The name of the author is not known.

Beginning :

வேதாந்தவம்மா[ஞர்](னே.)

தந்தைக்கு முன்பி[ர](ற)ந்த தகப்பனுக்குப் போதகத்தை
அந்[தி](த)முதல் தான் கடந்து அறிவித்தா ரம்மானே,
அந்தமுதல் தான்கடந்து அறிவித்தா ர(ா)[ய]மா[ர]கில்
தந்தையிடமாகவல்லோ தாமிருந்தாரம்மானே
தாமிருந் தப்பொருளே தரமு(றை)ரத்தார[ா]ம்மானே. (௧)

*　　*　　*　　*

[யிர](இற)ந்த பி[ர](ற)ப்பத[ர்க்](ற்)கெத்[தி](த)னே[த்]தான்[ச] சொன்னாலும்,
ம[ர](ற)ந்தழிந்து போனவர்க்கு மதிவருமோ வம்மானே,
[பிர](மற)ந்தழிந்து போனவர்க்கு மதிவருமோ வென்றுரைத்தால்
பி[ர](ற)ந்தமதி யறிந்ததுவும் பி[ர](ற)ப்ப[ர]றியாரம்மானே,
பி[ர](ற)ப்பறிய (ார்)குலம் பி[ர](ற)ந்து பேசுவர்கா ணம்மானே. (௪)

End:

சுட்டவிடங்கண்டு சுடுகாடு வென்றுரைப்பார்
கட்டிவந்த வெள்ளெலும்பின் காட்டறியாரம்மானே
சுட்டிவந்த வெள்ளெலும்பின் காட்டறியாராமாகில்
சுட்ட ச[ப](வ)ம் பி[ர](ற)ந்தசுடு காடறியா ரம்மானே
காடறியாரி[ர](ற)ந்ததையுங் காண[ரி](றி)யாரம்மானே. (௪௰)

மண்ணிற் பிறந்து வாழுந் திருமாலே(க்)
கண்ணி லறிந்துதொழக் கண்டறியாரம்மானே
கண்ணி லறிந்துதொழக் கண்டறியா ராமாகில்
மண்ணிற்றிரு மண்ணென்று வரைந்து கொள்வா ரம்மானே
வரைந்துகொள்வர்திருநாமம்வகையறியாரம்மானே. (௪௧)

அழியா(த்)திரு[ஞ](நா)ம ம[ரி](றி)யாத மூடர்க்கு
வெளியா[கு]மோ வயன்மாலும் வெளியா(கார்)[ராதே] அம்மானே

(கு-பு.)

இந்நூல் வேதாந்த விஷயமானது. அம்மானையென்னும் ஒருவகைப் பாடலாலாகியது. இதில் 41 பாடல்களும், 42-வது பாடலின் முதல் இரண்டு அடிகளும் உள்ளன. இயற்றியவரின்னாரென விளங்கவில்லை.

No. 1606. வேதாந்தவம்மானே.
VĒDĀNTAVAMMĀNAI.

Pages, 11. Lines, 9 on a page.

Begins on fol. 105*a* of the MS. described under No. 1214

Complete.

A Prabandam of the Ammānai variety bringing out the nature of Īśvara, in the form of a conversation between two women.

Beginning :

ஆதிதனி வர்தி யறிந்துரைக்க மாட்டாதார்
சோதியொளிவுதனைச் சொல்வரே அம்மானை
சோதியொளிவுதனைச் சொல்வரேயாமாகில்
வாதனைக்குள் ளாகி வருந்துவதே னம்மானை
வருந்தாரே மா[ய்கை](யை) மயக்கத்தா லம்மானை.

சித்தசன் றன்னைத் திருவாய்மெய்த் தேசிகனை
யுற்றபொருடன்னை யுண்டறிவாரம்மானை
யுற்றபொருடன்னை யுண்டறிவாராமாகில்
அத்தன வனிடமா யாடுவனோவம்மானை
யாடானோ தந்தொழிலே யாடுவன்கா ணம்மானை

End :

தாயை யறியார் தகப்பனையுந் தாமறியார்
தாயிருக்குந் தலமுந் தானறியா ரம்மானை
தாயிருக்குந் தலமுந் தாமறியா ராமாகில்
காயமுரு வானதுவுங் கண்டறியா ரம்மானை
கண்டறியார் காமனையுங் காணறியா ரம்மானை.

(கு பு.)—

இந்நூல், ஈசுவரலட்சண முதலியவற்றை மகளிர் ஒருவர்க்கொருவர் வினவிடையாகக் கூறி விளையாடுவதாக வமைந்துள்ளது. இந்தப் பிரதியில் உள்ள அம்மானைப் பாடல்கள் இருபது. இது முற்றுப் பெற்றதென்றே தோற்றுகிறது.

No. 1607. வேதாந்தவாக்கியம்.

VĒDĀNTAVĀKKIYAM.

Pages, 28. Lines, 8 on a page.

Begins on fol. 57*a* of the MS. described under No. 1388.

Incomplete.

A treatise in prose explaining the meaning of the Mahāvākyas such as Tat Tvam Asi in accordance with the Advaita Vēdānta. The origin of Sthūla sarīra, Sukṣma sarīra and Kāraṇa śarīra, the different states of consciousness, etc., are all dealt with herein.

Beginning :

விசுவாமித்திரரும் வசிட்டமாமுனியும், நம்மைப் பிறவிக்கு வாராமல் [யி](இ)ரட்சிக்கவேண்டி ஞானமென்கிற பதா[ற்](ர்த்)தத்தை வேண்ட, நீலகண்டசுவாமி யனுக்கி[ற](ர)கம் பண்ணி ரக்ஷித்தார்கள். அது[யே](வ) தென்னில்[த்] தத்தொமசிவாக்கியம் அனுக்[ற](ர)கம் பண்ணினர். (

. .)தத்தொமசி வாக்கியத்துக்கு வி[ப](வ)ரம்: [யி](இ)து[ரு](ரி)க்கு எ[சறு](ஜுசு) சாமம் அதர்(வ)ணம் என்கிற நாலு வேதமும் [யி](இ)ரண்டு பி[ற](ர)காரமாயிருக்கும். அது எப்படி யென்னில்:—அற்பசுருதிவாக்கிய மென்றும், பி[ற](ர)பல சுருதிவாக்கியமென்றும் சொல்லப்படும். [யி](இ)தில் அற்பசுருதிவாக்கியம் கன்மகாண்டத்தைச் சொல்லுட. பி[ற](ர)பல சுருதிவாக்கியம் அத்தியா[ற்](ன்)மியத்தைச் சொல்லும். (. . . . . .

.) தொம்பதத்துக்கு அவத்தை[ஞ](நா)லு அதிலே அனுபோகத்தினுலே சாக்கிர அவத்தைக்குள்ளே மூன்றுடல் காண்பிக்கும். அது எப்படி யென்னில்

End:

[யி](இ)னி[ப்]பஞ்சப்பிர[ளை](ள)யம் பண்ணின[த்]துக்குப்பிறகு மிஞ்சினதுவே வ[ஷ்](ஸ்)து. அதுவே வாக்கு மனத்துக்குமெட்டாத பொருள். அதுவே சத்தமாத்திரமான வ[ஷ்](ஸ்)து. விசுவாமித்திரரும் வசிட்டமாமுனியும் நம்மைப் பிரவிக்கு வாராமல் [ெ]ரட சிட்தார்கள். அதுவே நித்த சுத்தபுத்தமுத்த சத்திய பரிபூரணமான வ[ஷ்](ஸ்)துவுமதுவேயிதுக்குக் கிரந்தம் . . . .

(கு-பு.)—

இந்நூல் அத்வைத வேதாந்த விஷயமானது. தத்வமஸியாதி மஹா வாக்யங்களுக்குப் பொருள் கூறுவது. இதில் தூல சூக்ஷ்ம காரணமாகிய மூவகைச் சரீரங்களின் உற்பத்திக் கிரமம் முதலியனவும் ஐவகை அவத்தைகளின் இயல்பு முதலியனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வசன நடை சாதாரணமானது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுப்பெறவில்லை.

No. 1608. வேதாந்தவுரைப்படிக்கட்டளை.

VĒDĀNTAVURAIPPAḌIKKAṬṬAḶAI.

Pages 34. Lines, 9 on a page.

Begins on Fol. 38*a* of the Ms described under No. 1310.

Complete.

A treatise in prose bearing on Śaiva Vēdānta. Herein a Guru is represented as having taught Vēdānta to his disciple and made him realize the true reality.

Beginning:

இகபரங்களிலே யாவரொருவர்க்கு முன் செய்த தவத்தினுலே ஞானத்தின்மேல் விருப்பமுற்று, சற்குருநாதன் சே[ர்]வைகிட்டி, மோட்சம் பெறும் பரிபக்குவம் வந்தவிடத்து, வேதாந்த தெரிசன விளக்கமே சூரியப்பிரகாச விளக்கமாயிருக்கும். வேறு ச[ம]மயங்க[ளிட](ளுடைய) சாஸ்திர விளக்க மெல்லாம் மின்மினி விளக்கமாயிருக்கும். ஆகையினுலே வேதாந்த தெரிசனமே யுண்மையென்பது கண்டுகொள்க. இனி யிந்த வேதாந்த தெரிசனமெப்படியென்னில்:—வேதங்களாவன இருக்கு வேதம் (. . . . . .

. .) இரண்டு பி[ற](ர)காரமாய் இருக்கும்.

End:

உருநாமங்களினுல் குறிக்கப்படாமல் தற்பிரகாசமாய் விளங்கியது எப்படியிருந்தது. சொல்லிக்காணென்னுமிடத்து, இந்தச் சொரூபத்தை அடியேனுக்கு மனதிலே யெண்ணவும், வாக்கிளுற் சொல்லவும் இடமில்லாமலிருந்தது. ஆகையினுல் இதுவே மவுனமுத்திரை யென்பது. அஃதெப்படி யென்னில் :—மனமும் மனத்திலே யெண்ணமும், வாக்கும் வாக்கிளுற் சொல்வதும், காயமும் காயத்திளுற் செய்வதும் சுத்த அறிவான பி[று](ர)மமேயாகையால் மனம்வாக்குக் காயமிம்மூன்று மிறந்து, வாக்குமனுதீதமாய்த் தற்பி[ற](ர)காசமான சிவரூபமானதே மோனமுத்திரை. இதுவே மவுனமுத்திரையென்று கண்ட கருத்தையும் விட்டுச் சும்மா[யி](வி)ருந்தபடியிருப்பதே மோட்சத்தீர்வு. இதுவே நிச்சயா[ற](ர்)த்தம். வேதாந்தத்தினுண்மை தெளிந்த பி[று](ர)ம்ம தெரிசனம் முற்றும்.

திருச்சிற்றம்பலம். குருபாதம். சிவமயம்.

(கு-பு.)—

இது சைவவேதாந்தத்தைச் சார்ந்தது. சிஷ்யனுக்கு, குரு வேதாந்த தரிசனத்தைககாட்டி உண்மைப்பொருளை அனுபவத்திற் காணுமாறு செய்வித்ததாக உள்ளது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. ஏடுகள் சிதிலம்.

No. 1609. வேதாந்தோபந்நியாசம்.

VĒDĀNTŌPANNIYĀSAM.

Pages, 68. Lines, 6 on a page.

Begins on fol. 152*a* of the MS. described under No. 1231.

Complete.

Same work as that described under R. No. 327 of the Triennial Catalogue of MSS. Vol. III.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 327-ஆம் நம்பர் பிரதிபோன்றது முற்றுமிருக்கிறது.

No. 1610. வைராக்கியசதகம்.

VAIRĀKKIYAŚATAKAM.

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 170*a* of the MS. described under No. 1060.

Contains the 1st 50 stanzas entitled the Śāstiram.

A treatise of a philosophical character in which the intellect is represented as addressing the mind not to yield itself to the evil influence of the organs of sense. The work is divided into 2 sets of 50

stanzas each, the first set being called Śāstiram and the latter set Stōttiram.

By Śāntaliṅgasvāmigaḷ of Tirutturaiyūr who has also written other works namely Kolaimaruttal, Vairāgyadīpam, Avirōdavundiyār.

Beginning:

முக்கணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்றுட்
பக்கமறைந் தேகுநர்வெம் பாசவிக ஞசமுற
மிக்கவமர் விளைத்திளையா வீரரெனப் பூரணவூர்(ப்)
புக்கிணையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

வாழிநெஞ்சமே சென்றிடேனின்றிதோர்
வா[ற்](ர்)த்தை யெற்[க்]குரைசெய்வாய்
கீழியாமியற் றுயர்தவத் திவ்வுடல்
கிடைத்ததன் றேமற்றீ
தூழிகால மிங்கிருக்குமோ நீயுமோர்ந்
துளையெனி னுளபோழ்தே
சூழுமேழ்பவந் துடைத்தல்செய் யாயிதென்
றொழுதரன் றுணைத்தாளே (க)

End:

விருப்பமாயிது கேட்டிநன்னெஞ்சமே
விமலனுக் காளல்லார்
பொருப்பை நேர்தனஞ்சொரியினு மவர்கணோர்
புன்னுனித் துணையன்பு
திருப்பிடேலரன் றொழும்பர்த[ன்](ந்) தொழும்பனாய்த்
திரிந்தவர் பணிசெய்தீண்
டிருப்பை யேன்மிக நல்லையிச் சொல்லைநம்
பில்லையேற் பொல்லாயே. (௱)
வைராக்கியசதகம் சாத்திர முற்றும்.

(கு-பு.)

இந்நூல், திருத்துறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளியற்றிய நூல்களுளொன்று. வேதாந்த விஷயமானது. ஆன்மஞானமுண்டாம் பொருட்டு உடம்பினையும் இந்திரியங்களையும் களைந்தபின், அந்தக்கரணத்தைக் களையத் தொடங்கி, அவற்றுள் முதன்மையான, மனத்தை நீக்குந் தோறும் அது பழைய வாசனையால் விவேகத்தைத் தன்வயப்படுத்தி ஐம்புலன்களி விழுத்துச் செல்ல, விவேகம் அதனை அறிந்து அம்மனத்தைத் தன் வயமாக்கக் கருதி மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறுவதாக வமைந்துள்ளது. இந்நூலின் முதலைம்பது பாடல்கட்குச் சாத்திர மென்றும் பின்னைம்பது பாடல்களுக்குத் தோத்திர மென்றும் பெயரிடப்பட்டுள்ளன. இந்தப் பிரதியில் முதலைம்பது பாடல்களே உள்ளன. இந்நூலாசிரிய ரியற்றிய வேறு நூல்கள் கொலை மறுத்தல், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார் முதலியன.

No. 1611. வைராக்கிய சதகம், உரையுடன்.
VAIRĀKKIYA ŚATAKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $12\frac{3}{4} \times 1\frac{1}{8}$ inches. Pages, 111. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Contains the first 50 stanzas called Śāstiram together with commentary.

Same work as the above. It is followed by a commentary by Tiruppōrūr Cidambarasvāmigaḷ.

Beginning:

பஞ்சபூத காரியமாகிய வுடம்பினையும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களையும் நியதிகளைந்ததன் பின்னர் அந்தக்கரணங்களை நியதிகளையத்தொடங்கும்போது அவைகட்[க்]குப் பிரதானமான மனத்தை யெதிரிட்டு நோக்கி நீ[ங்](க்)குந்தோறும் மனம் அந்த விவேகத்துக்கு மிகவும் ஒற்[றி](று)மையாகலின் நீங்காது முன்னைப் பழக்கம்போல விவேகத்தைத் தன் வயப்படுத்தித் தனக்குப் பற்றுக்கரையுள்ளவற்றிவிழுத்துச் செல்ல, (. . . . .) மனத்தை முன்னிலையாக்கி விவேகங் கூறி[த்தெ](ற்றெ)ன்று விகேவத்தின் மேல்வைத்து இ[ன்னா](ந்நூ)ல் கூறுகின்றார்.

"வாழிநெஞ்சமே சென்றிடேல் (. . . . .) தொழுதரன்றுணைத்தாளே."

என்பது : வாழி நெஞ்சமே ; பகைவனுற் காரியங்கொள்வோன் அவனைத் தன் வயமாக்குதற்பொருட்டு அவனுக்கினிமை கூறுதல்போல நீ வாழக்கடவை நெஞ்சமே யென்று விவேகங்கூற வதற்கு எண்ணிலி காலமுடலுமுயிரும் போலுஞ் சேறு நீரும் போலுமும்மோடும் பிரிவின்றியிருந்த வென்னை இப்போது பிரித்து நின்று நீர் தோத்திரம் பண்ணியது என்னை யென்று மனங்கேட்ப, சென்றிடேனின்றிதோர் வார்த்தையெற்குரைசெய்வாய் :—

(* * * *)

இக்காயமிருக்கும்போதே சிவனது உபயபாதங்களையுந் தொழுது எம்மை வளைந்து கொள்ளா நின்ற எழுவகைப் பிறவிகளையும் நீக்கிக்கொள்ளுதல் செய்யாய் ; இஃது என்னை நின் கருத்திருந்ததென்று விவேகங் கூறிற்று. என்றவாறு. மற்றென்பது அசைநிலை.

End:

"விருப்பமாயிது கேட்டி நன்னெஞ்சமே (. .) சொல்லை நம்பில்லையேற் பொல்லாயே" என்பது. விருப்பமாயிது கேட்டி நல்நெஞ்சமே - நல்லநெஞ்சமே யிந்த வா[ற்](ர்)த்தையைச் சந்தோடமாய்க் கேட்[ப்]பாயாக.

(* * * *)

அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே (௫௰)

மனந் தானுமன்று தன் வயமுமன்று என்று அறிந்து அதனை விடுத்துத் தன்னையும் அதனையும் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தை நோக்கி மேல் விவேகங்கூறுகின்றது.

இவை வைராக்கிய சதகத் தோத்திரப்பாடல் திருவிருத்தமைம்பது.

பொல்லாத வென்னெஞ்ச மோரைந்து புலன்கடம்பா
லல்லா தரைமாத் திரையுநிண்ணடிக்கணன்பாய்
நில்லா திதற்கென்னை செய்கேனிதை நின்றிடென்றே
சொல்லாய் திருத்தில்லையுண்மேவிய சோதி நீயே.

(கு-பு.)—

இது வைராக்கிய சதகத்தின் முன்னைம்பது பாடல்களின் விரிவுரை. பின்னைம்பதின் முதற் பாடலும் இதனிறுதியில் எழுதப்பட்டுள்ளது. உரையாசிரியர், திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளென்டவர். இந்தப் பிரதியில் ஐம்பது பாடல்களும் உரையுடன் பூர்ணமாக இருக்கின்றன.

No. 1612. வைராக்கிய சதகம், உரையுடன்.

VAIRĀKKIYA ŚATAKAM WITH COMMENTARY.

Pages, 84. Lines, 6 on a page.

Begins on fol. 209*a* of the MS, described under No. 1437.

Breaks off in the course of the commentary on the 28th stanza.

Same work as the above,

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் முதல் 27 பாடல்களின் உரை பூர்த்தியாகவும் 28-வது பாடலின் உரை அபூர்த்தியாகவும் இருக்கிறது.

No. 1613. வைராக்கியதீபம், உரையுடன்.

VAIRĀKKIYADĪPAM WITH COMMENTARY.

Pages, 184. Lines, 9 on a page.

Begins on fol. 269*a* of the MS. described under No. 83.

Complete in 101 stanzas including the Pāyiram.

A treatise of a philosophical nature. Herein the self-illusion of 'I' and 'mine' is compared to darkness, mind is compared to a house renunciation is compared to light and it is stated that the mind is illumined by the light of renunciation, which dispels the darkness of self-illusion.

By Śāntaliṅgasvamigaḷ of Tirutturaiyūr. The commentary is by Cidambarasvamigaḷ of Tirupporūr.

Beginning :

தாயினு மிரங்கியென் றனைவந் தாண்டரு
ளேயவன் சரணையே சுமக்க வென்றலை

வாய்துதி செயக்கர மலர்க டூய்த்தொழ
நேயமோ டனுதின நினைக நெஞ்சமே.

(* * * * *)

ஆய்ந்த வின்பம்
வாய்ந்தள நிறையச்
சாந்(னெ)தயன் பத
மியாந்தொழுவோமே.

சாந்தலிங்க தேவாயநம[ர] சிதம்பர தேவாயநம[ர]—

திருவளர் கமலத் தயன்செயிப் புவிமுன்
திகழ்தரு மூலகெலாந் தன்பான்
மருவுசிற் சத்தி யெனுங்கிர ணத்தான்
வந்தெழு கானனீராக

விருமையா மதியர்த் தறிஞராங் காந்தத்
திடையருட் சுடருமிழ்ந் திலங்கு
மொருசிவாதித்தன் தனை நமதிருள்போ
யொழியநா டொறுமிறைஞ் சிடுவாம்.

எ-து. அழகு வளராநின்ற தாமரை மலரின்கண்ணே யெழுந்தருளி யிருக்கின்ற பி[ரு](ர)மாவினுலே சிருட்டித்தல்செய்த விந்தப் பிருதிவிதத் துவமுதலாய் நாத தத்துவமீருய் விளங்கா நின்ற பிர[வ](ப)ஞ்ச மெல்லாந் தனதிடத்துப் பொருந்திய சிற்சத்தியாகிய கிரணத்தினுலே வந்து தோன்றப் பட்ட கானற் சலமாக அறிஞராது துவித புத்தியாகிய (. . . . .) லுப்பற்ற சிவ சூரியனை நமது அஞ்ஞானமாகிய விருள்போய் நீங்கும்படி எக் காலமும் வணங்குவா மென்றவாறு.

(* * * *)

நூல்.

தோன்றிநின்றழியப் படுங்கொடும் பிறப்பிற்
றுன்பமே யன்றியெட் டுணையு
மூன்றிநெஞ் சகத்தோர்ந் திடிற்பிறிதிலையா
லுண்டுபோற் றிரித்துயிர்க் கெல்லாந்

தான்றிகழ்த்திடுமோர் வகற்றிருளிருளுந்
தவிர்ந்துமற்றதுமுளபடியே
யான்றவீடுறமுற் பவந்தவம்புரிந்தோ
ரகத்தினுட்டெரிதருமன்றே.

எ-து. உற்பத்தித் திதி லயங்களையுடைய கொடிய பிறப்பின் கண்ணே துன்பமே யல்லாமல் என் மாத்திரமாயினும் மனத்தின் கண்ணறிவையூன்றி விசாரணை பண்ணுமிடத்துச் சுகமேயில்லை.

(* * * *)

தவம் பண்ணின பெரியோர்களது மனத்தின்கண்ணே தோன்றும்.

End:

தேவர்மாமுனிவ ரசுரர்வாளரக்கர்
சித்தர்வித்தியாதரர் முதலோர்
யாவரும் விரும்பிற் சித்திபுத்திகளு
மெட்டுணையச்சமாதியும்
மேவுருதகற்றித் தவம்புரிந்தடைந்தான்
மேலதாமூலபண்டார
மோவற வவையே குடிகளென்போனெஞ்
சுடையரா னடையவும்படுமே.

எ-து. தேவர்களும் மகத்தாகிய முனிவர்களு மசுரர்களு மிராக்கதர்களும் வித்தியாதரத மென்று சொல்லாநின்ற.

(* * * *)

வீட்டின்பமாகிய மூலபண்டாரத்தினை அந்தப் பய முதலியவை தாமே விட்டு நீங்காது குடிகொண்டிருக்கின்ற என்போலு மனத்தினையுடையவரா லடையவுங் கூடுமோவென்றவாறு.

ஒருவனுக்கிருளற் றுரியசிற்சொரூப
முள்ளவா விளங்கினன் றருமிப்
பருவரலுருவப் பற்றுமற்றதுநேர்
படுமள விறைபுரிதருமைங்
கருமமெவ் விடத்துங் கண்டுதற் செயலைக்
கைவிடுத் தச்சமாதியவுண்
மருவுறுதகற்றித்தவஞ்செயல் வழக்கால்
வாழியெங்குரவனீடூழி.

எ-து. ஒரு புருடனுக்கு அஞ்ஞான விருட்டு நீங்கித் தனக்குரிய ஞான ரூபம் உள்ளபடியே விளங்குமாயின் இந்தத் துன்பஞ் செய்யாநின்ற தேகப் பற்று அன்றைக்கு நீங்கும் (. . . . . . .) பயமுதலிய து[ற்](ர்க்)குணங்கள் மனத்தின் கண் பொருந்தாது மாற்றித் தவத்தினைச் செய்வதே முறைமையாம். எமது ஞானசாரியன் நீடூழிகாலமும் வாழக்கடவ[த](ன)ன்றவாறு (ங)

சிதம்பரதேசிகன்திருவடி வாழ்க.
திருச்சிற்றம்பலம்.

குமாரதேவை
நமாவெனவே[ற்றி](த்தி)
யெமாசுநீக்கிச்
சுமாயிருப்போமே.

முக்கணிறை தருகரியை முன்னடத்திப் பின்னதன்றூட்
பக்கன்மறைந் தேகுனர்வெம் பாசவிக ஞசமுற
மிக்கவமர் விளைத்தினியா வீரரெனப் பூரணவூர்
புக்கிணையில் பரானந்தப் பூவையையு மேவுவரால்.

நிம்ப[னி](தி)ழற்கணிறம்பொன்மலர்த்தா
ணம்புதுமுத்திநல்வின்பம்வரற்கே.

சமரபுரிக்குகன்
விமலதிருத்தா
ளெமதுளம்வைக்குது
மும்மலமறற்கே.

போ நதெம்முயிர்க்குயி
ராந்துணையொத்த
சாந்தையனறபத
மேந்துகருத்தே.

குமரகுருப்பத
கமலநினைத்தே
திமிரமகற்றுதி
நிமலகருத்தே.

The scribe adds :—

சிவமயம். பரீதாபி வருஷம் மாசிமீ௴ ௩௨ புதவாரம் தி[றி](ரி)தி[கை](யை) திதி, உத்திரெட்டாதி ந[ஷ](ட்ச)த்திரம் [யி](இ)ந்தத்தினத்தில், மத்தூர் முருகப்ப முதலியார் குமாரன் சரவண முதலி வயிராக தீபமுரை எழுதி நிறைந்தது. முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் திருத்துறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளியற்றியது. வேதாந்த மதத்தைச் சார்ந்தது. இதிலுள்ள உரை திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளாலியற்றப்பட்டது. யான், எனது என்னும் மயக்கமாகிய இருளைத்துறவாகிய ஒளியினால் நீக்கி மனமாகிய வீட்டினைவிளக்கஞ் செய்தலினால் இந்நூற்கு வைராக்கிய தீபமென்று பெயரமைந்துள்ளதென்று பாயிரங்கூறுகின்றது. பாயிரமுட்பட நூற்றொரு விருத்தங்களையுடையது. இந்தப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றுமிருக்கிறது.

No. 1614. வைராக்கியதீபம். VAIRĀKKIYADĪPAM.

Pages, 62. Lines, 7 on a page.

Begins on fol. 127*a* of the MS. described under No. 1185.

Complete.

Contains the same text as that described under the previous number.

(கு-பு.)—

இதில் முன்பிரதியில் வந்துள்ள வைராக்கிய தீபம் மூலம்மட்டும் முற்றும் உளது. பிரதி சிதிலமாயிருக்கிறது.

No. 1615. சொரூபானந்தர் நான்மணிமாலை. SORŪPĀNANDAR NĀNMAṆIMĀLAI.

Pages, 29. Lines, 8 on a page.

Begins on fol. 70*a* of the MS. described under No. 1061.

Complete.

A work in 40 stanzas by Tattvarāyar in praise of his Guru Sorupānandar and incidentally explaining ths principles of the Advaita Vēdānta. It is written in alternate stanzas of Veṇbā, Kaṭṭaḻai kalitturai Viruttam and Ahaval kind and hence it is called Nānmaṇimālai.

Beginning :

பூவைவண்ணனும் பொன்னொளிவண்ணனுந்
தீயவண்ணனுமெனச் சிறந்த மூவரு
முண்ணிகழ்ஞானக் கண்ணாற்காணும்
வண்ணமில்லா வண்ணல் வண்ணங்
காணப்படா(அ)ன் காண்பவனாகுங்
கேட்கப்படா(அ)ன் கேட்பவனாகுஞ்
சொல்லப்படா(அ)ன் சொல்பவனாகு
முயிர்க்கப்படா(அ) னுயிர்ப்பவனாகு
மியக்கப்படா(அ) னியக்குவனாகும்

(* * * *)

கைதவமின்றிக் கண்டும்பொய்தவ
மெய்யோ வுருகி வீழா
வையோ. கண்க ளருவிபாய் கிலவே (௧)

அருவமாய் நின்றவொளி யப்படியே நிற்க
வுருவமாய் வந்த வொருவன்—சொருபன்றாள்
வாழ்த்தி மகிழ்ந்திருக்க மாட்டாதே மாஞாலம்
பாழ்த்த வுடம்பைப் பரிந்து. (௨)

End :

(கலித்துறை).

தானேதனைநிக ராகுஞ் சொருபனிற் சங்கையில்லை
யோனே யெனைநிக ராவது மேது முணரகில்லேன்
தேனார் மலர்ப்பதஞ் சூட்டித்தன னாச்செய்த பின்னுமுன
மூனேவடிவா மிடத்தினும் பேத முணர்ந்திலனே. (௩௧)

(விருத்தம்).

உணர்ப தறுமவ ருணர்வ திலர்தனை யுணர வுரியவர் தாமுமோ
